# கிறிஸ்தவம் (ரூ. க.)

## 9 ஆந் தரம்

### கத்தோலிக்க திருமறைப் பாடநூல்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவம் (றோ. க.)

## 9 ஆந் தரம்

கத்தோலிக்க திருமறைப் பாடநூல்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பதிப்பு 1984
இரண்டாம் பதிப்பு 1986
மூன்றும் பதிப்பு 1986
நான்காம் பதிப்பு 1987
ஐந்தாம் பதிப்பு 1988
எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே

அம்பலங்கொடை, வதுகெதர, இலக்கம் **341**, அல்பிட்டிய றோட் மஹிந்த பிரின்டர்ஸ் (பறைவேற்) லிமிரெட் அச்சகத்தில் அச்சிட்டு, கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டது.

88/ෙද/120(5000)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவசக் கல்வியின் முழுப் பயனையும் பெறுதற்குப் பாடநூல்களையும் இலவசமாக வழங்க வேண்டும் என்று, நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் **சனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன** அவர்கள் எடுத்துரைத்த ஆலோசனை 1980 ஆம் ஆண்டிலிருந்து செயலாக மலர்ந்து, இந்நூல் உங்களுக்கு இலவசமாகக் கிடைக்கின்றது.

நல்லன கற்று
நலம் பெறுவீரென
நம்மர சளிக்கும்
நன்கொடை இந்நூல்.

நன்கிதைப் பேணி
நலமே கற்று
நற்குணம் பெற்ற
நற்குடியாவீர்.

சிங்களர் தமிழர் முஸ்லிம் யாம்
சீருடன் பயின்று இணைந்தாலே
மங்களம் பொங்கும் பொன்னுலகாய்
மாண்புடன் விளக்கும் நம் இலங்கை.

**லயனல் ஜயதிலக,**
*கல்விச் சேவைகள் அமைச்சர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட ஆக்கம்: **எம். ஆர். பேர்ட்டி பெர்னாண்டோ**

தமிழாக்கம்: **அருட்திரு ஜே. நீக்கிலஸ்,**
**அருட்சகோதரி மேரி யுஸ்ரீனா,**
**திரு. ஆர். யோசவ்.**

பதிப்பாசிரியர்: **அ. யோ. பெனடிக்ற் பாலன்.**

**கத்தோலிக்க ஆலோசனைக் குழு:**

அருள்திரு டொன் சில்வெஸ்ரர் (தலைவர்)
அருள்திரு பீட் பெர்னாண்டோ.
அருள்திரு ஜோ. பெனடிக்ற் பெர்னாண்டோ
அருள்திரு பேள் மெண்டிஸ்.
அருள்திரு ஓரசியன் டெப்.
அருள்திரு ஆர். அலோசியஸ்.
அதிவண. வியான்னி பெர்னாண்டோ.
அருள்திரு பிலிப் சேத்துங்க.
அருள்திரு ஜே. நீக்கிலஸ்.
அருட் சகோதரன் சிறிஸ் அலக்ஸாண்டர்
அருட் சகோதரி அன்ரனி ஜோசவ்.
திரு. எ. ஜி. ஓ பெரேரா.
திரு. வி. ஹப்பு ஆராச்சி.
திரு. ஐ. விக்டர் பெரேரா.
திரு. அகுஸ்ரீன் டயஸ்.
திருமதி ஜே. வைத்தியரட்ன.
திரு. எம். ஆர். பி. பெர்னாண்டோ (செயலர்)

இந்நூல், கல்வி அமைச்சின் பாடவிதான அபிவிருத்திச் சபையினரால் தயாரிக்கப்பட்டது.

**கத்தோலிக்க திருச்சபையின் உயர்பீடத்தினருக்காக**

அச்சிடலாம்:

இந்நூலை ஆய்வுசெய்தவர்கள்:

+ **தியோகுப்பிள்ளை,**
யாழ் ஆயர்.

**பேருள் திரு. டொன் சில்வெஸ்ரர் அடிகள்**

யாழ்ப்பாணம்.

**அருட்திரு ஜே. நீக்கிலஸ் அடிகள்.**

**27—12—1979.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன்முகம்

19 ஆம் ஆண்டுக்கென இந்நூல் மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதனை மறுபதிப்புச் செய்வதற்குப் பல்வேறு வழிகளிலும் ஒத்துழைத்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி.

எம். கே. ஜே. ஏ. அல்விஸ்
ஆணையாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
கொழும்பு – 10
1987. 03. 02.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

கல்வி அமைச்சினுல் வகுக்கப்பட்டுள்ள புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கிணங்க, கல்வி அமைச்சின் கத்தோலிக்க சமய ஆலோசனைக் குழுவினது உதவியுடன், புதியதொரு பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. க. பொ. த. (சா. த.) வகுப்புக்குரிய இப்பாடநூல் அப்பாடத் திட்டத்துக்கமைய எழுதப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் கத்தோலிக்க ஆலோசனைக்குழு தேர்ந்தெடுத்த சிறந்த எழுத்தாளரைக்கொண்ட ஒரு குழுவினுல் இப்பாடநூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் இவ்வாலோசனைக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

அடிப்படை நோக்கத்தைப் பொறுத்தவரை, சமய பாட நூல்கள், ஏனைய பாடநூல்களிலிருந்து வேறுபட்டவை. ஏனைய பாடநூல்களின் முக்கிய நோக்கம், அப்பாடவிடயம் பற்றிய அறிவை மாணவருக்குப் புகட்டுவதேயாம். ஆயின், சமயபாட நூல்களோ அந்நோக்கத்தோடு, அதனிலும் ஒரு உயர்ந்த நோக்கத்தையும் கொண்டுள்ளதெனலாம். அதாவது, மாணுக்கரிடத்து நற்குண நல்லொழுக்கங்களை விருத்தி செய்து, அவர்தம் வாழ்க்கையை நன்னெறிப்படுத்துவதாம்.

கிறிஸ்துவானவர் காட்டிய நெறியிலே சென்று, அவர் தம் போதனைகளின்வழி வாழ்க்கையை மாற்றியமைத்துக் கொள்கின்ற உயர் இலட்சியத்தை நோக்கி மாணுக்கரது உள்ளங்களைத் திருப்பிவிடுவதே இந்நூலின் குறிக்கோளுமாம்.

இந்நூலை யாத்த எழுத்தாளர் குழுவுக்கும், தகுந்த ஆலோசனைகளை வழங்கியும், இந்நூலுக்கு அங்கீகாரம் அளித்தும் உதவிய கத்தோலிக்க சமய ஆலோசனைக் குழுவுக்கும் எனது நன்றி உரித்தாகும்.

எச். ஆர். சந்திரசேகர
ஆணையாளர்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
புதிய செயலகம்,
மாளிகாவத்தை,
கொழும்பு — 10.
1986. 03. 26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப்புகுமுன்

அன்பான பிள்ளைகளே,

வாழ்வின் 'பொருள்' அறிந்து வாழக் கற்றலே மறைக்கல்வி. சில பல மறைக்கோட்பாடுகளை மனனம் செய்தல் மறைக்கல்வி அன்று. முழுமையான மனிதனாக ஆளுமையில் வளர்தலே மறைக் கல்வியின் நோக்கம்.

உன்னத ஆளுமையின் எடுத்துக்காட்டாக ஒளிர்பவர் இயேசு. தந்தையாம் இறைவனில் பேரன்புள்ளவர் அவர்.

இதே அன்பினால் இயேசுக்கிறிஸ்து புதிய உலகைப் படைக்கும் பணியைத் தொடக்கி வைத்தார். இப்பணியில் நாம் எவ்விதம் செயற்பட வேண்டுமென அவர் வழிநடத்துகிறார்.

நாம் தனித்துநின்று இப்பணியை ஆற்ற முடியாது. கிறிஸ்து பெருமான் நிறுவிய இறைமக்கள் சபையாகிய திருச்சபை வழியாகவே நாம் இப்பணியில் ஈடுபடமுடியும்.

இயேசுக்கிறிஸ்து இன்றும் எம்முடன் வாழ்கிறார். அவரது தூய ஆவியினால் எமக்கு வலுவும் திடமும் அளிக்கிறார்.

அடையாளங்கள் இறைவனிடம் இருந்து வருபவை. அவற்றை நாம் புரிந்துகொள்ள முயலவேண்டும். பணிவு, தாழ்ச்சி, விசுவாசத்துடன் எம் வாழ்வை உருவாக்க வேண்டும். இவ்வழியில் நாம் நடந்து சமுதாயத்தைப் புனிதப்படுத்த இறைவன் எம்மை அழைக்கிறார். இந்த அழைப்புக்குச் செவிசாய்க்கும் பொறுப்பு எம் அனைவர்க்கும் உண்டு.

இந்தப் புதிய நூல் இப்புனித கடமையில் செயற்பட உங்களுக்கு உதவும்.

**கத்தோலிக்க ஆலோசனைக்குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

பாடம்


## ஆய்வுப்பொருள் (1) நான் காண்பவை — பக்கம்

| | | |
|---|---|---|
| 1. | நமது அழைப்பின் பெருமை | 1 |
| 2. | காலத்தின் நோக்கம் | 4 |
| 3. | இறைவன் நம்மோடு பேசுகிறார் | 7 |
| 4. | திருச்சபை நம் விசுவாசத்தின் காவலரும் போதகரும் | 9 |
| 5. | இறையரசின் மகிழ்ச்சிச் செய்தி | 11 |
| 6. | வியப்புக்குரிய இறைவன் | 14 |
| 7. | இறைவன் தூயவர், நீதியுள்ளவர் | 16 |
| 8. | எங்கும் நிறைந்த அளவில்லா ஞானமுள்ள இறைவன் | 19 |
| 9. | இறைவன் முழுமையான நிறைவுள்ளவர் | 21 |
| 10. | அன்பே இறைவன் | 23 |
| 11. | இறைவன் நம்மேல் அக்கறை கொண்டுள்ளார் | 25 |
| 12. | இறைவன் பாவிகள்மேல் இரக்கம் கொண்டுள்ளார் | 28 |
| 13. | இறைவன் உலகைப் படைத்தார் | 30 |
| 14. | இறைவன் சம்மனசுகளை உண்டாக்கினார் | 32 |
| 15. | இறைவன் மனிதர்களை உண்டாக்கினார் | 35 |

## ஆய்வுப்பொருள் (2) இறைவன், அடையாளங்கள் வழியாகத் தம்மை வெளிப்படுத்துகிறார்

| | | |
|---|---|---|
| 16. | இறைவன் தம் படைப்பின் வழியாய்த் தம்மையே வெளிப்படுத்துகிறார் | 38 |
| 17. | பழைய ஏற்பாட்டில் இறைவனின் அடையாளங்கள் | 42 |
| 18. | பழைய ஏற்பாட்டில் இறைவனின் அடையாளங்கள் — அரசரும் இறைவாக்கினரும் | 44 |
| 19. | புதிய ஏற்பாட்டில் இறைவனின் அடையாளம் — திருமுழுக்கு அருளப்பர் | 47 |
| 20. | புதிய ஏற்பாட்டில் இறைவனின் அடையாளம் — மரியாளும், சூசையும் | 50 |
| 21. | இறைவனின் உன்னத அடையாளம் | 53 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம்

22. இறைவனின் மகிமையைப் புலப்படுத்திய அடையாளங்கள் — கிறீஸ்துவின் உருமாற்றமும், இராயப்பரின் விசுவாச அறிக்கையும் 56
23. இறை அரசின் அடையாளமான அருங்குறிகள் 58
24. இறை அரசின் அடையாளமான உவமைகள் 60
25. இறை அரசின் உவமைகள் (ii) 62
26. திருச்சபை — இறை அரசின் அடையாளம் (i) திருச்சபையின் பண்புகள் 64
27. திருச்சபை — இறையரசின் அடையாளம் (ii)
28. திருச்சபை திருவருட் சாதனங்களை நிறைவேற்றுகின்றது 72
29. திருச்சபை நற்செய்தியை மக்களுக்கு அறிவிக்கின்றது 75
30. பரிசுத்த வேதாகமத்திலிருந்து, வாய்வழி வந்த மரபிலிருந்தும் திருச்சபை தனது போதனைகளைப் பெறுகின்றது 78
31. திருச்சபையிலுள்ள எழுதப்பட்ட அடையாளங்கள் (போதிக்கும் திருச்சபை, சுற்றுமடல்கள்) 81

## ஆய்வுப்பொருள் *(3)* இறைவன் அடிமைத் தனத்தில் இருந்து விடுதலைக்கு இட்டுச் செல்கிறுர்

32. நம் முதற் பெற்ரேர்கள் பாவம் புரிந்தனர் 83
33. எல்லா மனிதர்களுக்கும் சென்மபாவத்திஞல் விளைந்த தீமைகள் 85
34. இறைவன் உலக மீட்பரை அனுப்புவதாக வாக்களித்தார் 87
35. இறை மகன் மனிதனுய்ப் பிறந்தார் 91
36. நமது மீட்பரின் தாய் 94
37. கிறீஸ்துநாதரும் இறை அரசும் 96
38. இயேசுக்கிறீஸ்துநாதர் மக்களுக்குப் போதித்தார் 98
39. இறைவனின் ஊழியன் கிறீஸ்து 100
40. இறை இரக்கத்தின் அடையாளமான கிறிஸ்துநாதர் 102
41. இறைவன் தீமையிலிருந்து நன்மை உண்டாகச் செய்கிருர் 104



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | பக்கம் |
|---|---|---|
| 42. | இயேசுக்கிறீஸ்துநாதர் கடவுளுடைய திருமகனும் மெய்யான கடவுளுமாய் இருக்கிறுர். | 106 |
| 43. | புறக்கணிக்கப்பட்ட இறைமகன். | 109 |
| 44. | கிறீஸ்துநாதரும் சிலுவையும். | 111 |
| 45. | இயேசுக்கிறீஸ்துநாதர் தம்முடைய மரணத்தால் தம்மை மீட்டிருக்கிறுர். | 114 |
| 46. | முடிவில்லாப் பலி | 116 |
| 47. | இயேசுக்கிறீஸ்துநாதர் மரித்தோரிடம் சென்ருர். | 118 |
| 48. | இயேசுக்கிறீஸ்துநாதர் மரித்தோரிடமிருந்து உயிர்த்தார். | 120 |
| 49. | இயேசுக்கிறீஸ்துநாதர் பரலோகத்திற்கு எழுந்தருளினுர். | 123 |
| 50. | இயேசுக்கிறீஸ்துநாதர் நமது ஆண்டவர். | 125 |
| 51. | எமக்குப் புது வாழ்வு அளித்த கிறீஸ்துநாதர் | 128 |
| 52. | திருச்சபை — கிறீஸ்துநாதரின் மறைஉடல். | 130 |
| 53. | திருச்சபை வழியாகக் கிறீஸ்து போதித்துப் பரிசுத்தப் படுத்துகின்ருர். | 132 |
| 54. | மீட்புப் பணியைக் கிறீஸ்து தொடர்கின்ருர். | 135 |
| 55. | இயேசுக்கிறீஸ்துநாதர் மீண்டும் உலகில் வருவார். | 137 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுப் பொருள் 1

# நான் காண்பவை

பாடம் 1.

## நமது அழைப்பின் பெருமை;

## உலகில் நமக்குள்ள கடமை

குரு ஞானஸ்நானம் அளிக்குமுன், அதைப்பெற இருக்கிறவனை நோக்கி "கடவுளுடைய திருச்சபையிடம் நீ கேட்பது என்ன?" என்று வினவுகிறார். அதற்கு அவன் மறுமொழியாக "விசுவாசத்தைக் கேட்கிறேன்" என்று கூறுகிறான். மேலும் குரு "விசுவாசத்தினால் உனக்குக் கிடைப்பது என்ன?" என்று கேட்க, அதற்கு அவன், "நித்திய வாழ்வு கிடைக்கும்" என்று பதில் அளிக்கிறான். அப்பொழுது குரு அவனுக்கு நினைவுறுத்துவதாவது– "அப்படி நீ நித்திய வாழ்வை அடைய விரும்பினால், கற்பனைகளின்படி நட, உன் தேவனாகிய ஆண்டவருக்கு உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆன்மாவோடும், உன் முழுமனதோடும் அன்புசெய்! உன் அயலானையும் உன்னைப்போல் நேசிப்பாயாக."

நாம் ஞானஸ்நானம் பெறக் கொண்டுவரப்பட்ட பொழுது, குரு நம்மைக் கடவுளுடைய திருச்சபையின் பெயரால் ஏற்றுக்கொண்டார். குருவினுடைய வார்த்தையால்தான் நாம் பொதுக் கூட்டுறவில் வாழும் எல்லா விசுவாசிகளாலும், எண்ணிலாப் பரிசுத்தர்களாலும் பரிசுத்த ஆவியின் வழியாய் நம்மை விண்ணகத் தந்தையிடம் அழைத்துச் செல்லும் நமது மீட்பரும், ஆண்டவருமாகிய யேசுக்கிறிஸ்துநாதராலும் வரவேற்கப்பட்டோம்.

ஞானஸ்நானத்தின் செயலால் கடவுளுடைய திருச்சபையின் ஏராளமான ஞானச் செல்வங்கள் நமக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன. அதாவது, கிறிஸ்துநாதர் நமக்கு அளித்த விசுவாசமும் அவருடைய தெய்வீக உயிரை நமக்கு அளிக்கும் திருவருட்சாதனங்களும் விண்ணரசுக்கு நல்வழிகாட்டும் வேதக் கற்பனைகளும், கிறிஸ்துநாதருடைய சொந்த நன்மாதிரிகையும்—இவைதான் அந்த ஞானச் செல்வங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானஸ்நானத்தின்பொழுது நம்முடைய ஞானத்தந்தை–தாய் வழியாக நமது விசுவாசத்தை வெளிப்படுத்தினோம். பசாசையும், பாவ வாழ்க்கையையும் விட்டுவிட்டுக் கடவுளுடைய பிள்ளைகளுக்கேற்ப வாழ்வோமென உறுதிமொழி அளித்தோம்.

ஆகையால், இனி நாம் கடவுளுடைய பிள்ளைகளுக்கேற்ப இவ்வுலகில் நம்முடைய கடமைகளை நிறைவேற்ற வேண்டும். எப்படியெனில், அவர்மேல் விசுவாசமாயிருத்தல்; அவரை அதிகமதிகமாய் அறிதல்; அவருக்கு நம் முழு இருதயத்தோடு அன்பு செய்தல்; அவரை வழிபடுதல்; நமது முழுப்பலத்தோடு அவருக்கு ஊழியம் புரிதல்—இவ்வாறு நம்முடைய கடமையை நிறைவேற்றவேண்டும்.

நாம் இவ்வுலகில் கடவுளுடைய பிள்ளைகளைப்போல் நடந்து, அவருடைய சித்தத்தை நிறைவேற்றினால் ஒருகாலத்தில் நாம் அவரோடு என்றென்றும் வாழ்வோம்.

**சிந்தனைக்கு:** 1) நாம் ஞானஸ்நானம் பெறக்கொண்டுவரப்பட்டபொழுது, நம்மை ஏற்றுக்கொண்டவர் யார்? 2) ஞானஸ்நானத்தின் செயலால் நமக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ள ஞானச் செல்வங்கள் யாவை? 3) ஞானஸ்நானத்தின்பொழுது நமக்குப் பதிலாக நம்முடைய ஞானத் தந்தை–தாய் என்ன செய்தார்கள்?

**என் வாழ்க்கைக்கு:** நான் கிறிஸ்தவனாய் இருப்பதற்காகக் கடவுளுக்கு நன்றிகூறியிருப்பேன். "என்னிடமிருந்து கடவுள் விரும்புவது என்ன?" என்று அடிக்கடி என்னையே கேட்டுக்கொள்வேன்.


**வேதாகமத்திலிருந்து:** "நீங்கள் வந்தடைந்திருப்பதோ சீயோன் மலை, உயிருள்ள கடவுளின் நகர், வானக யெருசலேம். அங்கே எண்ணற்ற வானதூதர் சூழ்ந்துள்ளனர். வானகத்தில் பெயர் எழுதியுள்ள தலைப்பேறானவர்களின் திருச்சபை அங்கே விழாக்கூட்டமெனக் கூடியுள்ளது. நிறைவுபெற்ற நீதிமான்களின் ஆவிகளோடு சேர்ந்து அனைவருக்கும் நடுவரான கடவுள் முன்னிலையிலும், புதியதோர் உடன்படிக்கையின் இணைப்பாளரான இயேசுவின் முன்னிலையிலும் நிற்கிறீர்கள்." (எபிரேசர் 12:22–24); "விசுவாச வாழ்வு என்னும் சீரிய பந்தயத்தில் தளராதீர். முடிவில்லா வாழ்வைக் கைப்பற்றிக்கொள்ளும். அதற்காகவே அழைக்கப் பெற்றிருக்கிறீர்" (1 திமோத்தேயு 6:12) "உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவரை மட்டுமே ஆராதிப்பாயாக என எழுதியிருக்கிறது." (மத்தேயு 4:10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரிசுத்தர்களின் அறிவுரை:** "மனிதன் தன் ஆண்டவராகிய கடவுளைப் புகழவும், வணக்கம் செலுத்தவும், இவ்வண்ணம் தன் ஆன்மாவை இரட்சிக்கவும் உண்டாக்கப்பட்டான்" (லொயோலா இஞ்ஞாசியார்).

**செய்யவேண்டியவை:** 1 ஒருவன் ஞானஸ்நானத்தின் பொழுது கொடுத்த வார்த்தைப்பாட்டை எந்தச் சமயங்களில் புதுப்பிக்கின்றான்? 2) நீ பெற்றுள்ள விசுவாசத்தின் கொடைக்காகக் கடவுளுக்கு நன்றிகூற என்ன வார்த்தைகளைச் சொல்லுவாய்?

கத்தோலிக்க விசுவாசத்தைவிட அதிக ஆச்சரியத்துக்குரிய செல்வம் ஒன்றுமேயில்லை. அதைவிட இவ்வுலகில் வேறெந்த மதிப்பும் நன்மையும் கிடைப்பதரிது (பரிசுத்த அகுஸ்தீனார்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடம் 2

# காலத்தின் நோக்கம்

காலத்தைப் படைத்த இறைவன் அதன் நோக்கத்தை அறிவார். இறைவனின் படைப்பு காலத்தில் நிறைவடையும். மனிதன் தன் வாழ்நாளைப்பற்றி இறைவனுக்குக் கணக்குக்கொடுக்க வேண்டியவன். பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்களுக்கு சங்கத் திருவுரை ஆகம ஆசிரியர் கூறுவது:

"ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காலமுண்டு.
பிறக்க ஒரு காலமுண்டு; இறக்க ஒரு காலமுண்டு
நடுவதற்கு ஒரு காலமுண்டு; நட்டதைப் பிடுங்குவதற்கு ஒரு காலமுண்டு.

கொல்ல ஒரு காலமுண்டு; குணமாக்க ஒரு காலமுண்டு.
இடிக்க ஒரு காலமுண்டு; கட்ட ஒரு காலமுண்டு.
சிரிக்க ஒரு காலமுண்டு: புலம்ப ஒரு காலமுண்டு.
கூத்தாட ஒரு காலமுண்டு: மௌனமாயிருக்க ஒரு காலமுண்டு.
பேச ஒரு காலமுண்டு; போர்புரிய ஒரு காலமுண்டு.
சமாதானம் செய்ய ஒரு காலமுண்டு."

(சங்கத் திருவுரை ஆகமம் 3:1-11.)

இறைவன் ஒவ்வொன்றையும் அதனதன் ஒழுங்குக்கேற்ப அமைத்திருக்கிறார். காலத்தின் நோக்கை அறிவது கடினமல்ல. மனிதன் அதி உயர்ந்த வளர்ச்சி அடைவதும், இறைவனின் திட்டத்திற்கமைய அவரது படைப்பைப் பாதுகாத்தலுமே இந்நோக்கமாகும். இதற்குரிய விளக்கம் ஆதி. 1:28-இல் காணப்படுகிறது.

"நீங்கள் பலுகிப் பெருகிப் பூமியை நிரப்பி அதனைக் கீழ்ப்படுத்துங்கள்; கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும், பூமியின்மீது அசைந்து உலாவும் உயிரினங்கள் அனைத்தையும் ஆண்டு கொள்ளுங்கள்."

காலத்தில் கிறிஸ்து மனிதனானார்; மனிதரிடையே வாழ்ந்தார். அவர்கள் மத்தியில் வாழ்ந்து காலத்தை முழுமையாகப் பயன்படுத்தினார். இது எங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இறைவனின் பிள்ளையாகும் பேற்றைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் கிறிஸ்துவின் மாதிரிகையைப் பின்பற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்பல சந்தர்ப்பங்களில் கிறிஸ்து வாழ்வின் பொருளைக் கூறியிருக்கின்றார். இதனை உவமைகள் மூலம் விளக்கினார். லூக்காஸ் 13:6-9-இல் கூறப்படும் உவமை அவற்றுள் ஒன்றாகும்.

ஒருவ தன் திராட்சைத் தோட்டத்தில் அத்தி மரம் ஒன்றை நட்டு வைத்திருந்தான். அவன் வந்து அதிலே பழம் தேடிய பொழுது ஒன்றையும் காணவில்லை. ஆகவே தோட்டக்காரனிடம் மூன்று ஆண்டுகளாக வந்து ''இந்த மரத்திலே பழம் தேடுகிறேன்; ஒன்றுங் காணவில்லை. இதை வெட்டிவிடு. ஏன் வீணாக இடத்தை அடைத்துக் கொண்டிருக்கிறது'' என்றான். அதற்கு அவன் ''ஐயா, இந்த ஆண்டும் இருக்கட்டும் சுற்றிலும் கொத்தி எருப்போடுவேன்.'' காய்த்தால் சரி, இல்லாவிட்டால் வெட்டிவிடலாம் என்றான்.

மேற்கூறப்பட்ட உவமையிருந்து ஒரு சிறந்த பாடத்தைக் கற்றுக் கொள்கிறோம். இறைவன் மனிதனுக்கு வாழ்வு கொடுத்தார். அது காலத்தோடு கடந்து செல்கிறது. எமது வாழ்வின் குறிக்கோள் இறையரசு. இதனாலேதான் உம்முடைய இராட்சியம் வருக என்று செபிக்கின்றோம். இப்படியானால் இறைவனின் அரசு முதலில் எமது உள்ளங்களில் உதயமாக வேண்டும். இதற்கு எமது உடல், உளவளர்ச்சி போதுமானதன்று. சமூக இயல்புக்கு மேலான வளர்ச்சியும் இதற்கு அவசியம். வேறுவகையில் கூறுவதாயின் உளமாற்றம் வேண்டப்படுகிறது. மேற்கூறிய உவமையில் சொல்லப்பட்ட மரமானது செழித்து வளர்ந்த தொன்றுதான். ஆனால் அதனிடம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் அதாவது கனிதருதல் இடம்பெறவில்லை. அது காய்ப்பது தனக்காகவல்ல —மற்றவர்களுக்காக. ஆற்றின் நீர் மற்றவர்களுக்கேயொழிய ஆற்றுக்கல்ல: பசுவின் பால் பசுவிற்கன்று—மற்றவர்களுக்கே. இறையரசானது சுயநலம் படைத்தோர்க்கன்றி கிறிஸ்துவைப்போல அனைத்தையும் வழங்கும் இயல்புடையோர்க்கே உரியது. இப்படிப்பட்ட அதி உன்னத வளர்ச்சியை அடைவதற்கு சிறந்த தனிப்பட்ட வளர்ச்சி அவசியம். ஒருவனுடைய ஆற்றல், சக்தி, பணம், பதவி முதலியவற்றை மற்றவர்களுடைய நலன்களுக்காக அர்ப்பணிக்க விரும்பும் ஒருவன் உளமாற்றம் அடைவது அவசியம்.

இந்த ஒளியில் காலத்தைப் பார்க்கும்போது அதைப்பற்றிய இறைவனின் சித்தம் தெளிவாகின்றது. சங்கத்திருவுரை ஆகமம் கூறும் ஒழுக்க நிலைக்கு எம்மை இட்டுச் செல்கின்றது. கிறிஸ்துவின் போதனை இறையரசின் நிலைக்கு எம்மை வழிநடத்துகின்றது. எல்லாவற்றிலும் மேலாக கிறிஸ்தவன் இறையரசைத் தேடுவதிலேயே காலத்தைப் பயன்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிந்தனைக்கு :** 1. காலத்தின் இறைவன் யார்?

2. காலத்தைப்பற்றிய கிறிஸ்தவனின் நோக்கம் என்ன?

3. கிறிஸ்தவன் தன் காலத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?

4. காலத்தைச் சரியாகப் பயன்படுத்தக் கிறிஸ்துவிட மிருந்து பெற்றுக்கொண்ட வழிவகைகள் எவை?

கிறிஸ்து உடல், உள, ஆன்மீக ரீதியில் வளர்ச்சியடைந்தார். எல்லாவற்றிலும் அவர் இறைசித்தத்தைத் தேடினார். இறைவன் சித்தத்திற்குப் பணிந்தார். தனது நேரம், சக்தி, வாழ்வு முழுவதையும் மனிதனுக்காகப் பலியாக்கினார்.

**எனது வாழ்விற்கு :** கிறிஸ்துவைப்போன்று நானும் எனது நேரத்தைச் செலவிடுவேன் என்று தீர்மானிக்கிறேன்.

**வேதாகமத்திலிருந்து :** "ஆண்டவருக்கு ஒருநாள் ஆயிரம் ஆண்டுகள்போல் ஆயிரம் ஆண்டுகள் ஒருநாள்போல். ஆண்டவர் தம் வாக்குறுதியை நிறைவேற்றக் காலம் தாழ்த்துவதாகச் சிலருக்குச் தோன்றுகின்றது; ஆனால் அவர் காலந்தாழ்த்துவதில்லை; உங்கள் பொருட்டு பொறுமையாயிருக்கிறார்; ஒருவரும் அழிவுறக்கூடாது, எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்றிருக்கிறார்." (2 இரா. 3:8-9)

**காலைச்செபம் :** ஆண்டவரே எனக்கு இன்னொரு நாளை வாழ்வதற்கு அளித்தமைக்கு நன்றி கூறுகின்றேன். இன்றைய நாளை தகுந்தமுறையில் செலவழிக்க எனக்கு உதவிசெய்யும். எனது வளர்ச்சிக்காக உழைக்கத் தருணம் தருவது மாத்திரமல்ல, எனது சகோதரரின் வளர்ச்சிக்காகவும் உழைக்க எனக்கு வாய்ப்பைத் தாரும். கிறிஸ்துவின் மூலம் இதனைக் கேட்கின்றேன், ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடம் 3

# இறைவன் நம்மோடு பேசுகிறார்

"மோயீசன் மதியான் நாட்டுக் குருவாகிய யெத்திரோ என்னும் தன் மாமனின் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கையில், மந்தையைப் பாலைநிலத்தின் உட்புறமாய் ஓட்டிக்கொண்டு, தெய்வ (காட்சி) மலை எனப்படும் ஓரேபு மலைவரை வந்தான். ஆண்டவரோ, ஒரு முட்செடியின் நடுவினின்று, நெருப்புக்கொழுந்து உருவத்தில் அவனுக்குக் காட்சியளித்தார். அவன், முட்செடி வெந்துபோகாமலே எரிவதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆகவே மோயீசன் : நான் போய், முட்செடி வெந்துபோகாமல் எரிகிற இந்த அதிசயக் காட்சியைப் பார்ப்பேன் என்றான். ஆனால், அவன் உற்றுப்பார்க்க வருவதை ஆண்டவர் கண்டு, முட்செடியின் நடுவினின்று : மோயீசா மோயீசா என்று, அவனை அழைக்க, அவன், "இதோ இருக்கிறேன்" என்று மறுமொழி கூறினான். அவர் "அணுகி வராதே! உன் காலணிகளைக் கழற்றிவிடு. ஏனென்றால், நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி" என்றார். மீண்டும் அவர் "உன் தந்தையின் கடவுள், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோப்பின் கடவுள் நாமே" என்றருளினார். மோயீசன், கடவுளை உற்றுப்பார்க்கத் துணியாது தன்முகத்தை மூடிக்கொண்டான்." (யாத்திராகமம் 3:1-6)

கடவுள் உயர்ந்தவர் : பரிசுத்தர். அவர் நம்மேல் வைத்த அன்பினாலே நம்மேல் இரங்கி, நம்மோடு பேசியிருக்கிறார். பழைய உடன்படிக்கையில் பிதாப்பிதாக்கள் வழியாகவும், தீர்க்கதரிசிகள் வழியாகவும் பேசினார். புதிய உடன்படிக்கையிலோ, தமது திருமகன் இயேசுக் கிறிஸ்துவின் வழியாகவும், அவருடைய அப்போஸ்தலர்கள் வழியாகவும் நம்மோடு பேசியிருக்கிறார்; "பற்பல முறையிலும் பல்வேறு வகையிலும் முற்காலத்தில் இறைவாக்கினர் வாயிலாக நம் முன்னோரிடம் பேசிய கடவுள், நாம் வாழும் இவ்விறுதி நாட்களில் நம்மிடம் தம் மகனின் வாயிலாகவே பேசியுள்ளார்." (எபிரேயர் 1;1-2)

தாம் யார் என்றும், என்ன செய்கிறார் என்றும், நாம் யார் என்றும், என்ன செய்யவேண்டும் என்றும் நமக்குச் சொல்லிக் காட்டுவதற்காக கடவுள் நம்மோடு பேசியிருக்கிறார். அவர் நமக்கு உண்மைகளைத் திறந்து காட்டியுள்ளார். அப்படி அவர் காட்டியிராவிடில், அவை என்றுமே மறைபொருளாய் இருந்திருக்கும்; கடவுள் தம்மையே வெளிப்படுத்தியிருக்கிறார். கடவுள் வெளிப்படுத்தியவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத் தம்முடைய திருச்சபையைக் கொண்டு நாம் அறியச்செய்கிறார். அதன் வழியாகத்தான் பேசுகிறார்; அக்காலத்தில் தாம் வெளியிட்ட உண்மைகளை எல்லா மனிதர்களுக்கும் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறார். அவருடைய வார்த்தையை ஏற்று, அறிந்து, அதன்படி நடப்பதற்கு வேண்டிய ஒளியையும், வலிமையையும் நமக்கு அளிக்கிறார்.

கடவுள் நம்முடன் பேசும்பொழுது, நம்மைச் சுற்றியிருக்கிற யாவற்றையும், கடவுள் உட்பட நமக்கு வாழ்க்கை, உலகம் அனைத்தையும் கண்டுபிடிக்கிறோம். எல்லாவற்றையும் ஒரு புதிய ஒளியில் பார்க்கிறோம். ஆனால், அவை நம் உள்ளத்தைப் பக்தியாலும் நன்றியறிதாலும் மகிழ்ச்சி வலிமையாலும் நிரப்புகின்றன.

**சிந்தனைக்கு :** 1) கடவுள் ஏன் நம்மோடு பேசியுள்ளார்? 2) "தேவ அறிக்கை" என்றால் என்னபொருள்? 3) கடவுள் நமக்கு என்ன வெளிப்படுத்தியிருக்கிறார்? 4) கடவுள் தம்முடைய அறிக்கையை, விளம்பரப்படுத்த எவ்வித ஏற்பாடு செய்தார்? 5) கடவுள் நம்மிடம் பேசும்பொழுது நாம் பெறும் பயன் என்ன?

**என் வாழ்க்கைக்கு :** கடவுள் சொன்னவைகளுக்கு மாறாகப் பிறர் என்ன சொல்லக் கேட்டபோதிலும், நான் கடவுளைத்தான் விசுவசிப்பேன்.

**வேதாகமத்திலிருந்து :** "நான் நடக்கவேண்டிய பாதையைக் காட்டும் விளக்கு உம் வார்த்தை. செல்லும் வழிக்கு வெளிச்சமும் அதுவே." (சங்கீதம் 113 : 105)—"ஆண்டவர் வந்து சாமுவேல் அருகே நின்று, "சாமுவேல், சாமுவேல்!" என்று முன்போலவே கூப்பிட்டார். சாமுவேல் ஆண்டவரே பேசும்: உம் அடியான் கேட்கிறேன்." (1 சாமுவேல் 3:10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடம் 4

# திருச்சபை நம் விசுவாசத்தின் காவலரும், போதகரும்

நம் ஆண்டவர் யேசுக்கிறிஸ்துநாதர் அன்று எழுபத்திரண்டு சீடர்களைத் தெரிந்தெடுத்தார். தாம் செல்ல இருக்கும் நாடு நகரம் ஒவ்வொன்றுக்கும் அவர்களை முன்னதாகவே அனுப்பிவைத்தார். அவர்களை நோக்கி, "உங்களுக்குச் செவி சாய்ப்பவன் எனக்குச் செவிசாய்க்கிறான்; உங்களைப் புறக்கணிக்கிறவன் என்னைப் புறக்கணிக்கிறான். என்னைப் புறக்கணிக்கிறவனோ என்னை அனுப்பினவரையே புறக்கணிக்கிறான்." என்றார் (லூக்காஸ் 10:1--16).

நாம் ஞானஸ்நானத்தில் பெற்ற விசுவாசத்தைப்பற்றி நமக்குக் கற்பிப்பது பரிசுத்த திருச்சபை ஒன்றே. திருச்சபையே நம் விசுவாசத்தின் காவலனும், ஆசிரியனுமாக இருக்கின்றது. இந்த விசுவாசத்தைப் பரப்புமாறு தன் பெயரால் குருக்களையும் போதகர்களையும் நம்மிடம் அனுப்புகிறது. நமது விசுவாசத்தைப்பற்றியவைகளை நாம் மேன்மேலும் கற்றறியும்வண்ணம் நமக்கு உதவும் வேதாகமம் (பைபிள்) ஞானோபதேசப் புத்தகம், பூசைப்புத்தகம், செபப்புத்தகம் ஆகிய நூல்களை நமது கையில் கொடுக்கின்றது.

நமக்கு விசுவாசத்தைப் போதிக்கும் முழு அதிகாரத்தைக் கடவுளின் திருமகனாகிய கிறிஸ்துநாதர் திருச்சபைக்கு அளித்துள்ளார். அவர் அப்போஸ்தலர்களைப் பார்த்து, "உலகெங்கும் போய்ப் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள்" என்று கூறினார் (மாற்கு 16:15). கிறிஸ்துநாதர்தான் திருச்சபையின் வாய்வழியாக நமக்குக் கற்பிக்கிறார்: "உங்களுக்குச் செவிசாய்க்கிறவன், எனக்குச் செவிசாய்க்கிறான்" என்று சொல்லியிருக்கிறார் (லூக்காஸ் 10 : 16). விசுவாசத்தின் மிக முக்கியமான சத்தியங்களைத் திருச்சபை விசுவாசப்பிரமாணத்தில் தொகுத்து வைத்திருக்கின்றது. நாம் திருச்சபைக்குச் செவிசாய்க்க வேண்டும் என்பது கடவுளின் சித்தம். திருச்சபை விசுவசிப்பதையும், நாம் விசுவசிக்கும்படி போதிப்பதையும் விசுவசிக்கவேண்டும். இவ்வாறு, நாம் உண்மையின் வழியில் நடந்து, முடிவில்லா வாழ்வை அடைவோம்.

**சிந்தனைக்கு :1)** திருச்சபையின் பெயரால் நமக்குப் போதிப்பவர் யார்? 2) திருச்சபை நமக்குக் கொடுக்கும் நூல்கள் எவை? 3) திருச்சபைக்குப் போதிக்கும் அதிகாரத்தை அளித்தது யார்? 4) விசுவாச சத்தியங்களின் கருத்தை நாம் எங்கே காண்கிறோம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விசுவாசப்பிரமாணம் :** பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த எல்லாம்வல்ல பிதாவாகிய சர்வேசுரனை விசுவசிக்கிறேன். அவருடைய ஏக சுதனாகிய நம்முடைய நாதர் யேசுக்கிறிஸ்துவையும் விசுவசிக்கிறேன். இவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாய் உற்பவித்துக் கன்னிமரியாயிடமிருந்து பிறந்தார். போஞ்சு பிலாத்துவின் அதிகாரத்தில் பாடு பட்டு சிலுவையில் அறையுண்டு மரித்து அடக்கம் செய்யப்பட்டார். பாதாளத்தில் இறங்கி மூன்றாம்நாள் மரித்தோரிடம் இருந்து உயிர்த்தெழுந்தார். பரலோகத்திற்கு எழுந்தருளி, எல்லாம்வல்ல பிதாவாகிய சர்வேசுரனுடைய வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்தில் இருந்து சீவியரையும் மரித்தவரையும் நடுத்தீர்க்க வருவார். பரிசுத்த ஆவியை விசுவசிக்கிறேன். பரிசுத்த கத்தோலிக்க திருச்சபையை விசுவசிக்கிறேன். அர்ச்சியசிஷ்டர்களுடைய சமூதிதப் பிரயோசனத்தை விசுவசிக்கிறேன். பாவப்பொறுத்தலை விசுவசிக்கிறேன். சரீர உத்தானத்தை விசுவசிக்கிறேன். நித்திய சீவியத்தை விசுவசிக்கிறேன்.

—ஆமென்.

**என் வாழ்க்கைக்கு :** திருச்சபையின் விசுவாசத்தில் நான் வாழ்ந்து மரிக்க ஆசைகொண்டிருக்கிறேன்.

**வேதாகமத்திலிருந்து :** "நீங்கள் பெற்றுக்கொண்ட நற்செய்தி யின்றி வேறானதொன்றை எவனாவது உங்களுக்கு அறிவித்தால், அவன் சபிக்கப்படுவானாக !" (கலாத்தியர் 1 : 9)

**திருச்சபையின் வாழ்க்கையிலிருந்து :** திருச்சபையின் பயிற்சிமுறை பழங்காலத்திலிருந்த ஞானோபதேசம் என்று அழைக்கப்பட்டு வந்தது. அதன் ஆசிரியர் உபதேசியார் என்று அழைக்கப்படுகிறார். உபயோகிக்கப்படும் நூல் ஞானோபதேச நூல் என்று சொல்லப்படும்.

**சிலுவை அடையாளம்:** நமது விசுவாசம் முழுவதும் சிலுவை அடையாளத்தினால் சுருக்கமாக விளக்கப்படுகிறது. நாம் இந்த அடையாளத்தை வரையும்பொழுது பிதா, சுதன், பரிசுத்த ஆவியாகிய சர்வேசுரன் மேலும், நம் ஆண்டவருடைய மரணத்தின் வழியாக நிறைவேற்றப்பட்ட மீட்பின் மேலும் நாம் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிடுகிறோம்.

"எங்கள் மூதாதைகளின் விசுவாசமே, பரிசுத்த விசுவாசமே, மரணம் வரையிலும் உனக்குப் பிரமாணிக்கமாயிருப்போம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடம் 5

# இறையரசின் மகிழ்ச்சிச் செய்தி

ஒருநாள் இயேசுநாதர் மக்களுக்கு ஓர் உவமையைச் சொன்னார்: "விண்ணரசு தன் மகனுக்குத் திருமணம் செய்துவைத்த அரசனுக்கு ஒப்பாகும். அவன் ஊழியரை அனுப்பித் திருமணத்திற்கு அழைக்கப் பெற்றவர்களை வரச்சொன்னான். அவர்களோ வர விரும்பவில்லை. அப்பொழுது அவன் தன் ஊழியரிடம், 'திருமண விருந்து ஏற்பாடாகி விட்டது, அழைக்கப்பெற்றவர்களோ தகுதியற்றவர்களாயினர். எனவே வீதிகளுக்குச் சென்று நீங்கள் காணும் எல்லாரையும் மணவிருந்திற்கு அழையுங்கள்' என்றான். அவன் ஊழியரும் வீதிகளுக்குச் சென்று தாங்கள் கண்ட நல்லவர் கெட்டவர் அனைவரையும் கூட்டிச் சேர்த்தனர். மன்றம் நிரம்ப அவர்கள் பந்தி அமர்ந்தனர்" என்றார். (மத்தேயு 22:2—10)

உலகத்தின் இறுதி நாளில் கடவுள் இனி மறைந்தவராய் இருக்கமாட்டார். ஆனால், தமது முழு மகிமையின் வல்லமையையும் அன்பையும் நமக்கு வெளிப்படையாகக் காட்டித் தோன்றுவார். தம் திருமகன் கிறிஸ்துநாதருக்கு, உலகம் உண்டாவதற்கு முன்பே இருந்த அவருக்கு உரித்தான மகிமையைக் கொடுப்பார். எல்லா இனத்தினரிலிருந்து அவருடைய மக்களை அழைத்து, கிறிஸ்துநாதரிடம் சேர்ப்பார். அவர்கள் எக்காலமும் தம் அன்பில் இன்புற்றிருக்கச் செய்வார். மேலும் உலகத்தை மோட்ச மகிமையால் நிரப்புவார். "புதிய வானத்தையும், புதிய பூமியையும் நாம் படைக்கிறோம்" என்றார் (இசையாஸ் 65:17). விண்ணரசு தன் முழுப் பொலிவோடு துலங்கும். அதன் நிறைவும் அதுவே. விண்ணரசு ஒரு கலியாண விருந்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. கடவுளே அந்த அரசன். கிறிஸ்துநாதர்தான் மணமகன்; மணமகள் மீட்கப்பட்ட மனுக்குலம். புதுப்பிக்கப்பட்ட படைப்புத்தான் கலியாணம் நடைபெறும் இடம்.

நாம் அனைவரும் அந்த இராச்சியத்தில் சேர்ந்தவர்களாயிருக்க வேண்டுமென்று கடவுள் விரும்புகிறார். இதற்காகவே அவர் தம் திருமகனை உலகத்திற்கு அனுப்பினார். யேசுநாதர் கடவுளுடைய இராச்சியத்தைப்பற்றி நமக்கு எடுத்துக்கூறியுள்ளார்; நம்மை மீட்டார்; நம்மைக் கடவுளின் பிள்ளைகளாக்கினார்.

கடவுளுடைய இராச்சியம் கிறிஸ்துநாதரில் நம் நடுவில் முன்னரே வந்துவிட்டது. ஒரு நேசத் தந்தையைப்போல்கடவுள் நம்மை ஆண்டு நடத்துகிறார். தம் அருளையும் நமக்கு வழங்குகிறார். விண்ணக மண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனாகிய கிறிஸ்துநாதர் நம் நடுவேதான் இருக்கிறார். அவருடைய விண்ணக கலியாணவிருந்தில், தேவநற்கருணையில் எற்கனவே நாம் பங்கு பெறுகிறோம். ஆயினும், கடவுளுடைய இராச்சியத்தின் மகிமை இன்னும் நமக்கு மறைவாகவே இருக்கின்றது

இறுதி நாளில், கிறிஸ்துநாதர் வரும்பொழுது, கடவுளுடைய இராச்சியத்தை அதன் முழு மகிமையில் காண்போம். கடவுளுடைய பகைவர்கள் அந்த விண்ணக விருந்தில் யாதொரு பங்கும் பெறமாட்டார்கள். ஆனால், கடவுளின் பிள்ளைகள் "தம் தந்தையின் அரசில் கதிரோனைப்போல் ஒளிர்வர் (மத்தேயு 13:43). மேலும், செம்மறிப்புருவையானவருடைய கலியாண விருந்தைக் கொண்டாடுவார்கள் (காட்சி ஆகமம் 19:7).

கடவுளுடைய இராச்சியம் நமக்குக் கடவுளால் அளிக்கப்படுவதோடு நின்றுவிடுவதில்லை; அதைக் கட்டுவதற்கு நாமும் உழைக்க வேண்டும். கடவுளுடைய இராச்சியத்திற்கு அழைக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவன் அந்த இராச்சியம் தன்னில் வளரவும், தன்னைச் சுற்றியுள்ள உலகில் வளரவும் தன் முழுப்பலத்துடன் முயற்சிக்கவேண்டும். "உமது இராச்சியம் வருக!"

**சிந்தனைக்கு:** 1) உலகத்தின் இறுதி நாளில் கடவுள் என்ன செய்வார் 2) விண்ணக கலியாண விருந்தில் அரசனாக இருப்பவர் யார்? மணமகன் யார்? மணமகள் யார்? 3) கலியாணம் நடைபெறவிருக்கும் இடம் எது? 4) நாம் அவருடைய இராச்சியத்தில் இடம்பெற வேண்டி கடவுள் என்ன செய்திருக்கிறார்? 5) விண்ணரசு ஏற்கனவே நம்நடுவில் இருப்பதாக எந்த அர்த்தத்தில் நாம் சொல்ல முடியும்? 6) கடவுளுடைய இராச்சியம் அதன் முழு மகிமையில் வரும்பொழுது என்ன நடக்கும்?

**என் வாழ்க்கைக்கு:** உலகத்திலுள்ள எல்லாச் செல்வங்களையும் விடக் கடவுளுடைய இராச்சியம் எனக்கு அதிக முக்கியமானதாய் இருத்தல் வேண்டும்.

**வேதாகமத்திலிருந்து:** "ஆண்டவர் உலகம் முழுவதற்கும் அரசராவார்" (சக்கரியாஸ் 14:9). —"புதிய வானத்தையும் புதிய பூமியையும் நாம் படைக்கிறோம்" (இசையாஸ் 65:17). — "ஆண்டவருடைய அரசு உலகத்தின் இறுதி நாளில் நிறைவு எய்தும்பொழுது விண்ணிலுள்ள புனிதர்கள் அல்லேலூயா! எல்லாம் வல்ல கடவுளாகிய ஆண்டவர் ஆட்சி செலுத்தலானார். நாம் அகமகிழ்ந்து களிகூர்ந்து அவருக்கு மகிமை அளிப்போமாக. ஏனெனில் செம்மறியின் மணவிழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துவிட்டது" (திருவெளிப்பாடு 19 : 6—7). —விண்ணரசு நிலத்தில் மறைந்துள்ள புதையலுக்கு ஒப்பாகும். அதைக்கண்டு பிடித்தவன் அதை மறைத்துவிட்டு, அதைக்கண்ட மகிழ்ச்சியில் போய்த் தனக் குள்ளதெல்லாம் விற்று அந்நிலத்தை வாங்கிக்கொள்கிறான்" (மத்தேயு 13: 44).

**செய்ய வேண்டியவை** 1). — கடவுளுடைய இராச்சியம் வரும்படி எந்தச் செபத்தில் நாம் கேட்கிறோம் ? 2) கடவுளுடைய இராச்சியம் என்றும் செழித்து வளரும்வண்ணம் நாம் செய்யவேண்டியவை எவை? 3) கடவுளுடைய இராச்சியத்தின் வருகைக்காகத் திருச்சபை தன் ஆண்டு வரிசையில் எப்பொழுது மிகச் சிறந்தவகையில் நம் கவனத்தைச் செலுத்துகிறது? 4) கடவுளுடைய இராச்சியத்தைப்பற்றி யேசுநாதர் எந்த உவமைகளிலால் பேசியுள்ளார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 6

# வியப்புக்குரிய இறைவன்

"கடவுள் மனிதனைப்போல் பொய் சொல்பவருமல்லர் மனிதனுக்குப் பிறந்தவனைப்போல் மாறுபடுகிறவருமல்லர். தாம் சொல்லியதைச் செய்யாமலிருப்பாரோ? பேசியதை நிறைவேற்றுதிருப்பாரோ?

(எண் ஆகமம் 23 :19).

கடவுள் எப்பொழுதும் உண்மையைப் பேசுகிறார். மனிதர் தவறலாம்; பிறரை ஏமாற்றலாம். கடவுள் தவறவோ அல்லது பொய் சொல்லவோ மாட்டார். "கடவுள் ஒளியாயிருக்கிறார்; அவருள் இருள் என்பதே இல்லை" (1அருளப்பர் 1:5) கடவுள் உண்மையுள்ளவர்.

கடவுள் தம் வாக்குகளைக் காப்பவர். பழைய ஏற்பாட்டில் அவர் வாக்களித்திருந்த மீட்பரை அனுப்பியிருக்கிறார். அப்படியே நமக்கு வாக்கு அளித்திருப்பவைகளை நிறைவேற்றுவார். கடவுள் பிரமாணிக்க முள்ளவர்.

மனிதர்கள் அவருக்குச் செவிசாய்க்காதபொழுது, அவர் தண்டிப்பதாக எச்சரித்தபடியே தண்டிப்பார். சலப்பிரளயத்தால் அழிப்பதாக எச்சரித்தார்; எகிப்தியருக்குத் தொற்றுநோய் அனுப்புவதாகச் சொன்னார்; இன்னும் மற்றத் தண்டனைகள் வருமென்று எச்சரித்தார். தபசு செய்ய மறுத்துவிட்டவர்கள்மேல் அந்தத் தண்டனைகளை விழச்செய்தார். நாம் செய்த பாவத்திற்குத் தபசுசெய்யாவிட்டால் நம்மையும் அவர் தண்டிப்பார். "ஏமாந்து போகவேண்டாம். கடவுளை ஏமாற்ற முடியும் என நினைக்காதீர்கள்" (கலாத்தியர் 6:7).

ஒரு காலத்தில் உலகம் இருந்ததுமில்லை; மனிதர்களுமில்லை. ஆனால், கடவுள் எப்பொழுதும் இருப்பார். அவர் எப்பொழுதும் இருந்தார், எப்பொழுதும் இருப்பார். அவருக்குத் தொடக்கமும் இல்லை; முடிவும் இல்லை. நேற்று, நாளை என்பது அவருக்கு இல்லை.கடவுள் நித்தியர். "மலைகள் தோன்றுமுன்பே, பூமியும் உலகும் உண்டாகுமுன்பே, ஊழ் ஊழிக்காலமாக இறைவா, நீர் இருக்கிறீர்"(சங்கீதம் 89 : 2).

உலகமும் மனிதர்களும் மாற்றம் அடைகின்றனர். ஆனால், கடவுள் எப்பொழுதும் அப்படியே இருக்கிறார். அவர் கிழவன் ஆவதில்லை; மாறுவதும் இல்லை. கடவுள் மாற்றமில்லாதவர். "ஆதியிலே நீர் பூவுலகுக்கு அடித்தளமிட்டீர்; வானங்கள் உம் கைவேலை. இவையெல்லாம் அழிந்துவிடும். நீரோ நிலைநிற்பீர். அனைத்துமே ஆடையைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல பழமையடையும். துணிமணிபோல் நீர் அவற்றை மாற்றுகிறீர். அவையும் மாறிப்போம். நீரோவெனில் ஒரே நிலையாய் உள்ளீர்; உம் காலத்துக்கு முடிவே இல்லை" (சங்கீதம் 201 :26).

**சிந்தனைக்கு:** கடவுள் ஒருபொழுதும் மாறுவதில்லை என்று பொருள் பட எப்படிச் சொல்லுகிறோம்?

**என் வாழ்க்கைக்கு:** எப்பொழுதும் நான் உண்மையே பேசுவேன். என் வாக்கிலும் பிரமாணிக்கமாயிருப்பேன் : ஏனெனில், விண்ணகத்திலுள்ள என் தந்தையாகிய கடவுள் எப்பொழுதுமே உண்மையுள்ளவர்; அவர் வாக்குறுதியைக் காப்பாற்றுகிறவர்.

**வேதாகமத்திலிருந்து:** "ஆண்டவருக்கு ஒருநாள் ஆயிரம் ஆண்டுகள்போல், ஆயிரம் ஆண்டுகள் ஒருநாள் போல்." (இரா 3:8)

"கடவுளிடம் எவ்வகை மாற்றமும் இல்லை; மாறி மாறி நிழல் விழச்செய்யும் ஒளியன்று அவர்" (யாகப்பர் 1: 17).

**புனிதர்களின் அறிவுரை:** "மனிதர் எவ்வளவு விரைவில் மாறுகிறார்கள் என்றும், அவர்களை எவ்வளவுதான் நம்பலாமென்றும் சிந்தித்துப்பார். ஆகையால், மாறாத கடவுளை உறுதியாகப் பற்றிக்கொள்.

**செய்யவேண்டியவை:** 1. வேதாகமத்தில் பின் உள்ளவைகளுக்குச் சான்றுகளைத் தேடிப்பார். (அ) கடவுள் ஒரு காரியத்தைச் செய்வதாக வாக்கு அளித்தார்; பின் அந்த வாக்கை நிறைவேற்றினார். (2) கடவுள் ஒரு காரியத்தைச் செய்வதாக அச்சுறுத்தினார்; பின் அதை அப்படியே செய்துவிட்டார்.

2. "நித்திய கடவுள்" என்று பூசைச்செபங்களில் எந்த இடங்களில் சொல்லுகிறோம்.

"உமது பெரிய இராச்சியத்திற்கு அளவேயில்லை;
உமது ஆட்சியும் என்றென்றுமுள்ளது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாடம் 7

# இறைவன் தூயவர், நீதியுள்ளவர்

இறைவாக்கினரான இசையாஸ் தெரிந்துகொள்ளப்பட்ட பொழுது, அவர் கடவுளின் மகிமையைப் பார்தார். "மிகவும் உயரமான ஓர் அரியணையின்மேல் ஆண்டவர் வீற்றிருப்பதைக் கண்டேன்; அவருடைய தொங்கலாடை திருக்கோயிலை நிரப்பி நின்றது. அவருக்கு மேலே உயரத்தில் சேராபீன்கள் நின்றனர். ஒவ்வொருவருக்கும் ஆறு இறக்கைகள் இருந்தன; இரண்டு இறக்கைகளால் முகத்தை மூடிக்கொண்டனர்; இன்னும் இரண்டினால் கால்களை மறைத்துக்கொண்டனர்; மற்ற இரண்டினால் பறந்தனர். ஒருவரை ஒருவர் உரத்த குரலில் கூப்பிட்டு, சேனைகளின் ஆண்டவர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்; உலகம் முழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்துள்ளது என்று கூறிக்கொண்டிருந்தார்கள். கூறியவரின் குரலொலியால் வாயில் நிலைகளெல்லாம் அதிர்ந்தன; கோயில் முழுவதும் புகை நிறைந்தது. அப்பொழுது நான்,

"ஐயோ! நான் அழிந்தேன்; ஏனெனில், அசுத்த உதடுகள் கொண்டவன் நான்; அசுத்த உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்கிற நான் சேனைகளின் ஆண்டவராகிய அரசரை என் கண்களாற் கண்டேன்!" என்றேன் (இசையாஸ் 6 : 1-5).

கடவுள் படைக்கப்பட்ட எல்லாப் பொருட்களையும் விட அளவற்ற விதமாய் மேலானவர். "அணுகமுடியா ஒளியில் உறைபவர்" (1 திமோத்தேயு 6 : 16). அவர் தாமே தம்மைக் காட்டினாலன்றி எந்தச் சிருட்டியும் அவரைப் பார்க்க முடியாது. கடவுள் ஒருவனைத் தம் பக்கமாய் உயர்த்தாவிடில், ஒருவனும் அவர் அருகில் செல்ல இயலாது. கடவுள் தூயவர். ஆதலின், சம்மனசுக்களும் மனிதரும் அவரை ஆராதிப்பது ஏற்ற முறையாகும்.

மேலும், கடவுள் தீமையுள்ள எந்தப் பெருமையும்விட அளவற்ற விதமாய் மேலானவர். தன்னிலேயே நன்மையும் நிறைவானதுமான எதையும் அவர் எப்பொழுதும் நேசிக்கிறார். எத்தகைய தீமையையும் அவர் வெறுத்துத் தள்ளுகிறார். ஏனெனில், அது அவர் இயல்புக்கு முற்றும் மாறானது.

கடவுள் தூயவர். ஆகையால், நாமும் தூயவர்களாக இருப்பது அவருடைய சித்தம். அதன் காரணமாகத்தான் அவர் நம்மீது இரங்குகிறார்; நம்மைப் பாவங்களினின்று தூய்மைப்படுத்துகிறார். தமது தூய தெய்வீக உயிரால் நம்மை நிரப்புகிறார். அதன் காரணமாகத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமும் நன்மையை நேசித்துத் தீமையை வெறுக்க வேண்டுமென்று கேட்கிறார். விண்ணகத்திலும், உலகத்திலும் உள்ள எல்லாப் பரிசுத்த தனமும் அவரிடமிருந்தே வருகின்றது.

உலகத்தின் இறுதி நாளில் கடவுள் தமது அளவில்லாத தூய்மையை உலகிற்குக் காட்டுவார். அவருடைய ஒளியில் எல்லா நன்மையும், தீமையும் வெளிப்படும். அவருடைய தீர்ப்பினின்று எவனும் தப்பமுடியாது. கடவுள் தீயோரை முடிவில்லா நரகத்திற்குத் தள்ளிவிடுவார். நல்லோர்களோ முடிவில்லாக் காலம் அவரை முகமுகமாய்க் காண அனுமதிக்கப்படுவார்கள். கடவுள் ஒவ்வொருவனுக்கும் அவனவன் தகுதிக்கு ஏற்றவாறு சம்பாவனையோ அல்லது தண்டனையோ அளிப்பார். "ஒவ்வொருவனுக்கும் அவனவன் செயல்களுக்கேற்பக் கைம்மாறு தருவார்" (உரோ. 2 : 6).

கடவுள் இவ்வுலகிலேயே சம்பாவனையோ, தண்டனையோ விதிக்கிறார். நல்லோருக்கு மனச்சமாதானத்தையும், மகிழ்வையும் அருளுகிறார். தீயோர் கெட்ட மனச்சான்றின் குத்தலை அனுபவிக்க விட்டுவிடுகிறார். கடவுள் இவ்வுலகை சொத்துச் சுதந்திரங்களைக் கொண்டும் நன்மை செய்கிறார்; அப்படியே இவ்வுலகை இடையூறு, துன்பங்களைக் கொண்டு தண்டிக்கிறார். இருப்பினும் அநேகமுறை இவ்வுலகில் நல்லோர் துன்பம் அனுபவிக்கிறார்கள்; தீயோரோ செழிப்புடன் இருக்கிறார்கள். என்றாலும், கடவுளை நிந்திப்பவன் எவனும் இவ்வாழ்வில் முழுக் களிப்புடன் வாழ்வதில்லை: அப்படியே நல்லவன் வாழ்நாள் முழுவதுமே களிப்பற்று வாடுவதும் இல்லை. ஆயினும், மறு உலகம் வரும்வரை கடவுள் இங்கே ஒருவனுக்கும் முழுச் சம்பாவனையையோ, முழுத் தண்டனையையோ அளிக்கமாட்டார்.

மறு உலகில்தான் கடவுள் எவ்வளவு நீதியுள்ளவர் என்பதை நாம் அறிந்துகொள்வோம்.

**சிந்தனைக்கு:** 1) "கடவுள் எட்டாத ஒளியில் வசிக்கிறார்" என்ற கூற்றின் பொருள் யாது? 2) ஏன் கடவுள் நன்மையை எப்பொழுதும் நேசிக்கிறார்? 3) ஏன் கடவுள் தீமையானவற்றையெல்லாம் வெறுக்கிறார்? 4) நாம் தூயர்களாயிருக்கும் எண்ணம் கடவுள் என்ன செய்கிறார்? 5) உலகத்தின் கடைசி நாளில் கடவுள் தமது அளவில்லாத தூய்மை நிலையை உலகிற்குக் காட்டும்பொழுது என்ன நடக்கும்? 6) கடவுள் இவ்வுலகிலேயே எவ்வாறு சம்பாவனை அளிக்கிறார்? 7) கடவுள் இவ்வுலகிலேயே எவ்வழிகளில் தண்டனை விதிக்கிறார்? 8) மனிதர் தங்களுடைய சம்பாவனையின் அல்லது தண்டனையின் முழு நிறைவைப் பெறுவது எப்பொழுது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என் வாழ்கைக்கு:** கடவுள் தூயராய் இருப்பதாலும், என்னையும் புனிதப்படுத்தியிருப்பதாலும் கடவுள் நேசிப்பதை நானும் நேசிப்பேன்; அவர் வெறுப்பதை நானும் வெறுப்பேன்.

**வேதாகமத்திலிருந்து:** "அற்ப மனிதா! கடவுளுக்கு எதிர்வினை விடுக்க நீ யார்?" (உரோ. 9 : 20). "நாம் உங்கள் கடவுளாகிய ஆண்டவர்; நாம் பரிசுத்தமாய் இருப்பதால் நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்" (லேவியர் 19 : 2). "நீங்கள் பரிசுத்தராவதே கடவுளின் திருவுளம்" (1 தெசலோனிக்கேயர் 4 : 3).

**திருச்சபையின் வாழ்விலிருந்து:** நாம் பூசைப்பலியில் பங்குகொள்ளும் ஒவ்வொரு முறையும் சம்மனசுக்களுடைய கீதத்தில் சேர்ந்து, 'பரிசுத்தர், பரிசுத்தர். சேனைகளின் தேவனாகிய ஆண்டவர் பரிசுத்தர். வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்துள்ளன" என்று சொல்ல வேண்டும்.

**செய்ய வேண்டியவை:** 1) குருக்களும் விசுவாசிகளும் பூசைப்பலியின் பொழுது கடவுளின் தூய்மை நிலைக்குத் தங்கள் மரியாதையை எவ்வாறு காட்டுகிறார்கள்? 2) கடவுள் தம்முடைய தூய்மை நிலையை மக்களுக்குக் காட்டிய விதத்தை நமக்குச் சொல்லும் வேதாகமச் சரிதைகள் எவை? 3) கடவுள் நல்லோருக்குச் சம்பாவனை அளிப்பதை எந்த வேதாகமச் சரிதைகளில் நாம் வாசிக்கிறோம்? தீயோரைத் தண்டிப்பதை எந்தச் சரிதைகளில் காண்கிறோம்? 4) கடவுள் மரியாதை செய்யப்படவும், அவருடைய திருச்சித்தம் நிறைவேறவும் "கர்த்தர் கற்பித்த செபத்தின்" எந்த மன்றாட்டுக்களில் நாம் கேட்கிறோம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 8

# எங்கும் நிறைந்த அளவில்லா ஞானமுள்ள இறைவன்

"ஜெருசலேம் தேவாலயம் கட்டி முடிந்ததும் சலமோன் அரசன் பெரும் ஆரவாரத்தோடு உடன்படிக்கைப் பேழையைக் கொண்டு வந்தான். ஆசாரியர் உடன்படிக்கைப்பேழையை பரிசுத்த ஸ்தானத்திற்குக் கொண்டுவந்ததும் முகில் ஒன்று இறைவனின் ஆலயத்தை மறைத்தது. சலமோன் அரசன் முழந்தாட்படியிட்டு வேண்டினார்" (1 அர. 9 : 3).

இறைவன் எல்லா இடங்களிலும் பிரசன்னமாய் இருக்கிறார். அவரது பிரசன்னம் குறிப்பிட்ட இடத்தில் மட்டும் இருப்பதில்லை. இறைவன் அரூபியும், நித்தியருமாய் இருப்பதனால் வானமும், பூமியும் அவரை அடக்க முடியாது. படைப்பு முழுவதிலும் நிறைந்திருக்கும் இறைவன் திருமுழுக்கின்போது நம்மில் வாசமாகிறார். "நாம் வாழ்வதும், இயங்குவதும், இருப்பதும் அவரிலேதான்." (அப். பணி 17 : 28).

இறைவன் எல்லாவற்றையும் அறிகிறார். அவர் படைத்த ஒன்றும் அவர் பிரசன்னத்தில் இருந்து தப்பிக்க முடியாது. அவர் முன்னிலையில் எல்லாம் வெளிப்படுகின்றன. எமது செபத்திற்குச் செவிசாய்க்கிறார். உள்ளத்தின் ஆழத்தை அவர் அறிகிறார். அவர் முன்னிலையில் நாம் பொறுப்புள்ளவர்களாக இருக்கின்றோம்.

இறைவன் தனது படைப்பை நிறைவாக்கவும், பாதுகாக்கவும் அறிவார். தனது திட்டப்படி மனிதனது வாழ்வை உருவாக்குகின்றார். பழைய ஏற்பாட்டில் பார்வோனின் அன்பையும் மதிப்பையும் சூசை பெற்றார். குழந்தையான மோயீசன் இறைவனது அளவற்ற ஞானத்தினால் மரணத்திலிருந்து காப்பாற்றப்பட்டார். இன்னும் வியத்தகு வழிகளில் விண்ணகத்துள் எம்மை இட்டுச் செல்கிறார். அவரின் ஞானமும் திட்டமும் எம்மால் அளவிடமுடியாது. இதனை நனகறிந்த இசையாஸ் கூறுகின்றார்:

> "நம்முடைய எண்ணங்கள் உங்களுடைய எண்ணங்களல்ல; நம்முடைய வழிகள் உங்களுடைய வழிகளல்ல என்கிறார் ஆண்டவர். மண்ணிலிருந்து விண்வரை உயர்ந்திருப்பதுபோல் உங்கள் வழிகளைவிட நம்முடைய வழிகளும், உங்கள் எண்ணங்களைவிட நம்முடைய எண்ணங்களும் மிக உயர்ந்திருக்கின்றன" (இசை. 55 : 8—9).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் ஞானத்தைப் படைப்பனைத்தும் எடுத்து இயம்புகின்றன. விண்மீன்கள், பூமியில் நடமாடும் மிருகங்கள், எமது உடல் அனைத்தும் இறைஞானத்துக்குச் சான்றுகளாகும்.

**சிந்தனைக்கு:** 1) இறைவன் எங்கும் நிறைந்தவர் என்று ஏன் கூறுகிறோம்? 2) இறைவன் அனைத்தையும் அறிகிறார் என்பதன் பொருள் என்ன? 3) இயற்கை இறைவனின் ஞானத்துக்கு எவ்வாறு சான்றுபகர்கின்றது?

**எமது வாழ்விற்கு:** எங்கிருந்தாலும், எதைச் செய்தாலும் இறைவன் எல்லாவற்றையும் அறிகிறார். ஆகவே நான் எப்பொழுதும் நன்மை செய்து தீமையை விலக்குவேன் என்று தீர்மானிப்பேன்.

**வேதாகமத்திலிருந்து:** "உமது ஆவியைவிட்டு, நான் எங்கே தொலைவில் போகக்கூடும்? உம்முடைய திருமுன்னிலையைவிட்டு, நான் எங்கே ஒழியக்கூடும்? நான் வானகத்துக்குப் பறந்து சென்றால், நீர் அங்கே இருக்கிறீர், பாதாளத்துக்குச் சென்று படுத்துக்கொண்டாலும் அங்கேயும் இருக்கிறீர் நான் விடியற்காலையில் சிறகடித்துப் பறந்து சென்றபோதிலும், கடல்களின் கடையெல்லைகளில் வாழ்ந்தாலும், அங்கேயும் உமது கரம் என்னை நடத்திச் செல்லும்; உமது வலக்கரம் என்னைத் தாங்கிநிற்கும்" (சங்கீதம் 138 : 7 — 10).

"ஆண்டவரே, உம் வேலைப்பாடுகள், எத்தனை, எத்தனை! அனைத்தையும் நீர் ஞானத்தோடு செய்துமுடித்தீர்; உம் படைப்புகளால் நிறைந்துள்ளது வையகம்" (சங். 103 : 24).

**செய்யவேண்டியவை:** இறைவன் எல்லாவற்றையும் அறிகிறார்; எல்லாவற்றையும் காண்கிறார் என்று சிறப்பாக எவ்வேளைகளிலும் நினைவு கூரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாடம் 9

# இறைவன் முழுமையான நிறைவுள்ளவர்

இறுதி இராவுணவின் பின், இயேசு வானத்தை அண்ணார்ந்து பார்த்து மன்றாடினார். "முடிவில்லா வாழ்வு என்பது: உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும், நீர் அனுப்பிய இயேசுக்கிறிஸ்துவையும் அறிவதே" என்று கூறினார் (அரு. 17 : 1 — 3).

ஒரே ஒரு கடவுள்தான் இருக்கிறார்: "ஆண்டவர் ஒருவர்மட்டுமே கடவுளன்றி, வேறொருவரும் இருக்க முடியாது" (3 அரசர் ஆகமம் 8 : 60).

கடவுள் "உயிருள்ள கடவுள்" (யெரே, 10 : 10). அவர் தம்மிலேயே உயிர் உள்ள சுயஞ்சீவியராகிய கடவுள். எல்லோருக்கும் உயிர் அளிக்கிறவர் அவரே. அவருடைய பிள்ளைகளாகிய நாமும் அவரது தெய்வீக உயிரில் பங்குபெற நம்மை அழைக்கிறார்.

படைக்கப்பட்ட எந்தச் சிருஷ்டியின் உயிரையும்விடக் கடவுளின் உயிர் மிகமிக வளம் பொருந்தியதும், மேன்மையானதுமாய் இருக்கிறது. உலகில் இருக்கின்ற யாவற்றையும் முற்றிலும் சம்பூரணமாய் அறிய வல்லது அவருடைய அறிவு. அவருடைய மனம் வானம் பூமி அத்தனையையும் ஆண்டு நடத்துகின்றது. மனிதனுக்கு உடல் உண்டு: சாவுக்கு உரியவன். ஆனால், கடவுளுக்கு உடல் இல்லை. கடவுள் சுத்த ஆவி. புனித வேதாகமம் கடவுளுக்குக் கண், காது, கைகள் இருப்பனபோலக் கூறும்பொழுது, அவருடைய அறிவையும், ஆற்றலையும் பற்றித்தான் வர்ணிக்கின்றன. படங்கள் வழியாகக் கடவுளை வர்ணித்துப் பேசுகின்றது புனித வேதாகமம்.

நாம் நினைப்பதற்கோ எடுத்துச் சொல்லுவதற்கோ இயலாத மிகவும் மேலான மகிமையுள்ள தூயவர் கடவுள். அவர் நன்மைகள் யாவற்றையும் உருவமாகக் கொண்டவர். படைக்கப்பட்ட சிருஷ்டிகளாகிய நாம் குறை உள்ளவர்கள்; மட்டுள்ளவர்கள். கடவுளோ மட்டுக்கு அடங்கினவர் அல்லர். எவ்வளவு மிகச் சிறிய குறையும் இல்லாதவர். கடவுள் அளவற்ற நன்மையுள்ளவர்.

கடவுள் நமது வாழ்க்கையின் உள்ளரங்க உண்மைகளை நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். அந்தத் தேவ வெளியீட்டிலிருந்து ஒரே ஒரு கடவுள் பிதா, சுதன், பரிசுத்த ஆவி என்ற மூன்று ஆட்களாய் இருக்கிறார் என அறிகிறோம். கடவுள் மூன்று ஆட்களில் எல்லையற்ற இன்பத்தில் என்றென்றும் வாழ்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிந்தனைக்கு:** 1) கடவுளை "உயிருள்ள கடவுள்" என்று ஏன் சொல்லுகிறோம்? 2) கடவுளுக்குக் கண், காது, கைகள் இருப்பது போல வேதாகமம் பேசும்பொழுது அதற்குப் பொருள் என்ன? 3) கடவுளுடைய மிக உள்ளரங்கமான உண்மை யாது?

**என் வாழ்க்கைக்கு:** கடவுள் மகிமைபொருந்திய பரம இரகசியம்: அதை நான் முற்றிலும் தெளிவாகப் புரிந்துகொள்ள இயலாது. ஆகையால், மிக்க மரியாதையுடன்தான் நான் அவரைப்பற்றி நினைக்கவோ பேசவோ வேண்டும்.

**வேதாகமத்திலிருந்து:** "ஆண்டவரே உண்மையான கடவுள்; அவரே உயிருள்ள கடவுள், முடிவில்லா மாமன்னர்" (யெரேமியாவின் ஆகமம் 10 : 10). "கடவுள் ஆவியானவர்" (அரு. 4 : 24). "உலகெல்லாம் ஆளும் அரசன். அழிவில்லான், கண்களுக்குப் புலப்படான். ஒரே கடவுளுக்கென்றென்றும் மகிமையும் மாட்சியும் உண்டாகுக!" ஆமென் (1 திமோ. 1 : 17).

**செய்யவேண்டியவை:** கடவுளுடைய குணங்களைப்பற்றி உனக்குத் தெரிந்தவரையில் எழுதிப்பார்.

என்னுடைய கைகளால் மேலே வானங்களையோ
இந்த உலகத்தையோ அளக்க இயலாது
அவ்வாறே, காலத்துக்கு முன்னேயே இருக்கும் கடவுளை
என் சிறிய புத்தியால் முற்றிலும் கண்டறிய முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடம் 10

# அன்பே இறைவன்

புனித அருளப்பர் எழுதுகிறார்: "தம் ஒரேபேறான மகனின் வழியாக நாம் வாழ்வுபெறும் பொருட்டு, கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்படுத்தப்பட்டது. அன்பில் நிலைத்திருப்பவன் கடவுளுக்குள் நிலைத்திருக்கிறான். கடவுளும் அவனுள் நிலைத்திருக்கிறார்" (1 அரு. 4 : 9, 16).

கடவுள் நம்மை நித்திய காலத்திலிருந்தே நேசித்திருக்கிறார். நாம் அவருக்கு அன்பு செலுத்தக்கூடியவர்களாகுமுன்னேயே அவர் நம்மை எக்காலமும் நேசித்தார். "முடிவில்லா அன்பினால் உன்மேல் அன்பு வைத்தோம்" (யெரேமியாஸ் 31 : 3) என்று சொல்லுகிறார். அன்பினாலே அவர் நம்மை உண்டாக்கி இருக்கிறார். அன்பினாலே தமது திருமகன் வழியாய் நம்மை மீட்டிருக்கிறார்; அன்பினாலே நம்மைத் தம்முடைய பிள்ளைகளாக்கினார். அன்பினால்தான் அவர் நம்மை எச்சரிக்கை செய்கிறார்; தண்டிக்கிறார், மன்னிக்கிறார். அன்பே கடவுள்.

கடவுள் நம்மை நேசிப்பதால், நாமும் அவருக்கு அன்பு செய்ய வேண்டும். நாம் அவரைத் "தந்தை" என அழைக்க வேண்டும் என்றும், பிள்ளைக்குரிய நம்பிக்கையுடன் அவர்மேல் உறுதியாயிருக்க வேண்டும் என்றும் விரும்புகிறார். அடிமைகளைப்போன்று, அவரிடம் அச்சம் கொள்ள வேண்டியதில்லை. ஆனால் சிறுவர்களைப்போல, நாம் அவருக்கு அன்புசெய்ய வேண்டும்.

கடவுளின் அன்பு அடிக்கடி பரிசுத்தர்களுடைய இருதயத்தைக் கொள்ளை கொண்டது. கடவுள் ஒருவரைத் தவிர, வேறு எந்தப் பொருளும் தங்கள் இருதய தாகத்தைத் தீர்க்க முடியாதென உணர்ந்தார்கள். ஆகையால், கடவுளுக்கு மிகமிக அன்பு செலுத்துவதையன்றி வேறு ஒன்றையும் அவர்கள் ஆசித்ததில்லை. கடவுளும் தமது அன்பின் ஏராளமான செல்வங்களை அவர்கள்மேல் பொழிந்தருளினார்.

நாம் ஒவ்வொருவரும் அவரோடு முற்றும் ஒன்றித்திருக்கவேண்டும் என்பதுதான் அவருடைய பேராவல். நாம் மோட்சம் சேர்ந்து, அவருடைய அன்பில் எக்காலமும் வாழ்ந்திருக்க வேண்டுமென்றுதான் அவர் விரும்புகிறார்.

**சிந்தனைக்கு:** 1) கடவுள் தமது அன்பை நமக்கு எவ்விதம் காட்டியிருக்கிறார்? 2) கடவுளின் அன்புக்கு நாம் எவ்வாறு கைம்மாறு காட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்? 3) கடவுளின் அன்பு பரிசுத்தர்களை என்ன செய்யத் தூண்டிற்று?

**என் வாழ்க்கைக்கு:** கடவுள் அனைத்தையும் அன்பிற்காகச் செய்கிறார். ஆகையால், நானும் எல்லாவற்றையும் அன்பிற்காகச் செய்ய முயல்வேன்.

**வேதாகமத்திலிருந்து:** "தம் மகனில் விசுவாசங்கொள்ளும் எவரும் அழியாமல், முடிவில்லா வாழ்வைப் பெறும்பொருட்டு அந்த ஒரே பேறான மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்" (அரு. 3 : 16).

**விவிலிய வழிபாடு:**

| | | | |
|---|---|---|---|
| அப். பணி. | 4:32 — 39 | சங். | 100 (89) 1 — 5 |
| இசை. | 54:4 — 10 | ,, | 145 (144) 8 — 21 |
| 1 அரு. | 4:7 — 21 | ,, | 136 (135) 1 — 26 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 11

# இறைவன் நம்மேல் அக்கறை கொண்டுள்ளார்

இஸ்ராயேல் மக்கள் எகிப்து நாட்டிலிருந்து வெளியேறும்பொழுது கடவுள் ஒரு நெருப்புத் தூணை அவர்கள்முன் வழிகாட்டிச் சென்றார். செங்கடல் வழியாக அவர்களைக் கடத்தி பார்வோன் மன்னனின் சேனைக்குத் தப்புவித்தார். பின்னர் பல ஆண்டுகளாக அவர்களைப் பாலை வனத்தின் வழியே நடத்திச் சென்றார். அவர்கள் கூடாரம் அடிக்கும் பொழுதெல்லாம், தூண் கீழே புதைந்தது; அவர்கள் புறப்படும்போக நேரமானதும் தூண் மறுபடியும் மேலே உயர்ந்து நின்றது. அதிசய "மன்னா" உணவால் கடவுள் இஸ்ராயேல் மக்களை உண்பித்தார். பாறைகளிலிருந்து சுரந்த தண்ணீரை அவர்கள் அருந்த அளித்தார். இவ்வாறு அவர்களை வெகுகாலத்துக்கு முன் ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததிகளுக்கும் வாக்களித்திருந்த நாட்டுக்கு அழைத்துச்சென்றார். (யாத்திராகமம் 13 — 17 அதிகாரங்கள் காண்க).

கடவுள் தாம் வக்களித்த நாட்டுக்கு இஸ்ராயேல் மக்கள் சென்ற பொழுது, வழியில் அவர்கள்மேல் அக்கறை கொண்டது போலவே, நாம் விண்ணக வீட்டுக்குச் செல்லும் வழியில் நம்மட்டும் அக்கறை கொண்டுள்ளார். வழிக்கு ஒளி வீசுகின்றார்; நம்மைத் தூய்மைப்படுத்துகின்றார். நமது பகைவனுகிய பேயிடமிருந்து நம்மைப் பாதுகாக்கின்றார். மேற்கொண்டு விண்ணக அப்பத்தினால் நம்மை உண்பிக்கிறார். நம்மை அன்புடன் வழிநடத்துகிறார். இந்த விண்ணக பயணத்திற்கு இன்றியமையாத அனைத்தையும் நமக்கு அளிக்கின்றார்.

கடவுள்தான் நமக்கு இவ்வுலகப் பொருள்களைக் கொடுக்கிறார். உணவு, ஆடை, உடல்நலம், அறிவுத்திறமை முதலிய யாவும் நமது தந்தையின் கையிலிருந்துதான் வருகின்றன. ஆகையால் இவ்வுலக நன்மைகள்கூட நமது நித்திய ஆன்ம ஈடேற்றத்திற்கு உதவியாக இருத்தல் வேண்டும்.

நாம் கடவுளுடைய கைகளின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கிறோம்: நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையின் மிகச் சிறிய நுணுக்கத்தையும் அவர் முன்னதாகவே யோசித்து அறிந்திருக்கிறார். மேலும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நம் மகிழ்ச்சிக்காகவே நடத்துகிறார். "அவருடைய அன்பிற்கு நாம் ஒருவர் மட்டுமே தகுதி உடையவர்போல, நம் ஒவ்வொருவர்மேலும் அக்கறைகொள்ளுகிறார். அப்படியே, நம் ஒவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொருவருக்கும் காட்டும் அக்கறைபோல, நம் எல்லோர்மட்டிலும் அக்கறை கொள்ளுகிறார்" (புனித அகுஸ்தீனார்). கடவுள் காட்டும் இந்த அக்கறைதான் "தேவ பராமரிப்பு" என்று அழைக்கப்படுகிறது. கடவுள் அவருடைய எல்லாப் படைப்பின் மேலும் பரிவு கொண்டிருக்கிறார். எப்பொருளையும் அற்பமென நினைப்பதில்லை. அவர் படைத்த ஒவ்வொன்றின்மேலும் அக்கறை கொண்டிருக்கிறார். பல்வேறு வழிகளிலெல்லாம் அவைகளுக்குப் பரிவுகாட்டி வருகின்றார். கடவுள் பரிவுள்ளவர்.

**சிந்தனைக்கு :** 1) நம் விண்ணக பயணத்தைப்பற்றிக் கடவுள் நம் மட்டில் எவ்வாறு அக்கறைகொண்டுள்ளார்? 2) "தேவ பராமரிப்பு" என்ற வார்த்தையை விளக்குக.

**என் வாழ்க்கைக்கு:** கடவுள் பரிவுடன் என்னை நடத்துவதில் நான் தோறும் என்னைக் கையளிப்பேன். நான் காணும் ஒவ்வொன்றும் நல்லதென்று மதித்து, அதனைக் கடவுளுடைய நன்கொடையாகக் கருதுவேன்.

**வேதாகமத்திலிருந்து :** "ஆதலால் எதை உண்போம், எதைக் குடிப்போம், எதை உடுப்போம் என்று கவலைப்பட வேண்டாம். ஏனெனில் புறவினத்தார் தாம் இவையெல்லாம் தேடுவர். உங்களுக்கு இவையனைத்தும் தேவையானது என உங்கள் வானக தந்தைக்குத் தெரியும். ஆகவே கடவுளின் அரசையும் அவருடைய ஏற்புடையதையும் முதலில் தேடுங்கள் : இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்" (மத். 6 : 31 — 33). "ஆண்டவரே நான் உம்மீது நம்பிக்கை வைக்கிறேன்... என் கதி உம் கையில் உள்ளது (சங்கீதம் 30 : 14 — 15). "என் ஆயன் ஆண்டவர்; எனக்கென்ன குறைவு" (சங்கீதம் 22 : 1).

**செய்யவேண்டியவை :** 1) யோசேப் எகிப்து நாட்டிலிருந்தபொழுது, கடவுள் அவர்மேல் எப்படி அக்கறை காட்டினார்? 2) விண்ணக தந்தை குழந்தை யேசுவின்மேல் எவ்வாறு அக்கறை காட்டினார்? 3) கடவுள் உனக்குச் செய்துள்ள நன்மைகளுக்கெல்லாம் நன்றிகூறி ஒரு செபத்தை வரைக. 4) கடவுள்பால் நீ வைத்திருக்கும் நம்பிக்கையை எடுத்துக்காட்டி ஒரு செபத்தை எழுதுக. 5) நம் வாழ்க்கைக்குத் தேவைப்படும் காரியங்களைச் சிறப்பாக எந்தச் செபங்களிலும், பாக்களிலும் கேட்கிறோம்? 6) கடவுளுடைய நன்கொடைகளுக்காக எந்தச் செபங்களிலும் பாக்களிலும் அவருக்கு நன்றி கூறுகிறோம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவிலிய வழிபாடு:

ஆதி. 16 : 1 — 32
யோபு. 38 : 1 — 18
மத்தேயு 6 : 25 — 34
சங். 78 ( 77 ) 11 — 29
சங். 104 ( 103 ) 1 — 13
சங். 23 ( 22 ) 16

அவர் நமது உண்மையான ஆயன்
தவறிப்போகும் அவர் ஆடுகளின்மேல்
விழிப்போடும், தூக்கமின்றியும்
கருணைக் கண்ணோடு பார்க்கிறார்.
தம்முடைய வன்மைமிக்க கையினால்
பாவத்தின் கட்டுகளை உடைத்தெறிந்தார்
பளுவினால் நொறுங்கிய நம் இருதயங்களுக்கு
சமாதான வார்த்தைகளைச் சொல்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 12

# இறைவன் பாவிகள்மேல் இரக்கம் கொண்டுள்ளார்

ஒருநாள் யேசுநாதர் பரிசேயர்களுக்கு இந்த உவமையைச் சொன்னார் : ஒரு மனிதனுக்கு இரு புதல்வர்கள் இருந்தனர். அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கி, "தந்தையே, சொத்தில் எனக்குச் சேர வேண்டிய பாகத்தை எனக்குத் தரவேண்டும்" என்றான். ஆகையால் அம்மனிதன் சொத்தைப் பங்கிட்டு அவர்களுக்குக் கொடுத்தான். இளையவன் தன் செல்வத்தை எல்லாம் செலவழித்தபின், மிகக்கொடிய வறுமைக்கு ஆளானான். ஆகையால், தன் தகப்பனிடம் திரும்பச் சென்றான். அவன் இன்னும் வெகு தொலைவில் வரும்பொழுதே அவன் தகப்பன் அவனைக்கண்டு, மனமுருகி, ஓடிவந்து அவனைக் கட்டி அணைத்து, முத்தமிட்டான். பின் தன்னுடைய ஊழியரை நோக்கி, "நீங்கள் விரைவில் முதல்தரமான உடையைக் கொண்டுவந்து இவனுக்கு உடுத்துங்கள். இவன் கைக்கு மோதிரத்தையும், கால்களுக்குப் பாதச் சோடுகளையும் அணியுங்கள். கொழுக்க வைத்த கன்றையுங் கொண்டுவந்து அடியுங்கள் ; உண்டு விருந்தாடுவோமாக. ஏனென்றால், என் மகனாகிய இவன் இறந்துபோய், மறுபடியும் உயிர்த்தான்; காணமற்போய், மறுபடியும் காணப்பட்டான்" என்றான் (லூக். 15 : 11 — 24 காண்க).

பாவிகள் ஈடேற்றம் அடையவேண்டும் என்பதே கடவுள் சித்தம். "நம் உயிர்மேல் ஆணை, தீயவன் சாகவேண்டும் என்பது நம் விருப்பமன்று. ஆனால் அவன் தன் தீயவழியைவிட்டுத் திரும்பி வாழ வேண்டுமென்பதே நம் விருப்பம்" (எசக்கியேல் 33 ' 11 ). "இழந்து போனதைத் தேடி மீட்கவே மனுமகன் வந்துள்ளார்" ( லூக். 16 : 10 ).

கடவுள் பாவியை அழைத்துத் தவம்புரியும்படி சொல்லுகிறார். அவன் தன் பாவத்தை உணரச்செய்கிறார். அத்துடன், அவனுடைய விண்ணக தந்தையின் வீட்டின்மீது ஏக்கத்தை அவன் உள்ளத்தில் தட்டி எழுப்புகிறார்.

மனிதர்களாகிய நாம் வலிமையற்றவர்கள் என்பதை அறிந்த கடவுள் பொறுமையாய் இருக்கிறார். இக்காரணத்தினால்தான் பாவிகள் மனம்மாறி தம் பாவங்களுக்காக மனஸ்தாபப்படும் வண்ணம், வழக்கமாய் நீண்டகாலம் விட்டுக்கொடுக்கிறார். ஊதாரிப்பிள்ளையின் தகப்பன் காத்திருந்ததுபோலக் கடவுளும் பாவியின் வருகைக்காகக் காத்திருக்கிறார். கடவுள் பொறுமையுள்ளவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவி மனஸ்தாபப்படும்பொழுது, கடவுள் அவனுக்கு மன்னிப்பை அளிக்கிறார். அவன்மீது மிகக் கருணையுடன் கண்ணோக்குகிறார். மீண்டும் அவனைத் தம் சொந்தப் பிள்ளையாக ஏற்றுக்கொள்ளுகிறார். நம் விண்ணக தந்தையைப்போல் அவ்வளவு இரக்கம் நிறைந்த இருதயமுள்ளவரோ, அத்துணை தாராள மனதுடன் மன்னிப்பவரோ யாருமேயில்லை. எவ்வளவு பெரிய பாவியும் அவருடைய இரக்கத்தைப்பற்றி ஐயப்பட வேண்டியதில்லை. கடவுள் இரக்கமுள்ளவர்.

**சிந்தனைக்கு:** 1) பாவிகள் ஈடேற்றமடையவேண்டுமெனத் தாம் சித்தமாயிருப்பதைக் கடவுள் மிகத் தெளிவாய் எப்படிக் காட்டியிருக்கிறார்? 2) பாவிகள் மனஸ்தாபப்படக் கடவுள் என்ன செய்கிறார்? 3) ஒருவன் தன் பாவங்களுக்காக மனஸ்தாபப்படும்பொழுது கடவுள் என்ன செய்கிறார்?

**என் வாழ்க்கைக்கு:** கடவுள் இரக்கமுள்ளவர்; ஆகையால், நானும் இரக்கமுள்ளவனாயிருப்பேன். கடவுள் என்மட்டில் பொறுமையுள்ளவராய் இருப்பதால், நானும் பிறர்மட்டில் பொறுமையோடு இருப்பேன்.

**வேதாகமத்திலிருந்து:** "நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக; அவர் செய்த நன்மைகளையெல்லாம் மறவாதே. அவர் உன் பாவங்களையெல்லாம் மன்னிக்கிறார். உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிறார். உன் உயிரை அழிவினின்று மீட்கிறார்: அருளையும் இரக்கத்தையும் உனக்கு முடியாகச் சூட்டுகிறார். தந்தை தம் மக்களுக்கு அன்பு காட்டுவதுபோல, ஆண்டவர் தமக்கு அஞ்சுவோருக்கு இரக்கம் காட்டுகிறார்" (சங். 102 : 2 — 4, 13). "உங்கள் பாவங்கள் செந்தூரம்போல் இருந்தாலும், உறைந்த பனிபோல வெண்மையாகும்" (இசை. 1 : 18). "ஆண்டவர் தம் வாக்குறுதியை நிறைவேற்றக் காலம் தாழ்த்துவதாகச் சிலருக்குத் தோன்றுகிறது: ஆனால் அவர் காலந்தாழ்த்துவதில்லை; உங்கள் பொருட்டுப் பொறுமையாயிருக்கிறார்" (2 இரா. 3 : 9).

**செய்யவேண்டியவை:** 1) கடவுளின் இரக்கத்தையும் பொறுமையையும் விளக்கும் சான்றுகளை வேதாகமத்தில் தேடிப்பார். 2) இரக்கமற்ற ஊழியன் உவமையினால் கிறிஸ்துநாதர் நமக்குக் கற்பிப்பதென்ன? (மத். 18 : 23 — 35).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 13

# இறைவன் உலகைப் படைத்தார்

காலத்தின் துவக்கத்தில் கடவுள் வானத்தையும், பூமியையும் படைத்தார். வெளிச்சத்தையும் ஆகாயத்தையும், நிலத்தையும் கடலையும், வான் மீன்களையும் உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்தையும் உண்டாக்கினார். தாம் உண்டாக்கின யாவற்றையும் பார்த்து, அவை நல்லதெனக் கண்டார். (ஆதியாகமத்தின் முதல் அதிகாரத்தை வாசித்துப் பார்).

உலகம் எப்பொழுதும் இருக்கவில்லை; அதற்குத் துவக்கம் இருந்தது. அது தானாகவே தோன்றவில்லை; அது கடவுளிடமிருந்து வந்தது. வானத்தையும், பூமியையும் படைத்தவர் கடவுளே. இவ்வுலகைப் படைக்கக் கடவுளுக்கு எவ்வித பொருளோ, எந்தக் கருவியோ, துணைபுரிபவருமோ தேவையில்லை. ஒன்றுமில்லாமையிலிருந்தே உலகை உண்டாக்கினார். "அவர் ஒரு வார்த்தை சொல்லவே, எல்லாம் உண்டாயின; அவர் கட்டளையிடவே அவை உருவாயின" (சங் 32 : 9). தம்முடைய திருச்சித்தத்தின் சுயவல்லமையால் மட்டுமே எல்லாவற்றையும் உண்டாக்கினார். கடவுள் உலகை உண்டாக்கினார் என்று நாம் சொல்லுவதற்குப் பொருள் இதுவேயாகும்.

உலகை உண்டாக்க வேண்டுமென்ற கட்டாயம் கடவுளுக்கு இல்லை. உலகம் இல்லாமலே அவர் அளவற்ற பூரண பேரின்பத்தில் வாழ்ந்தார்.

கடவுள் தமது அளவு கடந்த நன்மைத்தனத்தை வெளிப்படுத்தவும், அந்த நன்மைத்தனத்தை மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கவும் உலகை உண்டாக்கினார். உலகம் அனைத்தும் அவருடைய மகிமையை பிரதிபலிக்கச் செய்கின்றன. எல்லாப் படைப்புப் பொருள்களும் அவருடைய நன்மைத்தனத்தில் ஓரளவு பங்குபெறுகின்றன. அத்துடன் பகுத்தறிவுள்ளவர்களாகிய மனிதர்கள் அவரை அறியவும், நேசிக்கவும் சேவிக்கவும், மகிமைப்படுத்தவும், அதனால் என்றென்றும் மகிழ்ந்து பாக்கியமாயிருக்கவும் வேண்டியவர்கள். கடவுள் உலகத்தைத் தமது சொந்த மகிமைக்காகவும், தம்முடைய படைப்புகளின் நலனுக்காகவுமே உண்டாக்கினார். கடவுள் தாம் படைத்த உலகை நேசிக்கிறார். உலகம் மறுபடியும் ஒன்றுமில்லாமையாக அழிவுற வேண்டும் என்பது அவருடைய திருச்சித்தமன்று. உலகம் இயங்கிக்கொண்டே இருக்கும் வண்ணம் அதைக் காத்து வருகிறார். அதை நடத்திக்கொண்டிருக்கிறார். கடவுள் தம்முடைய அளவற்ற ஆற்றல், ஞானம், நன்மைத்தனம் அனைத்தையும் கொண்டு தம்முடைய படைப்புகளில் இடையறாது ஈடுபட்டிருக்கிறார். உலகின் ஓட்டத்தையும், மக்களுடைய வரலாற்றையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் வரையறுத்துத் திட்டம் செய்கிறவர் அவரே. தம்முடைய படைப்புக்கள் தம் நித்திய கதியைப் பிறழாது சேரும்படி நடத்திச் செல்லுகிறார். கடவுள் உலகை ஆள்கின்றார்.

கடவுள் ஒவ்வொன்றையும் உண்டாக்கியிருப்பதால், ஒவ்வொன்றும் அவருக்கே சொந்தம். உயிருள்ளவை யாவும், பண்டங்கள் யாவும் அவருடைய ஆதீனத்தில் அடங்கியுள்ளன. அவருடைய தெய்வீகப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

**சிந்தனைக்கு:** 1) கடவுள் "உலகை உண்டாக்கினார்" என்று நாம் சொல்லுவதற்கு என்ன பொருள்? 2) உலகை உண்டாக்க வேண்டுமென்ற கட்டாயம் ஏன் கடவுளுக்கு இல்லை? 3) கடவுள் உலகை உண்டாக்கியதன் நோக்கம் யாது? 4) கடவுள் ஏன் உலகம் நீடித்திருக்க விடுகிறார்? 5) கடவுள் உலகை எவ்வாறு ஆளுகின்றார்? 6) கடவுள் ஒவ்வொன்றையும் உண்டாக்கினார் என்பதற்கு நாம் என்ன பொருள் கொள்ளவேண்டும்?

**என் வாழ்க்கைக்கு:** கடவுளுடைய அழகான உலகைக்கொண்டு நான் மகிழும்போது, அவருக்கு நன்றி செலுத்த மறவேன்: ஏனெனில், அவரே எல்லாவற்றையும் உண்டாக்கினார்.

**வேதாகமத்திலிருந்து:** "ஆண்டவர் பெயரால் நமக்கு உதவிஉண்டு. விண்ணும் மண்ணும் படைத்தவர்" (சங். 123 : 8).

**வேதாகமத்தில் உலக படைப்பின் வரலாறு:** நமது ஈடேற்றத்திற்குத் தேவையானதை இந்த வரலாற்றில் கடவுள் நமக்குக் கற்பிக்கிறார். அவை எல்லாவற்றையும் அவரே உண்டாக்கினார். மனிதனைப் படைத்தார்; படைப்புக்கள் அனைத்தையும், மனிதர்களுடைய வாழ்க்கையையும் நடத்தும் சட்டங்கள் அவரிடமிருந்தே வருகின்றன. வேதாகமம் எழுதப்பெற்ற காலத்தில் வாழ்ந்த மக்கள் புரிந்துகொள்ளும்வகையில் அந்த உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டன.

**செய்யவேண்டியவை:** 1) தீயிலிட்ட மூன்று வாலிபர்கள் பாடிய கீதத்தைச் செபமாகச் சொல் 2) 103–ம் சங்கீதத்தைச் செபமாகச் சொல். 3) இவ்விரு செபங்களில் சொல்லப்படும் உயிரினங்களும் பொருள்களும் எவை ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 14

# இறைவன் சம்மனசுகளை உண்டாக்கினார்

"ஆண்டவர் வானுலகில் தமது அரியணையை ஏற்படுத்தினார். அனைத்தின்மீதும் அவர் ஆட்சி புரிகிறார். வானதூதர்களே, நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றுங்கள். ஆண்டவருடைய வார்த்தையைக் கேட்டு, அவர் சொற்படி நடக்கும் ஆண்டவரின் வல்லமையுள்ள தூதர்களே, அவரை வாழ்த்துங்கள்" (சங். 102:19—20).

கடவுள் வன்மைபொருந்தியவர்களான சம்மனசுகளை உண்டாக்கினார். அவர்கள் முற்றிலும் உருவம் இல்லாதவர்கள்; ஆவிகள். சம்மனசுக்கள் புத்தி, மனச்சுயாதீனம் கொண்டவர்கள். ஆனால், உடல் அற்றவர்கள். எனவேதான் நாம் அவர்களைப் பார்க்கமுடியாது.

கடவுள் தம் அன்பின் காரணத்தினால் அவர்களை உண்டாக்கினார்; அவர்கள் தமக்கு உட்பட்டு, அமைந்திருந்து, எக்காலமும் தம்மோடு வாழவேண்டுமென்று அவர்களை உண்டாக்கினார். அதைச் சம்மனசுக்கள் தங்களுடைய சொந்த வன்மையினால் அடைய முடியாதவர்கள். எனவே, கடவுள் தமது தெய்வீக வாழ்வில் அவர்களுக்குப் பங்கு அளித்திருக்கிறார்.

ஆயினும், சம்மனசுக்கள் கடவுளின் தரிசனம் பெற அனுமதிக்கப்படுமுன், அவர்களுக்கு ஒரு சோதனை இருந்தது. அந்தச் சோதனையில் சில சம்மனசுகள் தவறிவிட்டனர்; கடவுளுக்கு எதிராகப் புரட்சி செய்தனர். அதற்குத் தண்டனையாக நரகத்தில் தள்ளப்பட்டனர். இவர்களைக் கெட்ட ஆவிகள் என்று சொல்லுகிறோம். இவர்களுடைய தலைவன் பசாசு என்பவன். (எபிரேய மொழியில் "சாத்தான்" என்றால் பகைவன் எனப் பொருள்). இந்தக் கெட்ட ஆவிகள் கடவுளையும், நம்மையும் பகைக்கின்றனர். நம்முடைய ஆன்மாவுக்கும், சரீரத்துக்கும் தீங்கு இழைக்க வழி தேடுகின்றனர்.

கடவுளுக்கு உண்மையுடன் அமைந்திருந்தவர்களோ இப்பொழுது முடிவில்லாத பேரின்பத்தில் அவருடைய தரிசனம் காண்கின்றனர். அவரை வணங்கிப் போற்றிப் புகழ்கின்றனர். கடவுளுக்கு அன்பு செலுத்தி, பணிபுரிந்து, அவருடைய ஆட்சி பரவும்வண்ணம் போர் நடத்துகின்றனர், கடவுளுடைய திருச்சித்தம் இன்னதென்று நமக்கு அறிவிக்கின்றனர். நம்முடைய ஆன்மாவையும், உடலையும் காத்து வருகின்றனர். கடவுளிடம் நமக்காகச் செபித்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித வேதாகமங்கள் சம்மனசுகளில் 'கேருபீம்', "சேராபீம்" (ஞானுதிக்கர், பத்திச்சுவாலகர்) போன்ற பல்வேறு சபைகள் இருப்பதாகக் குறிப்பிடுகிறன்ன. அதிதூதரான மிக்கேல் சம்மனசை நாம் கொண்டாடுகின்ருேம். அவர்தான் சாத்தானுக்கும் மற்றக் கெட்ட ஆவிகளுக்கும் எதிராக நின்று போர்புரிந்த சம்மனசுகளுக்குத் தலைவர்

கடவுள் தம் அன்பினுல் தூண்டப்பட்டு, நம் ஒவ்வொருவருக்கும் துணையாயிருக்க ஒரு சம்மனசைக் கொடுத்திருக்கிருர். அவரை நமது "காவல் சம்மனசு" என்று அழைக்கிருேம். காவல் சம்மனசு நம்மை நேசிக்கிருர். சோதனையிலும், இடையூறுகளிலுமிருந்து நம்மைக் காப்பாற்றுகிருர். நன்மை செய்ய நம்மைத் தூண்டுகிருர்; நாம் மோட்ச வீடு செல்லும் வழியில் உதவியாகவும் இருக்கிருர்.

**சிந்தனைக்கு:** 1) கடவுள் எதற்காகச் சம்மனசுக்களை உண்டாக்கிருர்? 2) சம்மனசுக்களுடைய பண்புகள் யாவை? 3) சம்மனசுக்கள் கடவுளுடைய தரிசனம் பெறுமுன் அவர்களிடமிருந்து கடவுள் கேட்டது என்ன? 4) சம்மனசுக்களில் சிலர் நரகத்தில் தள்ளப்பட்டது என்? 5) கடவுளுக்கு உண்மையாயிருந்த சம்மனசுக்கள் இப்பொழுது அவருக்கு என்ன பணிபுரிகின்றனர்?

**என் வாழ்க்கைக்கு:** நான் என் காவல் சம்மனசை நேசிப்பேன். நான் நாள்தோறும் அவரிடம் உருக்கத்துடன் வேண்டிக்கொள்வேன். அவருடைய அறிவுரைகளை உண்மையான உள்ளத்தோடு பின்பற்றுவேன். அவர் என்னை எப்பொழுதும் கவனிக்கிருர் என்பதை நினைவுபடுத்திக்கொள்வேன்.

**வேதாகமத்திலிருந்து:** " செலலும் இடங்களில் எல்லாம் உன்னைக் காக்கும்படி தம் தூதருக்கு உன்னைக்குறித்துக் கட்டளையிட்டார். உன் கால்கள் கல்லில் மோதாதபடி, அவர்கள் உன்னைக் கைகளில் தாங்கிக் கொள்வார்கள்" (சங்கீதம் 90 : 11—12). கிறிஸ்துநாதர் சொன்ஞர்: "இச்சிறுவருள் ஒருவனையும் புறக்கணிக்காதபடி பார்த்துக்கொள்ளுங்கள். எனெனில், உங்களுக்குச் சொல்லுகிறேன்: அவர்களுடைய விண்ணகத்தூதர் வானகத்திலுள்ள என் தந்தையின் முகத்தை எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருக்கிருர்கள்" (மத்தேயு 18:20). ஆதிமுதல் அவன் ஒரு கொலைக்காரன். அவன் பொய்யன், பொய்க்குத் தந்தை (அரு 8 : 44) என்று இயேசுநாதர் சாத்தானைப்பற்றிச் சொல்லுகிருர். "இவ்வுலகின் தலைவன்" (அரு. 14 : 30) என்றும் அழைக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருச்சபையின் வாழ்விலிருந்து:** திருச்சபை அதிதூதரான கபிரியேல் சம்மனசின் திருநாளை பங்குனித் திங்கள் 24-ம் நாள் கொண்டாடுகின்றது. அதிதூதரான மிக்கேல் சம்மனசின் திருநாளைப் புரட்டாசித் திங்கள் 29-ம் நாளிலும், காவல் சம்மனசுக்களின் திருநாளை ஐப்பசித் திங்கள் 2-ம் நாளிலும், அதிதூதரான இரபாயேல் திருநாளை ஐப்பசித் திங்கள் 24-ம் நாளிலும் கொண்டாடுகின்றது.

**செய்யவேண்டியவை:** 1) வேதாகமத்தில் சம்மனசுக்களைப்பற்றி எங்கெங்கே வாசிக்கிறோம் (அ) பழைய ஏற்பாட்டில், (ஆ) புதிய ஏற்பாட்டில். 2) சாதாரணமாகப் படங்களில் சம்மனசுக்கள் இறக்கைகளை அணிந்திருப்பதற்கு என்ன பொருள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 15

# இறைவன்
# மனிதர்களை உண்டாக்கிறார்

கடவுள் நமது சாயலாகவும் பாவனையாகவும் மனிதனைப் படைப் போமாக என்றார். இவ்வாறு கடவுள் மனிதனைத் தமது சாயலாகப் படைத்தார். தெய்வச் சாயலாகவே அவனைப் படைத்தார். ஆண்டவராகிய கடவுள் களிமண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் முகத்தில் உயிர்மூச்சை ஊதவே, மனிதன் உயிருள்ளவன் ஆனான். ஆண்டவராகிய கடவுள் ஆதியிலே ஓர் இன்ப வனத்தை நட்டிருந் தார். தாம் உருவாக்கிய மனிதனை அதிலே வைத்தார். ஆண்டவரா கிய கடவுள் அவ்வனத்திலே பார்வைக்கு அழகிய, நாவிற்கு இனிய கனிகள் கொண்டுள்ள பலவித மரங்களையும் மண்ணினின்று தோன் றச் செய்தார். மேலும், அந்த இன்பவனத்தின் நடுவிலே வாழ்வளிக் கும் மரத்தையும், நன்மை தீமை அறியும் மரத்தையும் வளரச்செய் தார். ஆண்டவராகிய கடவுள் மனிதனை அழைத்து அவ்வின்பவனத்தை உழுது பேணும்படி அவனை அங்கு விட்டுவைத்தார். அன்றியும் அவனை நோக்கிக் கட்டளையிட்டு, இவ்வின்ப வனத்திலுள்ள எல்லாவித மரங் களின் கனிகளையும் நீ உண்ணலாம்; ஆனால் நன்மை தீமை அறியும் மரத்தின் கனியை உண்ணாதே; ஏனெனில் அதை நீ உண்ணும் நாளிலே சாகவே சாவாய் என்று சொன்னார். ஆதியாகமம் 1:26-27; 2:7-9-16—17.

கடவுள் மனிதனுடைய உடலை உலகப் பண்டங்களிலிருந்து உரு வாக்கினார். அவனுடைய ஆன்மாவையோ ஒன்றுமில்லாமையினின்று உண்டாக்கினார். ஆன்மாவைக்கொண்டு உடலுக்கு உயிரைக் கொடுத் தார். ஆதாம், ஏவாள் என்பவர்கள்தான் முதல் மனித ராசிகள். இந்த முதல் ஆண் – பெண் இருவரிடமிருந்து எல்லா மனித சந்ததி களும் உற்பத்தியானவர்கள். ஆகையால், இவர்களை நம்முடைய "முதல் பெற்றோர்கள்", "ஆதித்தாய் – ஆதித்தகப்பன்" என்று அழைக்கிறோம்.

மனிதனின் ஆன்மா ஒரு ஞானப் பொருள்: ஆவி. அதற்குப் பகுத் தறிவு இருக்கிறது. எனவே, எதையும் அறிந்துகொள்ளலாம். அதற்குச் சுயமனம் இருக்கிறது. எனவே, சுயாதீனத்துடன் எதையும் தெரிந்து கொள்ளலாம். ஆன்மா ஆவிப் பொருளாதலால் அது சாகமுடியாது. அளவிடற்கரியவரும், நிறைந்தவரும், தூய ஆவியுமான கடவுளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தன் ஆன்மாவில் ஒத்தவனாய் இருக்கிறான். அன்றியும், உலகி லுள்ள படைக்கப்பட்ட மற்ற உயிரினங்களுக்கெல்லாம் மேம்பட்டவனா யிருக்கின்றான் மனிதன்.

கடவுள் மனிதர்கள்பால் வைத்த தம் அன்பின் காரணமாக அவர் கள் தம்மை முகமுகமாய்த் தரிசிக்கவும், என்றென்றும் தம்முடன் இன் புற்று வாழவும் உண்டாக்கினார். எனவே, கடவுள் தமது தெய்வீக உள்ளரங்க வாழ்வில் அவர்களுக்குப் பங்களித்தார். மனிதர்கள் தம் சொந்த உழைப்பால் சம்பாதிக்காத இந்த மாபெரும் நன்கொடையை "அருள் உயிர்" அல்லது "தேவ இஷ்டப்பிரசாதம்" என்று அழைக் கிறோம். இந்த அருள் உயிரின் நன்கொடையின் பயனால் ஆதித் தகப் பனும், ஆதித் தாயும் கடவுளுடைய பிள்ளைகள் ஆனார்கள். மேலும் ஒரு சிறந்தவகையில் கடவுளுக்கும் ஒத்தவர்கள் ஆனார்கள்.

கடவுள் நம் முதல் பெற்றோருக்கு அற்புதமான இன்னும் வேறு சில நன்கொடைகளையும் வழங்கினார். அவர்களை அந்தச் சிங்காரத் தோப்பில் வாழவைத்தார். அங்கே அவர்கள் கடவுளுடன் மிகவும் நெருங்கிப் பழகினார்கள். அவர்களுடைய அறிவிற்குச் சிறந்த ஒரு ஒளியைத் தந்தார். அப்படியே அவர்களுடைய மனத்திற்குச் சிறந்த ஒரு வலிமையையும் அளித்தார். அவர்களுடைய ஆசைகள், நாட்டங் கள் அனைத்தும் நன்மையையே நாடிச் சென்றன. அவர்களுக்குப் பொருளில் நாட்டம் என்பதே இல்லை. கடவுள் முன்னிலையில் அவர் கள் மகிழ்வுடன் வாழ்ந்து வந்தனர். வேலைசெய்வதில் அவர்களுக்குக் களைப்பு இல்லை. துன்பம், வியாதி, மற்ற எல்லாத் தீமைகளிலிருந்தும் அவர்கள் விலக்கப்பட்டிருந்தனர். சாவிலிருந்தும் அவர்கள் காப்பாற் றப்பட்டிருப்பார்கள். அந்த நன்கொடைகளைச் சிங்காரத் தோப்பில் அவர்கள் இருந்த "பாக்கியமான நிலையின் சிறந்த கொடைகள்" என்று அழைக்கிறோம். கடவுள் நம் முதல் பெற்றோருக்கு வழங்கிய இந்த நன்கொடைகளை எல்லா மனிதர்களுமே சுதந்தரித்திருப்பார்கள். எல்லா மனிதர்களும் ஆதாமிடமிருந்து தங்கள் உடல் வாழ்வோடு, ஆதாம் சிங்காரத்தோப்பில் அனுபவித்திருந்த அருள் உயிரையும் சிறந்த நன்கொடைகளையும் பெற்றிருப்பார்கள். இத்தனை நன்கொடைகளை யெல்லாம் சேர்த்து "முதல் அருள்" "முதல் வரப்பிரசாதம்", என்று அழைக்கிறோம்.

சம்மனசுக்களைப்போல, முதல் பெற்றோர்களும் ஒரு சோதனைக்கு உள்ளாகவேண்டியிருந்தது. ஆகையால், கடவுள் அவர்களுக்கு ஒரு கட்டளை கொடுத்தார். அவர்கள் அதற்குக் கீழ்ப்படிந்திருந்தால், அந்த அருள் உயிரையும் சிங்காரத்தோப்பில் அவர்கள் இருந்த "பாக்கிய மான நிலையின்" சிறந்த நன்கொடைகளையும் தங்களுக்கும், தங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழித்தோன்றல்களுக்கும் நிலையாக வைத்திருப்பார்கள். அவர்கள் பணியாவிட்டால், அந்த அருள் உயிரையும் நன்கொடைகளையும் தங்களுக்கும் தங்கள் வழித்தோன்றல்களுக்கும் என்றும் இழந்துவிடுவார்கள்.

**சிந்தனைக்கு:** 1) "கடவுள் மனிதனை மண்ணினால் உருவாக்கினார்" என்று நாம் சொல்லும்பொழுது, நாம் அறியவேண்டியதென்ன? 2) கடவுள் எதைக் கொண்டு மனித உடல் உயிர்பெறச் செய்தார்? 3) மனிதனுடைய ஆன்மாவுக்குள்ள சக்திகள் எவை? 4) மனிதனுடைய ஆன்மா ஏன் சாகமுடியாது? 5) மனிதன் தன் ஆன்மாவில் யாருக்கு ஒத்தவனாய் இருக்கிறான்? 6) ஆதித் தகப்பனும் ஆதித் தாயும் எந்த வகையில் கடவுளுக்கு ஒத்தவர்கள் ஆனார்கள்? 7) சிங்காரத்தோப்பில் முதல் மனிதனுக்கு இருந்த சிறந்த நன்கொடைகள் எவை? 8) ஆதித் தகப்பன் ஆதித்தாயைக் கடவுள் எவ்வாறு சோதித்தார்? 9) அவர்கள் அந்தச் சோதனையில் தேறியிருந்தால் என்ன நடக்கும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுப்பொருள் 2

# இறைவன் அடையாளங்கள் வழியாகத் தம்மை வெளிப்படுத்துகிறார்

பாடம் 16

## இறைவன் தம் படைப்பின் வழியாய்த் தம்மையே வெளிப்படுத்துகிறார்

ஞானாகமம் என்ற நூலை எழுதியவர் சொல்லுகிறார் : "கடவுளை அறியாத மனிதர் அனைவரும் இயல்பிலேயே மடையர்கள் ; கண்ணுக்குப் புலனாகும் நன்மைகளைக்கண்டு இருக்கின்றவரை அறிந்துகொள்ள இயலாதவர்களாயினர்; கைவினைகளில் கவனம் செலுத்தி, கைவினைஞரை அறிந்துகொள்ளாமல் போயினர். படைப்புப் பொருள்களின் அழகில் மயங்கி, அவற்றைத் தெய்வங்கள் என எண்ணினார்களாயின், இவற்றையெல்லாம் ஆளுகிறவர் இவற்றினும் எவ்வளவோ மேலானவர் என்பதை அறிந்துகொள்ளட்டும்; ஏனெனில் அழகின் ஊற்றே அவற்றை உண்டாக்கினார். அவற்றின் வல்லமையையும் ஆற்றலையும் கண்டு மனிதர் வியப்பில் ஆழ்கிறார்கள் எனில், அவற்றையெல்லாம் ஆக்கியவர் இவற்றினும் எவ்வளவோ வல்லமையுள்ளவர் என்பதை அவற்றால் அறியட்டும். ஏனெனில் படைப்புகளின் பெருமையையும் அழகையும் கண்டு அவற்றைப் படைத்தவரைக் கண்டறியலாம்" (ஞானாகமம் 13 : 1 – 5).

நம்மைச் சூழ்ந்துள்ள பரந்த உலகை நாம் உற்று நோக்கும்பொழுது, வான் மீன்களையும் பூமியிலுள்ள யாவற்றையும் பார்க்கும்பொழுது, அவற்றிலுள்ள அதிசயமான ஒழுங்கைப்பற்றி வியப்புற வேண்டியிருக்கிறது. எல்லாப் பொருள்களும், ஒவ்வொரு படைப்பும்கூட இவ்வுலகில் தனக்கென ஓர் இடம் பெற்றிருக்கிறது. இந்த ஒழுங்கை நினைத்துப் பார்த்து, அவ்வண்ணம் செய்து முடிக்கவல்ல ஒருவர் இருக்கவேண்டும். இவை அனைத்தும் செய்யவல்ல பேரறிவும், பேராற்றலும் உள்ள ஒரு கர்த்தா தேவை.

உயிருள்ள ஒவ்வொன்றுமே ஒரு கலைத்திறன் வேலைப்பாடாகும். செடிகள், உயிரினங்கள் வாழவும், வளரவும், பெருகவும்கூடிய வகையில் உண்டாக்கப்பட்டுள்ளன. மனித உடலுங்கூட, அதன் ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகமும் தன்தன் நோக்கத்திற்கேற்ப வியப்புக்குரியதாய் அமைக்கப் பட்டிருக்கின்றது. இந்த வாழும் இனங்களால் அத்தகைய அதிசய திட்டங்களைத் தங்களுக்குத் தாங்களே அமைத்துக்கொள்ள முடியாது. இவையனைத்தும் பேரறிவும் பேராற்றலும் உள்ள ஒருவருடைய நன் கொடையே ஆகும்.

நம் ஒவ்வொருவரிலும் மனச்சான்று இருக்கின்றது. நல்லது எது? கெட்டது எது? என்று அது நமக்குக் காட்டுகிறது. நாம் விரும்பி னுலும், வெறுத்தாலும் மனச்சான்று நம்மோடு பேசுகின்றது. மனச் சான்றை நாமே நமக்கு அமைத்துக்கொள்ளவில்லை; அல்லது மற்ற வர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவில்லை. சட்டங்களைத் தந்த பரிசுத் தரும் நேர்மையுள்ள நீதிபதியுமான ஒருவர்தான் அந்த மனச்சான்றை நம்முடைய இருதயங்களில் வைத்திருக்கவேண்டும்.

ஆனுல், படைக்கப்பட்டவைகளிலிருந்து கடவுளுடைய உள்வாழ் வைப்பற்றியோ, அவர் நம்முடைய ஆன்ம மீட்பைப்பற்றி விதித்துள்ள திட்டங்களைப்பற்றியோ, நாம் ஒன்றும் அறிய முடியாது; இவை கடவுளுடைய இரகசியங்கள். அவர் நமக்கு வெளிப்படுத்தினுல் தான் அவைகளை நாம் அறிந்துகொள்ள முடியும்.

**சிந்தனைக்கு : 1)** நாம் எவ்வாறு கடவுளை அறிந்துகொள்ள இய லும்? (அ) நம்மைச் சூழ்ந்துள்ள உலகத்தில் காணும் அதிசயமான ஒழுங்கிலிருந்து; (ஆ) உயிரினங்களின் அமைப்புகள் அவற்றின் நோக் கங்களுக்கு எற்றவாறு இயங்குவதிலிருந்து ; (இ) நமது மனச்சான்றி லிருந்து. 2) கடவுள் வெளியிடுதலில் இருந்துதான் (தேவ அறிக்கை) நாம் அறியலாம் என்று சொல்லுவதின் பொருள் என்ன?

**என் வாழ்க்கைக்கு :** நான் இந்த அழகுவாய்ந்த உலகத்தைப் பார்க் கும் பொழுது, "கடவுளே, நான் பார்க்கும் யாவற்றையும்விட நீரே அதிக மேன்மையும் அதிக அழகும் பொருந்தியவர்" என்று எனக்குள் சிந்தனை செய்வேன்.

**வேதாகமத்திலிருந்து :** "வானங்கள் கடவுளின் மாட்சிமையைச் சாற் றும்; வானமண்டலம் அவரது கைத்திறனை எடுத்துரைக்கும்" (சங் கீதம் 18 : 2). "மிருகங்களைக் கேளும், அவை உமக்குக் கற்பிக்கும்; வானத்துப் பறவைகளை வினவும் அவை உமக்குச் சொல்லும். அல்லது ஊர்வனவற்றைக் கேளும், அவை உமக்கு விளக்கும்; கடலின் மீன்கள் உமக்கு விவரித்துக் கூறும். ஆண்டவருடைய கையே இதைச் செய்த தென்பது இவை யாவற்றுள்ளும் எதற்குத்தான் தெரியாது?" (யோபு ஆகமம் 12 : 7—9) "திருச்சட்டத்தைப் பெற்றிராத புறவினத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் உள்ள கட்டளைகளை இயல்பாகவே நிறைவேற்றும்போது, அவர்களுக்குத் திருச்சட்டம் இல்லாதபோதிலும் அவர்கள் உள்ளமே சட்டமாய் அமைகிறது. திருச்சட்டம் கற்பிக்கும் செயல்முறை தங்கள் உள்ளத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் எண்பிக்கிறார்கள்." (உரோமையர் 2 : 14—15) 'கடவுள் இல்லை' என்று அறிவிலி தனக்குள் சொல்லிக் கொள்கிறான். (சங்கீதம். 13 : 1)

படைப்பு ஒரு நூல்போன்றது. தன் அறிவைச் செலுத்திக் கற்கும் எவனும் படைப்பின் கர்த்தாவிடம் அழைத்துச் செல்லும்வழியை எங்கும் காண்பான். (ஆஞ்செலுஸ் சிலேசியுஸ் என்ற ஒரு ஜெர்மானிய கவிஞன்).

**செய்யவேண்டியவை:** பேரறிவுள்ள கர்த்தர் ஒருவர்தான் எல்லாவற்றையும் செய்திருக்க வேண்டும் என்று இயற்கையில் நீ மிகத் தெளிவாய்ப் பார்க்கக்கூடிய சில சான்றுகளைக் கூறுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 17

# பழைய ஏற்பாட்டில் இறைவனின் அடையாளங்கள்

**குலமுதுவர்கள்**

"ஆண்டவர் ஆபிரகாமைநோக்கி: நீ உன் நாட்டையும், உன் இனத்தையும், உன் தந்தையின் வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நாம் உனக்குக் காட்டவிருக்கிற நாட்டிற்குப் போகக் கடவாய், நாம் உன்னைப் பெருங்குடியாய்ப் பெருகச் செய்து, உன்னையும் ஆசீர்வதித்து, உன்பெயரையும் மேன்மைப்படுத்துவோம். நீ ஆசீர்வதிக்கப்பட்டவனாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிப்பவர்களை நாம் ஆசீர்வதிப்போம். உன்னைச் சபிப்பவர்களை நாமும் சபிப்போம். மேலும், பூமியிலுள்ள இனமெல்லாம் உன் வழியாய் ஆசீர்வதிக்கப்படும் என்றருளினார். ஆண்டவர் தனக்குக் கட்டளையிட்டவாறு ஆபிரகாம் புறப்பட்டான். லோத்தும் அவனோடு சென்றான்"

(ஆதியாகமம் 12 : 1 — 4)

வேதாகமத்தில் ஆபிரகாமின் சரிதையோடு வரலாறு ஆரம்பமாகிறது. பழைய எற்பாட்டில் ஆபிரகாம் இஸ்ராயேலின் கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்ட, இறைமக்களின் தந்தையாகக் கணிக்கப்பட்டார். ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்குமுன் இப்பெரியார் மெசப்பத்தேமியாவில் தன்வீட்டைவிட்டு கானான் நாட்டில் உண்மைக் கடவுளை வழிபடுபவராகவும், அவர்வழி நடப்பவர்களின் தலைவனாக வாழவும் அங்கு சென்றார். அவர் இறைவனில் உறுதியான விசுவாசம் கொண்டிருந்தார். இறைச்சித்தத்தையே தேடினார். வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் வளர்ச்சிக்குரிய வழிகளை இறைவன் தம் மக்களுக்குப் படிப்படியாக வெளிப்படுத்தினார். ஆபிரகாம் தம் விசுவாசத்தினதும், அறிவினதும் வழியாக மக்களுக்கு உண்மையையும், நீதியையும் படிப்பித்தார். மக்களுக்கு அளவற்ற நன்மைகளைச் செய்தார்; வாழ்வை வளப்படுத்தினார்– பண்புள்ள இனமாக மாற்றினார். ஒரே உண்மைக்கடவுள் என்ற எண்ணத்தை ஊட்டினார். விசுவாசத்தை ஆழமாக்கி, பகைவரின் துன்புறுத்தலிலிருந்து பாதுகாத்தார். இதனால் தனது வாழ்வை மக்களின் நலனுக்காக அர்ப்பணித்தார்.

ஆபிரகாமைத் தொடர்ந்து பணிசெய்தவர்களில் ஈசாக், யாக்கோபு யோசேப்பு குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் இறைமக்களைப் பாதுகாத்து, ஆண்டு வழிநடத்தியும், அவர்களிடையே ஏற்பட்ட பிணக்குகளைத் தீர்த்தும், நீதிவழங்கியும் வந்தனர். தலைவர்களாக விளங்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தநால்வரும் வேதாகமத்தில் குலமுதுவர்களாகவும் கணிக்கப்பட்டனர். ஆபிரகாமுடன் இறைவன் செய்த உடன்படிக்கையை ஈசாக், யாக்கோப்பு இவர்களுடன் புதுப்பித்துக்கொண்டார். ஆதியாகமத்திலிருந்து மக்கள் இறைவனின் ஆசியையும், பாதுகாப்பையும் குலமுதுவர்கள் வழியாக அடைந்தார்கள் என்று அறியக்கிடக்கின்றது. இவர்கள் இஸ்ராயேலரை வழிநடத்தி உடன்படிக்கையின்படி வாழத் தூண்டினூர்கள்.

இறைவனை மையமாகக்கொண்ட சமுதாயப் பழக்கங்கள் சட்டங்களை இம்மூதாதையர் வழங்கினர். இவற்றின்வழியாக அவர்கள் ஒரே உண்மைக் கடவுளை அண்மித்துச் சென்றனர். இவ்விதம் இறைவனின் அடையாளமாக இம்மூதாதையர் விளங்கினர்.

## மோயீசன்

கி. மு. கிட்டத்தட்ட 17 - ம் நூற்றூண்டளவில் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து இஸ்ராயேல் மக்களை விடுவித்த மோயீசன், பாலைவனத்தைக்கடந்து கானூன் நாட்டுக்குத் தன் பயணத்தைத் தொடங்கினூர். இறைவன் குலமுதுவர்களோடு தாம் செய்த உடன்படிக்கையை சீனூய்மலையில் மோயீசனுடன் புதுப்பித்தார். அங்கே கூடியிருந்த மக்களுக்குப் பத்துக்கற்பனைகளைக் கொடுத்தார். அத்துடன் பலஸ்தீனூவிலுள்ள செழிப்பான நாட்டைக் கொடுப்பதாக வாக்குப்பண்ணினூர். மோயீசன்மூலம் இறைவன் கூறியதாவது: "நீங்கள் நமது வாக்கைக் கேட்டு நமது உடன்படிக்கையைக் கைக்கொண்டு அனுசரிப்பீர்களேயாகில் எல்லா மக்களிலும் நீங்களே நமது உடைமையாய் இருப்பீர்கள். ஏனெனில் பூமி எல்லாம் நம்முடையது; அன்றியும் நீங்கள் நமக்கு இராஜரீக ஆசாரியக்கூட்டமும், பரிசுத்த சனமுமாயிருப்பீர்கள்." (யாத்திராகமம் 19 : 5 – 6) மோயீசன் தலைமையிலுள்ள இஸ்ராயேல் மக்கள் தாங்கள் ஓர் இனமாகவல்ல, இறையரசுக்குரியவர்களாகவும் விசேட அழைப்பைப் பெற்றவர்களாகவும் இருந்தார்கள். மக்கள் தங்கள் அழைப்பை விளங்கிக்கொள்ள இறைவன் மோயீசனைக் கருவியாகத் தேர்ந்தெடுத்தார். மத்தியதரைக் கடலோரமாக வாழ்ந்த பிறசாதியார் மத்தியிலே இறைவனுக்குச் சாட்சியம் பகர்ந்து வாழ்வது அவர்கட்கு இலகுவாக இருக்கவில்லை. இறைவன் அவர்களிடம் எதிர்பார்த்த சாதாரண விசுவாசத்தையும், உண்மையான வாழ்க்கையையும் மேற்கொள்ள நாற்பது வருடங்கள் தேவைப்பட்டன. இவர்கள் பெற்ற உயர்ந்த அழைப்பை நிறைவாக வாழ இறைவனின் அருளை மோயீசன் வழியாகப் பெற்றுக்கொண்டார்கள். மோயீசனைப் பின்பற்றிய இஸ்ராயேல் மக்கள் தினமும் பண்பிலும், பரிசுத்ததனத்திலும் வளர்ச்சியடைந்து, தமது அழைப்புக்கேற்ப உருவாக்கப்பட்டனர். செய்யத்தகுந்தது எது, செய்யத்தகாதது எது என்று பத்துக்கட்டளைகள் எடுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்காட்டுகின்றன. மோயீசன் அவர்களுக்கு ஓர் அடையாளமாக இருந்தார். இப்படியாக மீட்பு வரலாற்றில் தெரிந்தெடுக்கப்பட்ட மக்களுக்கு இறைவனின் அடையாளமாக இருந்தவர்கள் குலமுதுவர்களான ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு என்பவர்களும் மோயீசனுமே. இன்றும் இறைவன் தம்மை அவர்களைப் போன்றவர்களின் வழியாக வெளிப்படுத்துகின்றார்.

**சிந்தனைக்கு: 1)** ஆபிரகாமை இறைவனின் அடையாளம் என்று ஏன் கூறுகின்றோம்? 2) எப்படி ஒருவன் இறைவனின் அடையாளமாகிறான்? 3) ஏன் இறைவன் ஆபிரகாமை அழைத்தார்?

**என் வாழ்க்கைக்கு: )** ஆபிரகாமை அழைத்த இறைவன் என்னையும் இன்று தனக்குச் சாட்சியம் பகர அழைக்கிறார் என்று ஏற்றுக்கொண்டு அதற்குத் தேவையான வழிகளைக் கையாளுவேன்.

**வேதாகமத்திலிருந்து:** "கடவுளின் வாக்குறுதியைப்பற்றி ஐயப்படவுமில்லை. விசுவாசத்தில் அவர் மேலும் வலிமை பெற்றார். கடவுளை மகிமைப்படுத்தினார். ஏனெனில் தாம் வாக்களித்ததை இறைவன் செய்ய வல்லவர் என்பதை உறுதியாய் அறிந்திருந்தார். ஆகவே இறைவனுக்கு ஏற்புடையவரென மதிக்கப்பட்டார்" (உரோமர் 4:20 — 22).

**செயற்பாடு; 1)** திவ்விய பலிப்பூசையில் ஆபிரகாமைப்பற்றி எவ்விடத்தில் கூறப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டறிதல். 2) மோயீசன் வாழ்க்கையைப்பற்றி விபரமான அறிக்கை ஒன்று தயாரித்துக் கட்டுரை வரைக. 3) அருளப்பர் 1:17 ஐ வாசித்து மோயீசனையும், கிறிஸ்துவையும் ஒப்பிடுக.

**செபம்:** குலமுதுவர்கள் வழியாகவும், மோயீசன் வழியாகவும் இஸ்ராயேல் மக்களுடன் பேசிய இறைவா! எமது பெரியோர், ஆசிரியர், துறவிகள் தலைவர்கள்மூலம் இன்றும் எம்மோடு பேசியருளும். உமது உடன்படிக்கையின் திட்டத்தை எமக்குக் கற்பியும். அதன்படி வாழ எமக்கு உதவிசெய்யும். இவை யாவையும் உமது மகன் கிறிஸ்து மூலமாக உம்மை மன்றாடுகின்றோம், ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாடம் 18

# பழைய ஏற்பாட்டில் இறைவனின் அடையாளங்கள்

## அரசரும், இறைவாக்கினரும்.

மோயீசனின் மரணத்தின்பின் வீரமுள்ள இளைஞன் யோசுவா இஸ்ராயேலின் தலைவன் ஆனான். அவன் இஸ்ராயேலருக்காக கானான் நாட்டைக் கைப்பற்றினான். இவனின் மரணத்தின்பின் இறைவன் நீதிபதிகளை நியமித்தார். இவர்கள் ஒவ்வொரு சந்ததிக்கும் தலைவர்களாக இருந்தார்கள். வேதாகமத்தில் கடைசியாகக் கூறப்படும் நீதிபதி சாமுவேல் ஆவார். அவருடைய காலத்தில் இஸ்ராயேல் மக்கள் தங்களை ஆள அரசரைத் தரும்படி கேட்டார்கள். பெஞ்சமின் கோத்திரத்தைச் சேர்ந்த இளைஞன் சவுல் முதல் அரசனானான். ஆனால் இறைவன் அவனது தகாத நடத்தையினிமித்தம் அவனைத் தள்ளிவிட்டார். இறைத்திட்டத்திற்கேற்ப இரண்டாம் அரசன் ஆனவர் தாவீது ஆகும். யூதவரலாற்றில் இவர் வீரமுள்ள அரசனுவார். இவர் ஜெருசலேமை வென்று அதைப்பரிசுத்த நகரமாக்கினார். அதைத்தவிர உறுதியான அரசுக்கு அடியிட்டவரும் இவர்தான். அந்த அரசு நிலைத்திருக்கும் அரசாகும் என இறைவன் வாக்குப்பண்ணினார்.

"பின்பு உன் வாழ்வை முடித்து, உன் முன்னோருடன் துயில் கொள்ளும் பொழுது நாம், உனக்குப் பிறக்கும் புதல்வனை உயர்த்தி அவனது அரசை நிலைநாட்டுவோம். அவனே நமது பெயரால் ஓர் ஆலயத்தைக் கட்டுவான். நாமோ அவனது அரியணையை என்றும் நிலை நிறுத்துவோம். உன் அரசோ என்றென்றும் உனக்கு முன்பாக இருக்கும். உன் அரியணை என்றும் நிலைபெற்றிருக்கும் என்கிறார் ஆண்டவர்."

(2 சாமுவேல் 7:12–16).

தாவீதின் மகன் சலமோன் இஸ்ராயேலின் அரசைப் பெரும் புகழ் மிக்கதாக உயர்த்தினார். ஜெருசலேமில் அவர் அமைத்த ஆலயம், நாடு முழுவதும் வழிபாடு செலுத்துவதற்குரிய இடமாயிற்று. அவரது மரணத்தின்பின் நாடு இருபிரிவாக்கப்பட்டது. தென் அரசு தாவீதின் அரியணையாகவும், வட அரசு பல்வேறுபட்ட அரசரின் அரியணையாகவும் ஆனது. இரு அரசுகளின் அரசரும், மக்களும் உண்மைக் கடவுளை வழிபடுவோராக இருந்தபோதிலும், பிறதெய்வ வழிபாடும் உள்ளவராயிருந்தனர். ஏறத்தாழ கி.மு. 722 ஆம் ஆண்டளவில் வட அரசு அசிரியரால் அழிக்கப்பட்டது. கி.மு. 582 இல் தென் அரசு பபிலோனியரால் கைப்பற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு காலகட்டங்களிலும் இருந்த இஸ்ராயேல் அரசர் இறைவனின் அடையாளமாய் இருந்தனர். அரசர் மக்களைப் பாதுகாத்து, ஒழுக்கத்தில் வழிநடத்திச் சென்றனர். ஒரே கடவுள் வழிபாட்டில் மக்களை ஈடுபடுத்தியும் பகைவரிடமிருந்து காப்பாற்றி, சீனாய் உடன்படிக்கைக்கு ஏற்ப செயற்பட்டனர். மக்கள் அவர்களின் தலைமைத்துவத்திற்கு மதிப்பளித்து கீழ்ப்படிந்து நடந்தனர். இப்படியிருந்தாலும், பலகாரணங்களால் இஸ்ராயேல் அரசர் சிலசமயங்களில் இறைத்திட்டத்துக்கு எதிராக நடந்தனர். பால் தெய்வ வழிபாடுடையோருடன் சேர்ந்து அவைகளுக்குக் கோவிலும் கட்டினர்; ஒழுக்கக்கேடாக நடந்தனர். இவ்வரசர்களின் கீழ் இருந்த மக்களின் விசுவாசமும் தாக்கப்பட்டது. அவர்களும் தீயவழியைநாடித் தீயவராயினர். இச்சந்தர்ப்பத்தில் அரசர்குச் சரியானபாதையைக் காட்ட இறைவன் இறைவாக்கினரை அனுப்பினுர். இவர்கள் இறைவனின் சார்பில் மக்களுடன் பேசி அவர்களுக்கு இறைவனின் செய்தியை அளித்தனர். இதைவிட ஓர் உடன்படிக்கைக்குரிய வாழ்வும் வாழ்ந்தனர். மக்களுக்கு முன்மாதிரிகையாகவும், பொய்த்தேவர்களை வழிபடுவதைவிட்டு இறைவன் பக்கம் திரும்பும்படி மக்களைத் தூண்டினர். பத்துக்கட்டளைகளுக்கு அமைந்து வாழவும், சீனாய் உடன்படிக்கைக்கேற்ப நடக்கவும் அவர்களை அழைத்தனர். தம் அயலான புறசாதியாரைப்போல வாழாதிருக்கும்படி புத்திபுகட்டினர். மனிதரில் நம்பிக்கை வைக்காது இறைவனை நம்பும்படி கூறினர்.

வட தென் அரசு இரண்டிற்கும் இறைவன் இறைவாக்கினரை அனுப்பினுர். வட அரசுக்கு எலியாஸ், எலிசேயுஸ், ஆமோஸ், ஒசே போன்ருேர் அனுப்பப்பட்டனர். பபிலோனி அடிமைத்தனத்தின் போது எசக்கியேல் மக்களுக்குப் புத்திபுகட்டினுர். அடிமைத்தனத்தின் பின் மலக்கியால் இறைவாக்கினர் மக்களை வழிநடத்தினர். இறைவனின் அடையாளங்களான இறைவாக்கினர் இறைவனை ஏற்றுக்கொள்ளும்படி மக்களுக்குக் கற்பித்தனர். அவர்கள் கொடுத்த செய்தி காலப்போக்கில் தெளிவானது. தங்கள் வாழ்வில் ஏற்பட்ட துன்பங்கள் நெருக்கடிகளை எதிர்நோக்குவதனுல் மெசியாவுக்கு முன்னடையாளமாகத் திகழ்ந்தனர். அவர்களின் வாழ்வு எடுத்துக்காட்டாக விளங்கியது. அவர்களின் விசுவாசமும், அவர்கள் காட்டிய வீரத்துவமும் வாழ்வுக்கு ஓர் அறைகூவலாகும். அவர்கள் தரும் செய்தி எம்மை வழிநடத்தவல்லது. அவர்கள் வாழ்வின் சாட்சியம் எமக்கு ஒரு வலிமைமிக்க முன்மாதிரிகையாகும். அவர்களைப்பற்றிக் கூறுவோர் சொல்வதாவது யாக்கோப்பின் பிள்ளைகளின் இதயங்களை இறைவாக்கினர் தம் புதுவாழ்வினுல் நிரப்பினர். அவர்கள் இறைவனின் வல்லமையில் விசுவாசங்கொண்டு தம் மீட்பை அடைந்துகொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிந்தனைக்கு : 1 )** இஸ்ராயேலருக்குக் காணானைப் பெற்றுக் கொடுத்தவர் யார்? 2) யூதவரலாற்றில் தாவீது சிறப்பிடம் பெறுவது ஏன்? 3 ) இறைவாக்கினர் என்போர் யார்? 4 ) இஸ்ராயேல் அரசர் மக்களுக்கு எவ்வாறு இறைவனின் அடையாளமாயிருந்தனர்? 5 ) இன்று எவ்வாறு இறைவாக்கினர் எமக்கு அடையாளமாக இருக்கின்றனர்!

**எனது வாழ்வுக்கு :** இன்றைய சமுதாயத்தில் ஒரு தலைவனாக இருக்க என்னைப் பயிற்றுவேன். எல்லாச் சூழ்நிலையிலும் இறைவனில் நம்பிக்கை வைப்பேன்.

**வேதாகமத்திலிருந்து :** என் ஊழியன் தாவீதை நான் தேர்ந்தெடுத்தேன். புனித தைலத்தால் அவரை அபிஷேகம் செய்தேன். அதனால் என் கைவன்மை என்றும் அவருக்குத் துணைநிற்கச் செய்வேன். என் புயத்தால் அவரை உறுதிப்படுத்தச் செய்வேன் (சங்கீதம் 88 : 20—21).

"அவர் தம் கொடைகளை அருளிச் சிலரை இறைவாக்கினராகவும், வேறுசிலரை நற்செய்தியின் தூதர்களாகவும், ஆயர்களாகவும் போதகர்களாகவும் ஏற்படுத்தினார். கிறிஸ்துவின் உடலைக் கட்டி எழுப்பவும் திருப்பணிக்குரிய வேலையை முன்னிட்டு இறைமக்களைப் பக்குவப் படுத்தவும் அக்கொடைகளை அளித்தார்" (எபேசியர் 4 : 11—12).

**செபம் I** ஆண்டவரே ! என் உள்ளத்தையும், உதடுகளையும் தூய்மைப்படுத்தியருளும். இதனால் நான் இறைமக்கள் மத்தியில் சாட்சி பகர்வேனாக. உமது மகன் கிறிஸ்துவின் பெயரால் கேட்கின்றேன், ஆமென்.

**செயற்பாடு : 1 )** வேதாகமத்தைப் படித்து தாவீது பற்றிக் கட்டுரை ஒன்று வரைக. 3 ) இறைவாக்கினருள் ஒருவரைத் தெரிந்து அவரைப்பற்றி உமக்குத் தெரிந்தவற்றை எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 19

# புதிய ஏற்பாட்டில்

# இறைவனின் அடையாளம்

## திருமுழுக்கு அருளப்பர்

அன்னாஸ், கைப்பாஸ் தலைமைக் குருக்களாகவும் இருக்க சக்கரி மெசின் மகனால்; அருளப்பருக்குப் பாலைவனத்தில் கடவுளின் வாக்கு அருளப்பட்டது. பாவமன்னிப்படைய மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று அவர் யோர்தான் ஆற்றையடுத்த நாடெல்லாம் லெமி அறிவித்தார். இதைப்பற்றி இசையாஸ் இறைவாக்கினரின் திருச் செயல் ஆகமத்தில் பாலைவனத்தில் ஒருவன் கூக்குரல் ஒலிக்கின்றது. ஆண்டவர் வழியை ஆயத்தப்படுத்துங்கள் – அவர் தம் பாதைகளைச் செம்மைப்படுத்துங்கள். பள்ளத்தாக்குகளெல்லாம் நிரவப்படுக; மலைகளும், குன்றுகளும் தாழ்த்தப்படுக. கோணலானவை நேராகவும், கரடுமுரடானவை சமவழிகளாகவும் ஆக்கப்படுக. மனிதரெல்லாம் கடவுளின் மீட்பைக் காண்பர்" (லூக், 3 : 2—6).

இறைவாக்கினருள் திருமுழுக்கு அருளப்பர் முக்கிய இடத்தை வகிக்கின்றார். அவருக்கு ஒப்படைக்கப்பட்ட பணி மெசியாவின் வருகைக்கு ஆயத்தம் செய்வதாகும். திருமுழுக்கு அருளப்பர் இயேசுவின் மைத்துனர். குழந்தைப் பருவத்திலேயே வீட்டைவிட்டு யோர்தான் கரையோரமாகவுள்ள வனாந்தரத்தில் முனிவரின் வாழ்க்கை வாழ்வதற்குச் சென்றார். அங்கு தவவாழ்வை வாழ்ந்தார். இவர் உடுத்தியது ஒட்டக மயிராடை; இடையில் கட்டியது வார்க்கச்சை; உண்டது வெட்டுக்கிளியும் காட்டுத்தேனும். பாலைவனத்தில் மற்றைய முனிவர்களுடன் உறவுகொண்டு வரப்போகும் மெசியாவைப்பற்றியும், அவருக்கு முன்னோடியாக அவரின் பாதையை ஆயத்தப்படுத்துபவரைப் பற்றியும் உரையாடினார். இவ்வாறு மற்றைய முனிவர்களுடன் கருத்துக்கள் பரிமாறினார். அன்றைய நாட்களில் சமுதாயத்தில் காணப்பட்ட அநீதிகள் வேறுபாடுகள் இவற்றைப்பற்றிக் கலந்துரையாடியிருப்பார். ஏனெனில் இளம்பாரயந்தொட்டே இவர் இறைவனில் உறுதியான விசுவாசம் வைத்திருந்தார். இவர் முன்கூட்டியே தம்மை ஆயத்தப்படுத்தியதால் ஒரு புதிய சமுதாயத்தை எப்படிக் கட்டியெழுப்பலாம் என்று கற்பிக்க முன்வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது புதிய சமூகக் கொள்கைகளைப் பின்வருமாறு தொகுக்கலாம் :

1. மீட்புக்கு முக்கியமானது உண்மையான உளமாற்றமேயொழிய, ஆபிரகாமின் சந்ததியினர் என்று பெருமை பாராட்டுவதல்ல.

ஆபிரகாம் எனது தந்தையென்று மாத்திரம் உள்ளத்தில் எண்ணாது, "மனந்திரும்பி நற்கனி கொடுங்கள்" என்ற செய்தி அன்று வாழ்ந்த தலைவர்களுக்குக் கூறப்பட்டது.

2. அயலானை அன்பு செய்து செல்வத்தைப் பகிர்தலே முக்கியமானது. இரு ஆடைகளைக் கொண்டவர்கள் இல்லாதவர்களுடன் அதைப் பகிரட்டும். உணவுள்ளவனும் அவ்விதமே பகிர்ந்து கொள்ளட்டும். இச்செய்தி மக்களுக்குரியதாகும்.

3. சமுதாயத்தில் நீதி நிலவுதல் முக்கியமானதொன்றாகும். உனக்குக் குறிக்கப்பட்டதுக்கு அதிகமாகச் சேர்க்க வெண்டாம். இச்செய்தி வரிவசூலிப்போர்க்குரியதாகும்.

4. சட்டங்களைச் செயற்படுத்தும் அரசாங்க உத்தியோகத்தர்கள் நீதியுடன் செயற்படுவதும், வேதனத்துக்குரிய பணிபுரிவதும், பணத்துக்கு அடிமையாகாமல் மனித அபிமானத்தைக் காப்பாற்றுவதும் அவசியமாகும். பலவந்தப்படுத்தியோ, பொய்ச்சாட்சி கூறியோ ஒருவனிடமிருந்து அபகரியாமல் உன் ஊதியத்தோடு திருப்தியாயிரு. இச்செய்தி போர்வீரர்களுக்குச் சொல்லப்பட்டதாகும்.

5. விண்ணரசு நெருங்கிவிட்டது. ஒவ்வொருவனும் உண்மை வழியே நடந்து பொதுநலனுக்காக உண்மையுடன் உழைக்க வேண்டும். அடிமரத்தில் கோடரி வைத்தாயிற்று. நற்கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும். இச்செய்தி பொது மக்களுக்குக் கூறப்பட்டது. வீரத்துவமும், புனிதத்துவமும் உடையவராக விளங்கிய அருளப்பர் உயர்ந்த மனிதனாகக் கருதப்பட்டார். "பெண்களிடம் பிறந்தவர்களுள் திருமுழுக்கு அருளப்பருக்கு மேலான எவரும் தோன்றவில்லை" என்று கிறிஸ்துவே பாராட்டுமளவுக்கு அவரது வாழ்வு அமைந்தது (மத். 11 : 11). உண்மையுள்ளவராக இருந்த அருளப்பர், தாழ்மையுடையவராகவும் இருந்தார். அவர் தான் மெசியா அல்ல என மக்களுக்குப் பகிரங்கமாகக் கூறினார். அவரது பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கத் தான் பாத்திரவான் அல்ல என்பதையும் கூறினார். இந்த வியத்தகு இறைவாக்கினர் அன்று நிலவிய ஏற்றத்தாழ்வுகளைக் கடுமையாக எதிர்த்தார். கலிலேய அரசனான ஏரோதின் தீச்செயல்களை வன்மையாகக் கண்டித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பொறுப்பான பணியை நிறைவேற்றுவதன்மூலம் இறையரசுக்காகத் தன் உயிரை அர்ப்பணித்தார். அவர் இறைவனில் கொண்டிருந்த தளராத விசுவாசத்தால் நற்செய்திப் பணியில் நம்பிக்கையுடன் செயலாற்றினார். மக்கள்மேல் பரிவும், உண்மையும் உள்ளவராக விளங்கினார். அதிகாரிகள் கூறுகிறார்கள் என்பதற்காக அநீதியைக் கண்டிக்கப் பின்நிற்கவில்லை. இறையரசுக்காகக் தனது வாழ்வையே பணயம் வைக்கமுன்வந்தார். அருளப்பரின் உன்னத பண்புகளை சக்கரியாசுடன் உரையாடிய தேவதூதன் இங்ஙனம் கூறினார். "அவர் இஸ்ராயேலரை அவருடைய கடவுளாகிய ஆண்டவர் பக்கம் திருப்புவார். தந்தையரையும், மக்களையும் ஒப்புரவாக்குவார். இறைவனுக்கு அடங்காதவர்களை நீதிமானின் நிலைக்குத் திருப்புவார். இவ்வாறு ஆண்டவருக்கேற்ற மக்களை ஆயத்தப்படுத்துவார். எலியாசை ஆட்கொண்டிருந்த தேவஆவியும் வல்லமையும் உடையவராய் அவர் ஆண்டவர்முன்னே செல்வார். இறையரசுக்காகத் தன் வாழ்வைக் கொடுத்த இந்த இறைவாக்கினர் பழைய, புதிய ஏற்பாடுகளிடையே இறைவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு வெளிச்சவீட்டுக்கு ஒப்பாவார்.

**சிந்தனைக்கு:** 1) இறைவன் திருமுழுக்கு அருளப்பரை அனுப்பியது ஏன்? 2) இறைவாக்கினர்களுள் திருமுழுக்கு அருளப்பர் மேலானவர் என அழைக்கப்படுவது ஏன்? 3) அவரது முக்கிய பண்புகள் யாவை? 4) அவர் தனது வாழ்வை அர்ப்பணித்தது ஏன்?

**எனது வாழ்விற்கு:** நான் வாழும் சமுதாயத்திலே காணப்படும் தீமைகளை அகற்ற என்னால் ஆனமட்டும் என்னைத் தயார் செய்வேன்.

**செபம்:** இறையரசைப் பரப்ப இறைவாக்கினரை அனுப்பிய ஆண்டவரே, இன்று என்னில் சுமத்தப்பட்ட கிறிஸ்தவக் கடமைகளை நான் சரிவர விளங்க எனக்கு உதவிசெய்யும்; கிறிஸ்துவின் பெயரால் உம்மிடம் கேட்கின்றேன்.

**வேதாகமத்திலிருந்து:** "இதோ நான் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன். அவர் உம் வழியைச் சீர்ப்படுத்துவார்- நீங்கள் மகிழ்ச்சியுறும் அந்த உடன்படிக்கையின் தூதர், நீங்கள் எதிர்பார்க்கும் ஆண்டவர், நீங்கள் எதிர்பாராதவகையில் தேவாலயத்தில் தோன்றுவார்."
(மல 1:3)

**செயற்பாடு:** 1) திருமுழுக்கு அருளப்பர் பற்றி ஒரு சிறு நாடகம் எழுதுக. 2) திருமுழுக்கு அருளப்பர் வாழ்வில் காணப்பட்ட இறையரசின் பண்புகள் பற்றி சுவரொட்டி தயாரிக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 20

# புதிய ஏற்பாட்டில் இறைவனின் அடையாளம்

## மரியாளும் — சூசையும்

"இயேசுக்கிறிஸ்து தோன்றியது பின்வருமாறு: அவருடைய தாய் மரியாளுக்கும், சூசைக்கும் மணஒப்பந்தம் ஆகியிருக்க அவர்கள் கூடி வாழுமுன் பரிசுத்த ஆவியினால் அவள் கருத்தாங்கியிருப்பதாகத் தெரிந்தது. அவள் கணவர் சூசை நீதிமானாயும், அவளைக் காட்டிக் கொடுக்க மனமில்லாதவராயுமிருந்ததால் அவளை மறைவாக விலக்கிவிட வேண்டுமென்றிருந்தார். இதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கையில் இதோ! ஆண்டவரின் தூதன் அவருக்குக் கனவில் தோன்றி "சூசையே! தாவீதின் மகனே! உம்முடைய மனைவி மரியாளை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம். ஏனெனில் அவள் கருவுற்றிருப்பது பரிசுத்த ஆவியால்தான். அவள் ஒரு மகனைப் பெற்றெடுப்பாள். அவருக்கு இயேசு என்று பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்" என்றார். (மத்தேயு 1:18 - 21)

கிறிஸ்துவின் மறைபொருளில் மரியாள் சிறப்பான இடத்தை வகிக்கிறாள். நற்செய்தியை அவள் போதிக்கவில்லை. ஆனால் அதை வாழ்ந்தாள். அவளது ஆளுமையும் மீட்புப்பணியுடன் தொடர்பு கொண்டிருந்தது. அதன் மறைபொருளை முழுமையாக உணராவிட்டாலும் அவளது விசுவாசம் தளரவில்லை. இம்மறைபொருளின்முன் அவள் தன்னைத்தாழ்த்தி, எல்லாவற்றையும் தன் உள்ளத்தில் வைத்துச் சிந்தித்தாள். இறைவனின் பல அடையாளங்கள் அவளிடம் பிரதிபலித்தன. இந்த அடையாளங்களுள் தாழ்மை, விசுவாசம், கீழ்ப்படிதல், இறைநம்பிக்கை, தியாகசிந்தை, நேர்மை, தூய்மை, கபடமற்ற அன்பு முதலானவை விசேடமாகக் குறிப்பிடத்தக்கவை. மரியாளைப்பற்றிய நூல்களை வாசிக்கும்போது இந்த அடையாளங்களை நாம் காணக்கூடியதாயிருக்கின்றது. இறைச்சித்தத்தோடு என்றும் இணைந்து வாழும் மரியாள் "இதோ ஆண்டவருடைய அடிமை; உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது" என்று பணிந்தாள். அதைத் தவிர அவமானத்தைப் பொருட்படுத்தாது, யூதசமுதாயத்துக்கு பயப்படவேண்டியிருந்தாலும், விசுவாசத்தில் உறுதியாக ஒருஅடி முன்எடுத்தாள். கன்னியாக இருந்தும் கடவுளைக் கருத்தரித்த அவள் தான் வாழ்ந்த யூத சமுதாயத்துக்கு அது அவமானமாக இருந்தும், அதைப் பொருட்படுத்தாது விசுவாசத்தில் நிலைகொண்டாள். தான் மேலாக மதித்த கன்னிமையை இறைவனுக்கு அர்ப்பணித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துவை வளர்ப்பதில் அக்கறை கொண்ட மரியாள் ஒரு தாய்க்குரிய எல்லா நற்பண்புகளையும் கொண்டிருந்தாள். நசரேத்தில் சூசைக்குப் பணிந்து, அவரோடு ஒத்துழைத்து, குடும்பத்தின் நலனுக்காக உழைத்தாள். அவளின் பரிசுத்ததனத்தை மதிப்பிட மனிதனால் முடியாது. பிதாவின் அன்பான மகளும், சுதனின் தாயும், பரிசுத்த ஆவியின் பத்தினியுமாகிய மரியாளின் பரிசுத்ததனம் மனிதநீதிக்கு மேற்பட்டது. மாசில்லாத உற்பவம், அவளின் விண்ணேற்பு பற்றிய உண்மைகளை திருச்சபையின் போதனை வழியாக அறிகின்றோம். விண்ணுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட உடலுடனும் ஆன்மாவுடனும் மரியாள் இன்று உத்தானமான கிறிஸ்துவின் முதற்கனியாக புதுவாழ்வில் இணைந்திருக்கின்றாள். புதிய வாழ்வில் கிறிஸ்து புதிய ஆதாம், மரியாள் புதிய ஏவாள்.

கானூ ஊர்க் கலியாணத்தில் புதுத்தம்பதிகளுக்காகப் பரிந்து பேசிய மரியாள் இன்று இறைவனிடம் பாவிகளுக்காகப் பரிந்து பேசுகிறாள். லூர்து கெபியிலும், பத்திமாவிலும் காட்சிகொடுத்த மரியன்னை பாவிகளுக்காகச் செபிக்கும்படி கேட்பது, மீட்புப்பணியில் அவளது வல்லமையுள்ள பரிந்து பேசுதலைத் தெளிவாக்குகின்றது.

நசரேத்தின் தச்சுக்கூடத்தில் இயேசுவுக்கும் சூசைக்கும் தன்னை அர்ப்பணித்து பணிபுரிந்த மரியாள் இன்று அனைத்து மக்களுக்காகவும் பரிந்து பேசுகிறாள். நாம் அவளில் இறைவனின் இரக்கம், அன்பு, கருணை, தேவபராமரிப்பைக் காண்கின்றோம். அவளின் எளிய விசுவாசமும், வல்லமையுள்ள அர்ப்பணித்தலுமே மனுக்குலம் முழுவதற்கும் அன்னையாகக் கல்வாரியில் அவளை உயர்த்தியது; மீட்பரைக் கருத்தாங்கிய கன்னிமரியாள் இன்றைய திருச்சபையில் எமக்கு முன்னோடியாக இருக்கின்றாள். இன்று திருச்சபையில் வாழும் மரியாளாக இருக்கின்றாள்; செபிப்பதற்கு எம்மை அழைக்கின்றாள். துன்புறுவோருக்கு ஆறுதலும், அறியாமையில் இருப்பவர்களுக்கு வழிகாட்டியுமாக விளங்கும் மரியாள் கிறிஸ்துவின் பெரும் அடையாளமாகின்றாள்.

மரியாவின் கணவனை சூசையை நீதிமான் என்று நற்செய்திகூறுகின்றது. இது உண்மை. கிறிஸ்துவைக் கரிசனையுடன் வளர்க்கும் பொறுப்பைப் பணிவுடன் ஏற்றுக்கொண்ட இவர் இறைவனின் வியத்தகு அடையாளமாக இருக்கின்றார்.

மரியாளுக்கும், சூசைக்கும் மண ஒப்பந்தமாயிருக்க அவர்கள்கூடி வாழுமுன் பரிசுத்த ஆவியால் கருத்தாங்கியிருப்பதாகத் தெரிந்தது. யூதமுறைப்படி அவளைப் பகிரங்கமாக அனுப்பிவிட மனமில்லாதிருந்ததனால், மறைவாக விலக்கிவிட வேண்டுமென்றிருந்தார். ஏனெனில் அவர் நீதிமானாக இருந்தார். இச்சந்தர்ப்பத்தில் அவரிடத்தில் இரக்

கமும், மன்னிப்பும்தான் பிரதிபலித்தன. பகைமையோ, பழிவாங்கும் தன்மையோ இல்லாதிருந்தார். வானதூதரின் வார்த்தையைக் கேட்டதும், தனது உள்ளத்தில் எழுந்த முரண்பாட்டை வென்றதினால் தற்பரித்தியாகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார். இறைச்சட்டத்திற்குத் தன்னை அதிசயத்திற்குரிய விதமாக அர்ப்பணித்த சூசை, கிறிஸ்துவின் மறைபொருளின் ஊடாக, தனது விவாக உரிமைகளை இறைவனுக்கு அர்ப்பணித்தார். நசரேத்தின் தொழிற்கூடத்தில் வியர்வை சிந்தி உழைத்து இறைமகனையும், பரிசுத்த கன்னிமரியாளையும் பராமரித்து வந்த இந்த உண்மை ஊழியனே, சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் முன்மாதிரிகையாக விளங்குகின்றார். வேதாகமத்தில் அவரைப்பற்றி சுருக்கமாகக் கூறப்பட்டிருந்தாலும், அவரின் வல்லமை, உலகம் முழுவதிலும் செறிந்துள்ளது. நீதிமானாக இருந்தார்: தாவீதின் குலத்தில் பேராற்றல் வாய்ந்தவர்: மீட்புவரலாற்றில் அவரது பணி என்றும் நிலைத்து நிற்கும்.

**சிந்தனைக்கு:** 1) மரியாள் இன்று எங்களுக்கு இறைவனின் அடையாளமாவது எவ்வாறு? 2) மீட்புப் பணியில் சூசை எவ்வாறு பங்கு கொண்டுள்ளார்? 3) திருக்குடும்பத்தின் வாழ்வில் இருந்து ஒரு கிறிஸ்தவ குடும்பம் பின்பற்றி வாழக்கூடிய படிப்பினைகள் எவை? 4) தச்சுக்கூடத்தில் இறைமகன் இயேசுவைப் பயிற்றிய சூசை, மேற்கொண்ட இறைவாக்கினர் பணி என்ன?

**வேதாகமத்திலிருந்து:** "என் ஆத்துமாவானது ஆண்டவரை மகிமைப்படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து என் இதயம் களிகூருகின்றது. ஏனெனில் தாழ்நிலை நின்ற தம் அடிமையைக் கடைக்கண் நோக்கினார். இதோ இந்நாள் முதல் எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே" (லூக். 1:46 — 48).

நேரிய வாழ்வையும், மாசற்ற செயலையும் இறைவன் கண்நோக்கினார். நான் ஆண்டவருடைய பாதையில் நடக்கின்றேன். என்றும் அவரைவிட்டு விலகாதிருப்பேன்.

**என் வாழ்க்கைக்கு:** 1) எனது ஆன்மீக வாழ்வில் பிரச்சினைகள் வரும்போது மரியன்னையின் துணையை எப்போதும் நாடுவேன்.
2) நீதிமானுக்குரிய வாழ்வை வாழ்வதற்கு நான் புனித சூசையப்பரைப் பின்பற்றுவேன்.

**செபம்:** அன்பான ஆண்டவரே, உம்மோடு அதிகம் இணைந்து வாழ்ந்த மரியாள். சூசை என்போரின் முன்மாதிரிகையைப் பின்பற்றுவோம். முடிவில்லா வாழ்வின் அருளை எங்களுக்குத் தாரும். எளிய வாழ்விற்கு முக்கியத்துவம் கொடுக்க எங்களுக்கு உதவும். எங்கள் குடும்பத்தை வளர்ச்சியடையப் பண்ணுவதற்கு எங்கள் புத்தி, ஆற்றலைப் பயன்படுத்த எங்களை வழிநடத்தும். உம் திருமகன் கிறிஸ்து மூலம் இதை உம்மிடம் கேட்கின்றோம். ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 21

# இறைவனின் உன்னத அடையாளம்

தேவாலயத்தின் அபிஷேகத் திருநாளன்று கிறிஸ்து மக்களுக்குக் கூறியதாவது: நானும் தந்தையும் ஒன்று. அப்போது யூதர்கள் அவரைக் கல்லால் எறிந்து கொல்வதற்குக் கல் எடுத்தனர். அத்துடன் அவர் பழிச்சொல் சொல்லுகிறார் என்றும் குற்றஞ்சாட்டி "மேலான செயல்களுக்காக நாங்கள் உன்னைக் கல்லால் எறியவில்லை. பழிச்சொல் சொன்னதற்காகவே உன்னைக் கல்லால் எறிகிறோம்" என்றனர். ஏனெனில் நீ மனிதனாயிருந்தும் உன்னைக் கடவுளாக்கிக் கொள்கின்றாய் என்றார்கள். அதற்கு யேசு "நான் என்னைக் கடவுளின் மகன் என்று சொல்லிக்கொண்டதற்காக பழிச்சொல் சொல்கிறாய் என்று நீங்கள் எப்படிச் சொல்லலாம். எனது செயல்களை விசுவசிக்கிறவன், தந்தை என்னிலும் நான் தந்தையிலும் இருக்கிறோம் என்று விசுவசிக்கின்றான்." (அருளப்பர் 10:22 — 38)

பழைய ஏற்பாட்டில் குலமுதுவர்கள், மோயீசன், யோவா என்ற தலைவர்கள், அரசர்கள், இறைவாக்கினர் வழியாக உரையாடிய இறைவன் இன்று தனது மகன் கிறிஸ்துமூலம் பேசுகின்றார். தந்தையைப் போலவே அவரது மகன் கிறிஸ்துவுக்கும் ஒரே மனம், சித்தம், மனப்பாங்கும் இருந்தன. கிறிஸ்துவின் ஆட்தன்மையில் இறைத்தன்மையும், மனிதத்தன்மையும் நிறைவாய் இணைந்திருந்தன. எனவே உலகில் கிறிஸ்துவைத்தவிர எவரும் தந்தையைப்பற்றிக் கூறுவதற்குத் தகுதியுடையோராய் இருக்கவில்லை. ஒருநாள் திருமுழுக்கு அருளப்பரின் சீடர்கள் கிறிஸ்துவிடம் வந்து "வர இருப்பவர் நீர்தானா! அல்லது வேறு ஒருவருக்குக் காத்திருக்க வேண்டுமா?" எனக் கேட்டனர். இயேசு அந்நேரத்தில் நோய் நோக்காடுகளாலும், பொல்லாத ஆவிகளாலும் வருந்தியவர்களைக் குணமாக்கி, குருடர் பலருக்குப் பார்வை அளித்துக் கொண்டிருந்தார். அவர் அவர்களுக்கு மறுமொழியாக "நீங்கள் போய்க் கண்டதையும், கேட்டதையும் அருளப்பருக்கு அறிவியுங்கள். குருடர் பார்க்கின்றனர். முடவர் நடக்கின்றனர். தொழுநோயாளர் குணமடைகின்றனர். செவிடர் கேட்கின்றனர். இறந்தவர்கள் உயிர்க்கின்றனர். எளியவர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்படுகின்றது. என்னைப்பற்றி இடறல் படாதவன் பேறுபெற்றவன்" என்றார். (லூக். 7 : 21 – 23). முன்னைய இஸ்ராயேல் மக்கள் இறைவனைப்பற்றிப் பல கருத்துக்கள் கொண்டிருந்தார்கள். அவர்கள் இறைவன் தூயவரும், மகிமையும் வல்லமையும் நிறைந்தவரும், உருவமற்றவரும், மனிதரிலும் எவ்வளவோ உயர்ந்தவரும், பரலோகத்தில் வாழ்கிறவரும் என விசுவசித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனைப்பற்றிய எண்ணம் அவர்களுக்குப் பயத்தைக் கொடுத்தது. ஆனால் கிறிஸ்துமூலம் எம்மோடு பேசும் இறைவன் பழைய ஏற்பாட்டில் மக்கள் எண்ணியதற்கு முழுமாறானவராக கருத்தைத் தருகின்றார். கிறிஸ்துமூலம் நாம் காணும் இறைவன் அன்பான தந்தை, பாவிகளை மன்னிப்பவர்; பலவிதமான அடிமைத்தனங்களிலிருந்து மனிதனை விடுவிக்கும் நண்பன்; விட்டுப்பிரிந்து சென்ற பலவீனருக்கு நல்லாயன்; முடிவில்லா வாழ்வுக்குத் தாகங்கொண்டவர்களின் தாகந்தணிக்கும் ஊற்று; இருளில் நடப்போர்க்கு வழிகாட்டும் ஒளி; பகைவரை மன்னிக்கும் செம்மல் எனக் கூறப்படுகின்றார். கிறிஸ்துவின் வாழ்வை நோக்குமிடத்து அவரிடம் மேற்கூறப்பட்ட பண்புகளைக் காணக்கூடியதாய் இருக்கின்றது.

புதியஎற்பாட்டில் கிறிஸ்துவின் வாழ்வின் சில செயல்கள் நற்செய்தியாளரால் கூறப்பட்டுள்ளன. தெய்வீக புண்ணியங்களை அவருடைய பார்வையிலே காணக்கூடுமாய் இருக்கின்றது. தந்தை மகனுடன் நித்தியமாய் வாழ்ந்தார். எனவே இறைவன் யாரென வெளிப்படுத்தக் கூடியவர் கிறிஸ்து ஒருவரே. இதனால் விசுவாசத்திலும் நம்பிக்கையிலும் இறைவனில் இணைக்கப்பட்ட மக்களுக்குக் கிறிஸ்து ஒருவரே அதி உன்னத அடையாளமாய் இருக்கின்றார். இறையரசுக்கு அடையாளமான புதுமைகள்மூலம் கிறிஸ்து இறைவனின் இயல்புகளை வெளிப்படுத்துகின்றார். இதற்கு முடவனைக் குணமாக்கியதும், இறந்தோரை உயிர்ப்பித்ததும் அத்தாட்சியாகும். மெசியவின் வருகைக்காலத்தை முன்னுரைத்த இசையாஸ் இறைவாக்கினர் "மெசியா வரும்போது ஏழைகளுக்குப் போதிப்பர்" என்றார் எளியவர். என்பது இறைவனில் முழுமையான விசுவாசமும் நம்பிக்கையும் கொண்டவர்களே. கிறிஸ்து போதித்த இம் மீட்புச்செய்தி அவர்களுக்கு நற்செய்தியாக இருந்தது. பழைய எற்பாட்டில் இறைவனைப்பற்றிக் கூறப்பட்ட கருத்துக்களைப் புதிய எற்பாட்டில் கிறிஸ்து மனிதமுறையில் அறிமுகப்படுத்தினார். எனவே அவரது சாட்சியம் சாதாரண மனிதனின் உள்ளத்தைத் தொட்டது. கிறிஸ்துவைக் காண்பவன் இறைவனைக் காண்கிறான்.

இறைமகனான கிறிஸ்துவை இறைவனே பின்வரும் வார்த்தைகளால் அறிமுகப்படுத்துகின்றார். "இவரே எனது பிரிய குமாரன். இவரில் நான் பூரிப்படைகிறேன்." இவ்வார்த்தைகளைக் கிறிஸ்து தமது அருங்குறிகளினாலும், வாழ்வினாலும் உண்மையெனக் காட்டினார். இதற்காகவே தன்னை மரணத்துக்குக் கையளித்தார். அப்போஸ்தலர் காலந்தொட்டு திருச்சபை படிப்பிக்கும் முக்கிய போதனை இதுவே. கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை தந்தைக்கு எல்லாவிதத்திலும் சமமானது. அவர் கடவுளில் இருந்து கடவுளாக, ஒளியிலிருந்து ஒளியாக மெய்யங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளிடமிருந்து மெய்யங்கடவுளாக உற்பவித்தார். இவர் உண்டாக்கப்பட்டவர் அல்லர். பிதாவோடு ஒரே பொருளானவர். இவர் வழியாகவே யாவும் படைக்கப்பட்டன. பிதாவோடு ஒன்றாக ஆராதனையும் மகிமையும் பெறுகின்றார்.

இந்த உண்மைக்கு மறைசாட்சிகள் பலர் தம் இரத்தம் சிந்திச் சாட்சி பகர்ந்துள்ளனர். பாப்புமார், ஆயர்கள், குருக்களும், கற்றவர் கல்லாதோரும், இளைஞர் முதியோரும் விசுவாச வாழ்வு வாழ்ந்து மரித்து இன்று விண்ணகத்தில் வாழ்கின்றனர்.

**சிந்தனைக்கு:** 1) இறை அடையாளம் என்பதுபற்றி நீர் விளங்குவது என்ன? 2) கிறிஸ்துவின் அருங்குறிகள் இறையரசின் அடையாளமாக எண்ணப்படுவது ஏன்? 3) கிறிஸ்து எவ்வழிகளில் தந்தையை ஒத்திருக்கின்றார்?

**வேதாகமத்திலிருந்து:** 1) "அவரில் விசுவாசம் கொள்பவன் தீர்ப்புக்கு ஆளாவதில்லை; விசுவாசங்கொள்ளாதவனோ ஏற்கனவே தீர்ப்புப் பெற்றுவிட்டான். ஏனெனில் அவன் கடவுளின் ஒரே பேறான மகனின் பெயரில் விசுவாசங் கொள்ளவில்லை" (அரு. 3 : 18).
2) "உன்னோடு பேசும் நானே, நீங்கள் பேசிக்கொள்ளும் மெசியா என்றார்" (அரு. 4 : 26).

**எனது வாழ்வுக்கு:** 1) வேதாகமத்தை வாசித்துக் கிறிஸ்துவை அறியவும், அனுபவிக்கவும் முயலுதல். 2) கிறிஸ்துவின் புண்ணியங்களை என் வாழ்வில் கடைப்பிடித்தல். 3) கிறிஸ்துவின் பொருட்டு ஒருபோதும் வெட்கம் அடையாதிருத்தல்.

**செபம்:** இயேசுவே நீர் மனிதனோடு உறவாட மனிதனானீர். நாம் வாழும் சமுதாயத்திலும் நீர் மனுவுருவாகும்படி வேண்டுகின்றோம். உமது வாழ்வில் நீர் கடைப்பிடித்த மதிப்பீடுகளை நாமும் எமது சமுதாயத்தில் செயற்படுத்தி வாழ்ந்து, மற்றவர்களுக்குச் சான்றுபகர வரம்தாரும், ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 22

# இறைவனின் மகிமையைப் புலப்படுத்திய அடையாளங்கள்

## கிறீஸ்துவின் உருமாற்றமும், இராயப்பரின் விசுவாச அறிக்கையும்

"இயேசு இராயப்பரையும், யாகப்பரையும், அவர் சகோதரர் அருளப்பரையும் அழைத்து, ஓர் உயர்ந்த மலைக்கு ஒதுக்கமாய் கூட்டிக்கொண்டு போய் அவர்கள் முன் உருமாறினார். அவரது முகம் கதிரவனைப்போல் ஒளிவீசியது. அவர் ஆடைகள் ஒளியைப்போல் வெண்மையாயின. இதோ மோயீசனும் எலியாசும் அவர்களுக்குத் தோன்றி அவரோடு உரையாடிக்கொண்டிருந்தனர். இராயப்பர் இயேசுவை நோக்கி, ஆண்டவரே நாம் இங்கே இருப்பது எத்துணை நன்று. நீர் விரும்பினால் உமக்கு ஒன்றும், மோயீசனுக்கு ஒன்றும், எலியாசுக்கு ஒன்றுமாக இங்கு கூடாரம் மூன்று அமைப்போம் என்று சொன்னார். அவர் பேசிக்கொண்டிருக்கையிலே இதோ ஒளிரும் மேகம் ஒன்று அவர்கள்மேல் நிழலிட்டது "இவரே என் அன்பார்ந்த மகன். இவரிடம் நான் பூரிப்படைகிறேன். இவருக்குச் செவி சாயுங்கள்" என்று உருமாற்ற நிகழ்ச்சியின்போது தந்தை சாற்றினார். (மத். 17 : 2 – 5).

"இவரே என் அன்பார்ந்த மகன். இவரை நான் தேர்ந்துகொண்டேன். இவருக்குச் செவிகொடுங்கள்." என்று தந்தை கூறியதாக லூக்காஸ் விளக்குகின்றார் (லூக். 9 : 35). புனித அருளப்பர் தமது நற்செய்தியில் விபரிக்கும்போது கிறிஸ்துவின் தெய்வீகத்துக்குக் தானே சான்று பகர்கிறார். தந்தையால் அர்ச்சிக்கப்பெற்று உலகிற்கு அனுப்பப்பட்ட நான் என்னைக் கடவுளின் மகன் என்று சொல்லிக்கொண்டதற்காக தூஷணம் சொல்லுகின்றாய் என்று நீங்கள் எப்படிச் சொல்லலாம்? நான் என் தந்தையின் செயல்களைச் செய்யாவிடில் நீங்கள் என்னை விசுவசிக்க வேண்டாம். ஆனால் அவற்றைச் செய்தால் என்னை விசுவசிக்காவிட்டாலும் என் செயல்களையாவது நம்புங்கள். இங்ஙனம் தந்தை என்னிலும் நான் தந்தையிலும் இருக்கின்றோம் என்று நீங்கள் அறிந்துகொள்வீர்கள். அவ்வறிவில் நிலைகொள்வீர்கள்" என்றார் (அரு. 10 : 96 – 38).

கிறிஸ்துவின் காலத்தில். இருந்தவர்களைப்போல இன்றும் சிலர் கிறிஸ்துவின் தெய்வீகத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். எங்கே உறுதியான விசுவாசம் இல்லையோ அங்கே சந்தேகம் எழுவது இயல்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துவின் அருங்குறிகளை விஞ்ஞான ரீதியில் நோக்குவதும், அவற்றை இயற்கைக் காரணங்களுக்குள்ளாக்குவதும் விசுவாசக் குறைவுக்கு அத்தாட்சியாகும். ஒருநாள் கிறிஸ்து சீடரிடம் "மக்கள் என்னை யாரென்று சொல்லுகிறார்கள்" என்று கேட்டார். அதற்கு அவர்கள் "ஒருசிலர் திருமுழுக்கு அருளப்பர் என்றும், இன்னும்சிலர் எலியாஸ் என்றும், வேறு சிலர் தீர்க்கதரிசிகளுள் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள்" என்றனர். அதற்கு அவர் ' நீங்கள் என்னை யாரென்று சொல்லுகிறீர்கள் ? ' என இராயப்பர் மறுமொழியாக ' நீரே கிறிஸ்து ' என விடையளித்தார். இதை ஏற்றுக்கொண்ட கிறிஸ்து "யோனாவின் மகனை சீமோனே நீ பாக்கியவான். ஏனெனில் மாமிசமும் இரத்தமுமல்ல, பரலோகத்திலிருக்கின்ற என் தந்தையே இதை உனக்கு தெரியப்படுத்தினார்" என்றார் (மத். 16 : 13—17). தனது பணியில் கிறிஸ்து உறுதியான விசுவாசம் கொண்டிருந்தார். இவ்விசுவாசத்திற்கு ஏற்ப இறையரசைப் போதித்தார். இறையரசுக்கு அடையாளமான அருங்குறிகளைச் செய்தார். உவமைகள்மூலம் இறையரசின் மறைபொருளைத் தெளிவாக்கினார். தனது அழைப்பில் வைத்த தளராத விசுவாசத்தினால் சிலுவை மரணத்துக்குத் தம்மைக் கையளித்தார். இறைவன் இதை ஏற்று கிறிஸ்துவை மரணத்திலிருந்து உயிர்ப்பித்தார்.

1. இராயப்பரின் விசுவாச அறிக்கையும், 2.கிறிஸ்துவின் உருமாற்றமும், 3. உத்தானமும் கிறிஸ்துவின் தெய்வீகத்துக்குத் தெளிவான அடையாளங்களாகும். இதை விசுவாசத்துடன் ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

**சிந்தனைக்கு :** 1) கிறிஸ்துவைப் பொறுத்தமட்டில் இறைவன் கொடுத்த சான்றுகள் எவை ? 2) எந்தச் சந்தர்ப்பத்தில் இவைகளைச் செய்தார் ? 3) கிறிஸ்துவின் உருமாற்றமும், இராயப்பரின் விசுவாச அறிக்கையும் முக்கியமானவை. ஏன் ? 4) மீட்பின் மறைபொருளில் அருங்குறிகள் எடுக்கும் இடம் என்ன ?

**எனது வாழ்க்கைக்கு :** இன்று தொடக்கம் இறைமகன் கிறிஸ்துவுக்குச் சாட்சிபகரும் பழக்கத்தை என்னில் உருவாக்கிக் கொள்வேன்.

**வேதாகமத்திலிருந்து :** 1. " தம் சொந்த மகன் என்றும் பாராமல் நம் அனைவருக்காகவும் அவரைக் கையளித்த அவர் தம் மகனோடு அனைத்தையும் நமக்கு அருளாதிருப்பாரோ" (உரோ. 8: 32)
2. " அவரில் விசுவாசம் கொள்பவன் தீர்ப்பிடப்படுவதில்லை. விசுவாசம் கொள்ளாதவனோ முன்னரே தீர்ப்பிடப்பட்டுள்ளான். ஏனெனில் இறைவனின் ஒரே மகனின் நாமத்தில் விசுவாசம் கொள்ளவில்லை" ( அரு. 3: 18 ).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 23

# இறையரசின் அடையாளமான அருங்குறிகள்

இஸ்ராயேல் மக்களே நான் கூறுவதைக் கேளுங்கள் : வல்ல செயல்கள், அற்புதங்கள், அருங்குறிகளால் நசரேத்தூர் இயேசு கடவுளது சான்று பெற்றவராக உங்கள்முன் எண்பிக்கப்பெற்றார். ஏனெனில் நீங்கள் அறிந்திருப்பதுபோல இவற்றையெல்லாம் உங்கள் நடுவில் கடவுளே அவர் வழியாகச் செய்தார் (அப், பணி. 2 : 22).

இறைவனின் மீட்புத்திட்டத்தில் கிறிஸ்துவின் புதுமைகள் இறையரசில் காணப்படும் அடையாளங்களாகத் திகழுகின்றன. இறைவனின் அன்பு கிறிஸ்துவின் அடையாளங்களின் வழியாக செயற்படும்விதம் எமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்து இறைவனின் அதிமேலான அடையாளம் என்பதைப் புதுமைகள் தெளிவாகக் காட்டுகின்றன. கானாவூர்க் கலியாணத்தில் கிறிஸ்து தண்ணீரை இரசமாக்கியது இறைவனின் இரக்கமுள்ள அன்பைக் காட்டுகின்றது. நயீம் பட்டணத்து விதவையின் மகளுக்கு வாழ்வளித்து தன் இரக்கத்தைக் காட்டினார் மனிதரை இறைவன் எத்துணை அன்பு செய்கின்றார் என்பதை இவற்றின் வழியாக அறிகின்றோம். இறைவனின் அதிகாரமும் வல்லமையும் கிறிஸ்துவில் புலப்படுகின்றது.

படைத்தவரின் தெய்வீக வல்லமையைக் காட்டிய கிறிஸ்து கடலை அமைதிப்படுத்தினார் (மாற். 4: 35—40). அவர் கடலின்மேல் நடந்தார் (மத். 14 : 22—25 ). தம் வல்லமையினால் பல நோய்களைக் குணமாக்கினார். இராயப்பரின் மாமியாரைக் குணப்படுத்தினார் (மாற். 1 : 29—31 ). பெத்சாயிதாவின் குருடனுக்குப் பார்வை கொடுத்தார் (மத். 8:21—26). தொழுநோயாளியைக் குணமாக்கினார் (லூக். 5: 12—15). காய்ச்சலால் பீடிக்கப்பட்ட ஊழியனைக் குணமாக்கினார் (லூக். 7—17).

இயல்புக்கு மேலான உண்மைகளின் வழியாக இறையரசின் மாண்பை உறுதிப்படுத்த இயேசு விரும்பினார். இதற்காக தெய்வீக வல்லமையைக் காட்டி ஓய்வுநாளில் சூம்பிய கரமுடைய மனிதனைக் குணமாக்கினார். இதனால் ஓய்வுநாட்களிலும் மக்கள் நன்மை செய்ய வேண்டுமே தவிர வெற்றுச் சட்டங்கள், ஒழுங்குகளுக்கு அடிமையாகக் கூடாது என்று காட்டினார். மனிதனில் ஆழமான விசுவாசத்தை ஏற்படுத்தும் வல்லமை இறைவனுக்கு மாத்திரமே உரியது என்பதை அரு 9-ம் அதிகாரத்தில் தெளிவாக்கினார். குருடனாய்ப் பிறந்து குணமாகியவனின் வரலாறு இங்கே குறிப்பிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையரசின் உறுப்பினர்கள் சிலர் மரணத்தை வென்றார்கள். ஜயீரின் மகளை உயிர்ப்பித்தது இதற்கொரு அடையாளம் (மாற். 5: 21—42). லாசருக்கு மீண்டும் வாழ்வு கொடுத்தது (அரு. 11: 1—44) கிறிஸ்துவின் உருமாற்றம் (லூக். 9 : 28—36 ) அவரின் உத்தானம் (லூக். 24 ;1—17). புனித லூக்காவின் நற்செய்தியில் சக்கேயுவின் மனமாற்றத்தைக் கூறியதும் இறையரசின் அடையாளமாகும். இறையன்பின் வல்லமை மனிதனின் அடிமைத்தனத்தைவிட மேலானது என்பதைக் கிறிஸ்துவின் செயல்கள் காட்டுகின்றன. இறையன்பால் உந்தப்பட்ட மனிதன் ஒரு புதிய கிறிஸ்து. உண்மையான இறையடையாளம். இத்தகையோரின் செயற்பாடிஞல் இறையரசு கட்டப்பட்டுள்ளது. அவர்களின் ஊடாக உண்மை இறைத்தன்மை மிளிர்கிறது; சமுதாயம் வளர்ச்சியடைகிறது; தூய்மையாக்கப்படுகிறது.

கிறிஸ்துவில் இறைத்தன்மை வெளிப்படுவதை நாம் காண்கின்றோம். கிறிஸ்துவின் கண்களினூடாக இறைவனின் அன்பு ஒளிர்கிறது. வார்த்தைகளினூடாக அவரின் தெய்வீக இரக்கம் வழிகின்றது. புதுமைகள் வழியாக அவரது தெய்வீக வல்லமை புலப்படுகிறது. மனிதனை மீட்க அவர்கொண்ட பேரவா அவரின் பாடுகளில் தொனிக்கிறது. அவரது உயிர்ப்பின் வழியாக அவரது மாண்பு புலப்படுகின்றது. இறையரசின் அதிஉன்னத அடையாளம் கிறிஸ்துவே.

**சிந்தனைக்கு : 1)** புதுமைகள் இறையரசின் **அடையாளமாக** இருப்பது எவ்வாறு ? 2) நற்செய்தியில் கூறப்பட்ட புதுமைகளில் ஒன்றைத் தெரிந்தெடுத்து அது வெளிப்படுத்தும் இறைப்பண்புகளைக் குறிப்பிடுக? கிறிஸ்துவின் பாடுகளில் நாம் எவற்றைச் சிந்திக்கின்றோம் ?

**எமது வாழ்விற்கு :** விசுவாசக்கண்ணுல் கிறிஸ்துவின் புதுமைகளைப் பார்த்து அதில் மறைந்துள்ள இறையரசின் பண்புகளை நான் அறிய என்னையே பயிற்றிக்கொள்வேன்.

**வேதாகமத்திலிருந்து :** "இந்த மக்கள் கண்டும் காண்பதில்லை கேட்டும் கேட்பதில்லை, உணர்வதுமில்லை" (மத். 13:14 ).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 24

# இறையரசின் அடையாளமான உவமைகள்

## (இறையரசின் உவமைகள் 1)

சீடர் அவரை அணுகி, "அவர்களிடம் நீர் உவமைகளில் பேசுவ வதேன்?" என்றனர். அவர் அவர்களுக்கு மறுமொழியாகக் கூறியது; "விண்ணரசின் மறைபொருளை அறிய உங்களுக்குக் கொடுத்துவைத் திருக்கிறது. அவர்களுக்கோ கொடுத்து வைக்கவில்லை. ஏனெனில் உள்ளவனுக்குக் கொடுக்கப்படும்: அவனும் நிறைவு பெறுவான். இல் லாதவனிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும். ஏன் அவர்களிடம் உவ மைகளில் பேசுகிறேனெனில் அவர்கள் கண்டும் காணபதில்லை; கேட் டும் கேட்பதில்லை; உணர்வதுமில்லை. இசையாஸ் கூறியுள்ள இறை வாக்கு அவர்களிடம் நிறைவேறுகிறது" (13: 10—14)

இறையரசின் மறை உண்மைகளை மக்களுக்கு விளங்கவைப்பதற் காகக் கிறிஸ்து உவமைகளை அடிக்கடி பயன்படுத்தினார். உவமையின் சொற்பொருள் ஒன்று; மறைந்திருக்கும் பொருள் இன்னொன்று. எவ் வளவுக்கு ஆழமாகச் சிந்திக்கின்றோமோ அவ்வளவுக்கு மறைந்த கருத் துக்கள் தெளிவாகும். கிறிஸ்துவின் வார்த்தைகளை நாம் புரிந்துகொள் வதற்கு அவைகளைப்பற்றி நாம் சிந்திக்கவேண்டும். விதைப்போன் உவ மையில் இறையரசுபற்றி மக்கள் கொண்டுள்ள பல்வேறு கருத்துக்களைக் காணக்கூடியதாயிருக்கின்றது. சிலர் செய்திக்குச் செவிமடுத்து, பின் மறந்து விடுகின்றனர். அவர்களுக்கு இறைவார்த்தையை ஏற்கும் மன நிலையோ, அதை மதிக்கும் பண்போ இருக்கவில்லை. அவர்கள் இதயத் தில் விதைக்கப்பட்டவை சாத்தானால் பறித்தெடுக்கப்பட்டன. மற்ற வர்கள் மகிழ்ச்சியோடு வார்த்தையைக் கேட்பவர்கள். ஆனால் அதைப் புரிந்து கொள்ளவும் வார்த்தையின்படி வாழவும் முனைவதில்லை. அவர்கள் வார்த்தையை விட்டு விலகிச் செல்கின்றனர். இன்னும் சிலர் மகிழ்வுடன் வார்த்தையைக் கேட்டு சில காலத்தில் அதற்கேற்ப வாழ் கின்றனர். ஆனால் உலகப்பற்றும், பணம் சேர்க்கும் அவாவும் இவர் களின் வாழ்வில் முக்கிய இடம் எடுப்பதால் முழுமையான பலன் கொடுப்பதில்லை. இன்னும் சிலர் வார்த்தையைக் கேட்டு உணர்ந்து அதற்கேற்ப வாழ்கின்றவர்கள். இவர்களே நற்பலன் பெறுவோராவர் (மத். 13: 1—9, 18—23).

புலப்படாத முறையில் ஏற்படும் இந்த வளர்ச்சி முதிர்ச்சி நிலை யில் கனிகொடுக்கிறது. இதன்வழியாக இறையாசை பெற்றவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரமல்ல, முழுச்சமுதாயமுமே பயணடைவதை நாம் காண்போம் (கடுகுமணியின் உவமை மத். 13 : 31 — 31).

நல்லவர்களும், தீயவர்களும் ஒரேவிதமாக இறையரசின் செய்தியைப் பெறுகிறுர்கள். புனிதத்துவத்தை அடைவதற்கு எல்லோருக்கும் சமமான வாய்ப்பும், சுதந்திரமும் கிடைக்கிறது. அவரவர் செயற்படுவதற்கேற்ப பலனைக் கடைசிநாளில் பெற்றுக்கொள்வார்கள். நல்லவர்கள் இறைவனைக் காணத் தீயவர்கள் அழிந்து போவார்கள். (கோதுமை மத்தியில் தகரை உவமை, மத். 13 : 24 — 30)

சிலர் இறையரசை எதிர்பாராதவிதமாக அறிந்துகொள்கின்றனர். அதை அனுபவித்து தேவையான புண்ணியங்களைத் தங்களில் வளர்த்துக் கொள்கின்றனர். அவர்களைப்பற்றிக் கிறிஸ்து கூறியது "விண்ணரசு நிலத்தில் மறைந்துள்ள புதையலுக்கு ஒப்பாகும். அதைக் கண்டுபிடித்தவன் அதை மறைத்துவிட்டு, அதைக்கண்ட மகிழ்ச்சியில் போய்த் தனக்குள்ளதெல்லாம் விற்று அந்நிலத்தை வாங்கிக்கொள்கிறுன்." (மத். 13 : 44)

இன்று சிலர் உண்மையைத் தேடுகின்றனர். அதில் நாட்டங்கொண்டு அதற்காக எதையும் தியாகம் செய்வார்கள். உண்மையுள்ள இறைவன் அவர்களுக்குச் சம்பாவனை அளிக்கின்றுர். விண்ணரசு நல்ல முத்துக்களைத் தேடும் வணிகனுக்கு ஒப்பாயிருக்கின்றது. விலை உயர்ந்த ஒரு முத்தைக் கண்டதும் போய்த் தனக்குள்ளதெல்லாவற்றையும் விற்று அதை வாங்கிக்கொள்கிறுன். (மத். 13 : 45 —46)

இந்த வழிகளில் நாம் அவற்றைச் சிந்திக்கும்போது கிறிஸ்து கூறிய உவமைகளில் இறையரசைப்பற்றிய பல பண்புகள் மறைந்து இருப்பதைக் காணமுடிகிறது. கிறிஸ்தவர் என்ற முறையில் இந்த உவமைகளைப் படித்துச் சிந்தித்து, தேவையானவற்றை அவைகளில் இருந்து பெறுவது எமது கடமையாகும்.

**சிந்தனைக்கு:** 1) விதைப்போன் உவமையைக் கவனமாகப் படித்து அதிலிருந்து நீர் பெறும் செய்தியைச் சுருக்கமாக எழுதுக. 2) இறையரசுக்கும் உவமைக்குமிடையே உள்ள தொடர்பு என்ன? 3) கிறிஸ்து ஏன் உவமைகள்மூலம் போதித்தார்?

**எனது வாழ்விற்கு:** 1) எனது உடல் உள ஆற்றல்களை இறையரசைப் பரப்புவதற்காக அர்ப்பணிக்க எனக்குத் தேவையான பயிற்சியைப் பெற்றுக்கொள்வேன். 2) நற்செய்தியைக் கவனத்துடனும், அதற்குரிய விளக்கங்களுடனும் படித்து அறிவைப் பெற்றுக்கொள்வேன்.

**செயற்பாடு:** 1) நீர் விரும்பும் உவமையின் பொருளை மையமாகக் கொண்ட நாடகம் ஒன்று எழுதுக. 2) சமயபாட நேரத்தில் இந்த நாடகத்தை நடித்துக் காட்டுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 25

# இறையரசின் உவமைகள் II

"இவையெல்லாம் நான் உங்களிடம் உருவகமாய்ப் பேசினேன். இதோ நேரம் வருகிறது; அப்போது உருவகமாய் உங்களிடம் பேசேன்; என் தந்தையைப்பற்றித் தெளிவாய் எடுத்துச் சொல்வேன். அந்நாளில் என்பெயரால் நீங்கள் வேண்டுவீர்கள்; ஆயினும் உங்களுக்காகத் தந்தையிடம் மன்றாடுவேன் என்று நான் சொல்லவில்லை."
(அரு. 16 : 25 — 26).

இன்று எமது தாய்த்திருச்சபை விசுவாச சத்தியங்களைப்பற்றித் தெளிவான விளக்கம் அளிக்கின்றாள். இவை வேதாகமத்தை அடிப் படையாகக் கொண்டுள்ளன. இக்கோட்பாடுகள் அளிக்கும் விளக்கங் களின் வழியாகத் திருச்சபை சமாதானத்தின் செய்தியை அளிக்கின் றது. இப்பணியில் பரிசுத்த ஆவியானவர் திருச்சபைக்குத் துணைபுரி கிறார் என்பதை நாம் விசுவசிக்கின்றோம். இறையரசைப் பொறுத்தள வில் இன்று ஒரு பெரும் பொறுப்பு திருச்சபையைச் சார்ந்துள்ளது. இறையரசின் மதிப்பீடுகளை விளக்கும் திருச்சபைக்கு வேதாகமத்தின் ஒளி மிகவும் அவசியம். உவமைகளில் மறைந்துகிடக்கும் படிப்பினை கள் திருச்சபையின் செயற்பாட்டால் தெளிவடைகின்றது.

அ. **'பழிவாங்காமல் மன்னித்தல்,:** மன்னிப்புக் கொடாத ஊழிய னின் உவமைமூலம் மத்தேயு இப்பாடத்தைப் படிப்பிக்கின்றார். ஒருவர் ஒருவரை நாம் மன்னித்தால் மட்டுமே இறைவன் எம்மை மன்னிப்பார்.

ஆ. **உண்மையான சகோதரத்துவ அன்பில் வாழ்வோம்:** (லூக். 10: 30 — 37)

நல்ல சமாரியனின் உவமை எல்லார்க்கும் எல்லாமாக இருக்க வேண்டுமென்று கற்பிக்கின்றது. அன்பும், இரக்கமும் நிறைந்த இறைவன் நாம் பரிவுள்ள அன்புடன் வாழவேண்டுமென்று எதிர் பார்க்கிறார். நாம் சட்டத்திற்கு அடிமையாக வாழ்வதை விரும்பு வதில்லை எனவும் இந்த உவமை படிப்பிக்கின்றது. மற்றவர்களின் நன்மைக்காக உண்மையோடு உழைத்தலே கிறிஸ்தவ அழைப்பா கும். ஆற்றல், திறமை, நேரம், பொருள் என்பவற்றை மற்றவர் களின் நல்வாழ்வுக்காகப் பயன்படுத்த இவ்வழைப்பு எம்மிடம் கேட்டு நிற்கிறது. இறையரசின் மக்களுக்கு இப்பண்புகள் இன்றி யமையாதன.

இ. **இறைவனின் முன்னிலையில் எம்மைத் தாழ்த்துவோம்:** (லூக். 18: 10 — 14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் அகங்காரத்தை அல்ல, தாழ்மையையே எதிர்பார்க்கிறார். எம் பெலவீனத்தையும் அறிகிறார். பெருமைபாராட்டல் பயன்தரக் கூடியதல்ல. இது ஆயக்காரன் உவமையில் தெளிவாக்கப்படுகின்றது.

**ஈ. இடைவிடாமல் செபிக்கவேண்டும்: (லூக். 11 : 5 — 8)**

எமது மனித இயல்பால் இறையரசைப் பெறமுடியாது. இறையரசு இறைவனின் நன்கொடை. இறைவன்முன் எம்மைத் தாழ்த்துவதாலும், இந்த மேலான கொடைக்கு நன்றி கூறுவதாலும், இடைவிடாமல் வேண்டுவதாலும் எமது விசுவாசவாழ்வை வளர்த்துக்கொள்ளலாம். இது அலட்டும் நண்பனது உவமையால் தெளிவுபடுத்தப்படுகிறது. கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள்; தட்டுங்கள் திறக்கப்படும்.

**உ. வளர்ச்சியடைதலே எமது அழைத்தலாகும்: (மத் 25 : 14 — 30)**

பொற்காசுகளின் உவமை ஓர் ஆழமான பாடத்தை அடக்கியுள்ளது. இறைவன் பலதரப்பட்ட ஆற்றல்களை எமக்குக் கொடுத்துள்ளார். எமது திறமைக்கேற்ப இறைவன் தந்த கொடைகளை வளர்ப்பதும், பிறருக்கு நன்மை செய்வதுமே எமது அழைப்பு என்றும் கிறிஸ்து கூறினார். இவ்வகையில் தன்னை ஆயத்தம் செய்யாத மனிதன் இறையரசுக்குத் தகுதியற்றவன்.

மேற்கூறப்பட்ட உவமைகள் வழியாக இறையரசுபற்றிய பல பண்புகள் கூறப்பட்டுள்ளன. இவற்றைச் செபச் சூழலில் படித்து இப்பண்புகள் நிறைந்த ஆளுமையில் வளர்தல் எமது கடமையாகும்.

**சிந்தனைக்கு:** 1) ஊதாரிப்பிள்ளையின் உவமையைப் படித்துக் கருத்தை எழுதுக. 2) ஏழை லாசாரின் உவமையில் நீர் படிக்கும் படிப்பினைகளை எழுதுக.

**எமது வாழ்விற்கு:** 1) அடையாளத்தினால் தம்மைக் காட்டும் இறைவனுக்கு நன்றியுடையவனாய் இருப்பேன். 2) இந்த மீட்புத்திட்டத்தை மதிக்கிறேன்.

**செபம்:** என் அன்புத்தந்தையாகிய இறைவா, பரிசுத்த வேதாகமத்தின் வழியாக உம்மை அறியவும் மற்றவர்களுக்கு உம்மைக் கொடுக்கவும் கற்பித்தருளும். இதைக் கிறிஸ்துவின் பெயரால் வேண்டுகிறேன். ஆமேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 26

# திருச்சபை இறையரசின் அடையாளம் 11

"அப்பொழுது இராயப்பர் பேசத்தொடங்கிச் சொன்னதாவது: கடவுள் மனிதர்களிடையே வேற்றுமை பாராட்டுவதில்லை என்பதை இப்போது மெய்யாகவே உணர்கிறேன். எக்குலத்தவனாயினும், இறைவனுக்கு அஞ்சி அவருக்கு ஏற்புடையதைச் செய்பவனே அவருக்கு உகந்தவன். அவர் தம் இஸ்ராயேல் மக்களுக்குத் தமது வார்த்தையை விடுத்து அமைதி உண்டாயிற்று என்னும் நற்செய்தியை இயேசுக்கிறிஸ்து வழியாக அறிவித்தார். இவரே அனைவர்க்கும் ஆண்டவர்." (அப். பணி. 10 :34 — 36)

எல்லா மக்களும் மேலான விடுதலையை அடையவிரும்பிய இறைவன் உலகம் முழுவதற்கும் நற்செய்தியைப் பரப்ப திருநிலைப்படுத்தப்பட்ட மக்களைத் தெரிந்தெடுத்தார். சீனாய்மலையில் மோயீசன் வழியாக உடன்படிக்கை செய்த இறைவன் இஸ்ராயேல் மக்களுக்குக் கூறியதாவது.

"ஆகையால் நீங்கள் நமது வாக்கைக்கேட்டு, நமது உடன்படிக்கையைக் கைக்கொண்டு அனுசரிப்பீர்களேயாகில், எல்லா மக்களினும் நீங்களே நமது உடைமையாய் இருப்பீர்கள். ஏனென்றால் பூமியெல்லாம் நம்முடையது. அன்றியும் நீங்கள் நமக்கு இராஜரீக ஆசாரியக் கூட்டமும் பரிசுத்த சனமுமாய் இருப்பீர்கள். இவை நீ இஸ்ராயேல் மக்களுக்குக்குச் சொல்லவேண்டிய வார்த்தைகளாம் என்றார்." (யாத். 19: 5 — 6)

மோயீசன் வழியாக சீனாய்மலையில் செய்துகொண்ட உடன்படிக்கையானது காலம் நிறைவேறியதும் கல்வாரிமலையில் கிறிஸ்துவழியாக புதுப்பிக்கப்பட்டது. சீனாய் உடன்படிக்கை கல்வாரி உடன்படிக்கைக்கு முன்னடையாளமாய் இருந்தது. சீனாய் உடன்படிக்கை வழியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இஸ்ராயேல் இறைமக்கள் கல்வாரியில் நிறுவப்பட்ட திருச்சபைக்கு முன்னடையாளமாய் விளங்கினர். "அவ்வாறே உணவு அருந்தியபின் கிண்ணத்தையும் எடுத்து, இக்கிண்ணம் என் இரத்தத்தினாலாகும் புதிய உடன்படிக்கை. இதைப் பருகும்போதெல்லாம் என் நினைவாகச் செய்யுங்கள்" (1 கொரி. 11 : 25). புனித சின்னப்பர் இக் கருத்தை இவ்வாறு விளக்குகிறார்.

மிருகங்களின் இரத்தத்தால் சீனாய் உடன்படிக்கை முத்திரையிடப்பட்டது. ஆனால் புதிய உடன்படிக்கையானது இறைமகன் கிறிஸ்துவின் இரத்தத்தால் முத்திரையிடப்பட்டது. புதிய உடன்படிக்கையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள். அதாவது திருச்சபை உயிர்த்த கிறிஸ்துவுக்கு அதி உன்னத அடையாளமாக இருக்கிறார்கள். கிறிஸ்து பெற்ற தெய்வீக வாழ்வை உலகிற்குக் கொடுப்பதும், கிறிஸ்துவின் வழியை மக்களுக்குக் காண்பிப்பதுமே திருச்சபையின் பணியாகும். திருச்சபையானது பரிசுத்த ஆவியின் வல்லமையாலும், திருவருட்சாதனங்களாலும் சமுதாயத்தை உருவாக்கி அதைப் பரிசுத்தப்படுத்தும் பொறுப்பைக் கொண்டுள்ளது.

எல்லார்க்கும் எல்லாமாக இருக்கவேண்டுமென்று திருச்சபை விரும்புகிறது. இறைவனில் உறுதியான நம்பிக்கை வைத்த திருச்சபையானது பத்துக் கட்டளைகளையும்; எட்டுப்பேறுகளையும் வாழ்வில் கடைப்பிடிப்பதன் வழியாக இறையரசைப் பரப்புகிறது. இவர்கள் இறைவனின் பராமரிப்பிலும், அன்பிலும் முழுநம்பிக்கை வைத்து வாழ்கிறனர். தமது சொந்த மீட்புப்பணிக்காக மட்டுமன்றி அனைத்துலகும் மீட்புப் பெற ஆர்வமுடன் உழைக்கின்றனர். கமத்தொழில், கடற்றொழில், கைத்தொழில், கல்வி, அரசியல் பண்பாடு, மெய்யியல், சட்டம் அறிவியல் என்பவற்றை விருத்திசெய்வதன் வழியாக உலகை முன்னேற்ற முயல்கின்றார்கள். அம்முயற்சியால் ஏற்படும் தியாகங்களைக் கிறிஸ்துவின் வழியாகத் தந்தைக்கு அர்ப்பணிப்பதே திருச்சபையின் நோக்கமாக இருக்கிறது. இறையரசைப் பரப்பும் நோக்கத்திற்காகவே அவர்கள் சமுகசேவையில் ஈடுபடுகிறார்கள். பிறமறையினர்க்கிடையில் நெருங்கிய உறவை ஏற்படுத்த முயல்வதிலும் அவர்கள் முன்னேறிச் செல்கின்றனர். நடப்பவை அனைத்தும் பரிசுத்த ஆவியின் கொடையால் ஏற்படுகின்றன என்று தாழ்மையுடன் ஏற்றுக்கொண்டு ஆண்டவனைப் போற்றுகின்றனர். திருவழிபாட்டுச் சடங்கினூடாக கல்வாரிப் பலி நாளாந்த பலிப்பூசையில் நிறைவேறுகின்றது. மனித மீட்புக்காகத் திருச்சபையானது வாழ்வில் ஒரே விசுவாசம், ஒரே திருமுழுக்கு, ஒரே கோட்பாடுகளை இயேசுக்கிறிஸ்துவின் வல்லமையில் எடுத்துரைக்கிறது. எனவே திருச்சபை ஒன்றுனது, பரிசுத்தமானது, அனைவர்க்கும் போதிக்கும் பொது இயல்பைக் கொண்டது. அப்போஸ்தலரிடமிருந்துவருவது. அனைத்துலக பண்பைக் கொண்ட திருச்சபையானது இறைவனின் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மக்களை ஊக்குவித்து உதவி செய்கிறது. திருச்சபையுடன் இணைந்து செயற்படுவது இறைவனுக்கு மகிமையும் புகழ்ச்சியுமாகும்.

**சிந்தனைக்கு :** 1) பழைய ஏற்பாட்டில் இறைவனின் மக்கள் யார்? 2) அவர்களின் பணியென்ன? 3) பழைய உடன்படிக்கையின் பொருள் என்ன? 4) புதிய உடன்படிக்கை யார் வழியாக நிறுவப்பட்டது? 5) அதன் பணி என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எனது வாழ்விற்கு :** 1 புதிய இறைமக்களைச் சேர்ந்த இவர்களின் பொறுப்புக்களை எடுத்துக்கூற முயற்சிக்கின்றேனா? 2) காலத்திற்கேற்ப இறையரசிற்குச் சாட்சியம் பகர முயல்வேன்.

**வேதாகமத்திலிருந்து :** "கிறிஸ்துவுக்குள் வாழும் எங்களை எப்போதும் கிறிஸ்துவின் வெற்றிப் பவனியில் பங்குபெறச்செய்து, தம்மைப் பற்றிய அறிவு, எங்கள் வழியாக நறுமணமென எங்கும் பரவச் செய்யும் கடவுளுக்கு நன்றி" (2 கொரி. 2:14).

---

## திருச்சபையின் பண்புகள்

பரிசுத்த சின்னப்பர் எபேசியர்களுக்கு எழுதிய நிருபத்தில் கூறுகிறார்: "இனி நீங்கள் அந்நியரல்ல, வெளிநாட்டாருமல்ல, இறைமக்கள் சமுதாயத்தின் உறுப்பினர், கடவுளுடைய குடும்பத்தைச்சேர்ந்தவர்கள். அப்போஸ்தலர், இறைவாக்கினர் இவர்களை அடிக்கல்லாகவும், கிறிஸ்து இயேசுவை மூலைக்கல்லாகவும் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாயிருக்கின்றீர்கள். கட்டடம் முழுவதும் அவரில் இசைவாய்ப் பொருந்தி பரிசுத்த ஆலயமாக ஆண்டவருக்குள் வளர்ச்சி பெறுகின்றது. நீங்களும் அவருக்குள்ளே கடவுளின் ஒரே உறைவிடமாக, தேவ ஆவிக்குள் கட்டுப்பட்டுவருகிறீர்கள்" (எபேசியர் 2.19—22).

கிறிஸ்துநாதர் ஒரே ஒரு திருச்சபையை நிறுவினார். "இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்" (மத். 16:18) என்று சொன்னார். ஆகையால் உண்மையான திருச்சபை ஒன்றேதான்.

கிறிஸ்துநாதர் தமது திருச்சபைக்குத் தந்துள்ள சில அறிகுறிகளைக் கொண்டு உண்மையான திருச்சபையை நாம் அறிந்துகொள்ளலாம். கிறிஸ்துநாதருடைய திருச்சபை விசுவாச உண்மைகளில் ஒன்றாகவும், தேவதிரவிய அனுமானங்களில் ஒன்றாகவும், தலைமை அதிகாரத்தில் ஒன்றாகவும், இருத்தல்வேண்டும். அது பரிசுத்தமாய் இருக்கவேண்டும்; ஏனெனில் கிறிஸ்துநாதர் அதைப் புனிதமாக்குகிறார். அது கத்தோலிக்கமாய், அதாவது, எல்லாருக்கும் பொதுவாக இருத்தல் வேண்டும். ஏனெனில் அது எல்லா நாட்டு மக்களுக்கும் எக்கால மக்களுக்கும் பொதுவாக இருக்க கிறிஸ்துநாதர் அதை நிறுவினார். ஆளுபவர்கள் அப்போஸ்தலர்கள் வழிவந்த வாரிசுகளாய் இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்க திருச்சபை (''உரோமன்'' கத்தோலிக்க திருச்சபை) மட்டுமே இந்த நான்கு அறிகுறிகளையும் கொண்டுள்ளது. திருச்சபை ஒன்றாக இருக்கிறது; ஏனென்றால், எப்பொழுதும் எல்லா விசுவாசிகளும் அதே உண்மைகளை விசுவசித்து வருகின்றனர். எப்பொழுதும் அதே ஏழு தேவதிரவிய அனுமானங்களைக் கொண்டிருக்கின்றனர்: கண்ணைக் கண்ட ஒரே தலைவராகிய பாப்பாண்டவரின் கீழ் எப்பொழுதும் ஒன்றித்திருக்கின்றனர்.

திருச்சபை பரிசுத்தமாயிருக்கிறது; அதனுடைய போதனையிலும், செயல்களிலும் அந்தப் பரிசுத்தத்தைப் பார்க்கிறோம். கடவுள் புதுமைகளைக் கொண்டு மகிமைப்படுத்திய எத்தனையோ புனிதர்களுடைய வாழ்க்கையிலிருந்து இன்னும் தெளிவாக அதனுடைய பரிசுத்தத்தைப் பார்க்கிறோம்.

திருச்சபை கத்தோலிக்கமாயிருக்கிறது; ஏனென்றால் அது சத்தியங்கள் அனைத்தையும் எல்லாத் தேவதிரவிய அனுமானங்களையும் காத்து வருகின்றது. கிறிஸ்துநாதருடைய காலத்திலிருந்து இந்நாள்வரையில் இருந்து வருகிறது. மேலும் உலகின் எல்லாப் பகுதிகளிலும் அது பரவி இருக்கின்றது.

திருச்சபை அப்போஸ்தலரிடமிருந்து வருவதாயிருக்கிறது; ஏனென்றால் அது அப்போஸ்தலர்கள் காலத்திலிருந்து தொடர்ந்து வருகிறது. அதன் மேற்றிராணிமார்கள், அப்போஸ்தவர்களின் வழிவந்த வாரிசுகள்; பாப்பாண்டவரும், பரிசுத்த இராயப்பரின் வழிவந்த வாரிசு; கத்தோலிக்க சபைதான் கிறீஸ்துநாதருடைய உண்மையான திருச்சபை என்று, இந்த ஓர் அறிகுறியே மற்ற அறிகுறிகளைவிட வெகு தெளிவாய் விளக்கிக் காட்டுகிறது.

மற்றக் கிறீஸ்துவ குழுவினரும் தங்களைத் ''திருச்சபைகள்'' என்று கூறிக்கொள்வார்கள். ஆனால், அவைகளில் ஒன்றேனும் மேலேகாட்டிய நான்கு குறிகளும் கொண்டில்லை. குறிப்பாக அவை அப்போஸ்தொலிக்க சபைகளாக இருக்க முடியாது. ஏனெனில், அப்போஸ்தலர்கள் காலத்திற்குப்பின், மிக நீண்டகாலம்வரை அவை உண்டாகவில்லை. அவைகளை நடத்துகிறவர்கள் அப்போஸ்தலர்களின் வழிவந்த வாரிசுகள் அல்லர். மேற்கொண்டு, பரிசுத்த இராயப்பருடைய வழிவந்த வாரிசுடன் ஐக்கியமாக இருப்பதில்லை. எனவே, அந்தக் குழுக்களில் ஒன்றாவது கிறீஸ்துநாதருடைய உண்மையான திருச்சபையாய் இருக்க முடியாது.

கத்தோலிக்க திருச்சபை மட்டுமே கிறீஸ்துநாதரின் அதிகாரத்தைப் பெற்றுள்ளது. முடிவில்லா பேரின்ப வாழ்விற்கு மக்களை அழைத்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதற்கான வழி வகைகளைக் கிறீஸ்துநாதர் அதற்குத் தந்துள்ளார். கடவுளுடைய வார்த்தையை மக்களுக்கு அறிவிக்கவும்; தூய்மையான பலியை ஒப்புக்கொடுக்கவும், தேவதிரவிய அனுமானங்களை நிறைவேற்றவும், மக்களைக் கிறீஸ்துவ நல்வாழ்வில் நடத்திச்செல்லவும் அந்தத் திருச்சபைக்கு மட்டுமே அதிகாரம் உண்டு.

கத்தோலிக்க சபையைச் சேராத கிறீஸ்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பான்மையோர், கத்தோலிக்க திருச்சபைதான் தங்களுடைய உண்மையான வீடு என்பதை அறியாதிருக்கிறார்கள். அவர்களிடத்தில் நிறை உண்மை இல்லை. பற்பல தவறுகளுக்கு அவர்கள் ஆகியிருக்கின்றனர். பல தேவ வரங்களை இழந்துவிடுகிறார்கள்: ஆயினும் கிறீஸ்துநாதர் அவர்களுக்காகவும் தம் உயிரைக் கொடுத்திருக்கிறார். திருச்சபை அவர்களுக்காக கடவுளிடம் மன்றாடி, திருப்பலிப் பூசையை, ஒப்புக்கொடுத்து வருகிறது. ஆகையால், அவர்கள் தங்களுக்குத் தெரிந்த வரையில், கடவுளுடைய திருவுளத்தின்படி நடந்து வருவார்களேயாகில், அவர்கள் முடிவில்லாப் பேரின்ப வீட்டை அடையலாம்

**சிந்தித்துப்பார் :**1) யேசுநாதருடைய எந்த வார்த்தைகளிலிருந்து அவர் ஒரே திருச்சபையை ஏற்படுத்த எண்ணினார் என அறிகிறோம்? 2) "கத்தோலிக்கம்" என்ற சொல்லுக்குப் பொருள் யாது? 3) "அப்போஸ்தொலிக்கம்" என்ற சொல்லுக்குப் பொருள் என்ன? 4) மெய்யான திருச்சபை என்: அ) ஒன்றாக, ஆ) பரிசுத்தமாக, இ) கத்தோலிக்கமாக, ஈ) அப்போஸ்தொலிக்கமாக, இருத்தல் வேண்டும்? 5) கத்தோலிக்க திருச்சபை ("உரோமன் கத்தோலிக்க திருச்சபை") மட்டும் உண்மையாகவே: அ) ஒன்றாக, ஆ) பரிசுத்தமாக, இ) கத்தோலிக்கமாக, ஈ) அப்போஸ்தொலிக்கமாக, இருப்பதை விளக்குவன யாவை? 6) கத்ததோலிக்க திருச்சபை ("உரோமன் கத்தோலிக்க திருச்சபை") மட்டும் கிறீஸ்துநாதருடைய உண்மையான திருச்சபை எனத் தலையாய வகையில் எடுத்துக்காட்டும் அறிகுறு எது? 7) ஏன் மற்றப் பிற கிறீஸ்தவ குழுவினர், அல்லது சபையார் கிறீஸ்துநாதருடைய உண்மையான திருச்சபையாக இருக்கமுடியாது? 8) கத்தோலிக்கர் அல்லாதவரும் இரட்சணியம் அடையலாம். எவ்வாறு? 9) அவர்களும் இரட்சணியம் அடைய நாம் எப்படி உதவலாம்?

**என் வாழ்க்கைக்கு :** ஒரே உண்மையான திருச்சபையில் வாழ நான் பெற்றுள்ள பெரும் பேற்றிற்காக, என் முழு இதயத்துடன் கடவுளுக்கு நன்றி கூறுவேன். மகிழ்வுடனும், அச்சமின்றியும் திருச்சபைக்குச் சான்று பகர்வேன். மேலும், திருச்சபையைச் சேராதவர்களும், அதனின்று பிரிந்து போனவர்களும் தங்கள் வீடாகிய ஒரே உண்மைத் திருச்சபையில் வந்துசேரும் வண்ணம் கடவுளிடம் மன்றாடுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேதாகமத்திலிருந்து :** இயேசுநாதர் கடைசி இரா உணவுக்குப்பின் தாம் செய்த செபத்தில்; "தந்தாய், நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் நம்முள் ஒன்றாய் இருக்கும்படி மன்றாடுகிறேன். நீர் என்னை அனுப்பினீர் என்று இதனால் உலகம் விசுவசிக்கும். (அரு. 17 : 21) என்று மன்றாடினார்.

**திருச்சபையின் வாழ்விலிருந்து :** தைத்திங்கள் 18 ஆம் நாளிலிருந்து 25 ஆம் நாள்வரை, கிறீஸ்தவ சபையார் அனைவரும் விசுவாச ஒற்றுமைக்காக மன்றாடுகிறார்கள். இதற்கு, "திருச்சபை ஐக்கியவாரம்" என்று பெயர்.

தற்பொழுது திருச்சபையில் நாற்பது கோடிக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாடம் 27

# திருச்சபை

## இறையரசின் அடையாளம் 1

கிறீஸ்துநாதருடைய மறை உடலில் எல்லோருக்கும் ஒரேவிதமான அலுவல் இல்லை. ஒரு சிலர் அதிகாரம் செலுத்துகிறார்கள்; மற்றவர்கள் கீழ்ப்படிகிறார்கள். திருச்சபையின் முதல் ஆட்சி ஆளர்கள் இராயப்பரும் மற்ற அப்போஸ்தலர்களுமே ஆவர்.

கிறீஸ்துநாதர் தம் திருச்சபை உலகம் முடியும் மட்டும் நீடித்திருக்க வேண்டுமெனத் திருவுளங் கொண்டார். இக்காரணம் பற்றியே அவர் இராயப்பருக்கும், மற்ற அப்போஸ்தலர்களுக்கும் அளித்த அலுவல்கள் உலகம் முடியும் மட்டும் நிறைவேற்றப்பட வேண்டும்; தம் திருச்சபையை நடத்துவதற்கு என்றென்றும் ஆட்சியாளர்கள் இருக்க வேண்டும் என்று கிறீஸ்துநாதர் திட்டம் செய்திருக்கிறார்.

பாப்பாண்டவரும், அவரது தலைமையில் அவரோடு ஒன்றித்திருக்கும் மேற்றிராணிமார்களும்தான் திருச்சபையின் அதிகாரிகள். இவர்கள் அப்போஸ்தலர்களின் வழி வந்தவர்கள். இவர்கள் கிறீஸ்துநாதரின் பெயரால் ஆசிரியர்களாகவும், குருக்களாகவும், ஆயர்களாகவும், செயலாற்றுகிறார்கள். பாப்பாண்டவர் தலைமையின்கீழ் உலகில் உள்ள மேற்றிராணிமார்கள் கூடி, முக்கியமான பொருள்களைப்பற்றிப் பேசித் தீர்மானம் செய்வார்கள்; அந்தக் கூட்டத்திற்குப் "பொதுச்சங்கம்" என்று பெயர்.

முழுத்திருச்சபையின் கண்கண்ட தலைவர் பாப்பாண்டவர். இவர் போதகர். ஆயர் என்ற உயர்ந்த பதவியில் பரிசுத்த இராயப்பரின் வாரிசு. இந்தப்பதவி "முதன்மை" எனப்படும். இராயப்பர் உரோமையின் மேற்றிராணியாராக இருந்து மரித்ததால், உரோமையின் மேற்றிராணியார்தான் இராயப்பரின் நேரான வாரிசு. எல்லா மேற்றிராணிமார்களும், குருக்களும், விசுவாசிகளும் அவரால் வழிநடத்தப்படுகின்றனர்.

மேற்றிராணியார் திருச்சபையின் ஒரு பகுதியில் ஆள்கின்றார். அப்பகுதிக்கு மேற்றிராசனம என்று பெயர். மேற்றிராசனங்கள் பங்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பங்குக்கும் மேற்றிராணியார் ஓர் ஆயனை நியமிக்கிறார்; அவர்தான் பங்குக்குரு. அவர் தன் பங்கிலுள்ள ஒவ்வொருவருக்கும் ஞானத் தந்தையாக இருக்கிறார். அவர் "ஆயன்" என்றும் அழைக்கப்படுவார். மக்களுக்கு ஓர் "இடையனை"ப் போல இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுநிலையினர் திருச்சபையை ஆளுவதற்குக் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட தலைவர்களுக்குக்கீழ் அதன் அலுவலில் பங்குபெற வேண்டியவர்கள். தங்கள் குடும்பங்களிலும், தாங்கள் அன்றாடம் தொழில் புரியும் சூழ்நிலையிலும், தங்கள் பொது வாழ்க்கையிலும் கடவுளுடைய மகிமைக்காகவும், பிறருடைய ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் தங்களால் இயன்ற அளவு உழைக்கவேண்டும். இதுவே "பொதுநிலையினர் பணி"

**சிந்தித்துப்பார்:** 1) திருச்சபைக்கு ஆட்சி ஆளர்கள் ஏன்? 2) திருச்சபையின் ஆட்சி ஆளர்கள் யாவர்? 3) பொதுச்சங்கம் என்பது என்ன? 4) மேற்றிராசனம் என்பது யாது? 5) ஒரு பங்கில் தலைவராக இருப்பவர் யார்? 6) திருச்சபையின் அலுவலில் விசுவாசிகள் பங்கு எடுத்துக்கொள்வது எவ்வாறு?

**என் வாழ்க்கைக்கு ;** பாப்பாண்டவர் உலகில் கிறீஸ்துநாதருடைய இடத்தை வகிக்கிறார் என்பதால், அவரை நான் அன்பு செய்வேன்; அவருக்கு வணக்கம் செலுத்துவேன்; அவருக்காக வேண்டிக்கொள்வேன்; அவருக்கு எப்பொழுதும் பிரமாணிக்கமாயிருப்பேன்.

**வேதாகமத்திலிருந்து:** உங்கள் தலைவர்களுக்களுக்குக் கீழ்ப்படியுங்கள்: அவர்களுக்குப் பணிந்திருங்கள். அவர்களைக் குறித்துக் கணக்குக் கொடுக்கவேண்டும் என்பதால், உங்கள் ஆன்ம நலனில் விழிப்பாய் இருக்கின்றனர் (எபிரேயர் 13 : 17).

**விளக்கம் :** திருச்சபை உரோமன் கத்தோலிக்க சபை என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில், அதன் தலைமை ஆட்சியாளர் சட்டபூர்வமாக உரோமையின் மேற்றிராணியாராக இருக்கிறார். மேல்நாடுகளில் "போப்பு" என்றும, நாம் "பாப்பு" என்றும் சொல்லும் மொழியின் பொருள் "தந்தை" என்பதாகும். பாப்பாண்டவரைப் 'பரிசுத்த தந்தை" என்றும் அழைக்கிறோம். ஏனெனில், திருச்சபையைத் தந்தைக்குரிய அக்கறையுடன் ஆள்வது அவருடைய பரிசுத்த அலுவல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 28

# திருச்சபை திருவருட்சாதனங்களை நிறைவேற்றுகின்றது

எஃபேசு நகரில் புனித சின்னப்பர் விசுவாசிகளைச் சந்தித்தார்: அவர்கள் அதுவரை பரிசுத்த ஆவியைப்பற்றி கேள்விப்பட்டதில்லை. "அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள்" என்று அவர் கேட்க, அவர்கள், "அருளப்பருடைய ஞானஸ்நானம்" என்றார்கள். சின்னப்பர் அப்பொழுது, "அருளப்பர் கொடுத்தது மனந் திரும்பியதைக் காட்டும் ஞானஸ்நானம். அதைக் கொடுத்தபோது, தமக்குப்பின் வருபவர் மீது விசுவாசம் கொள்ளவேண்டுமென மக்களுக்குச் சொன்னார்; அவர் அப்படிக் குறுப்பிட்டது இயேசுவைத்தான்', என்றார். அதைக்கேட்டு அவர்கள் ஆண்டவராகிய இயேசுவின் பெயரால் ஞானஸ்நானம் பெற்றனர். சின்னப்பர் அவர்கள்மேல் கைகளை விரித்ததும், பரிசுத்த ஆவி அவர்கள்மேல் இறங்கினார். (வாசி: அப்போஸ்தலக் பணி 19 : 1 — 7).

நாம் தெய்வீக உயிரைப் பெற்று, அதை முழு அளவிற்கு அடையும்வண்ணம் திருச்சபை நமக்கு ஏழு திருவருட்சாதனங்களை வழங்கி வருகின்றது.' நம்மைப் பாவத்தினின்று விடுதலையாக்கி, கடவுளின் பிள்ளைகளாக்க ஞானஸ்நானத்தினால் நம்மைக் கழுவுகின்றது' பரிசுத்த ஆவியின் வலிமையைப் பெற்றுக்கொள்ள உறுதிப்பூசுதலைக் கொடுக்கின்றது. திவ்விய நற்கருணையில் உயிர் அளிக்கும் உணவினால் நம்மை ஊட்டுகின்றது. பச்சாத்தாபம் என்ற தேவதிரவிய அனுமானத்தினால் நம் பாவத்தளைகளினின்று நம்மை விடுவிக்கின்றது. கடும் நோய்வாய்ப்பட்டிருப்பவர்களின் ஆன்மா, உடல் இவை இரண்டிற்கும் வலிமையை அளிக்க, பரிசுத்த பூசுதல் என்ற நோயில் பூசுதலைத் தருகின்றது. குருத்துவம் என்ற திருவருட்சாதனத்தில் குருத்துவ அதிகாரத்தையும், குருத்துவ வாழ்விற்கும் அலுவலுக்கும் தேவையான அருளையும் கொடுக்கின்றது. திருமணம் அல்லது மெய்விவாகம் என்ற தேவதிரவிய அனுமானத்தில் மணவாளனையும், மணமகளையும் இரு உயிர்களின் புனித ஐக்கியத்தில் இணைக்கின்றது.

ஒவ்வொரு திருவருட்சாதனத்திற்கும் ஒரு வெளிப்படையான, அதாவது கண்களுக்குத்தோன்றும் வெளி அடையாளம் உண்டு. எடுத்துக் காட்டாக: ஞானஸ்நானத்தில் தண்ணீரைக்கொண்டு கழிவுவதும் அவ்வேளை சொல்லப்படும் வார்த்தைகளும் அத்தகைய வெளி அடையாளங்கள் ஆகும். இந்த வெளி அடையாளம் ஆன்மாவில் பொழியப்படும் உள் அருளைக் குறிக்கின்றது. அதேவேளையில் அந்த உள் அரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும் பொழியப்படுகின்றது. அருள்தரும் இப் பரிசுத்த வெளி அடையாளங்களைக் கிறீஸ்துநாதரே நிறுவினார்.

திருவருட் சாதனங்களில் நமது தலைமைக் குருவாகிய கிறீஸ்து நாதரே செயலாற்றுகின்றார். திருவருட்சாதனங்களை நிறைவேற்றுகிறவர்கள் அவருடைய கருவிகளாகத்தான் இருக்கின்றனர். கிறீஸ்துநாதர் சிலுவையில் நமக்காகச் சம்பாதித்த அருளைத் திருவருட்சாதனங்கள் வழியாக நமக்குப் பகிர்த்து தருகின்றார்.

சில திருவருட்சாதனங்கள் ஆன்மாவில் அழியாத அல்லது இழக்க முடியாத ஒருவித குறியை அல்லது முத்திரையைப் பொறிக்கின்றன. இதற்கு 'இலச்சினை' அல்லது 'முத்திரை' **(character)** என்று பெயர். ஞானஸ்நானத்தில் நாம் கிறீஸ்துநாதருடைய அடியார்கள் என்ற இலச்சினையை ஏற்றுக்கொள்கிறோம். உறுதிப்பூசுதலில் கிறீஸ்துநாதருடைய ஒரு வீரனின் தன்மையைப் பெறுகிறோம். குருத்துவத்தில், கிறீஸ்து நாதருடைய ஒரு குருவின் தன்மையைப் பெறுகிறோம். அகையால், இந்தத் திருவருட்சாதனங்களை ஒருமுறை மட்டுமே பெறலாம்.

திருவருட்சாதனங்களை நாம் தக்கமுறையில் பெறவேண்டும். ஞானஸ்நானம் அல்லது பச்சாத்தாபம் என்ற திருவருட்சாதனங்களைப் பெற ஆசிக்கும் ஒருவன் தான் செய்த பாவங்களுக்காக மனம்வருந்தவேண்டும். மற்ற திருவருட்சாதனங்களை அருள்உயிரோடு இருப்பவர்கள்மட்டுமே பெற்றுக்கொள்ளலாம். ஒருவன் தகுதியின்றி திருவருட்சாதனங்களைப் பெறுவாயின் அவன் அருளைப் பெறுவதில்லை. அதற்கு மாறாக கடவுளுக்கு எதிரான தேவ துரோகம் என்னும் ஒரு சாவான பாவத்தையும் செய்கிறான். ஆனால், தகுதியோடு திருவருட்சாதனங்களைப் பெற்றுக்கொள்பவர்கள் அருட்சுனையாகிய நமது மீட்பரிடமிருந்து முடிவில்லா வாழ்வைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். நாம் அவரை அதிகமாக அன்புசெய்தால், அதிகமாகவே அருளைப் பெறுவோம்.

**சிந்தனைக்கு:** 1) ஒவ்வொரு திருவருட்சாதனத்திலும் நாம் என்ன தனி அருளைப் பெறுகிறோம்? 2) திருவருட்சாதனங்களில் செயலாற்றுறவர்கள் யார்? 3) அவற்றின் வெளி அடையாளங்கள் எதைக் குறிக்கின்றன? 4) ஒரே ஒருமுறை மட்டும் பெறக்கூடிய திருவருட்சாதனங்கள் எவை? 5) அவற்றை ஏன் ஒருமுறைக்கு மட்டும் பெறலாம்? 6) ஞானஸ்நானம், பச்சாத்தாபம் என்ற திருவருட்சாதனங்களைப் பெறுவதற்குத் தேவையானது என்ன? 7) மற்றத் தேவதிரவிய அனுமானங்களைப் பெறுவதற்குத் தேவையானது என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எனது வாழ்விற்கு:** கிறீஸ்துநாதர் தம்முடைய திருவருட்சாதனங்களை எனக்கு மிகுந்த அன்போடு அளிக்கிறார். அவற்றை நான் அவமதித்து, அவருடைய அன்புள்ளத்தை நோகச்செய்ய மாட்டேன். அதற்கு மாறாக, நன்றியுள்ளத்துடன் அவற்றைப் பெற்றுக்கொள்வேன்.

**திருச்சடங்குகள்:** திருவருட்சாதனங்களை வழங்குவதற்குக் கிறீஸ்துநாதர் தெரிந்துகொண்ட அடையாளங்களோடு, ஆழ்ந்த பொருள்உள்ள வேறு அடையாளங்களையும் திருச்சபை சேர்த்திருக்கின்றது. சான்றாக; ஞானஸ்நானத்தில் வெண்ணிற உடையையும், எரியும் திரியையும் அளிக்கும் சடங்கு. இவ்வித சடங்குகள் தேவதிரவிய அனுமானத்தின் பொருளை நமக்கு இன்னும் மிகத் தெளிவாகப் புலப்படுத்துவதுடன், அவற்றின்மேல் நாம் கொண்டுள்ள மதிப்பை வளர்க்கின்றன.

**செய்யவேண்டியவை:** 1 பழங்காலத்தில் மனந்திரும்பி கிறீஸ்துவமறைக்கு வந்தவர்களுக்கு ஒரே நாளில் அளிக்கப்பட்ட மூன்று திருவருட்சாதனங்கள் யாவை? 2) தனிப்பட்ட வாழ்க்கை நிலைகளுக்காக ஏற்படுத்தப்பட்ட இரு திருவருட்சாதனங்கள் எவை? 3) ஒவ்வொரு திருவருட்சாதனத்தையும் குறிக்கும் சின்னம் வரைக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 29

# திருச்சபை

## நற்செய்தியை மக்களுக்கு அறிவிக்கின்றது

புனித இராயப்பர் போதகம் செய்து கொண்டு போகையில், ஒரு நாள் படைத்தலைவன் கோர்னேலியுஸ் என்பவன் வீட்டிற்கு அழைக்கப் பட்டார். அவன் ஒரு தெய்வ பக்தன். இராயப்பர் அவன் வீட்டிற்கு வந்து, அங்குள்ள ஒவ்வொருவருக்கும் போதித்தார். கிறீஸ்துநாதர் எவ்வாறு சிலுவையில் உயிர் துறந்தாரென்றும் இறந்தோரிடமிருந்து உயிர்த்தாரென்றும், ஒருநாள் உலகத்திற்கு நடுவராக வருவாரென்றும் விளக்கிக் காட்டினார். அவர் போதனை செய்து கொண்டிருக்கும் பொழுதே, அதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒவ்வொருவர் மேலும் பரிசுத்த ஆவி இறங்கிவந்தார். இராயப்பர் அவர்கள் அனைவருக்கும் யேசுக் கிறீஸ்துநாதர் பெயரால் ஞானஸ்நானம் கொடுத்தார் (வாசி: அப் பேயஸ்தலர் நடபடி 1).

திருச்சபை கிறிஸ்துநாதருடைய நற்செய்தியை உலகமெங்கும் பறை சாற்றுகின்றது; நமக்குப் போதிக்கின்றது. ஞான உரைகள், பாடங் கள் வழியாக நமக்குக் கற்பிக்கின்றது; திருவழிபாட்டில் பாடப்படும், அல்லது வாசிக்கப்படும் வேத வாக்கியங்களால் நாம் திருமறையின் உண்மைகளை ஆழ்ந்து உணரப் பயிற்றுவிக்கின்றது.

கிறிஸ்துநாதர்தான் திருச்சபை வாயிலாக நம்மிடம் பேசுகிறார்; அவருடைய திருமொழியைத்தான் திருச்சபை நமக்கு அறிவிக்கின்றது. அவருடைய பரிசுத்த ஆவியால்தான் அது ஒளிபெறுகின்றது.

திருச்சபையில் போதக அலுவல் பாப்பாண்டவருக்கும் அவரோடு ஒன்றித்துள்ள மேற்றிராணிமார்களுக்கும் உரியது. கிறிஸ்துநாதருடைய போதனையைத் தவறு இன்றிக் காப்பாற்ற வேண்டிய கடமை அவர்க ளுடையதே – அதைப் பழுதுபடாமல மக்களுக்கு விளக்குவது அவர்க ளின் பொறுப்பு. ஒன்றை விசுவாச உண்மை எனப் பாப்பாண்டவரும் மேற்றிராணிமார்களும் ஒரே மனதாய்ப் போதிக்கும்பொழுது, அவர் கள் தவறுசெய்ய முடியாது. ஏனெனில், கிறிஸ்துநாதரும் அவருடைய பரிசுத்த ஆவியும் தவறிலிருந்து திருச்சபையைக் காத்து வருகின்றார்கள். திருச்சபையின் பொதுச்சங்கத்தில் கூடியுள்ள மேற்றிராணி மார்கள் ஒரு படிப்பினை கடவுளால் வெளிப்படுத்தப்பட்ட விசுவாச சத்தியங்களில் அடங்கியுள்ளதா இல்லையா என்றும், அப்படி இல்லா விட்டால் அப்படிப்பினை உண்மையா, அல்லது தவரு என்றும் தீர்மா னிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபையின் தலைமைப் போதகர் பாப்பாண்டவரே, அவர் இன்றி பொதுச்சங்கம் வழுவாவரத்துடன் ஒரு தீர்மானமும் செய்ய முடியாது. ஆனால், பாப்பாண்டவர் மட்டும் தனியாகவே வழுவா முடிவு செய்யக் கூடும். அவர் வழுவாவரம் பெற்றவர். அதாவது, வேதசத்தியத்தைப் பற்றி, அல்லது கிறிஸ்தவர்களின் அறநெறியைப்பற்றி முடிவுசெய்து, திருச்சபை முழுவதற்கும் எடுத்துக்கூறி, திருச்சபை முழுவதும் அதை எற்றுக்கொள்ளல் வேண்டும் என்று சொல்லும் பொழுது, அவர் தவறவேமாட்டார். கிறிஸ்துநாதர் இராயப்பரை நோக்கி: "உன் விசுவாசம் தவறுதபடிக்கு உனக்காக மன்றாடினேன். நீ திருந்தியபின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து என்றார்" (லூக். 22 : 32).

மேற்றிராணியார் தம் மேற்றிராசனத்தில் உள்ள விசுவாசிகளுக்குப் போதிக்கிறார். சிறப்பாக, தம் மேற்றிராசனத்தில் வழங்கும் ஞான உபதேசநூல் வழியாகவும், ஞான உரைகளாலும் தம் மக்களுக்கு எழுதி அனுப்பும் திரு நிருபங்களாலும் மக்களுக்குப் போதிக்கிறார். குருக்கள் அவரிடமிருந்து பெற்ற அதிகாரத்தைக் கொண்டு போதிக்கிறார்கள்; கற்றுக் கொடுக்கிறார்கள்.

விசுவாசிகள் தங்கள் சொல்லாலும், செயலாலும் நம் மெய்மறை உண்மைகளைப் பிறர் அறியவும், அவற்றை மேன்மேலும் புரிந்து கொள்ளவும் உதவக் கடமைப்பட்டுள்ளனர். சிறப்பான அளவில் பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும், வேதியருக்கும் இக்கடமை உண்டு.

**சிந்தனைக்கு:** 1) திருச்சபை எவ்வழிகளில் நமக்குப் போதிக்கிறது? 2) திருச்சபை நமக்குப் போதிக்கும்பொழுது கிறிஸ்துநாதரே நம்முடன் பேசுகிறார் என்று ஏன் சொல்லுகிறோம்? 3) பாப்பாண்டவர் திருச்சபையின் தலைமைப் போதகர் என்று சொல்வதற்குச் சான்று என்ன? 4) மேற்றிராணியார் எவ்வழிகளில் நமக்குப் போதிக்கிறார்? 5) திருமறை உண்மைகளை மற்றவர்களுக்கு அறிவுறுத்த, விசுவாசிகளில் யார் சிறப்பாக அழைக்கப்பட்டுள்ளனர்?

**எனது வாழ்க்கைக்கு:** பாப்பாண்டவர், மேற்றிராணிமார் ஆகியோர் சொல்லுக்கு வணக்கத்துடன் செவிசாய்ப்பேன். சிறப்பாக, அவர்கள் திருநிருபங்கள் வழியாகவும் சுற்றுக்கடிதங்கள் வழியாகவும் பேசும்பொழுது செவி மடுப்பேன். ஏனெனில், அவர் தம் குரல் கிறிஸ்துநாதரின் குரல்.

**வேதாமத்திலிருந்து:** இயேசுநாதர் தம் அப்போஸ்தலர்களைப் பார்த்து, "உங்களுக்குச் செவிசாய்ப்பவன் எனக்குச் செவிகொடுக்கிறான்! உங்களைப் புறக்கணிக்கிறவன், என்னைப் புறக்கணிக்கிறான். என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனப் புறக்கணிக்கிறவனே, என்னை அனுப்பினவரைப் புறக்கணிக்கிறான்" என்று திருவுளம்பற்றினார். (லூக்கா. 10 : 16) — இயேசுநாதர் அவர்களை விட்டுப் பிரியுமுன் அவர்களை நோக்கி : "நான் தந்தையைக் கேட்பேன்; தந்தை மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருவார். அவர் உங்களோடு என்றும் இருப்பார். அவர் உண்மையின் ஆவியானவர். அவர் உங்களுக்கு எல்லாம் அறிவுறுத்துவார்; நான் உங்களுக்குக் கூறியதெல்லாம் நினைவூட்டுவார்." (அரு. 14, 16, 17, 26) புனித சின்னப்பர் திருச்சபையைச் சத்தியத்துக்குத் தூணும், அடிநிலையுமாக இருக்கிறது என்று கூறுகிறார்.

**திருச்சபையின் வாழ்விலிருந்து:** இதுவரையிலும் 21 பொதுச்சங்கங்கள் நடந்தேறியுள்ளன. முதல் வத்திக்கான் பொதுச் சங்கமும் (1869—70) இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கமும் (1962—1965) இறுதியாக நடைபெற்றவை. வத்திக்கான் பொதுச்சங்கத்தில் பாப்பாண்டவரின் வழுவாவரம் ஒரு விசுவாச உண்மையாக வரையறுக்கப்பட்டது.

**மனத்திரும்பிய ஒருவரின் சான்று:** வாழ்க்கையின் முக்கிய பிரச்சினைகளுக்குக் கத்தோலிக்க திருச்சபையில் மட்டுமே தெளிவான, திட்டவட்டமான தீர்வு காண்கிறேன். இக் காரணத்தினால்தான் நான் கத்தோலிக்கன் ஆனேன்." (செஸ்டர்டன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 30

# பரிசுத்த வேதாகமத்திலிருந்தும் வாய்வழி வந்த மரபிலிருந்தும் திருச்சபை தன் போதனைகளைப் பெறுகின்றது

"சகோதரர்களே எங்களிடமிருந்து வாய்மொழியாகவோ, கடிதத்தின் வழியாகவோ நீங்கள் கற்றறிந்த பரம்பரைப் படிப்பினைகளைப் பற்றிக்கொண்டு நிலையாயிருங்கள்" (2 தெசலோனிக்கேயர் 2 : 15) என்று அப்போஸ்தலரான புனித சின்னப்பர் விசுவாசிகளுக்கு எச்சரிக்கை செய்கிறார்.

திருச்சபை நமக்குப் போதிக்கிற யாவும், உண்மைக்கெல்லாம் பிறப்பிடமாயிருக்கும் கடவுளிடமிருந்தே வருகின்றது. கடவுள் வெளிப்படுத்திய உண்மைகளையும், திருச்சபையின் தொடக்கத்திலிருந்து விசுவசித்துப் போதித்துவந்த உண்மைகளையும்தான் திருச்சபை நமக்குக் கற்பிக்கின்றது. எனக்குக் கற்பிக்கப்பட்ட நற்செய்தியைத்தான், நானும் உங்களுக்குக் கற்பித்தேன் (வாசி: 1 கொரிந்தியர் 15 3 ) என்று புனித சின்னப்பர் கூறுகிறார். காலப்போக்கில் குறிப்பாக வேதவிரோதிகள் ஓர் உண்மையை எதிர்த்துப் பேசியபொழுது, திருச்சபை பரிசுத்த ஆவியின் உதவியால் திருமறை உண்மைகளைத் தெளிவுற விளக்கியிருக்கிறது. ஏனெனில், "உண்மையின் ஆவியானவர் வந்தபின், நிறை உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்" (அரு. 16 : 13) என்று கிறிஸ்துநாதர் திருச்சபைக்கு உறுதிமொழி அளித்துள்ளார்.

கடவுள் வெளிப்படுத்திய உண்மைகளில் ஒரு சிலவற்றை வேதாகம நூல்களில் எழுதுமாறு செய்தார். இந்நூல்களை எழுத அவற்றின் ஆசிரியர்களைப் பரிசுத்த ஆவியின் உதவியால் தூண்டினார். அவர்கள் இந்த மறைநூல்களை எழுதும்பொழுது, கடவுள் அவர்கள் வழியாய் நமக்குச் சொல்ல ஆசித்த உண்மைகளையெல்லாம் அவர்கள் பிரமாணிக்கமாய், மாறுபாடு இன்றி எழுதத் தனிப்பட்ட உதவியை அளித்தார். இந்த நூல்களையே "பரிசுத்த நூல்கள்" "வேதாகமம்," "பைபிள்," "விவிலியம்" என்று அழைக்கிறோம். "பைபிள்," "விவிலியம்" என்றாலே, மற்ற நூல்களைவிட மேலான "தலைசிறந்த நூல்" என்று பொருள்படும். பரிசுத்த வேதாகமங்கள் கடவுளுடைய ஏவுதலால் எழுதப்பட்டமையால், அவரே இவற்றின் மெய் ஆசிரியர் ஆவர். வேதாகமம் "கடவுளின் திருச்சொல்" ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துநாதருடைய வருகைக்குமுன் எழுதப்பட்ட வேதாகம நூல்களின் பகுதிக்குப் "பழைய ஏற்பாடு" என்று பெயர். அவருடைய வருகைக்குப்பின் எழுதப்பட்ட நூல்களின் பகுதி "புதிய ஏற்பாடு" எனப்படும்.

திருச்சபை பரிசுத்த வேதாகமத்தை மிகவும் விலையேறப்பெற்ற செல்வமாகக் காத்து வருகின்றது. பரிசுத்த ஆவிகாட்டும் வழியைக் கொண்டு அதை நமக்கு அளித்து விளக்குகின்றது. கடவுளின் திருமொழிக்கு நாம் ஆர்வத்துடன் செவிமடுக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றது. நாமே அதைப் படிப்பதில் விருப்பம்கொள்ள வேண்டும். ஆகையால்தான், ஒவ்வொரு கத்தோலிக்க இல்லத்திலும் வேதாகமம் இருக்கவேண்டும். புதிய ஏற்பாடாகிலும் இருக்கவேண்டும். அன்றியும், திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழிபெயர்புகளை மட்டுமே நாம் வாசிக்கவேண்டும்.

கடவுள் வெளிப்படுத்திய எல்லா உண்மைகளும் பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பெறவில்லை. அப்போஸ்தலர்கள் பல உண்மைகளை வாய்மொழியாய்ப் போதித்து வந்தனர். அந்தப் பாரம்பரை உண்மைகள் திருச்சபையில் வழிவழியாய் வழங்கி வருகின்றன. இந்த உண்மைகளை "வாய்வழிவந்த மரபு" என்று சொல்லுகிறோம். ஏனெனில், அவை வாய்மொழியால் சொல்லப்பட்டு நமக்கு வழிவந்தவை. அப்போஸ்தலர்கள் அறிஞர்களாலும், புனிதர்களாலும் நூல்களில் எழுதப்பெற்றன. இந்த அறிஞர்களை, திருச்சபை "முதுபெருந் தந்தையர்" (Father of the Church) என்கிறோம்.

நம் விசுவாசத்திற்கு இரு பிறப்பிடங்களாய் இருப்பவை பரிசுத்த வேதாகமமும், பரம்பரை எனப்படும் மரபுமாம். பரிசுத்த ஆவியின் உதவியால் திருச்சபை இந்த இரு பிறப்பிடங்களையும் பழுதின்றிப் பாதுகாத்து வருகின்றது. தான் போதிப்பவற்றுக்குச் சான்று அவை இரண்டிலுமிருந்தும் பெறுகின்றது.

**சிந்தனைக்கு: 1)** திருச்சபை தன் போதனைகளை எங்கிருந்து பெறுகின்றது? **2)** பரிசுத்த வேதாகமம் "கடவுளின் திருமொழி" என்படுவதேன்? **3)** பரிசுத்த வேதாகமத்திலிருப்பவற்றை மட்டும் நாம் விசுவசிப்பது போதாது. ஏன்? **4)** அப்போஸ்தலர்களின் வாய்மொழியால் மட்டும் போதிக்கப்பெற்று, அவர்களால் எழுதப்பெறாத உண்மைகளுக்கு என்ன பெயர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என் வாழ்க்கைக்கு:** பரிசுத்த வேதாகமத்தை மிகுந்த வணக்கத்துடன் கையாளுவேன். அதை வாசிக்குமுன், கடவுளை நோக்கி அவருடைய திருமொழியை நான் நன்கு புரிந்துகொள்ளவும், அதற்கேற்ப அமைந்து நடக்கவும் எனக்கு உதவிபுரியுமாறு வேண்டுவேன். என் வாழ்க்கையின் பெருஞ் செல்வமாக இருக்கும்படி வேதாகமத்தை அல்லது புதிய ஏற்பாட்டையாவது நான் விலைக்கு வாங்கிக்கொள்வேன். என்றால் வாங்கமுடியாத நிலையிலிருந்தால், வேறு ஒருவரை எனக்கு வாங்கித்தருமாறு கேட்பேன்.

**பரிசுத்தர்களின் போதனையிலிருந்து:** "நீ செபம் செய்யும்பொழுது நீ கடவுளோடு பேசுகிறாய்; நீ வேதாகமத்தை வாசிக்கும்பொழுது, கடவுள் உன்னோடு பேசுகிறார்" (புதிய அகுஸ்தீனார்). — "வேதாகமத்தை அறியாதவன், கிறிஸ்துநாதரையே அறியாதவன்"

(புனித ஜெரோம்).

**"வெளியீட்டு அனுமதி" (Imprimatur)** வேதாகமத்தின் இருபகுதியில் அல்லது திருமறையைப்பற்றிய மற்ற ஒரு நூலில் "வெளியீட்டு அனுமதி" **(Imprimatu )** என்று குறிப்பிட்டிருந்தால், அது திருச்சபையின் அனுமதி பெற்றது என்று நாம் அறிந்துகொள்ளலாம்.

**நமது பதில்:** பைபிள் மட்டும் போதும் என்று சிலர் சொல்லுகிறார்கள். முதலாவதாக: கடவுள் வெளிப்படுத்திய எல்லாப் பொருளும் வேதாகமத்தில் அடங்கியில்லை. "இயேசு செய்தவை வேறு பல உண்டு. அவற்றை ஒவ்வொன்றாக எழுதினால், எழுதவேண்டிய நூல்களை உலகமே கொள்ளாது என்று கருதுகிறேன்" (அரு. 21 : 25) என்று புனித அருளப்பர் நமக்குச் சொல்லுகிறார். "எங்களிடமிருந்து வாய்மொழியாகவோ, கடிதத்தின் வழியாகவோ நீங்கள் கற்றறிந்த பரம்பரைப் படிப்பினைகளைப் பற்றிக்கொண்டு நிலையாயிருங்கள்" (2 தெசலோனிக்கேயர் 2 : 15) என்று புனித சின்னப்பர் எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடம் 31

# திருச்சபையிலுள்ள எழுதப்பட்ட அடையாளங்கள்

## (போதிக்கும் திருச்சபை – சுற்றுமடல்கள்)

திருச்சபையை நிறுவிய இயேசுக்கிறிஸ்துவின் கருத்துப்படி கத்தோலிக்க திருச்சபையானது அனைத்து மக்களின் அன்னையும் ஆசிரியையுமாக இருக்கிறாள். கிறிஸ்து தனது சீடர்களுக்கு உலகெங்கும் சென்று நற்செய்தியை எடுத்துரைக்கும்படி கூறினார். இதற்காகவே திருச்சபை பாப்பாசரைத் தலைவராகக்கொண்டு போதிக்கவும் ஆளவும், பரிசுத்தப்படுத்தவும் வல்லமையைக் கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொண்டது.

ஆதியிலிருந்தே திருச்சபையானது இவ்வல்லமையைப் பயன்படுத்தி மக்களுக்குப் போதித்து வருகின்றது. அப்போஸ்தலர் காலத்திலிருந்தே திருச்சபை மக்களுக்குத் திருமுகங்கள் அல்லது கடிதங்களை அனுப்பியதை வரலாற்றில் இருந்து அறிகிறோம். அந்தக்காலங்களிலே பாப்பரசர் இப்படிப்பட்ட திருமுகங்கள்மூலம் போதித்தனர். இதிலே இரகசியங்கள் எதுவும் இருக்கவில்லை. பரிசுத்த ஸ்தானத்திலிருந்து வெளிவரும் திருமுகங்கள் சுற்றுநிருபங்களென முதலில் அழைக்கப்படவில்லை. 18 ஆம் நூற்றாண்டில்தான் முதன்முதலாக இவை சுற்றுநிருபங்களென அழைக்கப்பட்டன.

கிறிஸ்து திருச்சபைக்கு நற்செய்தியைப் போதிக்கவும், மனித மதிப்பீடுகளில் அவர்களை வளர்க்கவும் அதிகாரத்தைக் கொடுத்தார். அப்போஸ்தலர் காலத்திலிருந்தே திருச்சபையின் தலைவர்கள் இக்கடமையை நிறைவேற்றி வருகின்றனர். திருச்சபையானது தனக்குச் சார்ந்தவற்றை மனிதனது குடும்ப, சமுதாய வாழ்வில் இடைவிடாது செயற்படுத்தி வருகின்றது. தம் மக்கள் தப்பறையான கொள்கைகளில் சிக்குண்டு போகாவண்ணம் அக்கறையுள்ள அன்னையாகத் திருச்சபை வழிநடத்தி வருகின்றது. திருச்சபையானது, தனது போதகப்பணியை இருவழிகளில் செயற்படுத்துகின்றது. அவைகளில் ஒன்று பொதுவானது; மற்றது சிறப்பானது.

**பொதுவான பணி:** இத்தலையங்கத்தில் சுற்றுமடல்கள், கொள்கைத் திரட்டுகள், ஒழுக்க சம்பந்தமான அறிவுரைகள் என்பன அடங்கும். காலத்துக்குக் காலம் எழும் ஒழுக்க, சமுதாய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குத் தேவையான அறிவொளியையும் ஆலோசனைகளையும் கொடுத்தது. இப்பிரதிகள் கத்தோலிக்கருக்கு மாத்திரமல்

லாமல், உலகம் முழுவதற்கும் நன்மை பயப்பன. இன்னும் இவை பொருளாதார, அரசியல் பிரச்சினைகளையும், சமுதாயம், பண்பாடு, ஒழுக்கம், ஆன்மீகம் தொடர்பானவற்றையும் உள்ளீடாகக் கொண் டுள்ளன.

**சிறப்பான பணி:** பரிசுத்த பாப்பரசர் திருச்சபைத் தலைவராக இருந்து வழுவாவரத்தின் வல்லமையை உபயோகிக்கும்போது, ஒழுக்க சம்பந்தமான அல்லது விசுவாச சம்பந்தமான கொள்கைகளை வரை யறுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் பாப்பரசர் தமது முதன்மையான அதிகாரத்தை உபயோகிக்கின்றார். இப்போதனையை ஏற்றுநடக்க முழுத் திருச்சபைக்கும் கடமை உண்டு.

எனவே இந்த ஒழுங்குமுறையைப் பின்பற்றி நல்ல கிறிஸ்தவனாகச் சமுதாயத்தில் வாழ்வதே கிறிஸ்தவனின் கடமை. இறைவன் பல அடையாளங்களினூடாக எம்முடன் பேசுகிறார். ஆகவே, பரிசுத்த ஸ்தானத்தில் இருந்துவரும் சுற்றுநிருபங்களை இறைவனிடமிருந்து வருவ தாக ஏற்றுக்கொள்கிறோம். இச்சட்டங்கள் அறிவுறுத்தல்களின் வழி யாகத் திருச்சபையின் உறுப்பினர்களாகிய நாமும், எம் சமுதாயமும் மீட்பைப் பெறுகின்றோம்.

**சிந்தனைக்கு:** 1) சுற்றுமடல்கள் போதிப்பவை எவை? 2) பரப் பரசரின் சிறப்புரைகள் எவை? 3) பாப்பரசரின் ஆணைகள் எவை? 4) இவை எவ்வாறு இறைவனின் அடையாளங்களாக இருக்கின்றன? 5) பரிசுத்த ஸ்தானம் அறிவிப்பவைகள்மட்டில் ஒரு கிறிஸ்தவனின் பொறுப்பு என்ன?

**எனது வாழ்விற்கு:** காலத்தின் அடையாளங்களில் இறைவனின் திட்டத்தை அறிய பாப்பரசரின் வெளியீடுகளைப் படிப்பேன். அவை அடங்கியுள்ளவற்றைப் படிக்க எல்லா முயற்சியும் எடுப்பேன். இந்த வழிகளால் சமுதாயத்தில் நான் ஒளியாகத் திகழ்வேன்.

**செயற்பாடு:** சிறப்புச் சுற்றுமடல்கள், கொள்கைத் திரட்டுகள் தொடர்பாகப் பங்குத் தந்தையிடமிருந்து அறிவைப் பெற்றுக்கொள் வேன். இவைகளில் ஏதாவது ஒன்று இரண்டை ஆழமாகப் படித்து அவை அடங்கியுள்ளவற்றை வகுப்பில் அறிமுகம் செய்வேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுப்பொருள் 3.

# இறைவன் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைக்கு இட்டுச் செல்கிறார்

## பாடம் 32

## நம் முதற் பெற்றோர்கள் பாவம் புரிந்தனர்

பாம்பு பெண்ணை நோக்கி, "இன்ப வனத்திலுள்ள எல்லா மரங்களின் கனிகளையும் உண்ணவேண்டாமென்று உங்களைக் கடவுள் ஏன் தடுத்தார்" என்று கேட்டது. பெண், "இன்ப வனத்திலுள்ள மரங்களின் கனிகளை நாங்கள் உண்டே வருகிறோம்; ஆனால், இன்பவனத்தின் நடுவிலிருக்கிற மரத்தின் கனியைத் தின்னவேண்டாம், தொடவும் வேண்டாமென்று கடவுள் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்; தின்றால் சாவோம்" என்றாள். பாம்பு பெண்ணை நோக்கி "நீங்கள் உண்மையில் சாகவே மாட்டீர்கள்; நீங்கள் எப்போது கனியைத் தின்பீர்களோ அந்நேரமே உங்கள் கண்கள் திறக்கப்படும். அதனால் நீங்கள் தெய்வங்கள்போல் ஆகி நன்மையும் தீமையும் அறிவீர்கள்; இது கடவுளுக்குத் தெரியும்" என்று சொல்லிற்று.

அப்பொழுது பெண், அந்த மரத்தின் கனி தின்பதற்கு நல்லது, பார்வைக்கு இனியது, அறிவைப் பெறுவதற்கு விரும்பத்தக்கது எனக் கண்டு, அதைப் பறித்துத் தானும் உண்டாள், தன் கணவனுக்கும் கொடுத்தாள். அவனும் அதைத் தின்றான். (ஆதியாகமம் 3 : 1 –6).

நம் முதல் பெற்றோர்கள் தங்கள் சோதனைவேளை வந்தபொழுது, கடவுளின் வார்த்தையைக் கேட்கவில்லை. ஆனால், பசாசைத்தான் பின்பற்றினார்கள். விலக்கப்பட்ட கனியைத் தின்றார்கள். கடவுளைப்போல ஆக ஆசித்தனர். ஆதாமும், ஏவாளும் தாங்கள் கடவுளின் கட்டளையை மீறுவதாக நன்கு அறிந்தார்கள். இருப்பினும், தங்கள் முழுச் சுயாதீனத்தோடு அவ்வாறு நடந்தார்கள். கடவுளுக்கு எதிராகக் கனமான பாவம் புரிந்தனர். ஆதாம் – ஏவாள் செய்த இந்தப் பாவத்தை "முதல் பாவம்" அல்லது "சென்ம பாவம்" என்று சொல்லுகிறோம்.

சிங்காரத்தோப்பில் நம் முதல் பெற்றோர்கள் கட்டிக்கொண்ட இந்தப் பாவத்தின் காரணத்தால் கடவுளுடைய பிள்ளைகளாய் இருக்கும் நிலையைத் தவறவிட்டனர்; அருள்உயிரை இழந்தனர்; இனி மோட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தில் நுழையத் தகுதியற்றவர்களாயினர். இதுவே அவர்கள் செய்த பாவத்தால் விளைந்த மாபெரும் கேடு.

இன்னும் சிங்காரத்தோப்பில் அவர்கள் இருந்த "பாக்கியமான நிலையின்" சிறந்த நன்கொடைகளையும் தங்கள் பாவத்தால் இழந்து விட்டார்கள். இனி, கடவுள் அருகே நெருங்கி வாழவும் அவர்களால் முடியவில்லை. சிங்காரத் தோப்பை விட்டு வெளியேற வேண்டியிருந் தது. அவர்களுடைய புத்தியின் ஒளி மங்கிப்போயிற்று; அவர்கள் சுயமனதின் வலிமை குன்றியது. இப்பொழுது தீயநாட்டம் அவர்க ளுக்கு உண்டாயிற்று. அநேக துன்பங்களுக்கு ஆளானார்கள். அரும் பாடுபட்டுக் கடினமாய் உழைத்து, நாள்தோறும் உணவைச் சம்பாதிக் கும்படி ஆகிவிட்டது. இறுதியில் எல்லோரும் சாகவும் வேண்டும். நம் முதல் பெற்றோர்கள் செய்த பாவத்தின் விளைவினால் பசாசு மனுக் குலத்தின்மேல் ஆதிக்கம் பெற்றான்.

மானிட இனத்தின் முதல் பெற்றோர்கள் அவ்வளவு கனமான பாவம் புரிந்திருந்தாலும், கடவுள் அவர்கள்மேல் கருணைகொண்டார். அவர்கள் தங்கள் பாவத்தை உணரச் செய்தார்; அதற்காக மனம் வருந்தச் செய்தார். அவர்களுடைய பாவத்திற்கு மன்னிப்பையும் அளித்தார். ஆனால், பாவத்திற்குப் பரிகாரமாக அவர்கள் இவ்வுலக வாழ்வில் துன்பங்களை அனுபவிக்கவேண்டி இருந்தது.

**சிந்தனைக்கு:** 1) முதற்பாவம் அவ்வளவு கனமான பாவமாய் இருந்தது ஏன்? 2) நம் முதல் பெற்றோருக்கு முதற்பாவத்தால் விளைந்த மாபெரும் கேடு எது? 3) நம் முதல் பெற்றோர்கள் அருள் உயிருடன் வேறு எதை இழந்தனர்? 4) கடவுள் நம் முதல் பெற்றோர்கள்மேல் என்வாறு கருணை கொண்டார்.

**என் வாழ்க்கைக்கு:** சாவான பாவம் எவ்வளவு பெரிய கேடு என்று ஆதாமின் பாவம் எடுத்துக்காட்டுகிறது. ஒரு சாவானபாவத்தைக் கட் டிக்கொள்வதைப் பார்க்கிலும், நான் எதையும் இழக்கத் தயாராக இருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 33

# எல்லா மனிதர்களுக்கும் சென்ம பாவத்தினால் விளைந்த தீமைகள்

"ஒரே மனிதனால் பாவமும், பாவத்தால் சாவும் இந்த உலகத்தில் நுழைந்தது போலவும், இவ்வாறு எல்லாரும் பாவஞ்செய்தமையால் எல்லா மனிதர்க்குள்ளும் சாவு பரவியது" (உரோமையர் 5 : 12)

ஆதாம் மனுக்குலத்திற்கெல்லாம் தலைவனாக இருந்தும், பாவத்தைக் கட்டிக்கொண்டார். ஆகையால், அவருடைய பாவத்தின் தோஷம், அவர் சந்ததியார்களாகிய எல்லாருக்கும் பாகமாயிற்று. இது "சென்மப் பாவம்" என்றும், அல்லது "சென்ம தோஷம்" என்றும் சொல்லப்படுகிறது. ஆதாம் செய்த பாவத்தின் காரணமாக நாம் அருள் உயிர் இன்றிப் பிறக்கிறோம். ஆனால், கடவுளின் திட்டப்படி அதை நாம் ஆதாமிடமிருந்து பெற்றிருக்கவேண்டும். கடவுளுடைய தாய்மட்டும் ஒரு சிறந்த சலுகை வரத்தினால் சென்மதோஷமின்றிப் பிறந்தாள்.

அன்றியும், சென்மப் பாவத்தின் தீய விளைவுகள் எல்லா மனிதர்கள் மேலும் பாய்ந்தன. ஆகையால்தான், நாம் பாவச்சார்பு உள்ளவர்களாயிருக்கிறோம். இதை இச்சை என்று சொல்லுகிறோம். இந்த இச்சையின் விளைவாக இவ்வுலகக் காரியங்களை — எடுத்துக்காட்டாக, இன்பம், சொத்து, மகிமை, புகழ் இவைபோன்றவைகள்மேல் அளவு கடந்த பற்று வைத்து நாடிப்போகச் செய்கிறது. மேலும், மனிதர்கள் அநேக இன்னல்கள், துன்பங்கள் இடையே வாழவேண்டியிருக்கிறது. இறுதியாகச் சாகவும்வேண்டும். சென்மப் பாவத்தினால் பசாசு உலகின்மேல் ஆதிக்கம் பெற்றது.

கடவுள் பாவிகளான மனிதர்கள்மேல் இரக்கம் காட்டாதிருந்தால், எந்த மனிதனும் மோட்சம்சேர முடியாது. ஏனெனில், எவனும் தன்னையே மீட்க முடியாது.

**சிந்தனைக்கு:** 1) எல்லா மனிதர்களும் ஆதாம் செய்த பாவத்தின் தோஷத்தோடு பிறப்பது ஏன்? 2) "சென்ம தோஷம்" என்பதற்குப் பொருள் என்ன? 3) இந்தச் சென்ம தோஷமின்றி இருந்த ஒரே பிறவி யார்? 4) சென்ம தோஷத்தினால் விளைந்த தீமைகள் எவை?

**என் வாழ்க்கைக்கு:** ஆதாம் செய்த ஒரே ஒரு பாவத்தினால் மக்கள் எல்லோருக்கும் உண்டான துன்பம் எவ்வளவு? இதிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் எவ்வளவு கோரமான தீங்கு என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

**வேதாகமத்திலிருந்து:** 'மனிதனுடைய இதய சிந்தனைகள் இளமைமுதல் தீமையின் மீதே நாட்டம் கொண்டுள்ளன" (ஆதியாகமம் 8 : 21). அப்போஸ்தலரான புனித அருளப்பர் இச்சையைப் பற்றிச் சொல்லுகிறார். ஊனியல்பு இச்சிப்பதும், கண்கள் காண இச்சிப்பதும் செல்வத்தில் செருக்குக் கொள்வதுமாகிய இவ்வுலகுக்குரியவையெல்லாம் உலகிலிருந்தே வருகின்றன. பரமதந்தையிடமிருந்து வரவில்லை. (1 அருளப்பர் 2 : 16)

**நம்முடைய தீய நாட்டங்கள்:** முக்கியமான தீய நாட்டங்கள் ஏழு : அவை : 1) அகங்காரம். 2) கோபம், 2) மோகம், 5) உலோபித்தனம், 5) போசனப் பிரியம், 6) காய்மகாரம். 7) சோம்பல் — இவை தலையான ஏழு பாவங்கள் அல்லது பாவ வேர்கள் என்று சொல்லப்படுகின்றன. ஏனெனில், இந்த ஏழு பாவங்களும் மற்ற அநேக பாவங்களுக்கு ஊற்றுப்போலிருக்கின்றன.

**நமது பதில்:** 1) "சென்ம பாவமும் இல்லை; சென்ம தோஷமுமில்லை. ஏனெனில், நாம் அதை எங்கும் பார்க்க முடியாது" என்று அநேகர் சொல்லுவார்கள். அதற்கு நாம் சொல்லவேண்டிய பதில் : "நாம் பெற்றுக்கொண்ட சென்ம தோஷத்தைப் பார்க்க முடியாது. உண்மைதான் : ஆனால், அதன் தீய விளைவுகளைப் பார்க்கிறோம். அந்தத் தீய விளைவுதான் நம் உள்ளத்தில் நாம் உணரும் பாவச்சார்புகள். அவ்வளவு எளிதாக நாம் கடவுளுக்குப் பிரமாணிக்கமாயிருப்பதில்லை. நாம் நல்ல தீர்மானங்கள் செய்தபோதிலும், திரும்பத் திரும்பப் பாவத்தில் வீழ்கிறோம். மேலும் முதற் பாவத்தின் விளைவாக நம்மைச் சுற்றிலும் உலகில் சீர்கேடுகளைத்தான் காண்கிறோம். நல்லவர்கள் செய்யும் அரிய முயற்சிகள் ஒருபுறமிருப்பினும் அநியாயம், போர், இன்னும் மற்றத் தீமைகள் எப்பொழுதும் இருக்கத்தான் செய்கின்றது என்று கூறவேண்டும்.

"கடவுளிடம் நீதியில்லை; ஏனெனில், ஆதாமின் பாவத்தை முன்னிட்டு எல்லாமனிதர்களும் துன்புற விட்டுவிடுகிறார்" என்று பலர் சொல்லுவார்கள். இதற்கு நமது பதில்: "கடவுள் நீதியுள்ளவர். அருள் உயிரையோ சிங்காரத்தோப்பில் நம்முதற் பெற்றோர்களிடம் இருந்த 'பாக்கியமான நிலையின்' சிறந்த நன்கொடைகளையோ எவருக்கும் கொடுக்க வேண்டிய கட்டாயம் கடவுளுக்கு இல்லை. ஆயினும், கடவுள் இரக்கமுள்ளவர். ஆதாம் இழந்த நன்மைகளை எல்லா மனிதர்களும் கிறிஸ்து நாதர் வழியாகத் திரும்ப அடைந்துகொள்ளலாம். நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கு மிகுதியான சம்பாவனையைக் கடவுள் அளிப்பர்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 34

# இறைவன் உலக மீட்பரை அனுப்புவதாக வாக்களித்தார்

"அப்பொழுது ஆண்டவராகிய கடவுள் பாம்பைப் பார்த்து, 'உனக்கும் பெண்ணுக்கும், உன்வித்துக்கும் அவளுடைய வித்துக்கு மிடையே பகையை உண்டாக்குவோம்; அவள் உன் தலையை நசுக்கு வாள். நீயோ அவளுடைய குதிக்காலைத் தீண்ட முயலுவாய் என்று கூறினார்" (ஆதியாகமம் 3:15).

ஆதாம் முதற் பாவத்தைக் கட்டிக்கொண்டபோதிலும், அவ னுக்கு ஒரு வாக்கு அளித்தார். "பசாசு ஒருநாள் தோற்கடிக்கப்படும். மனித சந்ததியிலிருந்து ஒரு மீட்பர் பிறப்பார். அவர் மனுக்குலத்தைப் பாவத்தினின்றும், அதன் தீய விளைவுகளின்னின்றும் காப்பாற்றுவார்" என்பதாம்.

காலம் ஆக ஆக, கடவுள் இந்த உலக மீட்பரைப்பற்றி அநேக கருத்துக்களைப் பிதாப்பிதாக்கள், தீர்க்கதரிசிகள் இவர்கள் வழியாக மக்களுக்கு அறிவித்து வந்தார். உலகமீட்பர் ஒரு கன்னித்தாயிட மிருந்து பெத்லேகேம் என்னும் ஊரில் பிறப்பார். அவர் ஒருமாபெரும் தீர்க்கதரிசியாக விளங்குவார்; அரும்பெரும் செயல்களைச் செய்து காட் டுவார். அவர் ஒரு குருவாக இருந்து, தம் மக்களுக்காகப் பாடுபட்டு, மனுக்குலம் அனைத்திற்காகவே தம் உயிரைப் பலியாக்குவார். இறுதி யாக மக்களுக்கெல்லாம் அரசராகவும், நீதிபதியாகவும் உயர்த்தப்படு வார்.

பழைய உடன்படிக்கையில், குருக்களும் அரசர்களும் தைலத்தால் அபிஷேகம் செய்யப்பட்டனர். ஆகையால் அவர்கள் "அபிஷேகம் செய்யப்பட்டவர்கள்" என்று அழைக்கப்படுவர். வாக்களிக்கப்பட்ட உலக மீட்பர் குருவாகவும் அரசராகவும் இருக்கப்போவதால், அவரும் "அபிஷேகம் செய்யப்பட்டவர்" என்று அழைக்கப்பட்டார். இதன் கருத்து எபிரேய மொழியில் "மெசியாஸ்" என்றும், கிரேக்க மொழி யில் "கிறிஸ்தோஸ்" என்றும் சொல்லப்பட்டது. இந்தமொழியிலி ருந்துதான் நாம் வழங்கும் "கிறிஸ்து" "கிறிஸ்துநாதர்" என்னும் வார்த்தைகள் உண்டாயின.

பழைய உடன்படிக்கையில் கடவுளால் அனுப்பப்பட்ட கடைசித் தூதுவர் ஸ்நாபக அருளப்பர் என்பவர். அவர் "உலக மீட்பரின் முன்னோடி" என்று அழைக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் பழைய உடன்படிக்கையில் அநேக காரியங்களை வாக்களித்திருந்தார். அவற்றில் பெரும்பான்மையானவை கிறிஸ்துநாதரில் நிறைவேறிவிட்டன. மற்ற அநேக உறுதிமொழிகள் அவருடைய திருச்சபையில் காலக்கிரமத்தில் நிறைவேறிக்கொண்டே வருகின்றன. கடவுள் எக்காலத்திலும் வாக்களித்த அனைத்தும் உலக முடிவில் முற்றுப் பெறும்.

**சிந்தனைக்கு:** 1) நம் முதல் பெற்றோர்கள் பாவத்தில் விழுந்த பின் கடவுள் என்ன வாக்களித்தார்? 2) வரப்போகிற மீட்பரைப் பற்றி அதிகமான விபரங்களைக் கடவுள் யார் வழியாக முன் அறிவித்தார்? 3) வரவிருக்கும் உலக மீட்பரைப்பற்றிக் கடவுள் வெளிப்படுத்தியவை எவை? 4) "மெசியாஸ்" என்ற பதத்திற்குப் பொருள் யாது? 5) வரப்போகும் உலகமீட்பர் "மெசியாஸ்" என அழைக்கப்படக் காரணமென்ன? 6) ஸ்நாபக அருளப்பருக்கு இருந்த அலுவல் என்ன? 7) கடவுளுடைய உறுதிமொழிகள் நிறைவேறியதைப்பற்றி நீ என்ன அறிகிறாய்?

**என் வாழ்க்கைக்கு:** பாவத்தைக் கட்டிக்கொண்ட சம்மனசுக்களைக் கடவுள் நடத்தியதுபோல, மனிதர்களை என்றென்றைக்கும் தள்ளிவிடவில்லை. அதற்கு மாறாக, அவர்கள்மேல் கருணைகொண்டார். இதற்காக நான் அவருக்கு நன்றியறிதல் உள்ளவனாக இருப்பேன்.

**கடவுளின் வார்த்தைகள் :** 1) நிறைவேறப்போகும் மீட்பரைப்பற்றிய தீர்க்கதரிசன வார்த்தைகள்: "வானமண்டலங்கள் பூரிக்கட்டும்: பூமி மகிழட்டும்; சமுத்திரமும், அதில் அடங்கிய யாவும் கிடுகிடுத்துப் போகக்கடவன. ஆண்டவருடைய வருகைக்காக நாடுகளும், அவைகளிலுள்ள யாவும் அகமகிழும்; அப்பொழுது காட்டிலுள்ள தருக்கள் யாவும் உவகைகொள்ளும். ஏனெனில், அவர் வருகிறார். பூமிக்கு நீதி செலுத்த எழுந்தருளி வருகிறார். அவர் உலகத்திற்கு நீதியையும், ஒவ்வொரு மனித சந்ததிக்கு வாக்களிக்கப்பட்ட சம்பாவனையையும் கொண்டுவருகிறார்" (சங்கீதம் 95 : 1 – 12). "இதோ, நாட்கள் வரும்; அப்பொழுது இஸ்ராயேலின் வீட்டாரோடும், யூதாவின் வீட்டாரோடும் புதிய உடன்படிக்கை செய்வோம் என்கிறார் ஆண்டவர். நாம் அவர்களுக்குத் தேவனாய் இருப்போம்; அவர்கள் நமக்குக் குடிகளாய் இருப்பார்கள்" (யெரேமியாஸ் 31 : 31 – 33).

(பூவுலகின் கடையெல்லைகளில் உள்ளவர்கள் அனைவருமே இதை நினைத்து ஆண்டவரிடம் திரும்புவார்கள்: உலகின் மக்களெல்லாம் அவர் திருமுன் விழுந்து வணங்குவார்கள். ஏனெனில், ஆண்டவருடையதே அரசு; நாடுகள் அனைத்தின்மீதும் ஆட்சி செலுத்துபவர் அவரே. (சங்கீதம் 21 : 27-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மீட்பரைப்பற்றிய இறைவாக்குகள்:** "அனுப்பப்பட இருக்கிறவர் வரும்வரையிலும் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதுமில்லை; அவனுடைய சந்ததியை விட்டுக் கடவுள் விலகுவதும் இல்லை.' (ஆதியாகமம் 49:10 ;)—"யெஸ்ஸேயின் தண்டிலிருந்து ஒரு தளிர் கிளம்பும், அவன் வேரிலிருந்து ஒரு கிளை தோன்றும்" (இசையாஸ் 11 :1 )—"ஆண்டவர் தாமே உங்களுக்கோர் அடையாளம் தருவார் : இதோ கன்னிப் பெண் கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுப்பாள் ; அவன் எம்மானுவேல் என்னும் பெயர் பெறுவான். (இசையாஸ் 7:14 ;) (மத்தேயு 1:23)—"நீயோ எப்பிராத்தா எனப்படும் பெத்லெகேமே, யூதாவின் கோத்திரங்களுள் நீ மிகச் சிறியதாயினும், இஸ்ராயேலில் ஆட்சி செலுத்தப்போகிறவர் உன்னிடமிருந்தே எனக்கென்று தோன்றுவார்" (மிக்கேயாஸ் 5:2; ) (மத்தேயு 2 :6)—"நமக்காக ஒரு குழந்தை பிறந்துள்ளது, நமக்கு ஒரு மகன் தரப்படுவான்; ஆட்சியின் பொறுப்பு அவருடைய தோள்மேல் இருக்கும், அவருடைய பெயரோ வியத்தகு ஆலோசனையாளர், வல்லமையுள்ள இறைவன், முடிவில்லாத் தந்தை அமைதியின் மன்னன் என வழங்கப்படும்" (இசையாஸ் 6:6)—"ஆண்டவரின் ஆவி என்மேலே: ஏனெனில் ஆண்டவர் என்னை அபிஷேகம் செய்துள்ளார் ; எளியோர்க்கு நற்செய்தி அறிவித்து, உள்ளம் நொந்தவர்களைக் குணப்படுத்தவும்; சிறைப்பட்டவர்களுக்கு விடுதலைச் செய்தியும், கட்டுண்டவர்களுக்கு மீட்புச் செய்தி அறிவிக்கவும்; ஆண்டவர் தம் அருளைத் தரும் ஆண்டையும், நம் கடவுள் பழிவாங்கும் நாளையும் தெரிவிக்கவும், அழுகிறவர்கள் அனைவர்க்கும் ஆறுதல் அளிக்கவும் ஆண்டவர் என்னை அனுப்பினார்" (இசையாஸ் 61 : 1-2 ) (லூக்காஸ் 4: 18-19)—"உறுதியாய் இருங்கள், அஞ்சவேண்டாம்; இதோ, உங்கள் கடவுள் பழிதீர்க்க வருகிறார், வந்து கைம்மாறு கொடுப்பார், கடவுள் தாமே வந்து உங்களை மீட்பார் என்று சொல்லுங்கள். அப்போது குருடனுடைய கண்கள் திறக்கப்படும். செவிடரின் காதுகள் கேட்கும். ஆற்றல் பெறும்; அப்போது முடவன் மான்கன்று போலத் துள்ளுவான், ஊமைகளின் நாக்கு மகிழ்ச்சியால் பாடும்." (இசையாஸ் 35 :4-6;) (மத்தேயு 11 :5 )—"மெல்கிசெதேக் முறைப்படி நீர் என்றென்றும் குருவே" (சங்கீதம் 109 :4) ; (எபிரேயர் 5 : 6)—"அவர் கொடுமையாய் நடத்தப்பட்டார், தாழ்மையாய் அதைத் தாங்கிக் கொண்டார்; அவர் வாய்கூடத் திறக்கவில்லை. கொல்வதற்கு இழுத்துச் செல்லப்படும் ஆட்டுக்குட்டி போலும் மயிர் கத்தரிப்போன் முன்னிலையில் கத்தாத செம்மறியாடு போலும் அவர் வாய் திறக்கவில்லை. (இசையாஸ் 53 : 7);(அப்.பணி 8: 32) —' இரவில் நான் கண்ட காட்சியாவது; நீண்ட ஆயுளுள்ளவரின் மேகங்கள்மீது மனுமகனைப்போன்ற ஒருவர் வந்தார்; நீண்ட ஆயுளுள்ளவரின் அருகில் வந்தார், அவர்முன் கொண்டு வரப்பட்டார். ஆட்சியும் மகிமையும் அரசுரிமையும் அவருக்குக் கொடுக்கப்பட்டன; எல்லா மக்களும் இனத்தாரும் மொழியினரும் அவருக்கு ஊழியம் செய்வர், அவருடைய ஆட்சி என்றென்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடிக்கும்; அதற்கு என்றுமே முடிவிராது; அவருக்கு அளிக்கப்பட்ட அரசுரிமை என்றுமே அழிந்து போகாது." (தானியேல் 7:13-13); (மத்தேயு 26 : 64)

**செய்யவேண்டியவை : 1)** தீர்க்கதரிசிகள் பின் உள்ளவற்றைக் குறித்து என்ன கூறியுள்ளார்கள்? அ) உலக மீட்பருடைய வம்சத்தைப் பற்றி; ஆ) அவருடைய அலுவலைப்பற்றியும், செய்கைகளைப்பற்றியும்; (இ) அவருடைய பாடுகளைப்பற்றி; (ஈ) அவருடைய இராச்சியத்தைப் பற்றி. 2) அவர்கள் சொன்ன தீர்க்கதரிசனங்களில் இதுவரை நிறைவேறியுள்ளவை எவை? 3) உலக மீட்பர் ஏற்கனவே வந்து விட்டாராயினும், நாம் ஏன் ஒவ்வொரு ஆண்டும் "அவர் வருக" என்ற ஆகமனத்தைக் கொண்டாடுகிறோம்?

**விவிலிய வழிபாடு:**

| | |
|---|---|
| ஆதி. 3 : 1—16 | சங். 130 (129) :1—8 |
| இசை. 9 ; 1—7 | சங். 126 (125) ;1—6 |
| | சங் 30 (29) ;1—13 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 35

# இறைமகன் மனிதனுய்ப் பிறந்தார்

"அவர் பரிசுத்த ஆவியினுல் கர்ப்பமாகி,
கன்னிமரியாயிடமிருந்து பிறந்தார்"

(விசுவாசப்பிரயாணத்தின் 3–ஆம் சத்தியம்)

"கடவுள் கபிரியேல் தூதரைக் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னிகையிடம் அனுப்பினுர். அவர் பெயர் மரியாள். தூதர் அவளை நோக்கி இதோ உம் வயிற்றில் கருத்தரித்து ஒரு மகனைப் பெறுவீர். அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் மேன்மை மிக்கவராய் இருப்பர். உன்னதரின் மகன் எனப்படுவார்" என்று சொன்னுர். (லூக்காஸ் 1–26–38)

கடவுளுடைய திருமகன் நித்தியகாலத்திலிருந்தே பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் தெய்வீக மகிமையிலும் அளப்பரிய அன்பிலும் வாழ்ந்தார். இக்காரணம்பற்றியே இயேசுநாதர் "உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன், ஆபிரகாம் உண்டாவதற்கு முன்பே நான் இருக்கிறேன்" என்றுர். (அருளப்பர்(8 :08)

கடவுளுடைய திருமகன் நித்திய காலத்திலிருந்தே பிதாவிடமிருந்து பிறந்தர். ஆகையால்தான் திருப் பூசைப்பலியில் உள்ள விசுவாசப் பிரமாணத்தில், "காலங்களுக்கு முன்னே பிதாவிடமிருந்து பிறந்தார்" என்று சொல்லுகிறோம். மனிதனுடைய புத்தியிலிருந்து ஓர் எண்ணம் அல்லது ஒரு வார்த்தை உண்டாகின்றது. ஒருவகையில் அதேபோல, அவர் பிதாவிடமிருந்து வருகிறுர். இதனுல்தான் கடவுளுடைய திருமகன் "வார்த்தையானவர்" என்றும் அழைக்கப்படுகிறுர்

குறிக்கப்பட்டகாலம் வந்தபொழுது, ஆண்டவருடைய சம்மனசு மரியம்மாளுக்கு மங்களவார்த்தை சொல்ல வந்தார். பரிசுத்த ஆவி அவள்மேல் வந்து தங்கினுர். அந்நேரம் கடவுளுடைய திருமகன் மரியாயிடமிருந்து ஓர் உடலை எடுத்தார்; மனிதன் ஆனுர். இது நாம் முழுவதும் அறிந்துகொள்ள முடியாத பரம இரகசியம் (வார்த்தையானவர் மாமிசமாகி, நமக்குள்ளே வாசமாய் இருந்தார் "வார்த்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனுவுருவானார்; நம்மிடையே குடிகொண்டார்") (அருளப்பர் 1 :14) என்ற வார்த்தைகளை நாம் சொல்லும் பொழுது' இந்தப் பரம இரகசியத்தைச் சிந்தனை செய்கிறோம்.

கடவுளுடைய திருமகன் மெய்யாகவே மனிதன் ஆனார். அவருக்குச் சதையும் இரத்தமும், உடலும் ஆன்மாவும் இருந்தன. நாம் உணர்வதுபோல அவரிடத்திலும் உணர்ச்சியிருந்தது; பசி, தாகம் கொண்டார்; மகிழ்ச்சி துக்கம் உள்ளவராயிருந்தார்; வேதனைப்பட்டார்; வரப்போகிற தம் மரணத்தைப்பற்றி அச்சமும் கொண்டார்: பாவம் தவிர மற்றெல்லாவற்றிலும் சோதனை, துன்பங்களுக்கு உட்பட்டவரானார். (எபிரேயர் 4 :15). அவர் இப்பொழுது இருக்கும் மகிமை பெற்ற நிலையிலும் மனிதனாகத்தான் இருக்கிறார்: எப்பொழுதும் மனிதனாக இருப்பார்.

யேசுநாதர் கடவுளும், அதேசமயத்தில் மனிதனுமாய் இருக்கிறார். நித்திய காலத்திலிருந்தே அவர் கடவுள். ஆனால், குறித்த ஒரு காலத்திலிருந்து மட்டும் மனிதனுமாக இருக்கிறார். அவரிடத்தில் தேவசுபாவம உண்டு; மனிதசுபாவமும் உண்டு. அவர் கடவுள்—மனிதன்.

கடவுளுடயை திருமகன் மனிதன் ஆனார். தமது பிதாவின் அரும் பெரும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கே. கடவுளுடைய இராச்சியத்தைப்பற்றிய மகிழ்வுக்குரிய செய்தியை அறிவிப்பதற்காக பிதாவிடம் சேர்வதற்கான வழியைத் தம் சொல்லிலும் செயலிலும் நமக்குக் காட்டுதற்காக நம்மைப் பாவத்தினின்று விடுவிப்பதற்காக; மறுபடியும் நம்மைக் கடவுளுடைம பிள்ளையாக்குவதற்காக—அவர் மனிதன் அனார்.

**சிந்தனைக்கு : 1)** கடவுளுடைய திருமகன் நித்திய காலத்திலிருந்து எங்கே வாழந்தார்? 2) "அவர் காலங்களுக்கு முன்னே பிதாவிடமிருந்து பிறந்தார்" என்ற வார்தைகளினால் நாம் என்ன அறிகிறோம்? 3) கடவுளுடைய திருமகன் "வார்த்தையானவர்" என்றும் அழைக்கப்படுவது ஏன் ?4) கடவுளுடைய திருமகன் ஒரு மெய்யான மனிதன் ஆனார் என்று எப்படி அறிகிறோம் ?

**என் வாழ்க்கைக்கு:** நான் திரிகால மணி அடிப்பதைக் கேட்கும் பொழுது, கடவுளுடைய திருமகன் எனக்காக ஆனதை நினைத்துக்கொண்டு, திரிகாலச் செபத்தைக் கவனத்துடன் செபிப்பேன்.

**திருச்சபையின் வாழ்விலிருந்து:** பங்குனித்திங்கள் 25 ஆம் நாள் தேவதாய்க்கு மங்கள வார்த்தை சொன்ன திருநாளைத் திருச்சபை கொண்டாடுகிறது. மார்களித்திங்கள் 25 ஆம் நாள் கிறிஸ்துநாதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த திருநாளைக் கொண்டாடுகிறது. IHS என்ற எழுத்துக்கள் கிரேக்க மொழியில் "யேசு" என்ற வார்த்தையின் சுருக்கம். கிரேக்க மொழியில் 'கிறிஸ்து" என்று எழுதும் பொழுது XP என்பவை முதல் இரு எழுத்துக்களாகும்.

**செய்யவேண்டியவை :1)** திரிகாலச் செபத்தை நீ எவ்வளவு பக்தியாய்ச் சொல்லுகிறாய்? 2) கர்த்தர் பிறப்புப் பண்டிகைக்கு பாடும் பாட்டுகளில் உனக்குத் தெரிந்தவை எவை? 3) கர்த்தர் பிறந்த திருநாட் பூசைகளிலும், ஆகமனகால பூசைகளிலும் கடவுளுடைய திருமகன் மனிதன் ஆனார் என்று குறிப்பிடும் எந்த வார்த்தைகளைக் காணலாம்? 4) கன்னிமரியாய்க்கு மங்கள வார்த்தை சொன்னதையும் நமது ஆண்டவருடைய பிறப்பையும் சித்திரிக்கும் சில படங்களைச் சேர்த்து வை. 5) கர்த்தர் பிறப்பு விழாவுக்குக் கிறிஸ்தவர்களுக்கேற்ப நாம் எவ்வாறு தயாரிப்பு செய்தல் வேண்டும்? 6) கர்த்தர் பிறப்புவிழாவுக்கு முன் இரவு நாம் என்ன செய்யவேண்டும்? 7) "கிறிஸ்துமஸ் தரு" என்று வழங்குவதன் பொருள் யாது? 8) ர்த்தர் பிறப்புப் பண்டிகையின்பொழுது அன்பளிப்புகள் பரிமாறுவதன் பொருள் என்ன? 9, கர்த்தர் பிறப்பின் குடில்ஒன்றை அமைப்பாயாக.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 36

# நமது மீட்பரின் தாய்

யேசுநாதர் பிறந்தபொழுது அறிஞர்கள் கீழ் நாடுகளிலிருந்து பெத்லகேம் ஊருக்கு வந்தனர். வீட்டில் நுழைந்து பாலனை அவர் தாயாரான மரியம்மாளோடு கண்டு, கீழே விழுந்து ஆராதித்தனர் (மத் 2 : 1—11).

மகா பரிசுத்த கன்னிமரியாள் நமது மீட்பரின் தாய். கடவுள் அவளைத் தமது திருமகனுக்குத் தாயாக இருக்க நித்திய காலத்திலிருந்தே தெரிந்துகொண்டார். அவளுடைய மகன் மெய்யான கடவுள். ஆகை யால் அவள் கடவுளுடைய தாயாக இருக்கிறாள். இந்த உண்மையி னால் மரியாளுடைய நிலை சம்மனசுக்கள் மனிதர் அனைவருக்கும் மிக மேலானது.

மரியாள் தாய்மை நிலை அடைந்தாள். அதேசமயத்தில் கன்னிகை யாகவே இருந்தாள். சூசையப்பர் இயற்கை விதிப்படி யேசுநாதருடைய தந்தை அல்லர். ஆனால் யேசுநாதர் குழந்தையாயிருக்கையில் அவ ரைப் பேணி வளர்த்து காப்பாற்றியவரே அவர். மரியாள் மீட்பரின் தாயாகும் வண்ணம் பரிசுத்த ஆவியின் அற்புதச் செயலால் கருத்தரிப் பாள் எனச் சம்மனசானவரால் அவருக்குக் கனவில் அறிவிக்கப் பட்டது.

மரியாள் கடவுளுடைய திருமகனுக்குக் தாயாகத் தெரிந்துகொள் ளப்பட்டாள். இக்காரணத்தினால் அவள் தன் வாழ்வில் ஒரு வினாடி முதலாய்ப் பாவத்தினால் பாதிக்கப்பட இயலாது. ஆகையால், கட வுள் அவளைச் சென்மபாவத்தின் தோஷத்தினின்றும் காப்பாற்றினார். மேலும் அவளுடைய வாழ்வின் முதல் விநாடியிலேயே அருள் வாழ் வையும் அவளுக்கு அளித்தார். மரியாளுடைய தாய் அவளைக் கருத் தரித்தபொழுதே அவள் பாவமாசு சற்றேனும் இன்றித் தோன்றினாள்; அருள் நிறைந்தவளானாள். எனவே. மரியாளை "அமலஉற்பவி" என்று அழைக்கிறோம். இந்த வரத்தை யேசுநாதர் மற்ற வரங்களைப்போலவே, தம்முடைய சிலுவை மரணத்தினால்தான் சம்பாதித்தார்.

கடவுள் மரியாளுக்கு வரங்களை அவ்வளவு அதிகமாய் அளித்தமை யினால் அவள் எப்பொழுதும் அவருடைய திருச் சித்தத்தின்படி நடந்து வந்தாள். எவ்விதச் சொந்தப் பாவத்தில் விழாதபடி அவள் காப்பாற்றப்பட்டு வந்தாள். மரியாள் எல்லாப் பெண்களுக்கும் மேலாக மிகத் தூய்மையுள்ளவளும் புண்ணியவதியுமாயிருக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிந்தனைக்கு:** 1) சூசையப்பர் யார்? 2) மரியாள் சென்மபாவமின்றி உற்பவித்தாள் என் என் சொல்லுகிறோம்? 3) கடவுள் மரியாளைச் சென்மபாவத்தின் தோஷத்தினின்றும் காப்பாற்றினது என்? 4) என் மரியாள் எல்லாப் பெண்களுக்கும் மேலாக மிகத் தூய்மையுள்ளவளும், புண்ணியவதியுமாய் இருக்கிறாள்?

**எனது வாழ்விற்கு :** "அருள் நிறைந்த மரியாயே" என்ற செபத்தைச் செபிக்க ஒருநாளும் தவறமாட்டேன்.

**திருச்சபையின் வாழ்க்கையிலிருந்து :** நம் அன்னைமுன் அமல உற்பவத்தின் திருநாளைத் திருச்சபை மார்கழித்திங்கள் 8-ம் நாள் கொண்டாடுகிறது. அவர் சிறந்த சலுகை வரங்களைப் பெற்றிருந்தது விசுவாச சத்தியம் என்று 1854-ம் ஆண்டு அதேநாள் 9-ம் பத்திநாதர் பிரகடனம் செய்தார்.

புனித சூசையப்பர் குழந்தை யேசுநாதரையும் அவருடைய அன்னையையும் இவ்வுலக வாழ்வில் பாதுகாத்தார். ஆகையால், திருச்சபை அவரை தன் சொந்தப் பாதுகாவலராக ஏற்படுத்தியுள்ளது. அவருடைய திருநாளைப் பங்குனித் திங்கள் 19 ம் நாள் கொண்டாடுகிறது. மேலும் வைகாசித்திங்கள் முதல்நாளைத் தொழிலாளரான பரிசுத்த சூசையப்பருடைய திருநாள் எனக் கொண்டாடுகின்றது.

மூன்று இராசாக்கள் திருநாளுக்குப் பின்வரும் ஞாயிறன்று திருக்குடும்பத்தின் திருநாள் கொண்டாடுகின்றது.

**செய்யவேண்டியவை :** 1) செபமாலையின் சந்தோஷ தேவ இரகசியங்கள் ஐந்தையும் சொல் 2) மீட்பருடைய தாயைக் குறித்துச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தைகள் எவையென்று தேடிப் பார்க்க. 3) தேவதாய்க்குரிய பாடல் ஒன்றின் முதல் அடியைப் பாடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடம் 37

# கிறிஸ்து நாதரும் இறையரசும்

யேசுநாதர் யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்ற பின்னர் பாலைவனத்திற்குச் சென்றார். அங்கே நாற்பது பகலும் இரவும் ஒரு சந்நியாசியிருந்தார். அதன்பின் கலிலேயாவுக்குத் திரும்பிவந்தார்; கடவுளுடைய இராச்சியத்தின் நற்செய்தியை மக்களுக்குப் போதித்தார். "காலம் நிறைவேறிற்று; கடவுளரசு நெருங்கிவிட்டது. மனந்திரும்பி இந்நற்செய்தியை நம்புங்கள்" என்று கூறினார் (மாற்கு 1 :12-15).

யேசுநாதர், பரலோகப் பிதாவின் தூதுவராய், நாடு எங்கும் சென்று, "கடவுளுடைய இராச்சியம் அண்மையில் இருக்கின்றது" என்ற அதிசய செய்தியை மக்களுக்கு அறிவித்தார். தீர்க்கதரிசிகள் கடவுளுடைய இராச்சியத்தைப்பற்றி உறுதிவாக்குக் கூறியிருந்தனர். நல்லவர்கள் அதைநாடி ஏக்கமாகவே வாழ்ந்தனர். வேதபாரகரும், பரிசேயரும் அதைக் குறித்துப் பேசினார்கள். ஆனால், யேசுநாதர்தான் அதை மக்களுக்கு அறிவித்தார் "இதுதான் அந்த நேரம்; கடவுளுடைய அரசு வருகின்றது" என்று எடுத்துக் கூறினார்.

கடவுளுடைய இராச்சியம் அருகிலிருக்கிறது என்பதற்குச் சான்றாக யேசுநாதர் அரும் பெரும் புதுமைகளைச் செய்து காட்டினார். நோயாளிகளைக் குணமாக்கினார்; பேய்களை ஓட்டினார்; மரித்தவர்களை உயிர்க்கச் செய்தார்; இன்னும், பாலைவனத்தில் ஒரு பெரிய சனக்கூட்டத்திற்கு வியத்தகு முறையில் உணவு அளித்தார். "நான் பேய்களை ஓட்டுவது கடவுளின் ஆவியைக்கொண்டு என்றால், கடவுளின் அரசு உங்களிடம் வந்துள்ளது" என்று மக்களுக்குச் சுட்டிக்காட்டினார் (மத். 12 : 28). கடவுள் தம் மக்களைத்தேடி வந்திருக்கிறார் (லூக். 7 : 16) என்று மக்கள் கூட்டத்தினர் கூக்குரலிட்டனர்.

கடவுள் மிகப் பழங்காலத்தில் வாக்களித்த மெசியாஸ் தாமே என யேசுநாதர் தம் சொல்லினாலும் அதே சமயத்தில் அருஞ் செயலினாலும் எண்பித்தார். ஸ்நாபக அருளப்பர் தன்னுடைய சீடர்களை யேசுநாதரிடம் அனுப்பி "வரப்போகிறவர் நீர்தாமோ வேறொருவரை எதிர்பார்க்க வேண்டுமோ?" என்று கேட்டபொழுது இயேசு மறுமொழியாக, "நீங்கள் கண்டதையும் கேட்டதையும் போய் அருளப்பரிடம் அறிவியுங்கள். குருடர் பார்க்கின்றனர், முடவர் நடக்கின்றனர், தொழுநோயாளர் குணமடைகின்றனர், செவிடர் நடக்கின்றனர், இறந்தவர் உயிர்க்கின்றனர், எளியவர்க்கு நற்செய்தி அறிவிக்கப்படுகின்றது. என்னைப்பற்றி இடறல்படாதவன் பேறுபெற்றவன்" என்றார் (மத்தேயு 11 : 3-6).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிந்தனைக்கு : 1 )** கடவுளுடைய இராச்சியத்தைப்பற்றிய மகிழ்ச்சிச் செய்தியை மக்களுக்கு அறிவிக்கும் வேலையை இயேசுநாதருக்கு அளித்தது யார்? 2 ) அவருடைய போதனை தீர்க்கதரிசிகளுடைய போதனைக்கு எவ்வகையில் வேறுபாடாக இருந்தது ? 3 ) கடவுளுடைய இராச்சியம் அண்மையில் வந்துவிட்டதாக இயேசுநாதர் எப்படி எண்பித்தார்? 4 ) இயேசுநாதருடைய சொல்லிலும் செயலிலுமிருந்து அவரைப்பற்றி மக்கள் அறியக்கூடியதாய் இருந்தன யாவை?

**என் வாழ்க்கைக்கு :** இயேசுநாதருடைய நற்செய்தியை மற்றவர்களும் அறியும்வண்ணம என்னால் ஆனதைச் செய்வேன்; அந்த நற்செய்திக்கு ஏற்றவாறு வாழ்வேன்.

**வேதாகமத்திலிருந்து :** ''கடவுளின் அரசையும் அவருக்கு ஏற்புடையதையும் முதலில் தேடுங்கள்; இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்." (மத்தேயு 6 : 33) —'' என் தந்தையின் பெயரால் நான் புரியும் செயல்களே எனக்குச் சாட்சியம். "

(அருளப்பர் 10 : 25)

**செய்யவேண்டியவை :1 )** கிறிஸ்துநாதர் செய்த எந்தப் புதுமைகள் சுவிசேஷங்களில் எழுதப்பட்டிருப்பதைக் காண்கிறோம் ? 2 ) கிறிஸ்நாதரால் அறிவிக்கப்பட்ட நற்செய்தியை மற்றவர்களும் அறியும்வண்ணம் நீ என்ன செய்கிறாய்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 38

# இயேசுக்கிஸ்துநாதர் மக்களுக்குப் போதித்தார்

இயேசுநாதர் மக்கள் கூட்டம் மிக அதிகமாய் இருப்பதைக்கண்டு, ஒரு மலைமீது ஏறி அமர்ந்தார். சீடர்கள்வந்து அவரைச் சூழ்ந்து கொண்டனர். அப்பொழுது அவர் தமது திருவாய் மலர்ந்து அவர்களுக்குப் போதித்தார். முடிவில் கூட்டமாய் இருந்த மக்கள் அவருடைய போதனையைப்பற்றி வியப்புற்றனர். ஏனெனில், அவர் வேத பாரசரையும், பரிசேயரையும் போல் போதிக்காமல், அதிகாரம் உடையவராக அவர்களுக்கு உபதேசம் செய்தார்.

(வாசி மத். 5 : 1—2; 7 : 28 29)

யேசுநாதர் மக்களுக்கு எல்லா இடங்களிலும் போதித்தார், கோயிலிலும், செபக்கூடத்திலும், பட்டணங்களிலும், பட்டியிலும், மலையிலும். பாலைவனங்களிலும் ஜெனெசரேத் என்ற ஏரியின் கரைகளிலும் போதித்தார்.

இயேசுநாதர் அதிகாரத்துடன் போதித்தார்; அதற்கு மறுப்புக் கூறுவதற்கு ஒருவரும் இல்லை. மற்ற யாவரையும் கேட்டு அறிய அவருக்குத் தேவையில்லை. அவர் தம்முடைய பரலோக பிதாவை அறிந்திருந்தார்; அவரிடம்போக வழியும் அவருக்குத் தெரியும்; ஏனெனில், அவர் பிதாவிடம் இருந்துதான் வந்தவர். இயேசுநாதர் மனிதர்களையும் அறிந்திருந்தார்; ஒவ்வொருவருக்கும் சொல்லவேண்டிய சரியான மொழியைத தெரிந்துகொண்டார். பாமர மக்களுக்குக் கற்பிக்கும் பொழுது உவமைகளைக் கையாளுவார்; ஆனால், தம்மை நெருங்கிப் பின்சென்றவர்களுக்குத் தம் சித்தத்தின் ஆழ்ந்த கருத்துக்களை வெளியிட்டார். பிணியாளர்களிடமும், பாவிகளிடமும் அன்பான வார்த்தைகளையே பேசுவார். ஆனால், பரிசேயர்களின் வஞ்சனையை மிகவும் வன்மையாகக் கண்டனம் செய்வார்.

இயேசுக்கிறிஸ்துநாதர் எல்லாநாட்டு மக்களுக்கும், எக்காலத்திற்கும் ஆசிரியர். இப்பொழுது அவர் தமது திருச்சபையின் வழியாய் மக்களுக்குக் கற்பிக்கிறார்; பரிசுத்த ஆவியினால் மக்களுடைய அறிவுக்கு ஞானஒளியை வீசிக்கொண்டிருக்கிறார். அவருடைய வார்த்தைகள் எக்காலத்திலும் நிலைத்திருப்பவை. ''விண்ணும் மண்ணும் ஒழிந்துபோம்; என் வார்த்தைகளோ ஒழியவே ஒழியா'' என்று சொன்னார்.

(மத்தேயு 24 ; 35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிந்தனைக்கு :** 1) இயேசுநாதர் போதித்த இடங்கள் யாவை? 2) அவர் முழு அதிகாரத்துடன் போதிப்பதற்கு என்ன உரிமை இருந்தது? 3) ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனுக்கும் சொல்லவேண்டிய சரியான மொழியை இயேசுநாதர் தெரிந்திருந்தார் என்பதை எவ்வாறு காட்டினார்? 4) இயேசுநாதர் இப்பொழுது எந்த வழியாய் நம்மோடு பேசுகிறார்?

**என் வாழ்க்கைக்கு :** ) சுவிசேஷம் வாசிக்கப்படும்பொழுது நான் எழுந்துநின்று கவனமாயிருக்கவேண்டும். இயேசுநாதர் என்னுடன் பேசுகிறார்.

**வேதாகமத்திலிருந்து :** "மெசியா ஒருவரே உங்கள் குரு" (மத்தேயு 23 : 10). ஆகவே, "நான் சொல்லும் இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவற்றின்படி நடப்பவன் எவனும் கற்பாறையின் மீது தன் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவான். ஆனால், நான் சொல்லும் இந்த வார்த்தைகளைக்கேட்டு இவற்றின்படி நடக்காதவன் எவனும் மணல் மீது தன் வீட்டைக்கட்டிய முடவனுக்கு ஒப்பாவான்."

(மத்தேயு 7 : 24—26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 39

# இறைவனின் ஊழியன் கிறிஸ்து

சமாரியா நாட்டிலுள்ள சிக்கார் ஊருக்கு அருகே யாக்கோபின் கிணறு இருந்தது. ஓர் நாள் இயேசுநாதர் நீண்டதூரம் நடந்துவந்த களைப்பால் அக்கிணற்றின் சுவரில் உட்கார்ந்தார். அவருடைய சீடர்கள் உணவு வாங்கிவர ஊருக்குள் சென்றிருந்தார்கள். அவர்கள் சென்றிருந்தபொழுது, ஒரு சமாரியப் பெண் அங்கு வந்தாள். இயேசுநாதர் மனுக்குலத்திற்கு வர இருக்கும் மீட்பைப்பற்றி அவளுக்குச் சொன்னார். சீடர்கள் திரும்பி வந்தனர். அவரைநோக்கி, "குருவே சாப்பிடும்" என்று கேட்டதற்கு யேசுநாதர், "என்னை அனுப்பினவரின் விருப்பத்தின்படி நடந்து, அவரது வேலையைச் செய்துமுடிப்பதே என் உணவு" என்றார். (வாசி அரு, 4 : 5—34)

இயேசுநாதர் இடையறாது தம் பரலோக பிதாவையே சிந்தித்துக் கொண்டிருப்பார்; வயல்களில் பூத்திருக்கும் அழகிய லீலி மலர்களைப் பார்க்கும் பொழுதும்சரி, மக்களோடு, சீடர்களோடு அல்லது பாவிகளோடு இருக்கும் பொழுதும் சரி அவருடைய எண்ணம் பிதாவைப் பற்றியே சென்றது.

இயேசுநாதர் தம் பரலோகபிதாவை மற்ற எவரையும்விட அதிகமாய் நேசித்தார். அவருடைய வாழ்க்கை முழுவதும் இந்த அன்பினாலே பாதிக்கப்பட்டிருந்தது. அவரைப்போல மற்ற எந்த மனிதனும் பிதாவை அவ்வளவு அதிகமாய் நேசித்திருக்க முடியாது.

இந்தப் பேரன்பின் காரணமாகத்தான் இயேசுநாதர் தம் பரலோக பிதாவைப் பார்த்து மன்றாடினார். தமது பிதாவுடன் பேசுவதற்காக அடிக்கடி மக்கள் கூட்டத்தைவிட்டு அகன்று அமைதியான இடத்திற்குச் சென்றார். அடிக்கடி இரவுநேரம் முழுவதும் செபம் செய்வார். அவர் இருதயத்தில் எரிந்துகொண்டிருக்கும் தீபோல் இருந்தது அவருக்குச் செபம்.

இயேசுநாதர் தம் பிதாவின்மேல் கொண்ட அன்பு தம் பிதாவின் சித்தத்தை எப்பொழுதும் கடைப்பிடித்து நடப்பதில்தான் தனிச் சிறப்புடன் விளங்கியது. பிதா அவருக்குக் கட்டளையிட்ட அனைத்தையும் கீழ்ப்படிதலுடன் செய்துமுடித்தார். பிதா அவருக்கு அளித்த எல்லாக் துன்பத்தையும் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டார். தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடைய பிதாவின் மகிமைக்காகவே அயராது உழைத்து வந்தார். "உமது இல்லத்தின்மீதுள்ள ஆர்வம் என்னை எரித்துவிடும்." (அருளப்பர் 3:17) என்ற வார்த்தைகள் அவர் வாழ்ந்த வகையை வர்ணிப்பவை.

இயேசுநாதர் பிதாவுக்கு எப்பொழுதும் கீழ்ப்படிந்தார். பசாசு இயேசுநாதருக்கு எதிராகத் தன்னால் ஆனவையெல்லாம் செய்தபோதிலும், அவரைத் தவறான வழியிலே இழுத்துச்செல்ல முடியயில்லை. இயேசுநாதரிடத்தில் பாவம் என்பது சிறிதும் இல்லை. அவர் மனிதர்கள் யாவரிலும் மிகமிகத் தூயவர்.

**சிந்தனைக்கு :** யேசுநாதர் தமது பிதாவுக்காகவே முற்றும் வாழ்ந்தார் என்று எதைக்கொண்டு அறியலாம்?

**என் வாழ்க்கைக்கு :** யேசுநாதர் எனது ஆசிரியர்; என் வாழ்க்கையை எவ்வாறு நடத்தவேண்டுமென அவரிடமிருந்து நான் அறிந்துகொள்ளவேண்டும்; அவருடைய நன்மாதிரியைப் பின்பற்றவேண்டும்; பிதாவை நேசிக்கவேண்டும்; சிறு பிள்ளைக்ளுக்குரிய நப்பிக்கையோடு அவரிடம் பேசவேண்டும்; அவர் விரும்புவதை மகிழ்வுடன் செய்ய வேண்டும்.

**செய்யவேண்டியவை :** 1) யேசுநாதர் செபித்தார் என வேதாகமத்தில் எந்த இடங்கள் நமக்குக் காட்டுகிறன? 2) சுவிசேஷத்தில் நாம் காணும் யேசுநாதருடைய செபங்களில் சிலவற்றைச் சுருக்கமாக எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 40

# இறை இரக்கத்தின் அடையாளமான கிறிஸ்துநாதர்

யேசுநாதர் ஜெரிக்கே என்னும் பட்டணம் வழியாகச் சென்று கொண்டிருந்தார். சக்கேயுஸ் என்ற வரி வசூலிப்பவன் வழி ஓரத்திலிருந்த ஓர் அத்திமரத்தில் ஏறி உட்கார்ந்திருப்பதைப் பார்த்தார். அவனை நோக்கி. "சக்கேயுவே சீக்கிரம் இறங்கிவா; நான் இன்று உன் வீட்டிலே தங்கவேண்டும்" என்று சொன்னார். ஆகையால், சக்கேயுஸ் விரைவாக மரத்திலிருந்து இறங்கினான்: அவரை மகிழ்வுடன் வரவேற்றான். மற்ற அனைவரும் இதைக்கண்டார்கள்; "பாவியான மனிதனுடைய வீட்டில் தங்கினார்" என்று குறைகூறி முணுமுணுத்தார்கள். ஆனால், யேசுநாதர் "இழந்துபோனதைத் தேடி மீட்கவே மனுமகன் வந்துள்ளார்" என்று பதில்கூறினார் (வாசி : லூக் 1:11-10).

யேநாதர் மக்கள்மேல் இரக்கம் கொண்டார்; ஏனெனில், அவர்களை ஆழ்ந்த உள் அன்போடு நேசித்தார். :"இக் கூட்டத்தின்மீது நான் மனமிரங்குகிறேன்" என்று சொன்னார் (மத். 15:32).

அதர் தமது சொந்த நலனை பற்றிக் கவனிக்கவில்லை. தாம் நிறைவேற்றும்படி பிதாவினால் தமக்கு நியமிக்கப்பட்ட மீட்பு அலுவலைத் தான் மிகவும் கருதினார் "மனுமகன் பணிவிடை பெறுவதற்கன்று. பணிவிடை புரியவும் பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கவும் வந்தார் (மாற்கு 10:45).

மற்றவர்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் அல்லது எந்த வகையிலும் தேவையுள்ளவர்கள் இவர்கள்பால் யேசுநாதர் தனிப்பட்ட அன்பினால் இழுக்கப்பட்டார்; பிள்ளைகள் தம்மிடம்வர ஆசைகொண்டார்; நோயாளிகளைக் குணப்படுத்தினார்; பசியோடிருந்தவர்களுக்குப் பசி தீர்த்தார். தாம் கொண்டுவந்த நற்செய்தியை ஏழை மக்களுக்குப் போதித்தார். "சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள். உங்களை நான் இளைப்பாற்றுவேன் என்று சொன்னார். (மத். 11:28).

யேசுநாதர் பாவிகளைச் சிறப்பாக அன்பும் அனுதாபமும் கொண்டு தம்மிடம் வரவேற்றார். காணாமற்போன தன் ஆட்டைத் தேடிச் செல்லும் இடையனைப்போல், அவர் பாவிகளை நாடிச் சென்றார்; அவர்கள் குற்றம் உணர்ந்து மனம் வருந்தக் கெஞ்சிக் கேட்பார்; அவர்களுக்குப் பாவ மன்னிப்பை அளித்தார். கடவுளுடைய நீதித்தீர்ப்பை எடுத்துரைத்து, மக்களை அச்சுறுத்தினார். ஆனால், அப்படிச் செய்வதற்கும் அன்பே காரணம். பாவத்திற்காகத் தபம் செய்ய மறுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெருசலேம் நகரைப் பார்த்து அழுதார். பாவிவிக்காகத் தம் உயிரையே தியாகம் செய்ய அவரைத் தள்ளிச்சென்றதும் அன்பே.

**சிந்தனைக்கு: 1)** மக்களுக்காகத் தாம் கொண்டுள்ள அன்பை யேசுநாதர் எப்படிக் காட்டினார்? **2)** பாமர மக்களையும், துன்புறுவோர்களையும் யேசுநாதர் எவ்வாறு வரவேற்றார்? **3)**பாவிகள்மேல் தமக்கு இருந்த அன்பை யேசுநாதர் எவ்வாறு காட்டினார்?

**எனது வாழ்விற்கு:** பரிசுத்த சின்னப்பருடையவார்த்தையைப் பின்பற்றுவேன்; "கிறிஸ்து உங்களை ஏற்றுக்கெண்டதுபோல், நீங்களும் கடவுளின் மகிமைக்காக ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்" (உரோமையர் 15: 7).

**வேதாகமத்திலிருந்து:** "நான் உலகிற்குத் தீர்ப்பிட வரவில்லை. உலகை மீட்கவே வந்தேன்." என்று இயேசு சொன்னார் (அரு.1247). "எங்கும் அவர் நன்மை செய்துகொண்டே சென்றார்" (அப். பணி 10:38). இயேசுநாதர் தம்முடைய சீடர்களுடைய பாதங்களைக் கழுவியபின், அவர்களை நோக்கி: நான் உங்களுக்கு மாதிரி காட்டினேன்; நான் செய்ததுபோல நீங்களும் செய்யுங்கள்" என்றார் (அரு 13;15).

**திருச்சபையின் வாழ்விலிருந்து:** யேசுநாதருடைய திரு இருதயத்திற்குத் திருச்சபை வணக்கம் புரிந்துவருகிறது. யேசுநாதர் தமது பரலோகப் பிதாவை எவ்வளவு அதிகமாய் நேசித்தார்; மக்களை எவ்வளவு நேசித்தார் என்று உணர்ந்து, நம்முடைய பாவங்களுக்காகப் பரிகாரம் செய்ய நமக்குக் கற்பிக்கின்றது. திவ்விய நற்கருணைத் திருநாளுக்குப் பின்வரும் இரண்டாம் வெள்ளிக்கிழமை யேசுநாதருடைய திருஇருதயத் திருநாளைக் கொண்டாடுகிறது. அத்துடன் ஒவ்வொரு மாதத்தின் முதல் வெள்ளிக் கிழமையன்று யேசுநாதருடைய திரு இருதயப் பக்தி முயற்சியும் நடைபெறுகின்றது.

**செய்யவேண்டியவை: 1)** நீயே தனிப்பட்டமுறையில் எந்தவித மான மக்களுக்கு உதவலாமென்று நினைத்துப்பார். **2)** அவர்களுக்கு நீ எப்படி உதவலாம்?

பாடம் 41

# இறைவன் தீமையிலிருந்து நன்மை உண்டாகச் செய்கிறார்

யாக்கோபு இறந்தபின் யோசேப்பின் சகோதரர்கள் தாங்கள் அவருக்குச் செய்த தீமைகளுக்குப் பழிவாங்குவார் என்று அஞ்சினார்கள். ஆனால், யோசேப்பு அவர்களுக்குச் சொன்னதாவது "அஞ்சாதீர்கள் —நீங்கள் என்னைக் கெடுக்கச் சதியாலோசனை செய்தீர்கள். ஆனால், கடவுள் தீமையை நன்மையாக மாற்றினார்." (ஆதி. 50:15—20)

உலகில் நிறைந்திருக்கும் தீமையானது பல்வேறுவடிவங்களை எடுக்கிறது. இறைவன் தீமையின் ஊற்றல்லர். அவருக்குத் தீமையில் இருந்து நன்மையைப் பிறப்பிக்க வல்லமை உண்டு. தமக்குத் தண்டனையாகவே தீமை வருகின்றதெனச் சிலர் நினைக்கின்றனர். பெரும்பாலும் மக்கள் இவ்வாறே கருதுகின்றனர். திமிர்வாதக்காரனைக் குணமாக்கிய கிறிஸ்து,தீமையானது ஒருவிதமான அடிமைத்தனம் எனக் காட்டினார்.

மனிதனுக்கு ஏற்படும் துன்பம், வேதனை, வியாதி, வறுமை முதலானவைகளால் இறைவன் மகிழ்பவரல்லர். இவைகளுக்கெல்லாம் இறைவனே பொறுப்புடையவர் என்று நினைப்பதும் பிழையாகும். சமுதாயத்திலுள்ள தீமைகளுக்கெல்லாம் மனிதனே காரணம்.

மனிதன் பசாசுக்கு அடிமைப்பட்டதன் விளைவாலேயே தீமை உருவாகிறது. மீட்பராகிய கிறிஸ்து எல்லாத் தீமைகளையும் தம்மேல் சுமந்து அவற்றின்மேல் வெற்றிகொண்டார். பாஸ்கா மறைபொருள் குறிப்பது இதுவே. தாமே மனமுவந்து மரணத்தை ஏற்ற கிறிஸ்து, சாவை வென்று உயிர் பெற்றார். தீமையிலிருந்து நன்மை உண்டாக்கும் வல்லமை இறைவனுக்கே உரியது என்பதை இதிலிருந்து அறிகிறோம்.

பாவத்தின் விளைவாகவே உலகில் துன்பமும், மரணமும் ஏற்பட்டன என்பதை எமக்குப் பரிசுத்த வேதாகமம் படிப்பிக்கின்றது. மனிதனுடைய பாவத்தின் தண்டனையாக அவனைத் துன்பங்களுக்கு உள்ளாக்கும் இறைவன், பாவியின்மட்டில் இரக்கமுள்ளவராக இருக்கிறார் என்பது மீட்பு வரலாற்றில் தெளிவாகக் காணக்கிடக்கிறது. மனிதன் பாவத்தை விலக்கி வாழவேண்டுமென்று இறைவன் விரும்புகிறார் என்பதை இதிலிருந்து அறிகிறோம். துன்பங்களையும், வேதனைகளையும் அனுபவிக்கும் கிறிஸ்தவனுக்கு இவை ஒரு சோதனை என்று திருச்சபை படிப்பிக்கின்றது. இவற்றின் வழியாக மீட்படைய வேண்டுமென்பதே இறைவனின் விருப்பம். கிறிஸ்துவின் அன்புக்காகத் துன்பங்களை ஏற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும்போது கிறிஸ்துவாக மாறுகிறேம். கிறிஸ்தவனுடன் கிறிஸ்து இவ்வாறு பேசுகிறர். "என்பொருட்டுப் பிறர் உங்களே வசைகூறித் துன்புறுத்தி உங்கள்மேல் இல்லாதது பொல்லாதது எல்லாம் சொல் லும்போது, நீங்கள் பேறுபெற்றேர். அகமகிழ்ந்து களிகூருங்கள். ஏனெனில், வானகத்தில் உங்கள் கைம்மாறு மிகுதியாகும். உங்களுக்கு முன்னிருந்த இறைவாக்கினர்களேயும் இவ்வாறே துன்புறுத்தினர்."
(மத்தேயு 5 : 11 — 12)"

கிறிஸ்து தமது பாடுகளாலும், மரணத்தாலும் உலகின் பாவங்க ளுக்குப் பரிகாரம் செய்தார். கிறிஸ்துவோடு சேர்ந்து நாமும் துன் பங்களின் வழியாகப் பரிகாரம் செய்வதற்குரிய சந்தர்ப்பத்தை இறை வன் எமக்குத் தருகிறர். எமது இவ்வுலக வாழ்வில் கிறிஸ்துவோடு சேர்ந்து துன்புறுவோமாஞல், பின்னர் அவரது விண்ணக மகிமை யிலும் பங்குபெறுவோம். இவ்வுலகில் இறைவனின் சித்தத்தை ஏற்று அனுபவிக்கும் ஒவ்வொரு துன்பமும் வான்வீட்டில் எமக்கு மேலான பெரிய சம்பாவனையைப் பெற்றுத்தரும்.

**சிந்தனேக்கு :** 1 ) உலகில் தீமை நுழைந்தது ஏன் ? 2 ) இதைப் பற்றி வேதாகமம் தரும் செய்தி என்ன ? 3 ) தீமையானது இறைவ னிடமிருந்து வரும் தண்டனேயா ? 4 ) கிறிஸ்து ஏன் துன்பப்பட்டார் 5 ) தீமையிலிருந்து இறைவன் எவ்வாறு நன்மையைக் கொண்டுவருகிறர்?

**எனது வாழ்விற்கு :** வேதனே, துன்பம் வரும்போது கிறிஸ்துவைப் போல செபிப்பேன். உமது சித்தம் நிறைவேறுக. நான் துன்பப்பட நேரிடும்போது சிலுவையில் அறையுண்ட மீட்பரை நினேப்பேன்.

**வேதாகமத்திலிருந்து :** கடவுளிடம் அன்பு கூர்பவர்களோடு அதா வது அவரது திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு, ஆவியான வர், அவர்கள் நன்மைக்காக அனைத்திலும் ஒத்துழைக்கிறர் என்பது நமக்குத் தெரியும். ( உரோ. 8 : 28 )

இம்மைக் காலத்தில் நாம்படும் துன்பங்கள் நம்மிடம் வெளிப்படப் போகிற மகிமையோடு ஒப்பிடவும் தகுதியற்றவை என எண்ணுகிறேன்
( உரோ. 8 : 18 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 42

# யேசுக்கிறிஸ்துநாதர் கடவுளுடைய திருமகனும் மெய்யான கடவுளுமாய் இருக்கிறர்

யேசுநாதர் ஜெருசலேம் கோயில் அபிஷேகத்தின் ஆண்டுவிழாவுக்குச் சென்றிருந்தார். அப்பொழுது. "என் பரலோக பிதாவும், நானும் ஒன்ருக இருக்கிறேம்" என்று உரைத்தார். உடனே யூதர்கள் அவரைக் கல்லால் அடிக்கக் கற்களை எடுத்தார்கள். அவர் கடவுளுக்கு எதிராக இகழ்ச்சியாய்ப் பேசினுர் என்று அவர்மேல் குற்றம் சாட்டினுர்கள். "நீ மனிதனுய் இருக்க, உன்னைத்தானே தெய்வமாக்குகிருயே" என்ருர்கள். யேசுநாதர் அவர்களுக்கு மறுமொழியாக, "நான் என்னைக் கடவுளுடைய மகன் என்று சொன்னதிலே, தேவதூஷணம் சொல்லுகிருய் என்று நீங்கள் சொல்லுகிறது என்ன? நான் செய்யும் கிரியைகளை விசுவசியுங்கள். அப்பொழுது பிதா என்னிலும், நான் பிதாவிலும் இருக்கிறதை நீங்கள் அறிவீர்கள்" என்ருர் (வாசி அரு. 10 : 28 38)

பரலோக பிதாவே வெளிப்படுத்தியிருக்கிருர், யேசுநாதர் தமது திருமகன் என்று. யோர்தான் நதியில் யேசுநாதர் ஞானஸ்நானம் பெறும்பொழுது வானினின்று பிதாவின் குரல் ஒலி உண்டாகி, "இவரே என் அன்பார்த்த மகன்; இவரிடம் நான் பூரிப்படைகிறேன்." (மத்தேயு 3 : 17) என்று ஒலித்தது. யேசுநாதர் மலைமீது மறுரூபமானபொழுது, பிதா இதேமொழிகளைப் பேசினுர்.

யேசுநாதரே தாம் கடவுளுடைய திருமகன் என்று அறிவித்தார். தம்மை "மகன்" (மத்தேயு 11 : 27) என்று சொல்லிக்கொண்டார். "நானும் தந்தையும் ஒன்றே" (அருளப்பர் 10 : 30) என்கிருர். கடவுளுடைய ஒரேபேருன திருமகன் அவரே. ஒருநாள் யேசுநாதர் அப்போஸ்தலர்களைப் பார்த்து; நீங்களோ என்னை யார்என்று சொல்லுகிறீர்கள்? என்று இயேசு அவர்களைக் கேட்டார். சீமோன் இராயப்பர் மறுமொழியாக, "நீர்மெசியா; உயிருள்ள கடவுளின் மகன்" என்ருர். அதற்கு இயேசு "யோனுவின் மகனுன சீமோனே, நீ பேறுபெற்றவன். ஏனெனில், இதை உனக்கு வெளிப்படுத்தியது மனிதவல்லமையன்று, வானகத்திலுள்ள என் தந்தையே" என்ருர். (வாசி மத்தேயு 16 : 15 — 17) பெரிய குரு யேசுநாதரைப் பார்த்து : "நீ தேவசுதனுகிய கிறிஸ்துதானே? என்று எங்களுக்குச் சொல்லும்படி சுயம்சீவிய கடவுளின் பொரால் ஆணையிட்டுக் கேட்கிறேன்" என்ருன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு யேசுநாதர் : ஆம், நானே அவர்" (மத்தேயு 26 : 63 — 64) என மறுமொழி கூறினர். — யேசுநாதர் தாம்செய்த புதுமைகளினாலும், தம் தூய வாழ்வினாலும் தாம் சொன்ன வார்த்தைகளுக்கு வன்மையுள்ள உறுதிப்பாட்டை அளித்தார். இந்த உறுதிப்பாட்டுக்குச் சான்ருகவே மரணத்தை ஏற்றுக்கொண்டார்.

யேசுநாதர் கடவுளுடைய திருமகனே என்று அப்பேஸ்தலர்களும் சான்று கூறினர்கள். இந்த உண்மைக்குச் சான்ருகத் தங்கள் உயிரைக் கொடுத்தார்கள. "கடவுள் தம் சொந்த மகன் என்றும் பாராமல், நம் அனைவருக்காகவும் அவரைக் கையளித்தார்." (உரோமையர் 8.32) என்று சின்னப்பர் எழுதுகிருர். அருளப்பரும், "தம் ஒரேபேருன மகனின் வழியாக நாம் வாழ்வுபெறும் பொருட்டு, கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினர். இதனுல் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளியிடப்பட்டது" (1 அரு. 4 : 9)" என்கிருர்.

யேசுநாதர் கடவுளுடைய ஒரேபேருன திருமகனுய் இருப்பதால் தான், அவரும் பிதாவைப்போலக் கடவுளாய் இருக்கிருர். "என் ஆண்டவரே, என் கடவுளே" என்று அறிவித்தார் தோமையார் (அரு. 20 : 28). "இவரே உண்மை இறைவன்" என்று வரைகிருர் அருளப்பர் (1 அரு. 5 : 20). "எல்லாவற்றிற்கும் மேலாக கடவுள் என்றென்றும் போற்றுதற்குரியவர் (உரோ. 9 : 5) என்று யேசுநாதரைக் குறிப்பிட்டு, அப்படிக் கடவுளாக ஆள்கின்ற கிறிஸ்துநாதர் அவரே எனச் சொல்லுகிருர் சின்னப்பர். யேசுநாதர் பிதா கொண்டுள்ள அதே தேவசுபாவத்தைக் கொண்டிருக்கிருர். திருப்பூசைப்பலியில் சொல்லப்படும் விசுவாசப் பிரமாணத்தின் வார்த்தைகளின்படி, "கடவுளில் கடவுள், ஒளியின் ஒளி, உண்மையான கடவுளின் உண்மையான கடவுள்; பிதாவோடு ஒரே பொருளாக இருக்கிறவர்" அவர் தான்.

எல்லாவற்றிலும் அவர் பிதாவோடு செயலாற்றுகிருர். பிதாவுக்குரிய அதே வணக்கத்தையும், மகிமையையும் பெறுகிருர்.

அப்போஸ்தலர் காலத்திலிருந்தே யேசுக்கிறிஸ்துநாதர் கடவுளுடைய திருமகன், மெய்யான கடவுள் என்று திருச்சபை ஏற்றுக் கொண்டு போதித்திருக்கின்றது. இந்த உண்மைக்கு மாருகப்போதிப்பவர்கள், விசுவாசமில்லாதவர்கள் — இவர்களிடமிருந்து அதைக் காப்பாற்றி வந்திருக்கிறது திருச்சபை. கணக்கற்ற வேதசாட்சிகள் தங்கள் இரத்தத்தைச் சிந்தி, இந்த உண்மையை முத்திரையிட்டிருக்கிருர்கள். பாப்புமார்களும், மேற்றிராணிமார்களும், குருக்களும், விசுவாசிகளும், கற்றவர்களும் கல்லாதவர்களும், நம்முடைய பெற்ருேர்களும் முன்ஞேர்களும் — இந்த விசுவாசத்தில் வாழ்ந்து மரித்திருக்கிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிந்தனைக்கு :** 1) பரலோகப் பிதா தமது திருமகன் யேசுநாதர் என, எந்தச் சந்தர்ப்பங்களில் கான்று பகர்ந்துள்ளார் ? 2) தாம் கடவுளுடைய திருமகன் என்று சொல்லுவதற்கு யேசுநாதர் எந்த வார்த்தைகளைக் கையாண்டார் ? 3) ' மக்கள் நான் யாரென்று சொல்லுகிறார்கள் ? ' என்று யேசுநாதர் கேட்டதற்கு, இராயப்பர் அவருக்கு என்ன கூறினார் ? 4) பெரிய குரு கேட்ட கேள்விக்கு யேசுநாதர் என்ன மறுமொழி தந்தார் ? 5) தம்முடைய வார்த்தைகளின் உண்மையை எண்பிக்கக் கிறிஸ்துநாதர் எடுத்துக்காட்டிய சான்றுகள் எவை ? 6) யேசுநாதர் கடவுளுடைய திருமகன், மெய்யான கடவுள் என்பதற்கு அப்போஸ்தலர்கள் சாட்சியாகக் கூறிய வார்தனதகள் எவை ? 7) யேசுநாதர் பிதாவுக்கு எந்த வகைகளில் சமமாயிருக்கிறார் ?

**என் வாழ்க்கைக்கு :** யேசுக்கிறிஸ்துநாதர் கடவுளுடைய திருமகன் என்று நான் உறுதியாகவும் பணிவுடனும் விசுவசித்து, மக்களுக்கு முன் சாட்சி பகர்வேன்.

**வேதாகமத்திலிருந்து :** " கடவுளுடைய திருமகனை விசுவசிக்கிறவன் தீர்வையிடப்படமாட்டான். அவரை விசுவசியாதவனோ, கடவுளுடைய ஒரேபேறான திருமகனுடைய பெயரில் விசுவாசமாய் இராததினால், ஏற்கனவே தீர்வையிடப்பட்டிருக்கிறான் " ( அரு. 3 : 12 ).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 43

# புறக்கணிக்கப்பட்ட இறைமகன்

இயேசுநாதர் தாம் கடவுளுடைய திருமகன் என்றும், ஒருநாள் தாம் வானமேகங்களின்மேல் மறுபடியும் உலகில் வருவார் என்றும், யூதர்களின் நீதிமன்றத்தில் அறிவித்தார். "அதைக்கேட்ட தலைமைக் குரு தம்முடைய ஆடைகளைக் கிழித்துக்கொண்டு "இவன் தேவதூஷணம் சொன்னான். நமக்கு இன்னும் சாட்சிகள் எதற்கு? இதோ! இப்பொழுது தேவதூஷணம் கேட்டீர்களே. உங்கள் கருத்து என்ன?" என்று கேட்டார். அவர்களோ மறுமொழியாக "இவன் சாவுக்குரியவன்" என்றார்கள் அப்பொழுது அவர்கள் அவருடைய முகத்தில் துப்பி அவரை அடித்தார்கள். சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து 'மெசியாவே உன்னை அறைந்தவன் யாரென்று எங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்" என்றார்கள் (மத். 2 : 63 — 67).

கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் யேசுநாதருடைய போதனையைக் கேட்டிருந்தார்கள்; அவர் செய்த அரும்பெரும் புதுமைகளையும், அவருடைய புனித வாழ்க்கையையும் பார்த்திருந்தனர். அப்படியிருந்தும், அவர்களில் அநேகர் அவர் உலகிற்குக் கொண்டுவந்த நற்செய்திக்குச் செவிமடுக்க மறுத்துவிட்டனர். அவர்களுடைய தலைவர்கள் கடவுளுடைய திருமகனுக்கு எதிராக மக்களை ஏவிவிட்டார்கள்; அவரைச் சாவுக்குத் தீர்வையிட்டனர். அவருடைய சீடர்களில் பலர் அவரைவிட்டு விலகிக்கொண்டனர். அப்போஸ்தலர்களில் ஒருவனாகிய யூதாஸ் அவரைப் பகைவர்களிடம் காட்டிக்கொடுத்தான். "அவர் தமக்குரிய இடத்திற்கு வந்தார்; அவருக்குரியவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" (அரு. 1: 11).

மக்களை இந்தப் பாவங்களுக்கெல்லாம் அழைத்துச் சென்றது பாசசுதான். மக்கள் யேசுநாதரின்மேல் விசுவாசம்வைத்து, அவரைப் பின்பற்றி விட்டால், தன்னுடைய ஆதிக்கம் ஒரு முடிவுக்கு வந்துவிடுமென அவன் இப்பொழுது கண்டுகொண்டான். ஆகையால், சேசுநாதர் கொண்டுவந்த நற்செய்தியை மக்கள் புறக்கணித்து அவரைக் கொன்றுவிட வேண்டுமெனத் தன் முழுப் பலத்தையும் பயன்படுத்தினான்.

கடவுளுடைய திருமகனை மக்கள் புறக்கணித்தது அச்சத்துக்குரிய ஆழ்ந்த ஒரு பரம இரகசியம். இவ்வாறு அவரைப் புறக்கணித்ததில் மனிதனுடைய கொடிய பாவ நிலையும், பலவீனமும் காணக்கிடக்கின்றன. பாவம் மக்களுடைய இருதயத்தில் எவ்வளவு பயங்கர அழிவு வேலையை விளைவித்திருக்கிறதென அது நமக்குக் காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிந்தனைக்கு :** 1) "அவர் தமக்குச் சொந்தமானவர்களிடத்தில் வந்தார்; ஆனால், அவருக்குச் சொந்தமானவர்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை" என்றவார்த்தைகளுக்கு விளக்கம் கூறுக. 2) யேசு நாதர் தம்முடைய பாடுகளைத் துவக்குமுன் அந்த இரவு அப்போஸ் தலர்கள் அவர்பால் எப்படி நடந்துகொண்டனர்? 3) யேசுநாதருடைய நற்செய்தியை மக்கள் புறக்கணித்து அவரைக் கொலைசெய்யுமாறு பசாசு அவர்களை ஏமாற்றுவதற்கு அவ்வளவு முயற்சித்தது ஏன்? 4) கடவுளுடைய திருமகனை மக்கள் புறக்கணித்தார்கள் என்பதி லிருந்து நாம் அறிவது என்ன?

**என் வாழ்க்கைக்கு :** என் பாவங்களை நான் சிறியனவாகக் கருத மாட்டேன். ஏனெனில், அவைகளும் கிறிஸ்துநாதர் அனுபவிக்க வேண்டிய வேதனைகளை மிகுதியாக்கின.

**வேதாகமத்திலிருந்து :** இயேசுநாதர் ஜெருசலேமைப்பற்றி முறை யிட்டார்; அந்த நகரம் பாவங்களுக்காகப் பரிகாரம்செய்ய மறுத்து விட்டது. "ஜெருசலேமே இறைவாக்கினர்களைக் கொன்றவர்களையும், உன்னிடம் அனுப்பப்பட்டோரை கல்லால் எறிந்தோரையும். ஜெருசலேமே கோழி தன்குஞ்சுகளை இறக்கைக்குள் ஒன்றுசேர்ப்பதுபோல நான் உன் மக்களை ஒன்றுசேர்க்க எத்தனையோமுறை விரும்பினேன். நீயோ உடன் படவில்லை" (மத்தேயு 23 : 37) எபிரேயருக்கு எழுதிய திருமுகத் தில் புனித சின்னப்பர் பாவிகளைப்பற்றிச் சொல்லுகிறார் "அவர்கள் கடவுளுடைய மகனைத் தாங்களே சிலுவையில் அறைந்து அவரை வெளிப்படையாக இகழ்பவர்களாகின்றனர்." (எபிரேயர் 6: 6).

**திருச்சபையின் வாழ்விலிருந்து :** உலக மீட்பருடைய முறைப்பாடு பிரலாபங்களைத் திருச்சபை பெரிய வெள்ளிக்கிழமையன்று பாடுகின் றது. அவர் தெரிந்துகொண்ட மக்களும், மனுக்குலம் முழுவதுமே புரிந்த நன்றியறியாமையைப்பற்றி உலக மீட்பர் பிரலாபிக்கிறார்: "என் பிரசையே உனக்கு நான் என்ன செய்தேன்? உனக்கு நான் என்ன துன்பம் கொடுத்தேன்? எனக்குப் பதில்சொல். எகிப்துநாட்டின் அடிமைத்தனத்தினின்று உன்னை நான் மீட்டுக்கொண்டு வந்ததற் காகவோ, நீ உன் மீட்பருக்குச் சிலுவையைத் தயாரித்து வைத்தாய்??

**செய்யவேண்டியவை :** மனிதனுடைய பாவநிலையும் பாலவீனமும் யேசு நாதருடைய பாடுகளின்பொழுது : (அ) மக்களுடைய தலைவர்களிடத் தில் (ஆ) யூத மக்களிடத்தில், (இ) போஞ்சு பிலாத்துவினிடத்தில், (ஈ) யூதாசினிடத்தில், (உ) இராயப்பரிடத்தில், (ஊ) மற்ற அப்போஸ் தலர்களிடத்தில் —எவ்வாறு வெளியாகின்றன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 44

# கிறிஸ்துநாதரும் சிலுவையும்

**"அவர் போஞ்சு பிலாத்துவின் அதிகாரத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்துக் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார்."**

(விசுவாசப் பிரமாணத்தின் 4 ஆம் சத்தியம்)

யேசுநாதருக்கு மரண தண்டனை விதித்தபின், அவரைச் சிலுவையில் அறைவதற்காக நகருக்கு வெளியே நடத்திச் சென்றனர். யேசுநாதர் சிலுவையைத் தாமே சுமந்துகொண்டு போனார். எபிரேய மொழியில் 'கொல்கொத்தா' அதாவது, "மண்டை ஓட்டின் இடம்" என்று அழைக்கப்பட்ட கல்வாரி இடத்திற்கு ஏறிச்சென்றார். அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். அப்பொழுது யேசுநாதர்: 'பிதாவே, இவர்களை மன்னித்தருளும்; ஏனெனில், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்' என்று மன்றாடினார். ஒன்பதாம் மணிநேரத்தில் "எல்லாம் நிறைவேறிற்று" என்றார். பிறகு உரத்த சத்தத்தோடு கூப்பிட்டு "பிதாவே, என் ஆத்துமத்தை உம்முடைய கைகளில் ஒப்புக்கொடுக்கிறேன்" என்று சொன்னார். பின் தலைகுனிந்து உயிர் துறந்தார். (வாசி அரு. **19 : 16 — 42**)

தம்முடைய பகைவர்கள் தம்மைச் சாவுக்குத் தீர்வை இடுவார்கள், சிலுவையில் அறைவார்கள் என்று கிறிஸ்துநாதர் அறிந்திருந்தார். அன்றியும் தம் பரலோக பிதாவின் திருச்சித்தத்தின்படி மக்களை மீட்பதற்காக இந்தப் பாடுகளையும் சாவையும் அனுபவிக்க வேண்டுமென்று அவர் அறிந்திருந்தார். யேசுநாதர் சிலுவை மரணத்தைத் தம் சுயமனதோடு ஏற்றுக்கொள்ள முன்வந்தார். "எனதுயிரை என்னிடமிருந்து பறிப்பவன் எவனுமில்லை நானாகவே என்னுயிரைக் கையளிக்கிறேன். உயிரைக் கையளிக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு. அதனை மீண்டும் பெற்றுக்கொள்ளவும் அதிகாரம் உண்டு."

அருளப்பர் **10 : 18**

யேசுநாதர் இறுதி மூச்சுவரையிலும் தம் பரலோக பிதாவின் திருச்சித்தத்தை நிறைவேற்றினார்; வேதனை, மரணத்தின் கொடுமை இவைகளைக் கண்டு, அவருடைய உள்ளம் பின்வாங்கி இருக்கலாம். ஆனால், யேசுநாதர் "சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும், சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிபவரானார்." (பிலிப். **2; 8**). "நான் தந்தைக்கு அன்பு செய்கிறேன் என்பதையும், அவர் எனக்குக் கட்டளையிட்டபடி நடக்கிறேன் என்பதையும் உலகம் தெரிந்துகொள்ள வேண்டும்." (அருளப்பர் **14 :31**).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேசுநாதர் மனிதர்களாகிய நம்மை எவ்வளவு நேசித்தார் என்ருல், அவர் நமக்காக மரித்தார். "அவர்கள் பழித்துரைத்தபோது, அவர் எதிர்த்துப் பழிக்கவில்லை. துன்புற்றபோது அச்சுறுத்தவில்லை" (1 இராயப்பர் 2 : 23). அது மட்டுமன்று, சிலுவையில் தொங்கும் பொழுதுங்கூடத் தம்முடைய பகைவர்களுக்காக மன்ருடிஞர். யேசுநாதர் அன்பிஞலே பாவிகளாகிய நமக்காகத் தமது உயிரைக் கொடுத்தார்.

**சிந்தனைக்கு :** 1) யேசுநாதர் தமது இவ்வுலக வாழ்வு முடியப்போகும் வகையைப்பற்றி என்ன அறிந்திருந்தார்? 2) யேசுநாதருக்குக்கூடத் தம் பரலோகப் பிதாவின் திருச் சித்தத்தை நிறைவேற்றுவது கடினமாக இருந்தது ஏன்? 3) யேசுநாதர் யாருக்காகத் தமது உயிரைக் கொடுத்தார்?

**என்வாழ்க்கைக்கு :** நான் ஆண்டவருடைய பாடுகளை அன்போடும், அனுதாபத்தோடும் நினைப்பேன். நான் கடவுளின் திருச்சித்தத்தை எப்பொழுதும் செய்வதற்கு எனக்கு உதவ அவரை மண்ருடுவேன்.

**வேதாகமத்திலிருந்து :** ஒலிவேத்து மலையில் யேசுநாதர் செபித்தார்: "தந்தையே உமக்கு விருப்பமாஞல், இத்துன்பக்கலத்தை என்னிடமிருந்து அகற்றியருளும்; எனினும், என் விருப்பம் அன்று, உம் விருப்பமே நிறைவேறட்டும்" என்று மண்ருடிஞர் (லூக். 22 : 42). "தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு யாரிடமும் இல்லை" (அரு. 15 : 13)

**திருச்சபையின் வாழ்விலிருந்து :** சிறந்த முறையில் பரிசுத்த வாரத்தில், இன்னும் குறிப்பாகப் பெரிய வெள்ளிக்கிழமையன்று, ஆண்டவருடைய பாடுகளை நாம் நினைவுபடுத்திக்கொள்ளுகிருேம். ஆண்டில் வரும் மற்ற வெள்ளிக்கிழமைகளும் கூட ஆண்டவருடைய பாடுகளின் நினைவுக்காகக் குறிக்கப்பட்டுள்ளன. இக்காரணத்தை முன்னிட்டுத்தான் வெள்ளிக்கிழமைகளில் நாம் இறைச்சி உண்பதில்லை. அவர் பூங்காவனத்தில் பட்ட மரண அவஸ்தையின் ஞாபகமாக வியாழக்கிழமையிலும் சில இடங்களில் கோவில்மணிகள் ஒலிப்பதில்லை,

நாம் சிலுவை வணக்கஞ் செய்வதிஞல் செபமாலையின் துக்க தேவ இரகசியங்களைச் சொல்லிச் செபிப்பதிஞல், ஐந்து திருக்காயப் பத்தி முறையைச் செய்வதிஞல், பெரிய வெள்ளிக்கிழமைத் திருச்சடங்குகளில் கலந்துகொள்வதிஞல், நமது ஆண்டவருடைய பாடுகளுக்காக வணக்கம் செய்கிருேம். சில நாடுகளில் பெருஞ்சாலை முற்றங்களில் காணும் சிலுவைகளில் இந்த வார்த்தைகளை வாசிக்கிருேம் : "நான் உனக்கு இவ்வளவு செய்தேன் ; நீ எனக்கு என்ன செய்கிருய்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செய்ய வேண்டியவை :** 1) யேசுநாதர் தாம் பாடுகள் படப்போவதாக முன்கூட்டிச் சொன்ன வார்த்தைகள் எவை? 2) யேசுநாதர், (அ) ஒலிவேத்தூத் தோட்டத்தில், (ஆ) தம்மை விசாரித்த நீதிபதிகளுக்கு முன், (இ) சிலுவையில் அறையக் கொண்டுபோகும் வழியில், (ஈ) சிலுவையில் தொங்கும்பொழுது — சொல்லிய வார்த்தைகளை எடுத்து எழுதுக. 3) யேசுநாதருடைய பாடுகளைக் கூறும் சில பாடல்களைத் தருக. 4) சிலுவைப்பாதையின் பதினன்கு ஸ்தலங்களையும் சொல். 5) செபமாலையின் துக்க தேவரகசியங்கள் ஐந்தையும் சொல். 6) கிறிஸ்துநாதருடைய பாடுகளையும் மரணத்தையும் பற்றிச் சிந்திப்பது வாழ்க்கையில் எப்பொழுது மிக அவசியமாகும்? 7) நமது பங்குக் கோயிலில் சிலுவையை எங்கெங்கே காணலாம்? நமது ஆண்டவருடைய பாடுகளின் மற்றக் காட்சிகள் எங்கெங்கே வைக்கப்பட்டிருக்கின்றன? 8) கிறிஸ்துநாதருடைய பாடுகளைக் காட்டும் படங்களைச் சேர்த்துவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 45

# யேசுக்கிறிஸ்துநாதர் தம்முடைய மரணத்தால் நம்மை மீட்டிருக்கிறுர்

"அவரே இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுவித்து, தம் அன்பார்த்த மகனுடைய அரசில் கொண்டுவந்து சேர்த்தார். இம் மகனுல்தான் நமக்கு மீட்பு உண்டு, பாவமன்னிப்பு உண்டு'' (கொலோசேயர் 1: 13—14).

நமது ஆண்டவர் மரணம் வரையிலும் கீழ்ப்படிந்தார். இந்தக் கீழ்ப்படிதலினுல் ஆதாமினுடையவும், அவருடைய சந்ததிகளுடையவும் கீழ்ப்படியாமைக்குப் பரிகாரம் செய்தார். தம்முடைய கொடிய பாடுகளின் பயனுல் யேசுநாதர் நம்மைச் சென்மப் பாவத்தின் தோஷத்தினின்றும் விடுவித்தார். நம் சொந்தப் பாவங்களினின்றும் விடுவித்தார். நித்திய நரக தண்டனையினின்றும் காப்பாற்றினுர். யேசுநாதருடைய பாடுகளும் மரணமும் அளவற்ற மதிப்புக்குரியவை. ஏனெனில், அவர் கடவுளுடைய திருமகனுக இருக்கிறுர்.

யேசுநாதர் தமது சிலுவை மரணத்தால் பசாசின்மேல் வெற்றி கொண்டார். சாத்தானுடைய வலிமையை முறித்தார்; நம்மை அவனுடைய ஆட்சியினின்று விடுவித்தார். "கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிறவர்களுக்கு இனித் தண்டனைத் தீர்ப்பு என்பதில்லை'' (உரோமையர் 8:1).

தமது மரணத்தால் யேசுநாதர் நமக்கு நித்திய வாழ்வை மீண்டும் அடைந்து தந்தார். அவர் நமக்கு முன்னே தமது பரலோகப் பிதாவிடம் சென்றிருக்கிறுர்; நாம் அவரைப் பின்செல்ல வேண்டியவர்கள். அங்கே அவரோடும், பிதாவோடும் என்றென்றும் இன்புற்று வாழ வேண்டியவர்கள். வரப்போகும் பேரின்ப வாழ்வின் மகிமை அனைத்தையும் தமது மரணத்தால் சம்பாதித்து நமக்குக் கொடுத்திருக்கிறுர்,

மேற்கொண்டு,நமக்குத் தேவையான வரப்பிரசாதங்களையும் யேசுநாதர் நமக்குப் பெற்றுத் தந்திருக்கிறுர். நாம் இப்பொழுதும் கடவுளுடைய பிள்ளைகளாக வாழக்கூடியவர்களென்றுல், அதற்காக நமது மீட்பருடைய பேரன்புக்கே நாம் கடப்பாடுள்ளவர்களாயிருக்கிறேம். பரிசுத்தமானவை யாவும், திருச்சபையை நிரப்பும் உயிரும், நமது மீட்பரும் இரட்சகருமான யேசுநாதருடைய திரு இருதயத்திலிருந்து புறப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிந்தனைக்கு :** யேசுநாதர் தம் மரணத்தால் எதற்காகப் பரிகாரம் செய்திருக்கிருர் ? 2) சாத்தானுடைய ஆட்சியிலிருந்து யேசுநாதர் நம்மை எவ்வாறு மீட்டிருக்கிருர் ? 3) யேசுநாதர் நமக்குச் சம்பாதித்திருக்கும் வரப்பிரசாதங்கள் எவை ?

**என் வாழ்க்கைக்கு :** நான் செல்லும்வழியில் திருச்சிலுவையைக் காணும்பொழுது, "திவ்விய யேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி, உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிரும்; ஏனென்ருல், உமது திருச்சிலுவையைக்கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்" என்று சொல்லி, என் மீட்பரை வாழ்த்துவேன். ஒவ்வொரு கிறிஸ்தவ இல்லத்திலும் மதிப்புக்குரிய இடத்தில் சிலுவை இருத்தல் வேண்டும்.

**வேதாகமத்திலிருந்து:** "மனுமகன் பணிவிடை பெறுவதற்கன்று; பணிவிடை புரியவும், பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கவும் வந்தார்". (மாற்கு 10 : 45)—"அவர் தண்டனைக்குள்ளானவர் எனவும், கடவுளால் ஒதுக்கப்பட்டவர் எனவும், வாதிக்கப்பட்டவர் எனவும் நாம் எண்ணினும். ஆனல், நம் பாவங்களுக்காகவே அவர் காயப்பட்டார்; நம் அக்கிரமங்களுக்காகவே அவர் நொறுக்கப்பட்டார்; நம்மை நலமாக்கும் தண்டனை அவர்மேல் விழுந்தது; அவருடைய காயங்களால் நாம் குணமடைந்தோம்". (இசை. 53 :4—5) —"ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையால், அனைவரும் பாவிகளானது போல், ஒருவரின் கீழ்ப்படிதலால் அனைவரும் இறைவனுக்கு ஏற்புடையவர்கள் ஆவார்கள்" (உரோமையர் 5 : 19)

**திருச்சபையின் வாழ்விலிருந்து :** "சர்வேசுரனுடைய செம்மறிப் புரவையே, உலகத்தின் பாவங்களைப் போக்குகிறவரே, எங்கள்மேல் இரக்கமாயிரும்" என்று திருப்பலிப் பூசையில் நற்கருணை உட்கொள்ளுமுன் செபிக்கிரேும்.

**பெரிய வியாழக்கிழமை திருப்பலிப் பூசையின் நுழைதல் வாக்கியம் :**

"நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் சிலுவையிலன்றி, வேறெதிலும் ஒருகாலும் பெருமைபாராட்ட மாட்டேன்; அந்தச் சிலுவையின் வழியாகவே உலகம் எனக்கு அறையுண்டதாய் இருக்கிறது;
(கலாத்தியர் : 6 :14.)

பெரிய வெள்ளிக்கிழமையன்று, குரு மூடியிருந்த சிலுவையைத் திறந்துகாட்டி, "இதோ! சிலுவை மரம்; இதில் உலகத்தின் மீட்புத் தொங்கினதே" என்று மும்முறை பாடுகின்ருர். அப்பொழுது எல்லாரும் முழந்தாட்படியிட்டு, "வாருங்கள் வணங்குவோம்" என்று பதில் அளிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 46

# முடிவில்லாப் பலி

"கிறிஸ்து தம்மையே கடவுளுக்கு நறுமணம் வீசும் காணிக்கையும் பலியுமாக நம்மை முன்னிட்டுக் கையளித்தார்"

(எபேசியர் 5 : 2)

காலம் துவங்கினதிலிருந்தே, மனிதர் கடவுளுக்குக் காணிக்கைகளை ஒப்புக்கொடுத்து வந்தனர். கடவுளே எல்லாவற்றிற்கும் ஆண்டவர் என்று அவருக்கு வணக்கம் செலுத்திச் செபத்தோடு, கண்ணால் காணக்கூடிய காணிக்கைகளையும் தயாரித்துக் கொடுத்தார்கள். மனிதர் தங்களையே கடவுளுக்குக் கொடுக்கத் தங்கள் உள்ளத்தில் இருக்கும் ஆசையை வெளிப்படையாக அந்தக் காணிக்கைகள் வழியாக அறிவித்தார்கள்; தாங்கள் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்தவும், அவருடைய பிரியத்தை அடையவும், அல்லது தாங்கள் செய்த பாவங்களுக்குப் பரிகாரம் செய்யவும் காணிக்கைகளை ஒப்புக்கொடுத்தனர். பழைய ஏற்பாட்டின் காலங்களில் அவ்வித பலிகளை ஒப்புக்கொடுக்குமாறு கடவுளே கட்டளையிட்டிருந்தார்.

பழைய உடன்படிக்கையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட பலிகள் சிலுவைப் பலியில்தான் முழு நிறைவைப் பெற்றன. இந்தச் சிலுவைப்பலியில் யேசுநாதர் தம்மையே நமக்காகத் தமது பிதாவுக்குக் கையளித்தார். அவருடைய பலிதான் புதிய உடன்படிக்கையின் பலி.

யேசுநாதருடைய திருப்பாடுகளும், மரணமும் அளவில்லாத மதிப்புப்பெற்ற பலியாக இருந்தது. கடவுளுடைய திருமகன் மனிதனாக வந்து இப்பலியில் அதேசமயத்தில் ஒப்புக்கொடுக்கும் குருவாகவும், ஒப்புக்கொடுக்கப்படும் பொருளாகவும் இருந்தார். அவர் தம்மையே அன்புடனும், தம்மையே முழுவதும் கையளிக்கும் மனப்பான்மையுடனும் தமது பிதாவுக்கு ஒப்புக்கொடுத்தார்.

கிறிஸ்துநாதர் மனுக்குலத்திற்கே பெரிய குரு. எல்லா மக்களுக்காகவும், எல்லாக் காலத்திற்காகவும் தமது பலியை ஒப்புக்கொடுத்தார். இக்காரணத்தினால்தான் புதிய உடன்படிக்கையில் ஒரே ஒரு பலிதான் உண்டு. அதாவது, நாம் ஒப்புக்கொடுக்கும் ஒவ்வொரு பலிப்பூசையிலும் நமது ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்துநாதருடைய சிலுவைப்பலி புதுப்பிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிந்தனைக்கு:** 1) யேசுநாதருடைய பலி அளவில்லாத மதிப்புள்ளதாயிருப்பது ஏன்? 2) யேசுக்கிறிஸ்துநாதர் ஏன் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தார்? 3) யேசுக்கிறிஸ்துநாதர் யாருக்காகத் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தார்? 4) புதிய உடன்படிக்கையில் ஏன் ஒரே ஒரு பலிதான் உண்டு? எப்பொழுது சிலுவைப்பலி புதுப்பிக்கப் படுகிறது?

**என் வாழ்க்கைக்கு:** ஒவ்வொரு பலிப்பூசையிலும் என்னையும் யேசுநாதருடைய பலியோடு சேர்த்துக்கொள்வேன்; பிதாவுக்கு என்னை முழுதும் ஒப்புக்கொடுப்பேன்.

**வேதாகமத்திலிருந்து:** "நமது ஆண்டவர் கடைசி இராப்போசனத்தின்போது, அவர்கள் உண்மையிலேயே அர்ச்சிக்கப் பெறும்படி அவர்களுக்காக என்னையே அர்ச்சனையாக்குகிறேன்" என்றார். (அருளப்பர் 17 : 19) — "நீங்கள் புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படி பழைய புளிப்பு மாவை அப்புறப்படுத்துங்கள். நீங்கள் புளியாத அப்பமன்றோ? ஏனெனில், நமது பாஸ்காப்பலி நிறைவேறிவிட்டது" (1 கொரிந்தியர் 5 : 7) — "இவர் என்றென்றைக்கும் பயன்தரும் ஒரு பலியைப் பாவங்களுக்காக ஒப்புக்கொடுத்து, கடவுளின் வலப்புறத்தில் அமர்ந்துள்ளார். தாம் பரிசுத்தராக்கியவர்களை ஒரே பலியினால் என்றென்றைக்கும் நிறைவுள்ளவராக்கினார்." (எபிரேயர் 10 : 12—14).

**திருச்சபையின் வாழ்விலிருந்து :** பீடத்தின்மேல் சிலுவை வைக்கப்பட்டிருக்கின்றது. அதே பீடத்தில் கிறிஸ்துநாதருடைய பலி புதுப்பிக்கப்படுகிறதென நமக்கு நினைவூட்டுகின்றது அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 47

# யேசுக்கிறிஸ்துநாதர் மரித்தோரிடம் சென்றார்

## "அவர் பாதாளத்தில் இறங்கினார்"

(விசுவாசப் பிரமாணத்தின் 5-ஆம் சத்தியம்)

யேசுநாதர் சிலுவையில் மரித்தபின், அரிமத்தேயா என்ற ஊரைச் சேர்ந்த யோசேப் என்பவர் பிலாத்துவிடம் சென்றார். மரித்த யேசு நாதருடைய உடலைக் கொடுக்கும்படி கேட்டார். அந்த உடலை எடுத்து தூய பரிவட்டத்தினால் போர்த்து, தான் கற்பாறையிலே வெட்டியிருந்த புதிய கல்லறையில் அதை அடக்கம் செய்தார். கல்லறை வாயிலில் ஒரு பெருங் கல்லைப் புரட்டிவைத்துப் போனார். பெரிய குருவும் பரிசேயர்களும் அந்தக் கல்லின்மேல் முத்திரை வைத்தார்கள். காவல் சேவகரை வைத்துக் கல்லறையைப் பத்திரப் படுத்தினார்கள்.

(வாசி மத்தேயு 27 : 57—66)

யேசுநாதர் சிலுவையில் உயிர் விட்டதும், அவருடைய ஆன்மா உடலைவிட்டுப் பிரிந்தது. ஆனால் அவருடைய தெய்வீகம் அவருடைய ஆன்மாவோடும், உடலோடும் ஒன்றித்திருந்தது.

யேசுநாதருடைய ஆன்மா இறந்த நல்லவர்களுடைய ஆன்மாக்கள் இருந்த பாதாளத்திற்கு இறங்கிச் சென்றது. தங்களுடைய மீட்புக்காக அங்கே அவர்கள் காத்துக்கொண்டிருந்தனர். அந்த நல்லவர்களுக்குள் ஆதாம், ஏவாள், பிதாப்பிதாக்கள், தீர்க்கதரிசிகள், ஸ்நாபக அருளப்பர் இவர்களுடைய ஆன்மாக்களும் அங்கு இருந்தன. அவர்கள் அதுவரை மோட்சத்திற்குப் போகவில்லை. ஏனெனில், ஆதாம் பாவம் செய்ததினால் மோட்சம் மூடப்பட்டிருந்தது. இப்பொழுதுதான் அவர்கள் மீட்கப்பட்டார்கள் என்று யேசுநாதர் அறிவித்தார்.

மரித்த நல்லவர்களுடைய ஆன்மாக்கள் இருந்த இடம் பாதாளம் என்று விசுவாசப் பிரமாணத்தில் சொல்லப்படுகின்றது. பழங்காலத்தில் பாதாளம் என்பது மரித்தவர்களுடைய உலகம் என்று வழங்கப் பட்டது. இந்த இடமும், தண்டிக்கப்பட்டவர்களுடைய நரகமும் ஒன்றன்று. பாதாளம் என்ற இடத்திற்குப் பிறமொழியில் 'லிம்போ' எனப் பெயர் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேசுநாதருடைய உடல் குளிரிட்டு, அசைவின்றி இருந்தது. அப்படியே கல்லறையில் மூன்றுநாள்வரை இருந்தது. ஆனால், அது அழியாமல் காப்பாற்றப்பட்டது. "உம் புனிதர் அழிவுகாண விடமாட்டீர்" (சங்கீதம்:5: 10) என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

**சிந்தித்துப்பார்: 1)** "லிம்போ" வில் இருந்தவர்கள் யார்? 2) யேசுநாதர் மரிக்குமுன் ஒருவரும் மோட்சம்போக முடியாதது என்? 3) மரித்த நல்லவர்களுடைய ஆன்மாக்களுக்கு யேசுநாதர் என்ன அறிவித்தார்? 4) யேசுநாதருடைய உடல் எதிலிருந்து காப்பாற்றப்பட்டது?

**என் வாழ்க்கைக்கு:** ஒருநாள் நாம் எல்லோரும் மரிக்க வேண்டும் என்பதை ஒவ்வொரு கல்லறையும் நமக்கு நினைப்பூட்ட வேண்டும்; அப்படியே நாம் அனைவரும் மறுபடியும் உயிர்ப்போம் என்பதையும் அது ஞாபகப்படுத்தும்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 48

# யேசுக்கிறிஸ்துநாதர் மரித்தோரிடமிருந்து உயிர்த்தார்

**"அவர் மூன்றும்நாள் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்"**
(விசுவாசப் பிரமாணத்தின் 5-ஆம் சத்தியம்)

வாரத்தின் முதல்நாள் விடியற்காலையில் மதலேன் மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள். அதோ பெரிய நிலநடுக்கம் உண்டாயிற்று. ஆண்டவரின் தூதர் வானினின்று இறங்கி வந்து கல்லைப் புரட்டி, அதன்மேல் அமர்ந்தார். வானதூதர் பெண்களைநோக்கி "அஞ்சாதீர்கள்; சிலுவையில் அறையுண்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை. தாம் கூறிய படியே உயிர்த்துவிட்டார்", (மத்.28;1—6).

யேசுநாதர் மரித்த மூன்றும்நாள் காலை, மரித்தோரிடமிருந்து மகிமையோடு உயிர்த்தார். அவருடைய உடலும், ஆன்மாவும் இப்பொழுது ஒன்றிக்கப்பட்டன; இனி என்றென்றைக்கும் சேர்ந்து இருக்கும். அந்த ஆன்மாவும், சரீரமும் பரலோக மகிமையால் நிரப்பப்பட்டன. அவருடைய உடல் மகிமை அடைந்தது; அவருடைய ஆன்மா அளவற்ற மகிழ்ச்சியால் நிறைந்தது. அவர் தம்முடைய அப்போஸ்தலர்களுக்கு முன் தோன்றினுர். ஆனுல், அவர் முன்னுள், அப்போஸ்தலர்களோடு தங்கியிருந்ததுபோல, இப்பொழுது தங்கவில்லை.

யேசுநாதர் தம் சொந்த வல்லமையால் கல்லறையிருந்து உயிர்த்தார்: ஏனெனில், அவர் கடவுளுடைய திருமகன்; கடவுளுக்குரிய வல்லமை அவருக்கு உண்டு. ஆனுல், அதே சமயத்தில் அவர் மெய்யான மனிதன். அதனுல்தான் அவர் மரித்தோரிடமிருந்து "எழுப்பப்பட்டார்" என்று வேதாகமங்கள் பல இடங்களில் கூறுகின்றன.

"கிறிஸ்து இனிமேல் இறக்கமாட்டார். இனி அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்லர்". (உரோமையர் 6—9).

தம்முடைய உயிர்ப்பினுல் யேசுநாதர் மகிமையை அடைந்தார். முன்பு அவருடைய பகைவர்கள் அவரைப் புறக்கணித்தார்கள்; தேவ தூஷணக்காரன் என்று அவரைக் கொலை செய்தனர். ஆனுல் அவர் உயிர்த்து எழுந்ததால், அவர் மெய்யாகவே வாக்களிக்கப்பட்ட மீட்பர்; கடவுளுடைய திருமகன் என்று உறுதிப்படுத்தினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இறந்தோரிடமிருந்து கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்; துஞ்சினோரின் முதற்கனி அவரே" (1 கொரி 15:20). நாமும் உயிர்ப்போம் என்பதற்கு அவருடைய உயிர்ப்பு நமக்கு உறுதிப்பாட்டை அளிக்குறது. "அவர் அனைத்தையும் தமக்குக் கீழ்ப்படுத்த வல்ல ஆற்றலால் தாழ்வுக்குரிய நம் உடலை, மாட்சிமைக்குரிய தம் உடலின் சாயலாக உருமாற்றுவார்" (பிலிப்பியர் 3 : 21). புதிய படைப்புக்குத் தொடக்கமாயிருக்கிறது அவருடைய உயிர்ப்பு.

உயிர்த்த நமது ஆண்டவராகிய கிறிஸ்துநாதர் நாம் ஞானஸ்நானம் பெறும்பொழுது. நம்மைப் பாவத்தின் மரணத்திலிருந்து எழுப்புகிறார்; அவருடைய தெய்வீக உயிரில் நாம் பங்குபெறச் செய்கிறார். இந்த அருள்வாழ்வு நம்மில் இப்பொழுது மறைந்து இருக்கிறது உண்மைதான்; ஆனால், அவர் மறுமுறை உலக முடிவில் வரும்நாள் அந்த வாழ்வு வெளியாகும்.

**சிந்தனைக்கு :** 1) யேசுநாதர் உயிர்த்தபின் எப்படியிருந்தார்? 2) யேசுநாதர் மரித்தோரிடமிருந்து தம் சொந்த வல்லமையால் எப்படி உயிர்க்கக்கூடும்?? 3) யேசுநாதர் தம் சொந்த வல்லமையால் உயிர்த்தபோதிலும் அவர் "எழுப்பப்பட்டார்" என்று சொல்லுவதேன்? 4 யேசுநாதர் சாவை வென்றார் என்று எப்படிச் சொல்லலாம்? 5) "மரண நித்திரை அடைந்தவர்களுக்குள் கிறிஸ்துநாதர் முதல் பலனாக இருக்கிறார்" என்பதற்கு என்ன பொருள்? 6) கிறிஸ்துநாதர் தம்முடைய தெய்வீக உயிரில் நாம் பங்குபெறச் செய்வதெப்படி ?

**எனது வாழ்விற்கு:** நான் ஞானஸ்நானம் பெற்றபொழுது, பாவத்தின் சாவிலிருந்து உயிர்த்தேன்; இருளிலிருந்து ஒளிக்குக் கொண்டுவரப்பட்டேன். இப்பொழுது, ஒளியின் பிள்ளையாக வாழ்வேன.

**வேதாகமத்திலிருந்து:** "மனிதன் வழியாகச் சாவு உண்டானது போல, மனிதன் வழியாகவே, இறந்தோர்க்கு உயிர்த்தெழுதலும் உண்டு. ஆதாமில் அனைவரும் இறந்ததுபோல கிறிஸ்துவில் எல்லாரும் உயிர் பெறுவர்" (1 கொரி. 15 : 21—22) "இயேசுவை உயிர்ப்பித்தவர், எங்களை இயேசுவோடு உயிர்ப்பித்துத் தம்முன் கொணர்ந்து நிறுத்துவார் என அறிந்திருக்கிறோம்". ( 2 கொரி. 4: 14 ).

**திருச்சபையின் வாழ்விலிருந்து:** நமது ஆண்டவர் உயிர்த்ததைத் திருச்சபை பாஸ்கா ஞாயிறன்று கொண்டாடுகிறது. அவர் உயிர்த்த இரவு விழாக்கொண்டாட்டம்—பெரிய சனிக்கிழமையிலிருந்து பாஸ்கு ஞாயிறு காலைவரை—திருச்சபையின் திருவழிபாட்டு முறை ஆண்டிலேயே மிகச் சிறந்தது. அன்று இரவு நடக்கும் வழிபாடு பாஸ்காத் திருவிழிப்பு" என்று அழைக்கப்படுகிறது. கிறிஸ்துநாதர் உயிர்த்ததற்காகவும், நாம் ஞானஸ்நானத்தில் அவருடன் உயிர்த்ததற்காகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாபெரும் மகிழ்ச்சி பாராட்டும் திருவிழிப்பு விழா அது. பஸ்காத் திரி உயிர்த்த ஆண்டவருக்கு அடையாளமாக எரிகின்றது. விசுவசிகள் பிடிக்கும் திரிகள் அதிலிருந்து கொழுத்தப்படுகின்றன. அது நாம் கிறிஸ்துநாதரிடமிருந்து புது உயிரைப் பெற்றிருக்கிறோம் என்பதற்கு அடையாளம். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கிறிஸ்துநாதருடைய உயிர்ப்பின் ஞாபகமாகக் கொண்டாடப்படுகிறது "சிறிய பாஸ்குவிழா".

**செய்யவேண்டியவை:** 1) உயிர்த்த ஆண்டவருக்கு நீயே சொந்தமாக ஒரு செபம் எழுது. 2) ஞானஸ்நானத்திற்கான தீர்த்தம் பெரிய சனிக்கிழமை இரவில் மந்திரிக்கப்படுவதேன்? 3) பாஸ்காத் திருவிழிப்பின் பொழுது நாம் ஞானஸ்நான வார்த்தைப்பாடுகளைப் புதுப்பிப்பது எதற்காக? 4) பாஸ்காப் பண்டிகைக்கான பாட்டுக்கள் உனக்கு எவை தெரியும்? 5) பாஸ்கா ஞாயிறன்று உணவை என் மந்திரிக்கிறார்கள்?

"தம்முடைய மரணத்தினால் நம்முடைய மரணத்தை அழித்தார்; தம்முடைய உயிர்ப்பினால் நமக்குப் புது உயிரை அடைந்து தந்தார்."
(பாஸ்கா விழாவின் திருப்பலிப்பூசை முகவுரையிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 49

# யேசுக்கிறிஸ்துநாதர் பரலோகத்திற்கு எழுந்தருளினர்

"அவர் பரலோகத்திற்கு எழுந்தருளிப் போனர்"
(விசுவாசப் பிரமாணத்தின் 6–ஆம் சத்தியம்)

யேசுநாதர் உயிர்த்தபின், உலகில் நாற்பது நாட்கள் தங்கியிருந்தார். இந்த நாட்களில் கடவுளுடைய இராச்சியத்தைப்பற்றி அப்போஸ்தலர்களுக்குக் கற்பித்தார். நாற்பதாம்நாள் ஒலிவேத்து மலைக்கு அவர்களை அழைத்துச் சென்றார். அங்கே, அவர் தம் கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசீர்வதித்துக் கொண்டிக்கும்பொழுது, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்க, அவர் உயர எழுந்தருளினர். அப்பொழுது ஒரு மேகம் வந்து அவர்களுடைய கண்களுக்கு அவரை மறைத்தது (வாசி :லூக். **24 : 50— 53:** அப், **1 : 3—9).**

உயிர்த்த நாற்பதாம்நாள், கிறிஸ்துநாதர் தமது சொந்த வல்லமையினுல் மேலே எழுந்து, மோட்சம் சென்றார். "இவ்வுலகத்திலே இருந்த தம்முடையவர்களை" (அரு. **13 :1**) விட்டுப் பிரிந்து, பரலோகத்தின் மகிமையில் தமது பிதாவிடம் திரும்பிச்சென்றார். அங்கிருந்து மறுபடியும் திரும்பி வருவார், தம்முடைய மீட்பு அலுவலை முடிப்பதற்காக

நமது ஆண்டவர் மோட்சம் சென்றது மாபெரும் வெற்றிகரமான பவனியாய் இருந்தது. அவருடைய பகைவர்கள் அனைவரையும் வென்று வெற்றிவீரனய் வானுலகத்தினுள் நுழைந்தார். பாதளத்திலிருந்து மீட்டுக்கொண்டு வந்த பெருந்திரளான புண்ணியவாளரை வெற்றியோடு தம்முடன் நடத்திச் சென்றார்.

யேசுநாதர் மோட்சத்தில் தமது பிதாவின் வலப்பக்கத்திலே சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறார். பிதாவினுடைய திருமகனய் நித்திய காலத்திலிருந்து தாம் கொண்டிருந்த வல்லமையையும், மகிமையையும் இப்பொழுது மனிதன் என்ற முறையில் அடைந்துகொண்டார்.

தமது பிறப்பிலிருந்து யேசுநாதர் அரசர். ஏனெனில், அவர் கடவுளுடைய திருமகனக இருந்தார். அத்துடன் அவர் நமக்காகத் தமது உயிரைக் கொடுத்ததால், தமது இராச்சியத்தைப் பெறுவதற்கு உரிமையைச் சம்பாதித்தும் கொண்டார்.

யேசுநாதர் நமக்கு முன்னே பரலோக இராச்சியத்திற்குப் போயிருக்கிறார். அவர் சொல்லுகிறார்: "என் தந்தையின் இல்லத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறைவிடங்கள் பல உள்ளன; உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்யப் போகிறேன்: நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின், திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன்". (அருளப்பர் 14 : 2—3).

**சிந்தனைக்கு:** 1) யேசுநாதர் பரலோகத்திற்கு எழுந்தருளியது மாபெரும் வெற்றிகரமான பவனியாய் இருந்தது ஏன்? 2) "யேசுநாதர் தமது, பிதாவின் வலப்பக்கத்திலே சிம்மாசனத்தில் வீற்றிருக்கிருர்" என்று நாம் சொல்லுவதற்கு என்ன பொருள்? 3) யேசுநாதர் அரசர் என்பதற்கு இரு உண்மைகள் எவை? 4) நாம் மோட்சம் சென்று வாழ நமக்குக் கிறிஸ்துநாதர் ஒரு இடத்தைத் தயாரித்து வைத்திருப்பது ஏன்?

**எனது வாழ்க்கைக்கு:** கிறிஸ்துநாதர் எனக்காக மோட்சத்தில் ஓர் இடத்தைத் தயாரித்துள்ளார்; அதை நான் அடைவதற்கு என்னுல் ஆனவை யாவும் செய்வேன்.

**வேதாகமத்திலிருந்து:** கிறிஸ்துவோடு நீங்கள் உயிர்த்தெழுந்தவர்களாயின் மேலுலகில் உள்ளவற்றை நாடுங்கள். அங்கேதான் கிறிஸ்து கடவுளின் வலப்புறத்தில் அமர்ந்திருக்கிருர்" (கொலோசேயர் 3 : 1). "தம்மைத் தாழ்த்திச் சாவை ஏற்கும் அளவுக்கு கீழ்ப்படிபவரானுர். ஆதலால்தான் கடவுள் அவரை எல்லார்க்கும் மேலாய் உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினுர்". (பிலிப்பியர் 2 : 8—9).

**திருச்சபையின் வாழ்விலிருந்து:** பாஸ்கு விழாவிற்குப்பின் நாற்பதாம்நாள், திருச்சபை கிறிஸ்துநாதர் மோட்சத்திற்கு எழுந்தருளியதைக் கொண்டாடுகிறது. அன்று பூசையில் சுவிசேஷம் வாசித்து முடிந்ததும் பாஸ்காத்திரி அணைக்கப்படுகின்றது. அதாவது, கிறிஸ்துநாதர் மோட்சம் சென்றுவிட்டார்; இனி நம் கணகளுக்குத் தோன்றும் முறையில் அவர் இல்லை என்பதை அது காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 50

# யேசுக்கிஸ்துநாதர் நமது ஆண்டவர்

**'அவர் எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரனுடைய வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார்,"**

(விசுவாசப்பிரமாணத்தின் 6-ஆம் சத்தியம்)

"இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிட, 'இயேசுக்கிறிஸ்து ஆண்டவர்' என்று தந்தையாகிய கடவுளுடைய மகிமைக்காக எல்லா நாவுமே அறிக்கையிடும்" (பிலிப்பியர் 2 : 10—11).

யேசுநாதர் மோட்சத்திற்குச் சென்றிருப்பதால், பிதாவுடன் சேர்ந்து நம்மேல் அரசு செய்கிறார். யேசுக்கிறிஸ்துநாதர் நமது ஆண்டவர். மனிதன் என்ற முறையிலும், அவர் பரலோகப் பிதாவின் வல்லமையிலும் மகிமையிலும் பங்கு பெற்றிருக்கிறார். இந்த உண்மையைத்தான் "எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரனுடைய வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார்" என்னும் விசுவாசப் பிரமாணத்தின் வார்த்தைகளை நாம் சொல்லும்பொழுது வெளிப்படுத்துகிறோம். உலகத்தில் தாம் தொடங்கிய மீட்பு வேலையை இப்பொழுது கிறிஸ்துநாதர் மோட்சத்திலிருந்துகொண்டே தமது தெய்வீக வல்லமையோடு நடத்திக்கொண்டிருக்கிறார்.

நமது ஆண்டவராகிய கிறிஸ்துநாதர் தமது திருச்சபையின் வழியாக இப்பொழுதும் நமக்குப் போதிக்கிறார். மனிதர்களைத் தம்பணிக்கு அழைக்கிறார்; தம்போதனையை அறிவிக்க அவர்களை அனுப்புகிறார்; அவருடைய தூது உலகெங்கும் பரவி வருகிறது. அவரே நமது மாபெரும் போதகர்.

நமது ஆண்டவராகிய கிறிஸ்துநாதர் திருப்பலிப் பூசையில் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்து வருகிறார்; தேவதிரவிய அனுமானங்களைக் கொண்டு நம்மில் செயலாற்றுகிறார்; நம்முடைய செபங்களைத் தமது பிதாவின் திருமுன் சமர்ப்பிக்கிறார். நமக்காக எப்பொழுதும் பரிந்து பேசுகிறார். கிறிஸ்துநாதருடைய பாடுகளினுடையவும், மரணத்தினுடையவும் வல்லமையால்தான் வரப்பிரசாதங்கள் அனைத்தும் நமக்கு வழங்கப்படுகின்றன. அவரே நமது பெரிய குரு.

நமது ஆண்டவராகிய கிறிஸ்துநாதர் ஆழ்ந்த அன்புடனும் அளவில்லா ஞானத்துடனும் நம்மை முடிவில்லா மோட்சத்துக்கு அழைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துச் செல்கிறார். அப்போஸ்தலர்கள், இவர்களுக்குப்பின் வந்த மேற்றிராணிமார்களைக் கொண்டு பரிசுத்த ஆவியின் வழியாக நம்முடைய ஆன்மாக்களை நடத்தி வருகிறார். எல்லா மனிதர்களுடையவும், வாழ்விலும் செயலாற்றி எல்லா மக்களுடையவும் சிறப்பாகத் தமக்குச் சொந்தமான விசுவாசிகளுடையவும் ஆயனும், அரசனுமாய் இருக்கிறவர் அவரே.

**சிந்தனைக்கு:** 1) கிறிஸ்துநாதரை என் "ஆண்டவர்" என அழைக்கிறோம்? 2) நமது தெய்வீக போதகர் என்ற முறையில் கிறிஸ்துநாதர் என்ன செய்கிறார்? 3) கிறிஸ்துநாதர் பெரியகுரு என்ற அளவில் செயலாற்றுவது என்ன? 4) மோட்சத்திலிருந்து கிறிஸ்துநாதர் நம் வாழ்வை நடத்துவது எங்ஙனம்?

**என் வாழ்க்கைக்கு:** கிறிஸ்துநாதரே என் வாழ்க்கையின் ஆண்டவராய் இருத்தல் வேண்டும்; ஒவ்வொருநாட் காலை எழுந்தவுடன் அன்று முழுவதும் நான் செய்யும் வேலையெல்லாம் அவருக்கே ஒப்புக் கொடுப்பேன்.

**திருச்சபையின் வாழ்விலிருந்து:** திருப் பூசைப் பலியில் சொல்லும் "சம்மனசுகளின் கீதத்தில்" கிறிஸ்துநாதரைப் பார்த்து, "நீர் ஒருவரே ஆண்டவர்" என்று பாடுகிறோம். கிறிஸ்துநாதர் வழியாகவே பரலோக பிதாவிடம் மன்றாடுகிறது திருச்சபை. அநேகமாகச் செபங்களின் இறுதியில்" தேவரீரோடு பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தில், சர்வேசுரனாக என்றென்றும் சீவித்து ஆட்சிசெய்யும் உம் திருக்குமாரனும், எங்கள் ஆண்டவருமான யேசுக்கிறிஸ்துநாதர் வழியாக—ஆமென்" என்ற வார்த்தைகளோடு முடிக்கிறது.

திருச்சபை கிறிஸ்துநாதரை அரசராக வணங்குகிறது. எடுத்துக் காட்டாக, குருத்துஞாயிறு பவனியிலும், பெரிய வெள்ளிக்கிழமை சிலுவை ஆராதனை வேளையிலும் அந்த அரசரை வழிபடுகிறோம். ஐப்பசிமாதம் கடைசிஞாயிறு கிறிஸ்து அரசர் திருநாளைக் கொண்டாடுகிறது திருச்சபை.

**கிறிஸ்துவ வழக்கங்கள்:** சிலுவையை அல்லது சுரூபத்தைத் தரித்துக்கொள்வது கிறிஸ்துவ வழக்கம். கிறிஸ்துநாதருடைய ஒரு சிறிய சுரூபத்தைத் தங்கள் வாகனங்களில் ஏற்றிவைக்கிறார்கள் சில கத்தோலிக்கர். நமது ஆண்டவருடைய சுரூபம் அல்லது படத்தை வீடுகளில் வைத்து, யேசுவின் திரு இருதய ஆட்சியைத் தங்கள் குடும்பங்களில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அநேகமாக வாலிபருடைய இயக்கங்கள் திருச்சிலுவை அடையாளமுள்ள கொடிகளை ஏந்திச் செல்வார்கள். அநேக நாடுகளில், நம் நாட்டில் சில பகுதிகளிலும்கூட, வழியோரங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும், கடைத் தெருக்களிலும் சிலுவைகள் இருப்பதைக் காணலாம். கிறிஸ்துநாதர் படைப்புக்களுக்கெல்லாம் ஆண்டவர் என்று மக்களுக்கு நினைப்பூட்ட அவை அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன.

**செய்யவேண்டியவை:** 1) கிறிஸ்துநாதர் நம் வாழ்க்கையில் எவ்வாறு செயலாற்றுகிறார்: (அ) போதகராக, (ஆ) பெரிய குருவாக, (இ) ஆயராக. 2) கிறிஸ்துநாதர்மேல் ஒரு பிரார்த்தனை எழுது: அவரைப்பற்றி எல்லாப் பெயர்களையும், பட்டங்களையும் உனக்குத் தெரிந்த அளவில், உதாரணமாக: மீட்பர், குரு, உயிர்த்த ஆண்டவர் என்று இணைத்து எழுது. 3) கிறிஸ்துநாதர்மேல் உனக்குத் தெரிந்த பாட்டுகள் எவை? 4) கிறிஸ்து அரசர் திருநாள் பூசையில் வாசிக்கப்படும் முகவுரையில் நமது ஆண்டவராகிய கிறிஸ்துநாதரைப்பற்றி என்ன சொல்லப்படுகிறது? 5) மரணத்திலிருந்து மகிமையோடு உயிர்த்த நமது ஆண்டவரைக் காட்டும் படங்களைச் சேர்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாடம் 51.

# எமக்குப் புதுவாழ்வு அளித்த இறிஸ்துநாதர்

யேசுநாதர் சிலுவையில் சிந்திய இரத்தத்தினுல், தேவ கோபத்தை அகற்றினுர். விண்ணக நன்கொடைகள் யாவையும் சிறப்பாகப் புதியதும், நித்தியமுமான உடன்படிக்கையின் தேவதிரவிய அனுமானங்களையும் மனிதருடைய மீட்புக்காகத் தம்முடைய இரட்சணிய சுனைகளிலிருந்து வழிந்து ஓடச் செய்தார். தம்முடைய திருச்சபையை அதாவது, தமது மறைஉடலின் எல்லா உறுப்பினரையும் சிலுவை மரத்தில் சம்பாதித்தார். (பரிசுத்த பாப்பாண்டவர் 12 ஆம் பத்திநாதர் இறீஸ்துநாதரின் மறை உடலைப்பற்றி எழுதிய சுற்றுக் கடிதம் 1948).

பழைய உடன்படிக்கையின் காலத்தில், கடவுளுக்குச் சொந்தமாய் இருந்த மக்களில் பெரும்பான்மையோர் யேசுநாதரை விசுவசிக்கவில்லை. மேலும், அவர்களுடைய தலைவர்கள் அவரை மரண தண்டனைக்குக் கையளித்தனர். கடவுளுடன் தாங்கள் செய்திருந்த உடன்படிக்கையை இவ்வாறு முறித்தனர். யேசுநாதரை விசுவசித்த சீடர்களோ, மனவலிமைகுன்றியவர்கள்; குறைபாடுள்ளவர்கள்; எல்லா மனிதரும் பாவக் கறை படிந்தவர்கள்; ஆகையால், கடவுளின் மக்களாயிருக்கத் தகுதி அற்றவராயிருந்தனர்.

யேசுநாதர் தம்முடைய சீடர்களுக்காகவும், தம்மை ஏற்றுக்கொள்ளாத மக்களுக்காகவும், மனுக்குலத்தார் அனைவருக்காகவும் தம் உயிரைக் கொடுத்தார். அவர்களைப் பாவத்தினின்று விடுதலைசெய்து, கடவுளுக்கு ஏற்ற ஒரு பரிசுத்த மக்களாக்கும் வண்ணம் தம் உயிரைத் தந்தார்; "இவர் நம்மை எல்லா அக்கிரமத்திலிருந்தும் மீட்கவும் நம்மைத் தூயவர்களாக்கி, நற்செயல்களில் ஆர்வமுள்ள ஓரினமாய்த் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவும் தம்மை நமக்காகக் கையளித்தார்." (தித்து 2 : 14) யேசுநாதருடைய இரத்தத்தில் நம்மோடு புதியதும், நித்தியமுமான ஓர் உடன்படிக்கையைக் கடவுள் செய்து கொண்டார். சிறிய கூட்டமாகிய சீடர்களைப் பரிசுத்த ஆவியின்வழியாய்க் கடவுளுக்கு ஒரு பரிசுத்த மக்களாக்கிக் கொண்டார். அதுவே நமது பரிசுத்த தாயாகிய திருச்சபை. இந்தத் திருச்சபையில்தான் கடவுளுடைய மக்கள் நித்திய காலத்துக்கும் பெருகிக்கொண்டே வருகின்றனர். ஒவ்வொரு நாட்டினரிலிருந்தும், ஒவ்வொரு காலத்திலிருந்தும் கடவுள் தமக்காகச் சேர்த்துக்கொண்டிருக்கும் மக்கள் அவர்கள் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய உடன்படிக்கை மிருக பலியால் முத்திரையிடப் பெற்றது. புதிய, நித்திய உடன்படிக்கை கிறீஸ்துநாதரின் சிலுவைப் பலியால் முத்திரையிடப்பட்டது. அவருடைய இரத்தம் "புதிய' நித்திய உடன் படிக்கைக்காகச் சிந்தப்பட்ட இரத்தம்."

பாவம் தோய்ந்த மனுக்குலத்திற்குத் தாயாக இருந்தவள் ஏவாள். அவள், ஆதாம் உடலின் வலப்புறத்திலிருந்து உருவானவள். திருச் சபையோ மீட்கப்பட்ட மனுக்குலத்திற்குத் தாய். அவள் சிலுவையில் சாகும் மீட்பருடைய வலப்புறத்திலிருந்து வந்தவள். யேசுநாதரின் சாவு திருச்சபைக்கு உயிரை அளித்தது.

**சிந்தனைக்கு :** கடவுளுடைய மக்களாவதற்கு மனுக்குலம் தகுதி யற்றதாயிருந்தது ஏன் ? 2) மனுககுலம் கடவுளுக்குப் பரிசுத்த குடியாவ தற்கு யேசுநாதர் என்ன செய்தார் ? 3) யேசுநாதருடைய திரு இரத்தத் தைக்கொண்டு கடவுள் நமக்குச் செய்திருப்பது என்ன ? 4) ஏவாளின் படைப்பைத் திருச்சபையின் பிறப்போடு ஒப்பிடுக.

**என் வாழ்க்கைக்கு :** யேசுநாதர் தம் திரு இரத்தத்தை விலையாகத் தந்து திருச்சபையை வாங்கினார். ஆதலால், நான் அந்தத் திருச்சபை யில் சேர்ந்திருப்பதற்கு என்றும் நன்றி பாராட்டுவேன்.

**வேதாகமத்திலிருந்து :** கிறிஸ்து திருச்சபைக்கு அன்புசெய்து அதற் காகத் தம்மையே கையளித்தார். அவர் திருவார்த்தையாலும் முழுக்கி னாலும் அதைத் தூயதாக்கிப் பரிசுத்தமாக்குவதற்குத் தம்மைக் கைய ளித்தார். (எபேசியர் 5 : 25—26). " நீர் பலியாக்கப்படு உமது இரத்தத்தால் எல்லாக் குலத்தையும் மொழியையும், இனத்தையும், நாட்டையும் சார்ந்த மக்களைக் கடவுளுக்காக மீட்டீர் (திருவெளிப் பாடு 5 : 9)

**செய்ய வேண்டியவை : 1)** கடவுள் தம் மக்களுடன் முதல் உடன் படிக்கையைச் சீனாய் மலைமீது செய்துகொண்ட வரலாற்றினை வாசித் துப்பார். 2) ஒரு துண்டுத் தாளை எடுத்து, அதன் இடதுபுறத்தில் "பழைய உடன்படிக்கை" என்றும், வலதுபுறத்தில் "புதிய உடன் படிக்கை' என்றும் தலைப்புகள் எழுதுக. அதன்பின் கீழ்க்கண்ட வினாக்களுக்கு அந்தந்தத் தலைப்புகளின்கீழ் விடை எழுதுக. அ) கட வுள் எவ்விடத்தில் தமது உடன்படிக்கையைச் செய்தார் ? ஆ) யாரு டன் உடன்படிக்கையைச் செய்தார் ? இ) யார் வழியாகச் செய்தார் ? ஈ) அந்த உடன்படிக்கையை முத்திரையிடப் பலியாக்கப்பட்டது என்ன ? ) நாம் தறபொழுது பங்குகொள்ளும் புதிய ஏற்பாட்டின் பலி என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடம் 52

# திருச்சபை

# கிறிஸ்துநாதரின் மறைஉடல்

புனித சின்னப்பர் எழுதுகிறார் : ஒரே உடலில் நமக்கு உறுப்புக் கள் பல உள; அந்த உறுப்புகளெல்லாம் ஒரே செயலைச் செய்வதில்லை. அதுபோலவே பலராயிருக்கிற நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே உடலாய் இருக்கிறோம்; ஒருவருக்கொருவர் உறுப்புகளாய் இருக்கிறோம் (வாசி: உரோ. 12 ,4—5).

திருச்சபையின் உறுப்பினர் யாவரும், ஓர் உடலில் உள்ள உறுப்பு களைப்போன்று, ஒருவரோடு ஒருவர் இணைக்கப்பட்டு இருக்கின்றனர் ; இக்காரணம்பற்றியே பரிசுத்த சின்னப்பர் திருச்சபைய ஓர் உடல் என்கிறார்.

இந்த உடலின் தலை விண்ணகத்தில் இருக்கும் நம் ஆண்டவர் கிறிஸ்துநாதரே; இவர் உடல் முழுமையும் ஒன்றாக இணைத்து இயங்கி வாழ வைக்கின்றார். எனவே, பரிசுத்த சின்னப்பர் திருச்சபையைக் கிறிஸ்துநாரின் உடல் எனக் கூறுகிறார்.

இந்த உடலின் உயிர் மூச்சு பரிசுத்த ஆவி. தலையாகிய கிறிஸ்து நாதரிடமிருந்து உறுப்புகளில் பரிசுத்த ஆவி உயிர் ஓட்டம் போன்று நிறைந்திருக்கின்றார்; எல்லா உறுப்புகளையும் தலையோடும் ஒன்றோடு ஒன்றாயும் சேர்த்து இணைக்கிறார். ஆகையால், பரிசுத்த ஆவி திருச் சபையின் ஆன்மா.

இந்த மறை உடலின் உறுப்புகள், விசுவாசிகள் எல்லோரும் கிறிஸ்து நாதரைத் தங்கள் தலையாக அன்பு செய்யவேண்டும். கிறிஸ்துவ தோழர்களை அவருடைய உறுப்புகளாய் அன்பு செய்ய வேண்டும். செபத்திலும், பலியிலும், தலையுடனும் மற்ற உறுப்புகளுடனும் ஒன் றித்து இருத்தல் வேண்டும் .மேற்கொண்டு ஒவ்வோர் உறுப்பும் தனக்குரிய அலுவலை அறிந்து அதைப் பிரமாணிக்கமாய் நிறைவேற்ற முயலுதல் வேண்டும்.

நாம் ஞானஸ்நானம் பெற்றபொழுது கிறிஸ்துநாதருடைய இந்த மறை உடலோடு ஒரே கிளையைப்போல், நாம் ஒட்ட வைக்கப்பட் டோம். ஞானஸ்நானத்தால் ஒருவன் திருச்சபையின் உறுப்பு ஆகின்றான்.

**சிந்தனைக்கு:** 1) திருச்சபையை ஓர் உடல் என்று நாம் என் கூறு கிறோம்? 2) கிறிஸ்துநாதரை அந்த உடலுன் தலை என நாம் சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது ஏன்? 3) பரிசுத்த ஆவி அந்த உடலின் ஆன்மா என நாம் சொல்லுவதன் காரணம் யாது? 4) கிறிஸ்துநாதருடைய உடலின் உறுப்புகள் செய்யவேண்டியவை என்ன? 5) கிறிஸ்துநாதரின் இந்த மறை உடலில் நாம் எவ்வாறு ஒட்டவைக்கப்படுகிறோம்!

**என் வாழ்க்கைக்கு:** எனக்காக மட்டுமல்ல; கிறிஸ்துநாதருடைய எல்லா உறுப்புகளுக்காகவும் வாழ்வேன்.

**வேதாகமத்திலிருந்து:** "தலையாயிருக்கிற கிறிஸ்துநாதரிடத்தில் எல்லாவற்றிலும் வளருவோமாக. அவராலே சரீரம் முழுவதும் அதற்கு உதவியான சகல கணுக்களினாலும் பொருந்தி இசைக்கப்பட்டு வருகிறது". (எபேசி 4: 15—16).

**திருச்சபையின் வாழ்விலிருந்து:** கிறிஸ்துநாருடைய மறை உடலைப் பற்றி 1943 ஆம் ஆண்டு 12 ஆம் பத்திநாதர் ஒரு சுற்றுக்கடிதம் எழுதினார்.

**செய்யவேண்டியவை:** 1) கிறிஸ்துநாதருடைய உடலின் உறுப்புக்கள் தங்கள் தலையுடன் சேர்ந்து எவ்வாறு இயங்குகின்றன? அ) பலிப் பூசை நிறைவேற்றுவதில்; ஆ) பிற மதத்தினரை மனம் திருப்பும் அலுவலில்; 2) ஒரு பற்றில் எவருக்கெல்லாம் சிறப்பான அலுவல்கள் உண்டு? 3) இப்பாடத்தில் நீ படித்து அறிந்ததிலிருந்து ஒரு மன்றாட்டுச் செபத்தையும் ஒரு நன்றிச் செபத்தையும் இயற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 53

# திருச்சபை வழியாகக் கிறிஸ்து போதித்துப் பரிசுத்தப்படுத்துகிருர்

ஆதி கிறிஸ்தவர்களின் வாழ்கையைப்பற்றி அப்போஸ்தலர்பணி பின்வருமாறு கூறுகின்றது. "நாடோறும் தவருமல் ஒரே மனதாய்க் கோவிலில் கூடுவர். வீடுகளில் அப்பத்தைப்பிட்டு மனமகிழ்வோடும் கபடமற்ற உள்ளத்தோடும் பகிர்ந்துகொள்வர். இங்ஙனம் கடவுளைப் புகழ்ந்து வந்தனர். மக்கள் அனைவருக்கும் வேண்டியவர்களாய் விளங்கினர். ஆண்டவரும் மீட்கப்பெறுவோரை நாள்தோறும் அவர்களோடு சேர்த்து வந்தார்." (அப். பணி 2: 46—47).

கத்தோலிக்க திருச்சபையின் முதன்மையானபணி நற்செய்தியைப் போதிப்பதாகும். "உலகெங்கும் சென்று நற்செய்தியைப் போதியுங்கள்." கிறிஸ்துவின் இக்கட்டளையை செயற்படுத்தத் திருச்சபை உலகின் பல பாகங்களுக்கும் தூதுவரை அனுப்பி, இறையரசைப் பரப்புவதற்குப் பலவகையான செயல் திட்டங்களைப் பயன்படுத்துகின்றது, இதைத் தவிர விசுவாசத்தைப் பாதுகாக்கவும், தப்பறையான போதகங்களைத் தடுக்கவும் திருச்சபை ஆர்வத்துடன் உழைக்கிறது. மறைபரப்பு நாடுகளில் சில பிறநாட்டவர் போதிப்பதிலும் அறிவுரை ஊட்டி ஆலோசனை கொடுப்பதிலும், வழிபாடு ஆராதனைகள் நடாத்திச் செபிப்பதிலும், பிள்ளைகளைப் படிப்பிப்பதிலும், நோயாளரைப் பராமரிப்பதிலும் ஈடுபட்டுழைத்து இறையரசைப் பரப்புகின்றனர். இத்தகை பணிகளால் மக்களைக் கிறிஸ்துவிடம் அழைத்து வருகின்றனர்.

விசுவாசம் பரம்புவதற்காகச் செபிப்பது அவசியம். இன்னும் பண உதவி செய்தல், கத்தோலிக்க இலக்கியப் புத்தகங்களை வெளியிடுதல் மறைபரப்பாளரைத் தாபரித்தல், வைத்தியசாலைகள் பாடசாலைகளை நிறுவுதல் விசுவாசம் பரம்புதலுக்காகப் புதிய நிலையங்களைத் திறத்தல் போன்ற உதவிகளைச் செய்யலாம். சிறப்பான அழைப்பைப் பெற்ற எவரும் இத்தகைய பணிகளில் ஈடுபடலாம். பொதுநிலையினரும் விசுவாசம் பரப்புதல் என்னும் பணிக்காகத் தங்களை அர்ப்பணிக்கிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அழைப்பை உணர்ந்த ஒருசிலர் திருமடச் சார்பற்ற ஸ்தாபனங் களில் சேர்ந்தனர். பரிசுத்த ஆவியின் செயற்பாட்டினால் திருச்சபை யில் சேரும் ஒவ்வொருவரும் பரிசுத்தராகும் அருளைப் பெறுகின்றனர். ஒருவர் கிறிஸ்துவில் திருமுழுக்குப் பெறும்போது இது நிகழ்கிறது. எம்மில் செயலாற்றும் பரிசுத்த ஆவியானவர் விசுவாசத்தில் நம்மைத் திடப்படுத்துகிறார். இறைவனில் நாம் எமது முழு நம்பிக்கையையும் வைக்கின்றோம். அதே கிறிஸ்துவின் உடலாலும் இரத்தத்தாலும் நாம் ஊட்டம் பெறுகின்றோம். மனித மதிப்பீடுகளை நாம் கட்டியெழுப்பி அதனைக் கிறிஸ்தவ மதிப்பீடுகளாக மாற்றுகிறோம். இதன் விளைவாக எல்லையில்லா அன்பு, இரக்கம், மன்னிக்கும் பண்பு முதலிய புண்ணியங் களை நாமும் கைக்கொண்டு பிறர்க்கும் அளிக்கின்றோம். அத்துடன் மனித விடுதலைக்காகப் பணியாற்றும்போது உண்மையான வளர்ச்சி இடம்பெறுகின்றது. சமுதாயத்தில் வாழும் நாம் பரிசுத்தராகும் விருப் பும் நம்மில் வளர்ச்சியடைகின்றது. எமது சான்றுவாழ்வினால் அயல வரையும் பரிசுத்தப்படுத்தும் அருளைப் பெறுகின்றோம். இவ்விதமாய் திருச்சபையில் உயிர்த்த கிறிஸ்து தமது மக்களைப் புனிதப்படுத்தும் பணியை இடையறாது தொடர்ந்து செயலாற்றுகிறார். எனவே, திரு வருட்சாதனங்களைத் தகுதியோடு பெறுவதும் இதை மற்றவர்களும் பெற ஊக்குவிப்பதும் எங்கள் ஒவ்வொருவரின் கடமையாகும்.

**சிந்தனைக்கு: 1)** நற்செய்தியைப் போதிப்பது ஏன் முக்கியமானது? 2) இதற்காக நீர் உமது ஆற்றல்களை எவ்வாறு பயன்படுத்துவீர்? 3) திருவருட்சாதனங்கள் கிறிஸ்தவனுக்கு அவசியமா? 4) சமுகத் தைப் புனிதப்படுத்தல் என்பதன் பொருள் என்ன? 5) நமது நாட்டில் இன்று கிறிஸ்தவர்களின் வாழ்வு ஏனையோர்க்குச் சான்றுபகர்கின்றதா?

**எனது வாழ்விற்கு:** நற்செய்தியைப் படித்து, மற்றவர்களும் விளங் கிப் படிக்க உதவி செய்வேன். சரியான முறையில் திருவருட்சாதனங் களைப்பெற அக்கறை எடுப்பேன்.

**மறைபரப்பு நாடுகளைப்பற்றிய சில புள்ளிவிபரங்கள்:** உலகில் $\frac{1}{3}$ பகு திக்குக் குறைந்தோர் கிறிஸ்தவர்கள். ஆண்டுதோறும் உலகில் பிறக் கும் 57,000,000 குழந்தைகள் திருமுழுக்குப் பெறுவதில்லை. 1950ஆம் ஆண்டு 26,000 குருக்கள், 9,000 அருள் சகோதரர்கள், 61,000 கன்னி யர்கள் மறைபரப்பு நாடுகளில் இருந்தனர். மறைபரப்பு நாடுகளில் பணியாற்றுவோரில் சொந்தநாட்டைச் சேர்ந்தோர் அரைவாசிப்பேர், (25,0000) $2\frac{1}{2}$ இலட்சம்பேர் திருமுழுக்குப்பெற ஆயத்தம் செய்யப் பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முக்கியமான மறைபரப்பு நாடுகளும், மறைபரப்பாளரும்:** மறைபரப்பு நாடுகளுக்கு உதவிசெய்யப் பலகூட்டுத்தாபனங்கள் அன்றேல் சங்கங்கள் இருக்கின்றன. இவற்றுள் பாப்பரசரைத் தலைவராகக்கொண்ட தாபனங்களே முக்கியமானவை. அவைகளுள் விசுவாசம்பரப்புதல்சபை முதன்மையானது. புனித இராயப்பரின் சபை மறைபரப்பு நாடுகளுக்கெனக் குருக்களைப் பயிற்றுகிறது. திருப்பாலத்துவ சபை சிறுவர்களுக்காக இயங்குகிறது. பரிசுத்த பாப்பரசர் எல்லாக் கத்தோலிக்க சிறுவரும் இதில் சேரவேண்டுமென்று விரும்புகின்றார். இதன் உறுப்பினர் தினமும் ஒரு அருள்நிறை மரியே என்ற செபமும், பரிசுத்த மரியே எங்களுக்காகவும், பிறசமயச் சிறுவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளும் என்று சொல்லவும் வேண்டும். அத்துடன் ஒவ்வொருமாதமும் ஒரு சிறிய பணத்தொகையை மறைபரப்பு நாடுகளுக்காகக் கொடுத்தல் வேண்டும். இப்பாலர் சபையானது உலகில் எல்லாச சிறுவர்களும் இறைவனின் பிள்ளைகள் என்ற விருதுமொழியைக் கொண்டிருக்கின்றது.

**செய்யவேண்டியவை:** 1) மறைபரப்பாளர் பெயர் சில கூறுக? 2) எந்தெந்த நாட்டில் அவர்கள் போதித்தார்கள்? 3) எமது நாட்டில் பணியாற்றிய மறைபரப்பாளர் யாவர்? 4) உமக்குத் தெரிந்த மறைபரப்பு வெளியீடுகள் எவை? 5) நீர் அறிந்த மறைபரப்புச் சபைகள் எவை? 6) இந்த மறை பரப்புட் பணிக்கு உமது பாடசாலையில் நீர் செய்யக்கூடியது என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 54

# மீட்பு பணியைக் கிறிஸ்து தொடர்கிறார்

"பதினொரு சீடரும் தங்களுக்கு இயேசு குறிப்பிட்டிருந்த கலிலேயாவின் மலைக்குச் சென்றனர். அவரைக்கண்டு பணிந்தனர். சிலரோ ஐயமுற்றனர். இயேசு அவர்களை அணுகிக் கூறியது: விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரமும் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள். பிதா சுதன் பரிசுத்த ஆவியின் பெயரால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட அனைத்தையும் அவர்கள் கடைப் பிடிக்கும்படி போதியுங்கள். இதோ நான் உலக முடிவுவரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்" (மத். 28: 16—20).

இன்று கிறிஸ்து தனதுபணியைத் திருச்சபை வழியாகத் தொடர்ந்து நடாத்துகிறார். இதை நாம் திருச்சபையின் மேய்ப்புப்பணி என்றழைக் கிறோம். இதன் நோக்கம் கிறிஸ்துவர்களை கிறிஸ்துவைப் பின்பற்றி வாழத்தூண்டுவதாகும். திருச்சபையானது ஆபத்துக்களிலிருந்து எம்மைப் பாதுகாத்து வழிநடத்துகிறது. மனிதனைப் பாவத்திலிருந்து விடுவிக்கவும், அதன் காரணத்தை உணர்த்தவும் திருச்சபை கட்டளைகளையும் பரிகார முயற்சிகளையும் ஏற்படுத்தியுள்ளது. அவற்றுள் மிகக் காத்திரமான தண்டனை திருச்சபையிலிருந்து புறம்பாக்குதலாகும். ஒருவர் புறம்பாக்கப்படும்போது அருள்களைப் பெற்றுகொள்ளும் வாய்ப்பை இழந்து விடுகிறார்; இன்னும் திருவருட்சாதனங்களைப் பெறும் பேற்றிலிருந்தும் தடுக்கப்படுகிறார். கிறிஸ்தவ முறையில் மரணஅடக்கம் செய்யப்படும் வாய்ப்பையும் இழந்துவிடுகிறார். அகவே உடலாலும் உள்ளத்தாலும் துன்புறுவோர் மட்டில் விசேட அக்கறை கொண்டுள்ளது. அது அன்புப் பணியால் மக்களை ஆட்கொள்வதற்குரிய எல்லா முயற்சிகளையும் மேற்கொள்கின்றது.

பாப்பரசரும், ஆயர்களும் திருச்சபையின் மேய்ப்பர்களாவர். அவர்களுக்கு ஆளும் வல்லமை உண்டு. கிறிஸ்து அப்போஸ்தலருக்கு இந்த வல்லமையைக் கொடுத்ததைப் பின்வரும் வார்த்தைகள் தெளிவாக்குகின்றன. "உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: மண்ணுலகில் நீங்கள் எதெல்லாம் கட்டுவீர்களோ அதெல்லாம் விண்ணுலகிலும் கட்டப்பட்டதாகவே இருக்கும். மண்ணுலகில் நீங்கள் எதெல்லாம் அவிழ்ப்பீர்களோ, அதெல்லாம் விண்ணுலகிலும் அவிழ்க்கப்பட்டதாகவே இருக்கும்". (மத். 18:18).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபையின் மேலான ஆயர் பாப்பரசர். இராயப்பரைப் பின் தொடர்ந்து வருபவர்களுக்கு கிறிஸ்து கூறியது: "என் ஆடுகளை மேய்; என் ஆட்டுக்குட்டிகளை மேய்" என்பதாகும் (அரு 21:15—17). நல்ல ஆயனுகிய கிறிஸ்துவே மறை ஆயர் வழியாக மக்களை ஆள்கின்ருர். கிறிஸ்தவர்களாகிய நாம் அவர்களுக்குப் பணிந்து உதவிசெய்வதே எமது கடமையாகும்.

இலங்கையில் கிறிஸ்தவர்கள் சிறுபான்மையினராவர். பிறமதத்தவர்கள் மத்தியில் வாழும் இவர்களுக்கு விசுவாசத்தை வளர்ப்பதற்குரிய வசதிதன் கிடைப்பதரிது. அவர்களின் பிள்ளைகள் முதலாய் ஒழுங்கான சமயக்கல்வியைப் பெறுவதில்லை; பலிப்பூசையில் பங்கெடுப்பதற்கும் நீண்டதூரம் பிரயாணம் செய்யவேண்டியுள்ளது. வளர்ந்த இளம் பெண்களும், வாலிபரும் தமக்குரிய வாழ்க்கைத்துணைவரைத் தெரிவதும் கஷ்டமாயுள்ளது. பிறமதத்தவரை விவாகம் செய்வதால் விசுவாசத்தை இழக்கின்றனர். குருவானவரைத் தக்கவேளையில் அழைக்க முடியாமையால் கடைசித் திருவருட்சாதனமுமின்றி இறக்க நேரிடுகின்றது. இப்படியான இக்கட்டான நிலையில் உள்ள கத்தோலிக்க மக்களுக்கு உதவிசெய்ய முன்வருவது எமது கடமையாகும். எமது நேரம், சக்தி, ஆற்றல், பணம் போன்றவற்றை இவற்றிற்காகத் தியாகம் செய்ய நாம் என்றும் தயாராக இருக்கவேண்டும்.

**சிந்தனைக்கு:** 1) கிறிஸ்துவின் மீட்புப்பணியைத் தொடர்ந்து செய்வது யார்? 2) இதைக் கத்தோலிக்க திருச்சபை எவ்வாறு செய்கிறது? 3) மேய்ப்புப்பணி சார்ந்த உதவிகள் யாருக்குத் தேவை? 4) இலங்கையில் பரந்துவாழும் கத்தோலிக்கரைப் பொறுத்தமட்டில் உமது பொறுப்பு என்ன?

**எனது வாழ்விற்கு:** திருச்சபை எனது தாய். அதற்குச் செவி மடுத்துப் பணிந்து நடப்பது எனது கடமையாகும். பரந்து வாழும் கத்தோலிக்கர் எனது சகோதர சகோதரிகளாவர். செபத்தாலும், பகிர்தலாலும் உதவி செய்வது பொறுப்பு.

**வேதாகமத்திலிருந்து:** "தந்தை தன் பிள்ளைகளை நடத்துவது போல, உங்கள் ஒவ்வொருவருக்கும் அறிவுறுத்திஞேம், ஊக்கமூட்டிஞேம். தம் அரசுக்கும் மாட்சிமைக்கும் உங்களை அழைக்கும் கடவுளுக்கு ஏற்க வாழுமாறு வற்புறுத்திக் கேட்டுக்கொண்டோம்". (1 தெச.2:11—12).

"உறுப்பு ஒன்று துன்புற்ருல், எல்லா உறுப்புகளும் அதனுடன் சேர்ந்து துன்புறும்; உறுப்பு ஒன்று மாண்புற்ருல் எல்லா உறுப்புகளும் சேர்ந்து இன்புறும்". (1 கொரி 12:26).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 55

# யேசுக்கிறிஸ்துநாதர் மீண்டும் உலகில் வருவார்

**"அவ்விடத்திலிருந்து**
**சீவியரையும், மரித்தோரையும் நடுத்தீர்க்க வருவார்."**
(விசுவாசப் பிரமாணத்தின் 7-ஆம் சத்தியம்

அப்போஸ்தலர்கள் தங்கள் கண்களை மேல்நோக்கி, கிறிஸ்துநாதர் பரலோகத்துக்கு எழுந்தருளிப் போவதைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது திடீரென வெண்ணிற உடையணிந்த இருவர் அவர்கள் அருகே வந்து தோன்றி "கலிலேயரே, ஏன் இப்படி வானத்தைப் பார்த்துக்கொண்டே நிற்கிறீர்கள்? உங்கள் நடுவிலிருந்து வானகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பெற்ற இந்த இயேசு எவ்வாறு வானகம் செல்லக் கண்டீர்களோ, அவ்வாறே மீண்டும் வருவார் என்றனர்." (அப்போஸ்தலர் **1 : 10—11**).

உலகமுடிவில் யேசுநாதர் மீண்டும் வருவார். தம்முடைய சம்மனசுக்கள் புடைசூழ, தமது மகிமையில் வருவார்

கிறிஸ்துநாதர் வரும்பொழுது, எல்லா மனிதர்களையும் நல்லவர்களையும், கெட்டவர்களையும், உயிரோடிருப்பவர்களையும். மரித்தோரையும் தம்முன்னே வர அழைப்பார். மரித்தோர்கள் தங்கள் கல்லறைகளிலிருந்து உயிர்த்து எழுவார்கள். எல்லோரும் அவருடைய குரல் ஓசையைக் கேட்பார்கள்.

அப்பொழுது கிறிஸ்துநாதர் எல்லா மனிதர்களுக்கும் தீர்ப்பு அளிப்பார். உலகில் அருள்வாழ்வு வாழ்ந்தவர்கள் இனி அவருடன் என்றென்றும் தங்கியிருப்பார்கள். அவருடைய அருளைப் புறக்கணித்துத் தள்ளினவர்கள் அவரிடமிருந்து நித்தியத்துக்கும் பிரிக்கப்படுவார்கள்.

தீர்வு முடிந்தபின்னர், கிறிஸ்துநாதர் பேயிடமிருந்து அதன் வல்லமையின் கடைசி அடையாளங்கூட இல்லாமல் களைந்துவிடுவார் உலகினின்று துன்பத்தையும், சாவையும் அகற்றிவிடுவார். மேலும், வானம் பூமி அனைத்தையும் தமது மகிமையால் நிரப்புவார்.

கிறிஸ்துநாதர் தாம் உலகில் வாழ்ந்தபொழுது துவக்கிய மீட்பு வேலை அப்பொழுதுதான் முற்றுப்பெறும். எல்லாம் அவருடைய ஆதிக்கத்திற்கு அடிபணிந்திருக்கும். அவர் படைப்புக்கெல்லாம் அரசராக வெளிப்படையாய் ஆட்சிபுரிவார். எல்லாம் கிறிஸ்துநாதருடைய அதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரத்துக்கு உட்படுத்தியபின், இந்தப் புதிய மீட்கப்பட்ட படைப்பைத் தம் பிதாவிடம் ஒப்படைப்பார். பரலோகபிதா அளப்பரிய மகிமை யோடு அதன்மேல் என்றென்றும் ஆட்சி செலுத்துவார்.

**சிந்தனைக்கு:** 1) கிறிஸ்துநாதர் எப்பொழுது மீண்டும் வருவார்? 2) அப்பொழுது கிறிஸ்துநாதர் தம்முன்னேவர யாரை அழைப்பார்? 3) கிறிஸ்துநாதர் செய்யப்போகும் தீர்ப்பு எதைப்பற்றியதாய் இருக்கும்? 4) தீர்வுக்குப்பின் கிறிஸ்துநாதர் என்ன செய்வார்? 5) கிறிஸ்துநாதர் தம் மீட்பு வேலையை முடித்தபின் என்ன செய்வார்?

**என் வாழ்க்கைக்கு:** கிறிஸ்துநாதர் திரும்பவும் வரப்போகிறார். அந்நாளை நான் எப்பொழுதும் மகிழ்வுடன் நினைக்கக்கூடிய வகையில் வாழ்க்கை நடத்தவேண்டும்.

**வேதாகமத்திலிருந்து:** "நம்முடைய உயிராகிய கிறிஸ்து தோன் றும்பொழுது, நீங்களும் அவரோடு மாட்சிமையில் தோன்றுவீர்கள்." (கொலோசேயர் 3 : 4)—"அவனவன் செய்த நன்மை தீமைக்குத்தக்க பலனையடையும்படி கிறிஸ்துவின் நீதியிருக்கைமுன் நாம் அனைவரும் செய்ததெல்லாம் வெளிப்பட வேண்டும்." (2 கொரி. 5 : 10)—"அதன் பின்னர் முடிவுவரும்; அப்போது தலைமை ஏற்போர், ஆட்சிபுரிவோர், வலிமைமிக்கோர் அனைவரையும் அவர் தகர்த்துவிட்டுக் கடவுளும் தந் தையுமானவரிடம் அரசை ஒப்படைப்பார்." (1 கொரி. 15 : 24).

**திருச்சபையின் வாழ்விலிருந்து:** கிறிஸ்துநாதர் மீண்டும் உலகில் வரப்போவதைத் திருச்சபை அடிக்கடி சிறப்பாகத் தன் வழிபாட்டு முறை ஆண்டின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில், இன்னும் ஆகமன காலத்தில் நமக்கு ஞாபகப்படுத்துகின்றது; அவருடைய வருகைக்கு நாம் தயாராக இருக்க எச்சரிக்கை செய்கிறது.

"நாம் இவ்வுலகில் மன அமைதியோடும், நீதியோடும், பக்தி யோடும் நடப்போமாக. நமது உன்னத கடவுளும், மீட்பருமாகிய யேசுக்கிறிஸ்துநாதருடைய மகிமையுள்ள ஆகமனத்துக்காக நம்பிக்கை யோடு காத்திருப்போமாக."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org